இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# நற்றிணையில் புலப்பாட்டு உத்திகள்

**பெ.ஆனந்தி**
உதவிப்பேராசிரியர், கலசலிங்கம் பல்கலைக்கழகம்,
கிருஷ்ணன்கோவில்.

**முகப்புரை**

கருத்தினை வெளிப்படுத்த விரும்பும் புலவன் கேட்போரின் மன உணர்வினைப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். கேட்போரின் ரசனையைத் தூண்டும் வகையில் புலவன் தன் கருத்துகளை எடுத்துரைக்க கையாளுவதே உத்திகளாகும். நற்றிணையில் பொருட்புலப்பாட்டில் உத்திகளின் பங்கு குறித்து விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைக்கப்படுகின்றது.

## உத்தி விளக்கம்

உத்தி எனும் சொல்லுக்கு, "ஒரு செயல் அதிகளவு பலனை அளிப்பதற்கு ஏதுவாக உருவாக்கப்படும் திறமையான வழிமுறை; ஒன்றைச் செயல்படுத்துவதற்குரிய திறமையான திட்டம் (strategy, technique)"[1] என க்ரியாவின் தற்கால தமிழகராதி விளக்கம் தருகின்றது. உத்தி பற்றிய கருத்துக்கள் அறிஞர்களிடம் பலவாறாக நிலவி வருகின்றன. ச.வே.சுப்ரமணியன் அவர்கள் உத்தி பற்றிக் குறிப்பிடும் போது ஒரு கலைஞன் தன் துறையில் செவ்விய வெளியீட்டிற்கு பயன்கொள்ளும் ஆற்றலும் ஆக்கமும் உத்தி[2] என்ற தன் கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார். உத்தி என்னும் சொல்லானது புலப்பாட்டு நெறியின் அடிப்படையில் சிந்தித்துப் பார்க்கும் வேளையில், ''கவிஞனின் திறனுக்கேற்ப கருத்துகளை வெளிப்படுத்த உதவும் கருவி'' என்று பொருத்தமாகப் பொருள் கொள்ள முடிகின்றது.

## நற்றிணை உத்தி முறைகள்

சங்க இலக்கியங்களுள் ஒன்றான நற்றிணையை ''உள்ளுறை, இறைச்சி என உட்பொருள் பொதிந்த இலக்கிய உத்திகளால் நாடகப் பண்பமைந்த பாத்திரக் கூற்றாக அகப்பாடல்களை அமைத்தனர் சங்கப்புலவர்''[3] என்ற கருத்திற்கேற்ப நல்ல உணர்த்துதல் முறைகளை, பெற்றுத் திகழ்கின்றது. நற்றிணையில் கிடைக்கப் பெறாத *236* ஆம் பாடலும் பாதி கிடைக்கப் பெற்ற *385* ஆம் பாடலையும் தவிர்த்து ஏனைய *398* பாடல்களிலும் பலவகை உத்திகள் கையாளப் பட்டுள்ளன. ''செவ்வியல் இலக்கியங்கள் பாடுபொருளை வெளிப்படுத்தும் பொழுது தற்சார்பின்றி இருத்தல் (Objectivity) காரண காரிய இயைபுடன் இருத்தல் (Reasonability) ஒருமை நோக்கி அமைதல் (Unity) பொதுமை நோக்கினைப் பின்பற்றல் (Universality) போன்ற புலப்பாட்டு நெறியினைப் பெற்றுத் திகழும்''[4]

எனினும் இவ்விலக்கியங்களில் புலவர்களின் தனித்திறமையை மெய்ப்பிக்கும் உத்திமுறைகளும் பலவாறாக இடம் பெறுவது சிந்திக்கத்தக்கது.

**சொல்லாடல் உத்தி**

சொல்லுகின்ற முறைமையும் தோரணையுமே ஒரு கருத்தினைக் கேட்போரிடத்துச் சென்று சேர்க்க வல்லன. அவ்வகையில் சிறந்த சொல்லாடல்களைப் பயன்படுத்துவதும் ஓர் உத்தி முறையே ஆகும். சொல்லாடலில் கைதேர்ந்தவளாகத் தோழி விளங்கப் பெறுகிறாள். தலைவியின் களவுக்காலத்தில் உண்டான புதிய மணத்தினால் வண்டுகள் அவளது தோளை மொய்க்கின்றன. இது குறித்து வினவிய அன்னையிடம் தோழி தன் சொல் வன்மையால்,

> சாந்த ஞெகிழி காட்டி
> ஈங்கு ஆயினவால் என்றிசின் யானே
> (நற்.55 : 11-12)

சந்தன மரக்கட்டையை விறகாக்கி எரிப்பதால் அதனுள் இருந்த வண்டுகள் தலைவியின் தோளை சந்தனமாகக் கருதி மொய்க்கின்றன எனத் தோழி மேற்கண்ட பாடலில் எடுத்துரைக்கிறாள். இவ்விடத்தே தோழியின் சொல்லாடல் வாயிலாக களவு அன்னைக்கு எட்டும் நிலைக்கு வந்தமை, இற்செறிப்பு நிகழலாம் என்பன போன்ற பல பொருள்களை புலவர் புலப்படுத்தியுள்ளார்.

**வரலாற்று உத்தி**

தான் கூறவிருக்கும் கருத்துக்களைக் கேட்போரின் மனத்தையும் எண்ணத்தையும் கவரும் வகையில் அமைந்த உத்தி முறைகளுள் வரலாற்று செய்தி கூறும் உத்தி முறையும் ஒன்றாகும்.

> பூந்தோள் யாப்பின் மிஞிலி, காக்கும்
> சிறுகோற் சென்னி ஆரேற்றன்ன
> மாரிவண் மகிழ் ஓரி கொல்லிக் (நற்.265:4-7)

என்ற பாடலில் மூன்று மன்னர்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. மிஞிலி, சென்னி, ஓரி ஆகிய மூவர் பற்றியும் கூறி, அவர்தம் நாட்டுச் சிறப்பொன்றை தலைவியின் நலத்தோடு தலைவன் உவமைப்படுத்துகிறான். இவ்விடத்தில் வரலாற்று முறை கூறும் உத்தி பொருட்புலப்பாட்டிற்கு உதவி நிற்கின்றது. மக்களிடத்தே அவர்கள் அறிந்திருந்த நாடு, மன்னர்கள், அவர்களின் பெருமைகளை எடுத்துரைத்துப் பின்னர் தம் கருத்தைக் கூறல் சிறந்த உளவியல் தொடர்பான உத்தி முறையாக அமைகிறது. நற்றிணையில் 43 பாடல்களில் இவ்வுத்தி கையாளப்பட்டுள்ளது.

**கனவு உத்தி**

கை கூடாமல் உள்ளடக்கி வைத்திருக்கும் ஆசைகள் அனைத்தும் கனவுகளாக வெளிப்படும் என்பது உளவியலார் கருத்து. ''புலவர்கள் நாகரிகமாகவும் நுணுக்கமாகவும் உணர்த்த விரும்பிய கருத்துக்களை உயிரினங்களின் கனவு மூலம் புலப்படுத்தியுள்ளனர். இது புலவர்களின் புதுமையான இலக்கிய உத்தியாகக் காணப்படுகின்றது.''[5] நற்றிணையிலும்,

> வெல்போர்ச் சோழர் அழிசிஅம் பெருங்காட்டு
> நெல்லி அம்புளிச் சுவைக் கனவியா,அங்கு
> (நற்.87 : 2-4)

என்ற பாடல் அடிகளில் கனவு, உத்தியாக இடம்பெற்றுள்ளது. வௌவாலின் விருப்பத்திற்குரியது நெல்லிக்கனியின் புளிப்புச் சுவை. ஆனால் அது நனவில் கிடைக்காமல் கனவில் கிடைக்கிறது. இதனால் பயனில்லை. அதுபோல தலைவி கண்ட கனவும் தலைவனோடு இணைவதாக அமைந்தது. அவ்வின்பம் நனவில் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்தை வெளிப்படுத்த வௌவாலின் கனவு வழிகோலாக அமைக்கப் பெற்றுள்ளது.

**தனக்குத் தானே பேசுதல் உத்தி**

பாத்திரங்கள் தன்னிடத்தில் தானே பேசுவதாகவும் தன் நெஞ்சோடு பேசுவதாகவும் பல பாடல்கள் நற்றிணையில் இடம்பெற்றுள்ளன. தலைவி தனக்குத் தானே பேசுவதாய் 7

பாடல்களும் (69, 118, 187, 287, 302, 314, 381), தோழிக்கு 1 பாடலும் (301), நற்றாய்க்கு 4 பாடல்களும் (66, 143, 179, 279), கண்டோருக்கு 2 பாடல்களும் (2,324) இவ்வகையில் அமையப் பெற்றுள்ளன. நெஞ்சோடு பேசும் முறையும் இவ்வகை உத்தியுள் அடங்குகின்றது. நற்றிணையில் தலைவன் தன் நெஞ்சோடு பேசியதாக 13 பாடல்கள் (16, 44, 103, 126, 137, 140, 146, 157, 209, 298, 312, 356, 384) அமையப் பெற்றுள்ளன. "தலைவி-தோழி மன உறவு போலத் தலைவன்- பாங்கன் உறவு அமையாமையே தலைவன் நெஞ்சிற்குக் கூறும் கூற்றுகள் மிகைப்பட்டமைக்குக் காரணம்"[6] என்ற ஆ.இராமகிருட்டிணனின் கருத்தும் ஈண்டு சிந்திக்கத் தக்கது. எனவே நற்றிணையில் கூற்று நிகழ்த்தும் மாந்தர்கள் தன்னிடத்தில் தானே பேசுவதாகவும், நெஞ்சோடு பேசுவதாகவும் படைக்கப்பட்டிருத்தல் வாசகரின் எண்ணத்தைக் கவருவதற்காக அமைக்கப் பட்டிருப்பதை உணரமுடிகிறது.

**உரையாடல் உத்தி**

உரையாடல் முறையைப் பாடலில் அமைக்கும் போது அது கேட்பவரின் மனதை உற்சாகமடையச் செய்கிறது.

> 'கேட்போர் உளர்கொல் இல்லைகொல்? போற்று' என
> 'யாணது பசலை' என்றனன்; அதன்எதிர்
> 'நாண் இலை, எலுவ! என்று வந்திசினே'
> (நற்.50 : 6-8)

என்ற பாடலடிகளில் தலைவனும் தோழியும் உரையாடுதலைக் கூறி இதைப் பொருட் புலப்பாட்டு உத்தியாகப் புலவர் கையாண்டு உள்ளார். சிறந்த நாடகப்பாங்கு அமையப் பாடல்களைப் பாடி அதன் வழி தாம் கூற வந்த கருத்தை மக்களிடத்தே எளிமையாகப் புலப்படுத்தியுள்ளனர். நற்றிணையில் ஏறத்தாழ 40க்கும் மேற்பட்ட பாடல்களில் உரையாடல் முறையிலான உத்தியும் நாடகப்பாங்கிலான பாடுபொருள் உத்தியும் கையாளப்பட்டுள்ளன.

**சைகை உத்தி**

வாய்திறந்து பேசுதலால் மட்டுமன்றி கையாலும் முகத்தாலும் சைகை காட்டியும் (குறிப்புக் காட்டியும்) பொருள் புலப்பாட்டை நிகழ்த்தியமை நற்றிணை வழி அறிய முடிகிறது. நற்றிணையில்,

> துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
> கல்லென் சுற்றம் கை கவியாக் குறுகி
> வீங்கு சுரை ஞெமுங்க வாங்கித் தீம்பால்
> கல்லா வன்பறழ்க் கைந்நிறை பிழியும்
> (நற்.57 : 3-4)

என்ற பாடலடிகளில் குரங்கு தன் கைகளால் சைகை காட்டி தன் சுற்றத்தாரை அமைதிப்படுத்தி பசுவின் பாலை கவர்ந்துண்ணும் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. மந்தியின் சைகை வழியே தலைவனும் பாலையின் வழியில் பயம் கொள்ளாது சென்று பொருளீட்டி வந்து மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்ற கருத்து பெறப்படுகிறது. இவ்வாறு சைகைகளும் முகக் குறிப்புகளும் பொருளினைப் புலப்படுத்தும் உத்திகளாகக் கையாளப்பட்டுள்ளன.

**படிம உத்தி**

ஒரு கவிதையின் கருத்தினைக் கண்முன்னே காட்சிப்படுத்தும் உத்திமுறையே படிமமாகிறது. இத்தகைய படிம உத்திமுறை நற்றிணையிலும் பல இடங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக,

> உடும்பு கொல்இ வரிநுணல் அகழ்ந்து
> நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி
> எல்லு முயல் எறிந்த வேட்டுவன் கவல
> பல்வேறு பண்டத் தொடை மறந்து இல்லத்து
> இருமடைக் கள்ளின் இன் களி செருக்கம்
> (நற்.59 : 1-5)

என்ற பாடலடிகளில் முல்லை நில கானவனின் வாழ்க்கையை மிக அழகாகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. உடும்பு, தவளை, முயல், ஈசல் என அனைத்தையும் கொண்டுவந்து இல்லத்தில் கொடுத்து, பின் மதுவுண்டு களிக்கும், கானவனின் செய்கையை இப்பாடல்

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

காட்சிப்படுத்துகிறது. கானவன் போல நானும் பொருளீட்டி திரும்பி வருகிறேன். என்னை எம் இல்லத்தில் விரைந்து சேர்க்க எனத் தலைவன் தேர்ப்பாகனுக்குக் கூறிய கருத்தினை இப்படிம உத்தி மிக அழகாகப் புலப்படுத்துகின்றது.

நற்றிணையில் *132, 165, 218, 306, 308, 331, 334, 396* முதலிய பாடல்களிலும் இத்தகைய படிம உத்தி மிக அழகாகக் கையாளப்பட்டுள்ளது.

**வினா-விடை உத்தி**

கேள்வி கேட்டு, அதற்கு பதில் அளிக்கும் வகையில் அமையப் பெறும் கூற்று, கேட்போரின் கவனத்தை ஈர்க்கும் வல்லமை படைத்தது. நற்றிணையில்,

> குவளை குறுநீர் நீர் வேட்டாங்கு
> நாளும் நாள் உடன் கவவும் தோளே
> தொல்நிலை வழீஇய நின்தொடி எனப் பலமாண்
> (நற்.332 : 2-4)

என்ற பாடலடிகள் இவ்வகையில் அமைந்துள்ளன. இதில் தலைவன் தினமும் வந்து உன்னைப் பார்த்துச் செல்கிறார் ஆயினும் உன் தொடி நெகிழ காரணம் என்ன? எனத் தோழி வினவுகிறாள். அதற்கு தலைவி அவன் வருவழி ஏதமே காரணமெனப் பதிலுரைப்பதாக அடுத்துவரும் பாடலடிகள் அமையப் பெறுகின்றன. இவ்வொரு பாடல் மட்டுமன்றி நற்றிணையில் ஏறத்தாழ *15*க்கும் மேற்பட்ட பாடல்களில் *(109, 155, 49, 99, 130, 173, 174, 268, 274, 277, 320, 321, 332, 365, 395)* இத்தகைய வினா-விடை உத்தி முறைப் பின்பற்றப் பட்டுள்ளது. இவ்வாறாக வினாவுவதும் விடை கூறுவதுமான உத்தி வாசகரின் மனதில் ஆவலை ஏற்படுத்துவதுடன் சிறந்த நாடகப் பாங்குக்குக்கான களத்தையும் ஏற்படுத்துகிறது.

**குறிப்புப் பொருள் உத்தி**

தான் கூறுவந்த கருத்தினை வெளிப்படையாக உரைக்காமல் குறிப்பாக உய்த்துணரச் செய்யும் உத்தி முறை குறிப்புப் பொருள் உத்தியாகிறது. நற்றிணையில்,

> நல்நாள் வேங்கையும் மலர்கமா இனி என
> (நற்.206 : 7)

என்ற பாடலடியில் பல குறிப்புப்பொருள் பயின்றுள்ளது. வேங்கை மலரும் காலம் தினை அறுவடைக்கு உகந்த காலம் மற்றும் திருமணத்திற்கு ஏற்ற காலம், தந்தை தினைப்புனம் காக்க செல்லவிடுத்த வேளையில் தாய் கூறும் இம்மொழி தலைவியின் களவை அறிந்து கூறியதா? இனி இற்செறிப்பு நிகழுமா? என்றெல்லாம் பல கேள்விகளைக் கொண்டதாகும். இவ்வாறாக குறிப்புப் பொருள்பட பாடல்களை அமைக்கும் உத்தி முறை நற்றிணையில் அனைத்துப் பாடல்களிலுமே காணப்படுவதால், குறிப்புப் பொருள் வழியிலான பொருட்புலப்பாடு பற்றிய தனி ஆய்வே மேற்கொள்ள முடியும்.

**பின்னோக்கு உத்தி**

முன்னொரு காலத்து நிகழ்ந்த நிகழ்வுகளைப் பின்னொரு காலத்து நினைத்துப் பார்த்தல் பின்னோக்கு உத்தியாகிறது. நற்றிணையிலும், ஏறத்தாழ *30* பாடல்களில் இத்தகைய பின்னோக்கு உத்தி கையாளப் பட்டுள்ளது. சான்றாக,

> அன்றை அனைய ஆகி இன்றும் எம்
> கண் உளபோலச் சுழலும் மாதோ
> (நற். 48 :1-2)

எனத் தோழி தனது பழைய நினைவுகளான, தலைவன் தலைவியை களவு மேற்கொண்டு உடன்போக்கு நிகழ்த்தியதையும் அப்போது மறவரை வென்று, தமர் காண சென்று ஒளிந்து கொண்டமையையும் எடுத்துக் கூறி அவையாவும் இன்றும் தம் கண்முன்னே சுழல்வதாக எடுத்துரைக்கிறாள். இந்தப் பாடலில் வரப்பெறும் பின்னோக்கு உத்தியின் வாயிலாக இத்தகு பாசம் கொண்டவனாக இருந்த நீ இன்று பிரிந்து செல்வதால் உண்டான வருத்தத்திற்குத் தலைவி ஆற்றியிராள் என்ற பொருள் புலப்படுத்தப்படுகிறது.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

**முன்னோக்கு உத்தி**

எதிர்காலம் பற்றிய கருத்துகளைப் புலப்படுத்தும் நெறியை முன்னோக்கு உத்தி எனலாம். இவ்வுத்தி இலக்கிய வாசகருக்கும் எதிர்காலம் பற்றிய ஆர்வத்தைத் தருகின்றது. நற்றிணையில், 81, 132, 134, 169, 317, 362, 365, 373, 393 முதலிய 9 பாடல்களில் இத்தகைய முன்னோக்கு உத்தி இடம் பெற்றுள்ளது. இதில்,

> விருந்து அயர் விருப்பொடு வருந்தினள் அசைஇய
> முறுவன் இன் நகை காண்கம்!
>
> (நற்.81: 8-9)

என்ற பாடலில் தலைவன் நாம் நெடுநாள் பிரிந்து இப்போது தலைவியிடத்துச் செல்ல உள்ளோம் நம்மைப் பிரிந்ததால் வருத்தமுற்றிருந்த தலைவி நம்மைக் கண்டவுடன் மகிழ்வோடு விருந்து சமைக்கச் செல்வாள் அல்லவா? எனத் தேர்ப் பாகனிடத்து எதிர்காலம் பற்றிக் கூறியுள்ளான்.

எதிர்காலம் பற்றிய நினைவுகளைக் கேள்விகளாகத் தொடுத்து நிகழ்கால வாழ்வை வளமாக்க முயலும் விருப்பம் இத்தகு முன்னோக்கு உத்திகளின் வழி புலனாகிறது.

**இடித்துரைத்தல் உத்தி**

நிகழும் நிகழ்வு அல்லது இனி நிகழப் போகும் நிகழ்வு நன்முறையில் அமையக் கருதி தன் உரிமையை மனதில் கொண்டு ஒரு பாத்திரம் பிறிதொரு பாத்திரத்தை இடித்துரைத்தலும் ஒரு வகை உத்தியாகவே கருதப்படுகிறது. தலைவி, தோழி தலைவனையோ, தலைவி தோழியையோ, அன்னை தலைவி, தோழியையோ இடித்துரைக்கும் வகையில் இவ்வுத்தி அமைகிறது.

> பொய்யல் அந்தோ! வாய்த்தனை? அதுகேட்டு
> தலை இறைஞ்சினளே அன்னை
> செலவு ஒழிந்தனையால் அளியை நீபுனத்தே?
>
> (நற்.147:10-12)

என்ற பாடலடிகள் தலைவியின் செயலினைத் தோழி இடித்துரைப்பதாக அமைபவையாகும். அன்னை, தினைப்புனம் காக்காதது கண்டு சினந்து வினவ, தலைவி நான் மலைநாடனைப் பார்க்கவில்லை அவனோடு நீராடவில்லை எனத் தன்னை மீறி உண்மையைப் பொய்யாக்க முயன்றாள். இது கேட்ட அன்னையின் முகம் மாறுதலுற்றதை எண்ணி தோழி தலைவியை இடித்துரைக்கின்றாள். இத்தகைய இடித்துரைக்கும் உத்தி வழியாக தெளிவாக விரிவாக பொருளினைப் புலப்படுத்த முடிகிறது.

**உவமை உத்தி**

தெரிந்த பொருள் கொண்டு தெரியாததை விளக்க உதவுவது உவமையாகும். உவமை ஓர் உத்தியாக அமைந்து பொருளினை புலப்படுத்த உதவுகின்றது. சங்க இலக்கியங்களில் "புலவர் தாம் சொல்ல வேண்டிய கருத்துக்களாகிய நுண்பொருள்களை சில வகை உவமைகளால் சீரிய வகையில் தெளிவுபடுத்துவதையும் காணலாம்."[7] நற்றிணையிலும்,

> தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
> சாந்தில் தொடுத்த தீம்தேன் போல
> புரைய மன்ற புரையோர் கேண்மை
>
> (நற்.1: 3-5)

என்ற புகழ்பெற்ற உவமைகளும், 'தேய்ப்புரி பழங்கயிற்றினார்' என உவமையால் பெயர் பெற்றப் புலவரையும் காண முடிகின்றது. நற்றிணையில் உவமைகள் அனைத்து பாடல்களிலுள் அமையப்பெறுவதால் உவமை வழியாகப் புலப்படும் பொருள்நயம் குறித்து தனிஆய்வே மேற்கொள்ள முடியும்.

**பிறவற்றோடு பேசுதல் உத்தி**

தலைவியோ தோழியோ அல்லது தலைவனோ உயர்திணைகளோடு மட்டுமின்றி அஃறிணை உயிரிகளோடு பேசுதலும் உத்தி முறையாக நற்றிணையில் காணப்படுகிறது. நற்றிணையில் 54-நாரை, 70-குருகு, 83-கூகை, 102-கிளி, 139-மேகம், 193-வாடைக்காற்று, 196-நிலவு, 200-குயவன், 238-மழை, 248-மழை, 251-தினைக்கதிர், 277-வண்டு, 376-கிளி எனப் பல பாடல்களில் பிறவற்றோடு பேசுதல் உத்தி முறை கையாளப்பட்டமை தெரிய வருகிறது. இதற்கு சான்றாக,

நனி பேர் அன்பின் நின் குரல் ஒப்பி
நிற் புறங்காத்தலும் காண்போய் நீ? என்
.........................................
நீடினை விளைமோ! வாழிய தினையே
(நற்.251 : 5-11)

எனத் தினைக் கதிரோடு பேசும் பாடலைக் கூறலாம். தினை அறுவடை செய்த பின் தலைவியின் களவு தடைப்படும். எனவே தலைவி தினையை நெடிதுகாலம் கழித்து விளையுமாறு வேண்டிப் பாடுகிறாள் இவ்வாறாக பொருள் புலப்பாட்டிற்கு உதவும் வகையில் பிறவற்றோடு பேசுதல் எனும் உத்தி முறை பின்பற்றப்பட்டுள்ளது.

## எதிர்மறை பொருள் உத்தி

தான் கூற வந்த கருத்தினை வெளிப்படையாக நேராக எடுத்துரைக்காமல் இப்படியாகலாமா? இப்படி செய்யலாமா? என எதிர்மறை பொருளை உணர்த்தக்கூடிய உத்தி முறையும் நற்றிணையில் பின்பற்றப்பட்டுள்ளது. இதற்கு,

நிலவும் மறைந்தன்று இருளும் பட்டன்று
..................................................
நன் மார்பு அடைய முயங்கி மென்மெல
கண்டனம் வருகம் சென்மோ? தோழி
(நற்.182 : 1-7)

என்ற பாடலடிகள் சான்றாகின்றன. தோழி, தலைவனை இரவில் காண எல்லா வகையிலும் சாத்தியக் கூறுகள் அமையப் பெற்றமையை எடுத்துக்கூறி அதன்பின், இப்போதே சென்று தலைவனைக் கண்டு மகிழ்ந்து மீண்டும் வருவோமா? எனத் தலைவியிடம் கேட்கிறாள். இதில் தோழி திரும்பி வாராது உடன்போக்கு நிகழ்த்துதல் சிறப்பு என்ற எதிர்மறை பொருளை,

கெடுத்துப்படு நன் கலம் எடுத்துக் கொண்டாங்கு
(நற்.182 : 5)

என்ற உவமை வழி பெறச் செய்கிறாள். எனவே இத்தகைய எதிர்மறைப் பொருள் உத்தி கூறவரும் கருத்தினை திசைதிருப்பக் கூடியதாக அமையப் பெற்று பொருள் புலப்பாட்டிற்கு உதவுகின்றது.

## முரண் உத்தி

எதிர்எதிர் கருத்துகளை ஒரே நேரத்தில நினைத்துப் பார்த்தல் முரண் உத்தியாகிறது. சொல்லாலும் பொருளாலும் முரண்பாடுடைய சொற்களை தொடரில் அமைப்பதே முரண் தொடையாகும். எனவே முரணும் ஒரு வகை உத்தியாகி பொருட்புலப்பாட்டிற்கு உதவுகின்றது. நற்றிணையிலும், ஏழு பாடல்களில் *(141, 143, 304, 327, 375, 377, 383)* இவ்வகை முரண் உத்தி பயின்று வந்துள்ளது.

மடல்மா ஊர்ந்து மாலை
............................................
அது பிணி ஆக விளியலம் கொல்லோ
(நற்.377 : 1-5)

எனத் தலைவனின் மனதிலே மடலேறுதல் குறித்தும் சாதல் குறித்தும் இரு வேறான மன முரண் ஏற்படுகிறது. இது தலைவன் தலைவியின் மீது கொண்ட அன்பு, வரைவு முடிக்க எண்ணும் எண்ணம், உலக இயல்பிற்கு ஏற்ப நடக்கத் துணிதல் முதலான பல பொருள்களைப் புலப்படுத்துகின்றது.

## குறிப்புகள்


1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப.190
2. ச.வே.சுப்ரமணியன், இளங்கோவின் இலக்கிய உத்திகள், ப.6
3. ந.சுப்புரெட்டியார், பாட்டுத்திறன், ப.358
4. செ.சாரதாம்பாள், சங்கச்செவ்வியல், ப.173
5. ஆய்வுக்கோவை (2002) II, ப.804
6. ஆ.இராமகிருட்டிணன், அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப.169
7. மு.வரதராசன், பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை, ப.397

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# சங்க இலக்கியத் தோழியின் ஆளுமை

**அ. ஏஞ்சல் ராணி**
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

## முகப்புரை

மேனாட்டரின் கருத்துகளால் விவரித்து சொல்லப்பட்ட ஆளுமைப் பண்பினை சங்க இலக்கியத் தோழியின் படைப்பில் ஒப்பிட்டுக் காண இயலுகிறது. ஆளுமையின் மொத்த முழு உருவமாக, தோழி படைக்கப்பட்டிருக்கின்றாள். ஆல்போர்ட், ஃபிரிமன் மற்றும் கெம்ப் ஆகியோர் குறிப்பிடும் சூழ்நிலையோடு இணங்குதல், சூழ்நிலையால் பெறும் தனித்தன்மை, சூழ்நிலைக்கேற்ப கையாளும் பழக்கவழக்கம் போன்ற ஆளுமைக் காரணிகளை தோழியின் செயல்பாடுகளோடு ஒப்பிட்டுகாண்பதோடு ஆளமை அணுகுமுறைகளும் இவண் ஆய்வு செய்யப்படுகின்றது.

### 1. சூழ்நிலையோடு இணங்கும் தோழி

தலைவன், தலைவியின் களவு வாழ்வை கற்பு வாழ்வாக மாற்ற தோழி அரும்பாடுபடுகிறாள். குறியிடம் அமைத்தும், தலைவன் பொருள் தேடிச்செல்லும் போது தலைவியை ஆற்றுவித்தும், தலைவியின் அறிவுறுத்த செவிலியிடம் அறத்தோடு நின்றும், தலைவனிடம் வரைவு கடாவுதலில் ஈடுபட்டும் நிற்கும் தோழிக்கு எதிலும் வெற்றி கிட்டாதபோது, தலைவியின் களவை கற்பாக மாற்ற, உடன்போக்கிற்கு இணங்குகிறாள்.

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி,
மூக்கின் உச்சிச் சுட்டு விரல் சேர்த்தி,
மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற
சிறு கோல் வலந்தனள் அன்னை அலைப்ப,
அலந்தனென் வாழி – தோழி!
.................................................................
.................................................................
நடுநாள் வரூஉம் இயல் தேர்க் கொண்கனோடு
செலவு அயர்ந்திசினால், யானே;
அலர் சுமந்து ஒழிக, இவ் அழுங்கல் ஊரே!
(நற்.149 : 1-5, 8-10)

என்ற பாடலடிகளில், தலைவியின் களவை அலர் தூற்றும் ஊராரின் வாய் அடைப்படும்படியாக, அலர் ஒழியும்படியாக, தலைவியை உடன்போக்கு மேற்கொள்ளச் செய்யும் தோழியின் சூழ்நிலையோடு இணங்கும் ஆளுமைச்சிறப்பு வெளிப்படுகின்றது.

### 2. சூழ்நிலையால் பெறும் தனித்தன்மை

ஒரு சூழலில், ஒரு செயலை, ஒருவரால் மட்டுமே செய்ய இயலுமாயின் அது சூழ்நிலையால் பெறும் தனித்தன்மை எனலாம். சங்க இலக்கிய அக இலக்கியத் தோழி, தலைவன் தலைவிக்கு குறியிடம் அமைத்துத் தருகின்றாள். குறியிடம் அமைக்கும் போது சூழலினை அறிந்து பகலில் வரும் தலைவனை இரவில் வருக என்கிறாள். குறியிடம் அமைத்தல் தோழியால் மட்டுமே முடியும் என்பதால் சூழ்நிலையால் பெறும் தனித்தன்மை தோழியிடம் நிரம்பக் காணப்படுகிறது.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

இழை அணிந்து இயல்வரும் கொடிஞ்சி நெடுந்தேர்
வரைமருள் நெடுமணல் தவிர்த்தனிர் அசைஇத்
தங்கினிர் ஆயின், தவறோ – தகைய
தழைதாழ் அல்குல் இவள்புலம்பு அகல –
தாழை தைஇய தயங்குதிரைக் கொடுங்கழி
இழுமென ஒலிக்கும் ஆங்கண்
பெருநீர் வேலிஎம் சிறுநல் ஊரே (குறு. 345)

என்ற பாடலில் பகலில் தலைவியைச் சந்திக்க வந்த தலைவனை, பகலில் அலர்மிகும் எனவே இரவில் வந்து தலைவியைச் சந்தித்துக் கொள் என்று பகற்குறி மறுக்கின்றாள் தோழி. இவ் குறியிடங்களைத் தலைவனுக்கு தோழியால் மட்டுமே அறிவிக்க முடிவதால், தோழி சூழ்நிலையால் பெறும் தனித்தன்மை கொண்டவளாகத் திகழ்வதை உணர முடிகின்றது.

**3. சூழ்நிலைக்கேற்ற கையாளும் பழக்கவழக்கம்**

தலைவியின் அக ஒழுக்கம் கற்பொழுக்கமாக மாற தோழி செவிலியிடம் அறத்தொடு நிற்கின்றாள். தலைவியின் களவை செவிலி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதால், முதலில் செவிலியை புகழ்கின்றாள். இதனை,

அன்னாய்! (ஐங்.28 : 4)

அன்னாய் வாழி வேண்டு அன்னை!
(குறிஞ்சி : 1)

என்ற பாடலடிகளின் மூலம், தோழி, தலைவியின் களவினை அறிவிக்க செவிலியிடம் அறத்தொடு நிற்கின்றாள். அந்த சூழ்நிலையில் செவிலி, தோழியின் கூற்றிற்க்கு இசைய வேண்டும் என்பதற்காக தோழி, செவிலியை அன்னையே நீ வாழ்க என்று புகழ்கின்றாள்.

மேலும் செவிலியிடம், தலைவியின் களவினை நேரடியாகக் குறிப்பிடாமல், கட்டுவிச்சி பாடும் பாடல் மூலமாக அறிவிக்க நினைக்கின்றாள் தோழி. எனவே, கட்டுவிச்சியை,

மனவுக்கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்
(குறு.23 : 2)

என்ற பாடலடியில் நீண்ட, வெண்ணிறமுடைய, நல்ல கூந்தலையுடைய கட்டுவிச்சியே என்று சிறப்பித்து, தலைவனின் மலையின் சிறப்பை பாடக் கேட்கின்றாள். இதன் மூலம் தோழி தன் எண்ணவோட்டம் நிறைவேற பிறரை பாராட்டியும், புகழ்ந்தும் இருந்தமை புலனாகிறது. இவ்வாறு தோழி சூழ்நிலைக்கேற்ப கையாளும் பழக்கவழக்கத்தைக் கொண்டவளாகத் திகழ்கின்றாள்.

**4. தன்னைத் தானே உணர்ந்து கொள்ளும் திறன்**

உளவியலாளர் சர்மா குறிப்பிடும் தன்னைத் தானே உணர்ந்து கொள்ளும் திறன் ஆளுமையானது சங்க அகஇலக்கியத் தோழியிடம் காணப்படுகின்றது. தலைவன் தலைவியை மணந்து கொள்ள விரைந்து வருகின்றான். இதனைக் கண்ட தோழி, தலைவியிடம் நான் தலைவனிடம் வரைவு கடாவியதாலும், செவிலியிடம் அறத்தொடு நின்றமையாலும் தலைவன் வரைவிற்கு விரைந்துள்ளான் என்று தலைவியிடம் எடுத்துரைக்கின்றாள். இதனை,

என ஆங்கு,
நின்உறு விழுமம் கூறக் கேட்டு,
வருமே, தோழி! நல்மலை நாடன் –
வேங்கை விரிவு இடம் நோக்கி,
வீங்கு இறைப் பணைத் தோள்
வரைந்தனன் கொளற்கே
(கலி.38 : 22-26)

அறத்தொடு நின்றேனைக் கண்டு திறம்பட
என்னையர்க்கு உய்த்து உரைத்தாள், யாய்.
அவரும் தெரிகணை நோக்கி,
சிலைநோக்கி, கண்பேந்து
ஒருபகல் எல்லாம் உருந்து எழுந்து, ஆறி,
இருவர் கண் குற்றமும் இல்லையால் என்று
தெருமந்து சாய்த்தார் தலை
(கலி.39 : 20-26)

என்ற பாடலடிகளால் அறிய முடிகின்றது. தான் வரைவு கடவுதலாலும், தான் அறத்தொடு நிற்றலினாலும் தலைவன் வரைவு மேற்கொள்ள முனைந்தான் என்று தோழி கூறுவதிலிருந்து, தன்னையே தான் உணர்ந்து கொண்ட திறத்தினளாய் இன்பம் கொண்டு மகிழ்வதைக் காண முடிகின்றது.

## 5. தோழியின் ஆளுமை அணுகுமுறை

இரத்தின சபாபதி ஆளுமை அணுகுமுறைகளை நான்கு வகையாகப் பிரிக்கிறார். அவை,

1. உள்ளப்பகுப்பு 2. பகிர்வு

3. நடத்தை (அ) அறிவுகள் 4. மாந்தர் பண்பு

ஆகியவை ஆகும். இந்த நான்கின் அடிப்படையில் சங்க இலக்கியத் தோழியின் செயல்பாடுகளைப் பொருத்திப் பார்க்க முடிகின்றது.

### 5.1. உள்ளப்பகுப்பு

தோழியின் ஆழ்மன உணர்வான தலைவியின் களவு வாழ்வை கற்பு வாழ்வாக மாற்றுதல், பிறர் மனம் நோகாமல் தன் செயலில் ஈடுபடல் ஆகியவை உள்ளப்பகுப்பு முறையில் வெளிப்படுகின்றது.

தலைவிக்குத் தலைவனுடன் நிகழ்ந்த இயற்கைப் புணர்ச்சியால் மெய் வேறுபடுகின்றது. இதனை கண்ட ஊர் மக்கள் அலர் தூற்றுகின்றனர். அதனைக் குறிப்பாக உணர்ந்த செவிலித்தாய் தலைவியின் மீது கோபம் கொண்டு இற்செறிக்கிறாள். இதனால் ஆற்றாமையால் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்கிறாள். அதன்பின் தோழி செவிலித்தாயிடம் அறத்தொடு நிற்பதை அகநானூற்றுப்பாடல் விவரிக்கிறது.

**திரை உழந்து அசைஇய நிரைவளை ஆயமொடு**<br>
**உப்பின் குப்பை ஏறி, எல்பட,**<br>
**வருதிமில் எண்ணும் துறைவனொடு, ஊரே**<br>
**ஒருதன் கொடுமையின் அலர்பா டும்மே;**<br>
**அலமரல் மழைக்கண் அமர்ந்து நோக்காள்**<br>
**அலையல் - வாழி! வேண்டு, அன்னை!**

**(அகம்.190 : 1 - 6)**

என்ற பாடலடிகளில், ஒரு நாள் தலைவன் தேரில் புன்னை மரத்தின் கீழ் வந்து தங்கினான். அவனின் தேரில் பூட்டப்பட்ட குதிரைக்கு சுறா மீன் தாக்கி காலில் புண்பட்டிருந்தது. அதனால் அங்கு தங்கினான். அச்சமயம் குளிர்ச்சி பொருந்திய கண்களையுடைய தலைவி, அவனை விரும்பி நோக்கவே இல்லை. அத்தலைவனோடு நின் மகளைச் சார்த்தி அலர் கூறும் ஊரவரை விடுத்து வருந்தாது இரு என்கிறாள். தலைவனும் தலைவியைக் காண வரவில்லை. தலைவியும் தலைவனை காணவில்லை. இருவரும் நல் உள்ளம் கொண்டவர்கள். அவர்களை திருமணத்தின் மூலம் இணைத்து வைப்பாயாக என்று இலைமறைக் காயாக பேசும் தோழியின் உள்ளப்பகுப்பும், அணுகுமுறையும் வெளிப்படுகின்றது.

தன் உள்ளார்ந்த எண்ணத்தை நிறைவேற்ற எச் சூழலிலும் பிறர்மனம் நோகாமல் காத்தல் வேண்டும். இதனை தோழி சரியாகச் செய்கிறாள். தலைவன் தலைவியை மணந்து கொள்ளும் கருத்தின்றி நாளும் இரவுக் குறியிடத்து வந்து வந்து மீண்டான். ஒருநாள் இரவில் சிறைப்புறமாகத் தலைவன் வந்து நிற்றலைக் கண்ட தோழி, அவனிடம் நேரில் பேசாமல், அவனுடைய இந்த நிலையை மேகத்திற்குச் சொல்வது போல் சொல்கிறாள். இதனை,

**பொன்னென**<br>
**மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சி,**<br>
**பொலிந்த ஆயமொடு காண்தக இயலி,**<br>
**தழலை வாங்கியும், தட்டை ஓப்பியும்,**<br>
**அழல்ஏர் செயலை அமீதழை அசைஇயும்,**<br>
**குறமகள் காக்கும் ஏனல்**<br>
**புறமும் தருதியோ? வாழிய, மழையே!**

**(அகம்.188 : 8 - 14)**

என்ற அகநானூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றன. சிறைப்புறமாக நிற்கும் தலைவனிடம் நேரில் சென்று, நீ தலைவியை வரையாது இருப்பது தவறு என்று நேரில் கூறி அவன் மனம் நோவதை தோழி விரும்பவில்லை. எனவே, மேகத்திடம் அசோகின் அழகிய தழையாலான ஆடையினை உடுத்திக் கொண்டு குறமகளாகிய நம் தலைவி காக்கும் தினைப்புனத்தில் மழையைப் பொழிவாயோ? என்று கேட்கின்றாள். தலைவனை வரைவிற்கு விரைவுபடுத்த எண்ணி அவன் மனம் நோகா வண்ணம் வரைவு கடாவும் தோழியின் ஆளுமை அணுகுமுறை போற்றுதற்குரியது.

### 5.2. நடத்தை

தலைவியின் களவு வாழ்க்கையினை கற்பாக மாற்ற முயலும் தோழி, தன் வாழ்க்கையைப் பற்றி நினைத்ததாக எந்த செய்தியும் சங்க இலக்கியத்தில் இடம்பெறவில்லை. தலைவிக்கு, தோழி குறியிடந்துய்க்கும் போதும், பள்ளியிடந்துய்க்கும் போதும், திருமணத்திற்கு பின் தலைவியை காணும் போதும் தனது ஆனந்தத்தை வெளிப்படுத்துகிறாள் அல்லது தலைவிக்கு அறிவுரை கூறுகிறாள். ஆனால், தலைவியோடு ஒத்த வயதுடைய தோழி, தன் வாழிவிலும் இது போன்ற சூழல்கள் நிகழவில்லையே என்று எண்ணவுமில்லை, ஏங்கவுமில்லை. பெண்களுக்கே உரிய நடத்தையில் கடுகளவும் மாறாது தோழி விளங்குகிறாள்.

**இனிதே தெய்ய, எம் முனிவு**
**இனி, வரின் தவறும் இல்லை எனையதூஉம்**
**பிறர் பிறர் அறிதல் யாவது**
**தமர் தமர் அறியாச் சேரியும் உடைத்தே**
(நற்.331 : 9 - 12)

என்ற பாடலடிகளில், பகற்குறியில் வந்தொழுகும் தலைவன் இரவுக்குறியும் தோழியிடம் வேண்டுகிறான். அதற்கு தோழி, நீ இரவில், இனிய நல்ல ஊராகிய இங்கு வருவதால் தவறு ஒன்றுமில்லை. சுற்றத்தார் இவர் இவர், என்றறியாச் சேரியினர், பிறரை எவ்வாறு அறிவர். எனவே நீ வரலாம் என்று இரவுக்குறி வேண்டியத் தலைவனுக்கு இடம் குறிப்பிடுகின்றாள் தோழி. ஆனால் தலைவியோடு ஒத்த வயதுடையவளாகிய தோழி, தனக்கும் இது போதுபோன்ற சூழல் ஏற்பட வழியில்லையே என்று எண்ணவில்லை. இப்படிப்பட்ட தோழி நடத்தை முறையில் சிறந்து விளங்குகிறாள்.

மேலும், தலைவன், திருமணம் புரியும் நாளில் தலைவியின் கூந்தலில் மலர் சூட்டுகிறான். இதனைக் கண்ட தோழி, நமக்கென்ன என்று ஒதுங்கிவிடாமல், தலைவனின் தந்தையைப் பாராட்டுகின்றாள். இதனை,

**நுந்தை வாழியர்!**
**நல்மனை வதுவை அயர, இவள்**
**பின் இருங் கூந்தல் மலர் அணிந்தோயே!**
(ஐங்.294 : 3 - 5)

என்ற பாடலடிகளால் அறியலாம். தலைவியின் களவின் ஆரம்ப நிலையிலிருந்து உடனிருந்து, பலவகைகளில் போராடி கற்பு வாழ்க்கைக்கு இழுத்துச் சென்றவள் தோழி. எனவேதான் தலைவியின் கூந்தலில் ஊரார் அறிய மலர் சூட்டும் தலைவனின் தந்தையை பாராட்டும் தோழி, இன்ப நிலையிலான நடத்தை வெளிப்படுகிறது.

**எக்கர் ஞாழல் இகந்துபடு பெருஞ்சினை**
**வீயினது கமழுந் துறைவனை**
**நீயினிது முயங்குமதி காதலோயே**
(ஐங்.148)

**எக்கர் ஞாழல் பூவின் அன்ன**
**சுணங்குவளர் இளமுலை மடந்தைக்**
**கணங்கு வளர்த்து அகறல் வல்லாதீமோ**
(ஐங்.149)

என்ற இரண்டு பாடல்களும் பள்ளியிடந்துய்க்கும் தோழியின் நடத்தை சிறப்பை வெளிக் கொணர்கின்றன. தலைவியின் காதலை உய்த்துணர்வதிலிருந்து, அவளைப் பள்ளியிடத்து உய்க்கும் வரை களவில் தோழியின் செயல்திறன் படிப்படியாக வளர்ச்சி பெற்று வருகிறது. தலைவியிடம், தலைவனோடு இன்புற்று இரு எனவும், தலைவனிடம் தலைவி துன்புறுமாறு விட்டு அகலாமல் இரு எனவும் தோழி கூறி பள்ளியிடந்துய்கின்றாள். இச் சூழலிலும் கூட தலைவியின் இன்பத்தை மட்டுமே மனதில் கொண்டு செயல்படும் தோழியின் நடத்தை ஆராயக்கூடியது. பள்ளியிடந்துய்த்தல் செய்தி ஐங்குறுநூற்றைத் தவிர வேறு இலக்கியங்களில் இடம்பெறவில்லை.

### 5.3. பகிர்வு

ஒரு செயலினை வீட்டிலுள்ளார் தவறு என்று சுட்டிக்காட்டும் போது, இதற்கு காரணம்

தான் மட்டுமல்லா, நீயும்தான் என்று தவற்றை பகிர்ந்து கொண்டு தப்பித்துக் கொள்வது மனித இயல்பாகும். இதையே தான் தோழியும் கையாளுகின்றாள்.

தலைவனும், தலைவியும் களவு வாழ்வில் ஈடுபட்டு, பின் தலைவன் பொருள் தேடிச் செல்கின்றான். இதனால் அவனைக் காணாது தலைவியின் உடல் மெலிகிறது. இதனைக் கண்டு அஞ்சும் செவிலி வெறியாட்டு மேற்கொள்கிறாள். அப்போது தோழி, தலைவியின் களவை அறத்தொடு நிற்றல் மூலம் வெளிப்படுத்துகின்றாள்.

**நெல்கொள் நெடுவெதிர்க்கு அணந்த யானை**
**முத்துஆர் மருப்பின் இறங்குகை கடுப்ப**
**துய்த்தலை வாங்கிய புளிறுநீர் பெருங்குரல்**
**நல்கோள் சிறுதினைப் படுபுள் ஓப்பி**
**எல்பட வருதியர் எனநீ விடுத்தலின்**
**(குறிஞ்சி: 35 - 39)**

என்ற பாடலடிகளில் தோழி, செவிலியிடம் தலைவியின் களவினை எடுத்துரைக்க ஆரம்பிக்கும் முன்பே, தலைவி களவு வாழ்வில் ஈடுபடுவதற்கு நீயும் ஒரு காரணம் என்று கூறி செவிலியின் கோபத்தை முதலில் குறையச் செய்கிறாள். மேலும் தலைவியின் நிலைக்கு நீ தான் காரணம் என்று தன்னை சொல்லி விடக் கூடாது என்பதற்காக, தினைப்புனங்காவலுக்கு நீ விடுத்தமையால் இது நிகழ்ந்தது என்ற குற்றத்தை பகிர்ந்து கொள்ளும் தோழியின் ஆளுமை அணுகுமுறை சிறப்பிற்குரியது.

**5.4. மாந்தர் பண்பு**

ஒருவர் பல நாட்கள் எதிர்பார்த்து கொண்டிருக்கும், ஒரு செயல் நிகழ்வதாகக் கூறினால், கூறியவரை பாராட்டுவது மாந்தர்களின் பண்பு எனலாம்.

தலைவன், தலைவி இருவரின் களவு வாழ்வானது கற்பு வாழ்வாக மாற்ற பல இன்னல்களைச் சந்திக்கிறாள். தோழி, அச்சமயத்தில், தலைவன், தலைவியை மணம் புரிவதற்காக வருவதை செவிலி, தோழியும் அறிவிக்கின்றாள். இதனைக் கேட்டதும் தோழி, செவிலியை பாராட்டுகின்றாள். இதனை,

**அரும்பெறல் அமிழ்தம் ஆர்பதம் ஆகப்**
**பெரும் பெயர் உலகம் பெறீஇயரோ, அன்னை -**
**தம் இல் தமது உண்டன்ன சினை தொறும்**
**தீம்பழம் தூங்கும் பலவின்**
**ஓங்குமலை நாடனை, வரும் என்றோளே!**

என்ற பாடலின் மூலம் அறிய முடிகின்றது. தலைவன் தலைவியை மணம் செய்ய வரும் செய்தியை, தோழிக்கு செவிலி அறிவிக்கின்றாள். இதனைக் கேட்டதும், ஆனந்தத்தில் செவிலியை தோழி, பெருதற்கு அறிய அமிழ்தமே உண்ணும் உணவாகப் பெரும் புகழையுடைய துறக்க உலகத்தையே பெறுவாயாக என்று பாராட்டுகின்றாள். இவ்வாறு செவிலியைப் பாராட்டும் தோழியின் பண்பு போற்றுதற்குரியது.

தோழியின் ஆழ்மன உணர்வான தலைவியின் களவு வாழ்வை கற்பாக மாற்ற அறத்தொடு நிற்கும் போதும், தலைவனின் மனம் நோகாமல் வரைவு கடாவும் போதும் தோழி உள்ளப்பகுப்பு முறையில் செயல்படுவது சிறப்பிற்குரியது.

தலைவியின் களவு வாழ்விலும் சரி, கற்பு வாழ்விலும் சரி முழுக்க முழுக்க உடனிருக்கிறாள் தோழி. ஆனால், தனக்கும் இதுபோன்ற சூழல் இல்லையே என்று எண்ணியச் செய்தி இல்லை. இப்படிப்பட்டத் தோழியின் நடத்தை முறை புகழுதற்குரியதாகும். தலைவியின் களவிற்கு காரணம் தான் மட்டுமே என்று செவிலிக் கூறிவிடாவண்ணம், தினைப்புனங் காவலுக்கு நீ அனுப்பியதால் இக்களவு வாழ்வு ஆரம்பமாகியது என்று கூறும் பகிர்வு அணுகுமுறை போற்றுதற்குரியதாக உள்ளது. மேலும், தன் எண்ணவோட்டத்திற்கு ஏற்ற சொல் கூறும் மாந்தரை பாராட்டும் தோழியின் பண்பு, அவள் மீது நன்மதிப்பை ஏற்படுத்துகிறது.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# தனித்தமிழாக்கத்தில் தேவநேயப் பாவாணர் பங்களிப்பு

**முனைவர் த.அண்ணாதுரை**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு-638 052.

முகப்புரை

ஆயிரம் ஆண்டுகள் பல கடந்தும் தனித்து இயங்கக் கூடிய ஆற்றல் தமிழ் மொழியைத் தவிர உலகியல் மொழிகளுக்கு கிடையாது. அந்த தனிச்சிறப்பு தமிழ்மொழியே எனவும் உலகின் தாய்மொழியாக விளங்குவது தமிழ் என்கிற கருத்தாக்கங்களை தமது ஆய்வு நூல்களில் நிறுவியவர் பாவாணர். தமிழ் மொழியில் கலந்துள்ள வடமொழி மற்றும் பிறமொழிச் சொற்களை அகற்றி அதற்கான தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்திய பெருமை இவரையே சாரும். தனித்தமிழாக்கத்தில் பாவாணர் பங்களிப்பு குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

### தம்மில் மொழி

ஒவ்வொரு மொழிக்கும் அடையாளமாக பெரும்பாலும் நாடு பற்றிய பெயரும் அம்மொழி பேசுகிற மக்கள் சார்ந்த பெயரும் அல்லது திசை சார்ந்த (வடமொழி, தென்மொழி) பெயராக அமைவது இயல்பு. நாம் இன்றளவு தமிழ் என்கிற உள் அடையாளங்களை கொண்டு அழைக்கின்றோம். ஆனால் சங்ககால இலக்கியங்களில் இவ்வகையான அடையாளங்கள் இல்லை. இது பிற்காலத்தில் உருவானதாக பாவாணர் குறிப்பிடுகிறார். தமிழகம் சார்ந்த வணிகர் வடக்கிலுள்ள நாட்டிற்கு வணிகம் மேற்கொள்ளச் சென்றிருந்த போது அம்மக்கள் இவர்கள் பேசும் மொழியினை தம்மில் மொழி எனக் குறித்திருக்கலாம். அதுவே காலப்போக்கில் மருவி தமிழ் மொழி என்றானது எனவும் தம்மில் = தம் + இல், இல்-என்பது வீடு, நாடு, ஊரைக் குறிக்கும் எனவே தம்மில் மொழி என்பது தென்பகுதி மக்கள் பேசும் தமிழ்மொழி எனத் திரிந்திருக்கலாம் எனக் குறிப்பிடுகிறார்.

### சொல் திரிபு

கருத்து வளர்ச்சிக்கேற்ப திரிபு முறையில் பற்பல சொற்கள் தோன்றின. அறுவகைத்திரிபு, முக்குறை, மும்மிகை என 17 வகையான சொல் திரிபடைவதாகப் பாவாணர் கூறுகிறார். இத்தகைய சொற்திரிபுகளே புதிய சொற்களாக தமிழுக்கு வளம் சேர்த்தன. தமிழ்மொழி பெரும்பாலும் இம்மொழியின் வேர்ச் சொற்களிலிருந்து புதுச் சொற்களை உருவாக்கிக் கொண்டன என்கிற இவரது கருத்தினை அனைவரும் உடன்பட்டே ஏற்றுக் கொள்கின்றனர்.

### தனித்தமிழாக்கத்தில் பாவாணர் அணுகுமுறை

உலக மொழிகளிலேயே தமிழ்மொழி மட்டும் தான் பிறமொழித் தாக்குதலால் பாதிப்படையாத மொழியாகும். இம்மொழியின் தனித்தன்மையைக் காப்பதற்குப் பல முயற்சிகள் பல அறிஞர் பெருமக்களால் மேற்கொள்ளப் பட்டது. அதில் தனிச்சிறப்பு கொண்டவர்

பாவாணர் ஆவார். ஆரியர்களின் மொழி தமிழகத்தில் வருமுன் தமிழ் எப்படி செழுமையாக இருந்ததோ அப்படியே அதனை காத்து வழங்குவதே தனித்தமிழ் என்று மொழிக்கு விளக்கம் தருகிறார்.

ஒரு மொழியின் தனித்தன்மைக்குக் காவலாக இலக்கணக் கட்டமைப்பும் ஒலிப்பு முறையும் அமைந்துள்ளன. வேற்றுச்சொற்கள் உள்ளே நுழையும்போது பல மொழிகள் தம்மொழியிலுள்ள எழுத்தொலிப்புகளை மட்டும் பயன்படுத்தி தம் மொழிவடிவம் தந்து தமது மொழியின் தனித்தன்மையைக் காத்துக் கொள்கின்றன.

(எ.டு) விபீஷணனை - விபீடணன் என ஆக்கிக் கொள்ளுதல்

வேற்றுமொழியின் எழுத்தைப் புகுத்துவது என்பது அடிப்படையையே தகர்ப்பது, ஒரு மொழியையே சீர் குலைப்பதாகும். தமிழ்ச் சொற்களை மட்டும் ஏற்றுக் கொள்ளல், தமிழ்ச் சொற்களாக ஏற்றுக்கொள்ளத்தக்கன எவை, நீக்கத்தக்கன எவை என்பதை ஆய்ந்து அதற்கான நெறிமுறையை வகுத்துக்கொண்டார். பிறமொழிச் சொற்களில் உள்ள இடப் பெயர்களையும், இயற்பெயர்களையும் தமிழ் எழுத்துக்களால் ஒலிபெயர்த்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்.

(எ.டு)இடப்பெயர்: Africa - ஆப்பிரிக்கா
இயற்பெயர்: ஹரி - அரி

பொருட்பெயர்களும் மொழியாக்கம் பெற்றுக் கலைச் சொற்களாகப் பெருக வேண்டும் என்கிறார்.

(எ.டு) Telephone - தொலைபேசி
Radio - வானொலி

தமிழில் புகுந்துள்ள வடசொற்கள் அனைத்தும் நீக்கப்பட வேண்டும். வடமொழிக்குச் சென்ற தமிழ்ச் சொற்கள் திரிபுற்றிருப்பின் பழந்தமிழ் வடிவிலேயே வடிவம் மீட்டமைக்கப்பட்டு மீண்டும் தமிழில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(எ.டு) லஷண (வடமொழி): இலக்கணம் (தமிழ் மொழி)

தனிச் சொற்களில் வேர்ச்சொற்கள் தமிழாகவும் சொல்லின் ஈறு அல்லது இடைநிலை வடமொழியில் அல்லது வடநாட்டில் பெற்ற திரிபாகவும் இருப்பின் அச்சொற்கள் இலக்கணப்படி செம்மையானத் தமிழ்ச் சொற்கலாகாது.

(எ.டு) ஆதி, சூரியன்

ஆ-ஆது-ஆதுபகவன், சூர்+ அன்-சூரன் என்பதே தமிழ்ப்புணர்ப்பு என்கிறார்.

### பாவாணரின் ஆய்வு முடிவுகள்

பாவாணர் தமது அரிய ஆய்வின் மூலம் காலங்காலமாகவும் இருந்து வந்த கருத்தைபெயல்லாம் துணிவுடன் எடுத்தெறிந்து தமது கருத்தை நிறுவியவர். பல்வேறு மொழியிலுள்ள சொற்கள், எழுத்துக்கள் தமிழிலக்கியங்களிலும் மக்களிடமும் தொன்றுதொட்டு நிலைபேறு பெற்றிருந்தாலும் துணிந்து விலக்கத்தக்கவை என்று கூறித் தமிழின் செம்மைக்கு வித்திட்டவர். அயல் மொழிச் சொற்களையும் உருமாறிய சொற்களையும் விலக்கித் தமிழின் சொல்வளத்தைப் பேணிக்காக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இவரது நோக்கில் உறழ்வுநெறி இல்லை. அகராதி என்ற சொல்லையும் அகரமுதலி எனத் தூய தமிழ்ச் சொல்லாக மாற்றிக்கொண்டார்.

### தனித்தமிழ்க் காப்பில் பாவாணர்

ஆரிய மொழிக்கலப்புக்கு முன் தமிழ் எப்படி இருந்ததோ அதே நிலையில் மீண்டும் செம்மையான தமிழாகக் காப்பதே தனித் தமிழ் எனக் கூறினார். பாவாணர் தாமே புத்துரை வகுத்து வெளியிட்ட திருக்குறள் தமிழ்மரபுரை என்ற நூலில் வள்ளுவர் கையாண்ட சொற்களையே தனித்தமிழ்ச் சொற்களாக மாற்றிக்காட்டியுள்ளார்.

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

அகர முதல எழுத்தெல்லாம் முன்னைப்
பகவன் முதற்றே உலகு

ஆதி என்ற சொல்லுக்கு முன்னை என்ற தூய தமிழ்ச்சொல்லைப் பயன்படுத்தினார். கரிய நிற அன்னப்பறவையை இளங்கோவடிகள் காரன்னம் எனச் சிலப்பதிகாரத்தில் குறிப்பிட்டார். அன்னம் என்ற சொல் வடசொல் என்பதற்காக அச்சொல்லைத் தவிர்த்து காரோதிமம் என்ற தூய தமிழ்ச்சொல்லையே பாவாணர் பயன்படுத்தியுள்ளார். இன்னும் எண்ணற்றச் சொற்களை எடுத்துக்காட்டாகச் சுட்டலாம்.

தனித்தமிழ் காப்பில் இருபதாம் நூற்றாண்டில் சிறந்த தனித்தமிழ் நடையாளராக நின்று வெற்றி பெற்றிருக்கிறார். பாவாணரின் தனித் தமிழாக்கத்தில் அயற் சொற்கள் மட்டுமின்றி வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்களும் சீர்மையடைந்து புத்தாக்கம் பெற்றுள்ளன.

**துணை நூல்கள்**


1. தேவநேயப்பாவாணரின் மொழியல் வரலாற்றுக் கொள்கை க.தமிழமல்லன்
2. தமிழ் வரலாறு : ஞா.தேவநேயப்பாவாணர்
3. பாவாணர் ஆய்வு நெறி : இரா.மதிவாணன்



# SELP JOURNAL OF SOCIAL SCIENCE

[A Refereed Quartely Journal with ISSN : 0975-9999 (Print), 2349-1655 (Online)]
Indexed with RePEc, Thomson Reuters, CSA Data base & Collection, Open J.Gate

Articles are invited from the academician, research scholars and subject experts for the next issue of the **Selp Journal of Social Science** (October - December 2015) which will be published in the month of November 2015.

**Selp Journal of Social Science** is an official publication of the SELP Trust. It features the original research in all branches of Commerce, Business Management and other cognate branches of sufficient relevance. The manuscripts should be submitted through mail to the Managing Editor to ***tamilselp@yahoo.in***.

To facilitate an editorial decision on the acceptability, or otherwise, of their manuscript, and to speed-up subsequent publication, authors are strongly advised to consult the format of papers in a recent issue of Research Explorer.

Review/Strategy/Case study etc should be comprehensive, up-to-date and critical on a recent topic of importance. The maximum page limit is of 10 double spaced typed pages including tables and figures.

At the bottom of first page, Postal address of the corresponding author and co-author(s), and also Departmental address with designation, Tel. No. Fax No. and E-mail ID etc. must be specified.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# சங்க இலக்கியத்தில் ஆடவர் விளையாட்டுக்கள்

**வெ.சித்ரா என்ற பத்ரகாளி**
இளநிலை ஆய்வாளர் தமிழ்
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

## முகப்புரை

சங்க காலத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தினார்கள். வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றைச் சார்ந்தே அவர்களின் தொழில் அமைந்து இருந்தது. ஆகவே அவர்களுக்கு அதிகமான ஓய்வு இருந்தது அவர்கள் இனக்குழுச் சமுதாய அமைப்பைப் பெற்றிருந்தமையால் ஒருவரோடு ஒருவர் நெருங்கிப் பழக வாய்ப்பு இருந்தது. குழந்தைகளும் இளையோரும் விளையாடி இன்புற்றனர். பல விளையாட்டுக்களை ஐந்திணை மக்களும் விளையாடினர். சில விளையாட்டுக்கள் குறிப்பிட்ட ஒரு திணைக்கே உரிதாக இருந்தது சங்க இலக்கியங்களில் காணப்படும் ஆடவர் விளையாட்டுகள் மொத்தம் பத்து ஆகும். இதில் ஏறுதழுவல், கவண், சிறுதேர், சிறுபறை, வட்டு, வேட்டை போன்ற ஆறு விளையாட்டுக்கள் பற்றிய விளக்கங்களாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

### விளையாட்டு – அறிஞர்கள் தரும் கருத்து

விளையாட்டு என்பதன் விளக்கத்தினைப் பல்வேறு அறிஞர்களும் பல்வேறு விதமாகக் குறிப்பிட்டுள்ளனர். விளையாட்டு என்ற சொல்லில் 'விழை' என்பதன் பொருள் விருப்பம் ஆகும் என மு.வை.அரவிந்தன் விளையாட்டு பற்றிய கருத்தை தெரிவித்துள்ளார். விளையாட்டில் பொழுது போக்கு என்ற நிலை பொதுவான கருத்தாகும். குறிப்பாக பங்கு கொண்டு பொழுது போக்குவதனை விளையாட்டின் இயல்பெனலாம். ஓய்வு வேளையில் மனமகிழ்ச்சிகளைச் செய்யக்கூடிய எளிய அல்லது வேடிக்கையான செயல்களை விளையாட்டெனலாம் என இரா.பாலசுப்ரமணியன் விளையாட்டின் இயல்பினைக் குறிப்பிடுகிறார். போலச் செய்தல் என்பது அனைத்து வயது நிலைகளிலும் காணக்கூடியது. இளம் பருவத்தாரிடம் இப்பழக்கம் சிறப்பாக காணப்படும். முதலில் தெரியாமல் பின்பற்றப்படும் இப்பழக்கம் பின்பு பின்பற்றவேண்டுமென்றே பின்பற்றப்படுகிறது. போலச் செய்தலின் இம்முறை சமூகம் சீராக இருப்பதற்கு ஒரு காரணமாகும் என்று சமூகவியலார் குறிப்பிடுவர். இவ்வாறு விளையாட்டு குறித்துப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளன.

### ஆடவர் விளையாட்டுக்கள்

சங்ககால ஆடவர் போர்த்தொழிலில் சிறப்பு பெற்று இருந்தனர். தம்முடைய ஓய்வு நேரங்களில் வீரத்தை வெளிக்காட்டும் விதமாகவே அவர்கள் விளையாட்டுகளையும் மேற்கொண்டனர்.

பெருமையும் வீரமும் ஆடவரின் இரண்டு கண்கள் ஆகும். போரில் வெற்றி பெற உடல் வலிமை இன்றியமையாதது. அதனால்

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

உடல் வளத்தைப் பெருக்கும் போர்ப் பயிற்சிக்கும் அடித்தளமான விளையாட்டுக்களை ஆடவர் விளையாடினார்கள்.[1] ஏறுதழுவல், குதிரை ஏற்றம், யானை ஏற்றம், குறும்பு விளையாட்டுக்கள், சிறு தேர், சிறுபறை, மல், வில், வட்டு, வேட்டை, கவண் போன்ற விளையாட்டுக்களை சங்க கால ஆடவர் விளையாடியுள்ளனர் என்பதனை அறிய முடிகின்றது.

**3.1 ஏறுதழுவல்**

இது தமிழரின் வீர விளையாட்டாகும். கலித்தொகையில் முல்லைக் கலியில் மட்டும் இவ்விளையாட்டு சித்தரிக்கப்பட்டுள்ளது. ஏறுதழுவுதல் என்பது சங்க கால ஆடவரின் வீரத்தை விளக்கக் கூடிய விளையாட்டாக அமைந்தது எனலாம்.

முல்லை நிலத்தில் இது வழக்கில் இருந்தமையைக் குறித்து ஆயர்கள் மத்தியில் நிலவிய மணவினைச் சடங்குகளுள் ஒன்றாக ஏறுதழுவல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதால் அறிய முடிகிறது. திறனை அறியும் வீர விளையாட்டாக இவ்விளையாட்டு சுட்டப்படுகிறது. இஃது ஏறுகோள் என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது. இவ் வீர விளையாட்டில் பறையறைதலும், குரவை ஆடுதலும் நிகழ்த்தப்படுகின்றது

கொல்லேறு சாட இருந்தார்க்கு, எம்பல்லிரும்
கூந்தல் அணை கொடுப்பேம் யாம்
(கலி, 101-41-42)

என்ற பாடல் அடிகள் இதனை விளக்குகின்றன. ஏறுதழுவுதலை அனைவருக்கும் பறையறைந்து தெரிவிக்கும் முறை இருந்துள்ளது. இதனை

ஓ ஓ! இவள், பொருபுகல் நல்லேறு கொள்பவர் அல்லால்
திருமாமெய் தீண்டலர் என்று கருமமா
எல்லாருங் கேட்ப அறைந்தறைந் தறைந்தெப்பொழுதுஞ்
சொல்லாற்றரப் பட்டவள் (கலி 102: 9-12)

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன.

எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்புக்
கலங்கினர் பலர்
அவருள் மலர்மலி புகழ் எழு
அலர் மலி மணிபுரை நிமிர் தோள் பிணைஇ
எருத்தோடு இமிலிடைத் தோன்றினன்
(கலி 102-21,26)

என்ற பாடல் அடிகள் ஏறுதழுவல் நடக்கின்ற களத்தைப் பற்றி விளக்குவதாக அமைந்துள்ளன. ஏறு தழுவல் நடக்கும் நிலத்தில் மிகுதியான காளைகளும் அவற்றை அடக்கும் வீரர்களும் நிறைந்துள்ளனர். அவர்கள் ஓடுவதனால் எழும்பிய புகை எங்கும் பரக்கின்றது. சினத்துடன் பாய்ந்து வரும் அந்தக் காளையை அடக்குபவனே பெண்ணை அடையும் உரிமையைப் பெறுகின்றான் என்பதனை இதன் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

மேலும் காளையை அடக்குபவனையே பெண்கள் மணம் புரிய விரும்புவர் என்பதனை

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்
(கலி 103, 63-64)

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. ஆயமகளிர் காளையின் கொல்கின்ற கொம்புக்கு அஞ்சி ஓடும் இளைஞனை எப்பிறவியிலும் கணவனாக ஏற்றுக் கொள்ள மாட்டாள் எப்போதும் வெறுப்பாள் எனவும் வீரமுள்ள ஆண் மகனையே தழுவுதற்குரியவனாக தேர்ந்தெடுப்பாள் என்றும்இக்கலித்தொகைப் பாடல் அடிகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.இதன் மூலம் ஆண்களின் வீரத்தைக் காட்டும் ஏறுதழுவுதல் அமைந்தமையை அறிய முடிகிறது.

**3.2 சிறுதேர்**

சங்க காலத்தில் குழந்தைகள் நடை பயிலுவதற்கும் சிறுவர்கள் விளையாடுவதற்கும் சிறிய தேர் வடிவிலான விளையாட்டப்

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

பொருளினைப் பயன்படுத்தியுள்ளனர். சிறுவர்கள் மெல்ல மெல்ல நடக்கப் பழகும் காலங்களில் மூன்று கால்களையுடைய சிறுதேர்களை உருட்டி விளையாடினர் என்று சுட்டுவர்.

பொற்காற் புதல்வர் புரவியின் றுருட்டும்
முக்காற் சிறுதேர் முன்வழி விலக்கும்
(பட்டி 24-25)

என்ற பாடலடிகள் காலில் பூண் அணிந்த சிறுவர்கள் குதிரை இல்லாமல் செல்லக்கூடிய தேர்போன்று அமைந்த மூன்று சக்கரங்களை உடைய வண்டியை உருட்டி விளையாடி உள்ளனர் என்பதனை விளக்குகின்றன.

ஊரா நற்றே ருருட்டிய புதல்வர்
(பெரும் பாணற்ப்பா 246)

என்ற பாடல் அடி சிறுவர்கள் தேர் ஓட்டி விளையாடியமையைக் குறிப்பிடுகின்றது.

முற்றத்துக்
கால் வல் தேர் கையின் இயக்கி
(கலி-81:7-8)

என்ற பாடலடிகள் வீட்டின் முன் அகன்ற முற்றத்தில் வலிமையான சக்கர வண்டிகளை கையால் உருட்டி விளையாடி மகிழ்ந்து விளையாடியுள்ளனர் என்பதைத் தெரிவிக்கின்றன

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்து இன் புறாஅர் ஆயினும் கையின்
ஈர்த்து இன் புறூஉம் இளையோர் போல
(குறு 61-2-3)

என்ற அடிகள் தச்சன் செய்த சிறிய வண்டியானது குதிரை வண்டி போல் மேல் ஏறிச் சென்று மகிழ முடியவில்லை என்றாலும் சிறுவர்கள் அச்சிறுவண்டியை இழுத்து மகிழ்ந்து விளையாடியுள்ளனர் என்பதனை விளக்ககின்றன. இவற்றின் வாயிலாக சங்ககாலத்தில் சிறுதேர் உருட்டி நடைபழகும் முறைகளையும், சிறுதேரினைக் கொண்டு விளையாடியமையையும் அறிய முடிகிறது.

### 3.3 சிறுபறை

சிறுவர்களுடைய விளையாட்டுக் கருவிகளுள் ஒன்று பறை. பறையை ஒலிக்க வைத்துத் தாளத்திற்கேற்பச் சிறுவர்கள் விளையாடுவர்.

மான்தோல் சிறுபறை கறங்கக் கல்லென
(மலைபடுகடாம் 321)

என்ற அடியானது குறவர்கள் காலையில் கள்ளினைக் குடித்து தம் மனைவிருடன் கூடி மான்தோலால் செய்யப்பட்டிருந்த பறையை, கல் என்னும் ஓசை உண்டாகுமாறு பறை அடித்து விளையாடுவர் என்பதனைப் புலப்படுத்துகிறது.

தொண்டகச் சிறுபறைப் பாணி
(நற் 104:5)

என்ற பாடல் அடி குறிஞ்சி நிலத்திற்குரிய பறையான தொண்டகப் பறையை முழக்குவர் என்று குறிப்பிடுகிறது. இதன் மூலம் பறை அடித்து சிறுவர்கள் தாளத்திற்கேற்ப விளையாடி மகிழ்ந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

இரவு அரி வாரின் தொண்டகச் சிறுபறை
(குறுந் : 375-4)

என்ற பாடல் அடி குறிஞ்சி நிலத்தில் இரவுக்காலத்தில் தினையை அறுப்பதற்கு நள்ளிரவில் தொண்டகச் சிறுப்பறையை ஒலிக்கச் செய்தனர் என்று சுட்டுகிறது. இதன் வாயிலாக சங்க காலத்தில் விலங்குகள் வராமல் இருப்பதற்கும், காவலாளிகள் உறங்காமல் இருப்பதற்கும் சிறுபறை அடித்துள்ளனர் என்பதனையும் சிறுவர்கள் சிறுபறைக் கொட்டி மகிழ்ந்து விளையாடியுள்ளனர் என்பதனையும் அறிய முடிகிறது.

### 3.4 வட்டு

வட்டு என்பது ஒரு வகையான சிறுவர் விளையாட்டாகும். இஃது அறிவு சார்ந்த விளையாட்டாகவும் அமைகிறது.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

தரையின் மேல் கிழிக்கப்பட்ட கட்டத்தில் அல்லது அரங்கத்தில் நெல்லி வட்டைப் போட்டு ஒரு கட்டத்திலிருந்து மறுகட்டத்திற்கு தாண்டி விளையாடுவர். குறிப்பிட்ட இடத்தை முதலில் அடைந்தவர்கள் வெற்றி பெற்றவர்கள் ஆவர் என்று வட்டு விளையாடும் முறைமை குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விளையாட்டுக்கு அரங்கம் தேவை என்பதைத் திருக்குறளும் வலியுறுத்துகிறது.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்

(குறள்-40)

என்ற குறள் இதனை விளக்குகிறது. வள்ளுவர் அறிவு நிரம்பிய நூல்களைக் கற்காமல் ஒருவர்கற்றவர் சபையில் பேச எண்ணுவது ஆட்டம் ஆட வகுக்கப்பட்ட அரங்கின்றி ஆடுவது போன்றதாகும் என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் ஒரு விளையாட்டிற்கு அரங்கு தேவை என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

மோட்டு இரும்பாறை ஈட்டுவது ஈய்ப்ப
ஊதிர்வன படூஉம் கதிர்தெறு கலாசன்

(அகம்:5-10,11)

என்ற பாடல் அடிகள் பாலைநிலத்தில் காய்ந்த ஓமை மரங்களை உடைய காட்டில் நீர் வற்றிய பளிங்கு போன்ற நெல்லிக் காய்கள் பெரிய பாறைகளில் உதிர்ந்து கிடக்கும் அது பார்ப்பதற்கு விளையாடும்வட்டுக்களைப் போன்று காட்சியளிக்கும் என்று குறிப்பிடுகிறது.

கையாடு வட்டின் தோன்றும்

(அகம் - 108 -17)

என்ற பாடலடி காயா மரத்தருகே வளரும் காந்தள் மலரின் தாதினைக் குடைந்து திரியும் வண்டுகள் கையில் வைத்து ஆடும் துக்காய்கள் போல் உள்ளன எனச் சுட்டுகிறது.

இதன் மூலம் வட்டாடும் போது துக் காய்களைப் பயன்படுத்தியுள்ளனர் என்ப

கல்லாச் சிறாஅர் நெசல்லி வட்டு

(நற்றிணை 3: 4)

என்ற பாடலடி கல்லாத சிறுவர்கள் வேப்ப மரத்து நிழலில் கோடுகளை இட்டு நெல்லிக்காயை வைத்து வட்டு ஆடுவர் என்பதனை விளக்குகிறது.

### 3.9 வேட்டை

ஆடவர் விளையாட்டுக்களில் இவ்விளையாட்டு வீர விளையாட்டாகவும், பொழுதுபோக்கு விளையாட்டாகவும் இருந்துள்ளது எனலாம். விலங்குகளை வேட்டையாடி வீரத்தை வெளிப்படுத்துவதாக இவ்விளையாட்டு அமைந்துள்ளது.

வல்வில் வேட்டம் வலம்படுத்து இருந்தோன்:

(புறம் 152-6)

என்ற பாடலடி வல்வில் ஓரியின் வில் ஆற்றலையும், அவனது வேட்டையாடும் வல்லமையையும் விளங்குவதாக அமைந்துள்ளது.

சேந்தன் தந்தை
அரியல் அம் புகலின் அம்கோட்டு வேட்டை

(குறுந் : 258-5)

என்ற பாடல் அடிகள் சேந்தன் என்ற மன்னனின் தந்தை உணவையும் விலங்குக் கூட்டத்தை வேட்டையாடும் தொழிலையும் கொண்டு விளங்கினான் என்று குறிப்பிடுகின்றது. இதனால் சங்க காலத்தில் வேட்டையாடுதலை தொழிலாகவும் கொண்டுள்ளனர் என்பதனை அறிய முடிகிறது.

வேட்டைச் செந்நாய் கிளைத்தூண் மிச்சில்

(குறுற் : 56-1)

என்ற பாடலடி வேட்டையாட்டுவதற்கு நாய்களைப் பயன்படுத்தியமையைக் குறிப்பிடுகின்றன.

### 3.10 கவண் கல்லெறிதல்

புள் ஓட்டவும், போர்புரியவும், தற்காப்புக்காகவும், மாந்தருக்குப் பயன்படும் ஒரு கருவி கவண் ஆகும். இக்கருவியை பெண்களும் பயன்படுத்தியுள்ளனர்.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

**வரையிடைக் கழுதின் வன்கைக் கானவன்**
**சுடுவினை கவணின் எறிந்த சிறு கல்**
(அகம் 292-11)

என்ற இப்பாடலடிகள் யானையை வராமல் தடுக்க கானவன் கவணிலிருந்து கல் எறிந்தான் எனறு சுட்டுகிறது.

**வனைகழை யுடைந்த கவண் விசை கடி இடி**
(அகம் 309-13)

என்ற பாடலடி மூங்கில் தண்டு உடைய கவணிலிருந்து கல்லின் விசையானது இடி போன்று தாக்கியதாகக் குறிப்பிடுகிறது.

**வல்வாய்க் கவணின் கடுவெடி ஒல்லென**
**மறப்புலி உரள வாரணம் கதற**
(அகம் 392-15)

கானவன் வீசிய கவண்கல்லின் ஓசையானது எங்கும் ஒழித்ததால் அது கேட்டு புலி முயங்கிது. யுலீனைக் கதறின எனக் குறிப்பிட்டிருப்பதால் பறவைகள் விலங்குகள் ஆகியவற்றை அடித்து விரட்ட தற்காப்புக் கருவியைலீக பயன்படுத்தியுள்ளனர் என அறியமுடிகிறது

**இருஞ் செருவின் இகல்மொய்ம்பினோர்**
**கல்லெறியுன் கவண் வெரீ இம்**
**புள் இரியும் புகர்ப் போந்தை**
(பட்டி 72:73)

செருக்குடைய பரவச்சிறுவர்கள் கவணிலிருந்து வீசி எறியும் கற்கலுக்கு அஞ்சி பனை மரத்தில் உறையும் பறவைகள் அஞ்சி ஓடின என்று கூறப்பட்டிருப்பதால் சங்க காலத்தில் சிறுவர்களின் பொழுது போக்கு விளையாட்டாக இவ்விளையாட்டு இருந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

**தொகுப்புரை**

ஆடவர்கள் விளையாட்டுகள் புறவகை விளையாட்டுக்களைச் சார்ந்தது. உடல் திறன் விளையாட்டுகள் பெரும்பாலும் வீர விளையாட்டுக்களாகஇருந்தன.

ஆடவர் விளையாடும் விளையாட்டுகளாகப் பத்தினைக் குறிப்பிடலாம்.

குதிரை, யானைகளை அரசரும், வீரரும் போர்ப் பயிற்சிக்கும் தொழிலுக்கும் பயன்படுத்தியுள்ளனர்.

குறும்பு விளையாட்டுக்கள் சிறுவர் விளையாட்டுக்களாகவும், மகிழ்ச்சி தரும் விளையாட்டுக்களாகவும் அமைந்துள்ளன. மேலும் சிறுதேர், சிறுபறை போன்றவை, மகிழ்ச்சி தரும் விளையாட்டாகவும், பொழுது போக்கு விளையாட்டாகவும் குறிப்பிடப்பட்டு உள்ளன.

மல்லாடல், வில் வேட்டை, கவண் போன்றவை உடல் திறன் விளையாட்டாகவும், போட்டி விளையாட்டாகவும்அமைந்துள்ளன.

*Visit our website www.selptrust.org to refers and download the previous issue of*

**SELP JOURNAL OF SOCIAL SCIENCE, RESEARCH EXPLORER, THAMILAIVU SANGAMAM**

*at free of cost*

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# நளவெண்பாவும், நைடதமும்

**முனைவர் ம.தேவகி**
தமிழ்த்துறைத்தலைவர்,
நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தேனி.

**முகப்புரை**

நளவெண்பாவின் ஆசிரியர் புகழேந்தி, நைடதத்தின் ஆசிரியர் அதிவீரராமபாண்டியர். இருவரும் கவிபாடும் திறனைக் கருவிலே திருவாகப் பெற்றவர்கள். நளவெண்பாவின் பாச்சுவையில் உள்ளத்தைப் பறிகொடுத்த புலவர்கள் புகழேந்தியை 'வெண்பாவிற்கோர் புகழேந்தி' என்று விதந்தோதினர். அதிவீரராமனின் கவித்துவத்தை உணர்ந்தோர் அவர் தம் நூலை 'நைடதம் புலவர்க்கோர் ஔடதம்' என்று பாராட்டினர். தமிழ்க் காவிய வரிசையில் நளவெண்பாவும் நைடதமும் தனியிடம் பெறுவதாலும், இரண்டற்கும் நுவல்பொருளாய் அமைந்தது நளமன்னன் கதையே என்பதாலும் அவை ஒப்பியல் நோக்கிற்கு உரியதாகின்றன. இவ்வொப்பீட்டு நோக்கு காவிய நலன்களை நுகர உதவும். ஆகவே அவற்றில் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**நளவெண்பா, நைடதம் வேறுபடும் இடங்கள்**

புகழேந்தியும், அதிவீரராமரும் ஒரே கதையைத் தான் பாடுகின்றனர் என்றாலும், அக்கதையின் நிகழ்ச்சிகளைப் படைத்துப் பின்னிச் செல்லும் முறையில் இருவரும் ஆங்காங்கே வேறுபடுகின்றனர்.

1) நளவெண்பாவின் தொடக்கமும், முடிவும் பின்வருமாறு அமைகின்றன. தருமன் காட்டில் இருந்தபொழுது வியாசரை நோக்கி, அடிகளே! யான் என்னைச் சார்ந்தோருடன் காட்டில் வந்து வாழ்வதற்குக் காரணம் யாது? அதை விளக்கியருளல் வேண்டும் என்று வேண்டினான். வியாசர் அவனைத் தேற்ற எண்ணி, சூதாடுதல் அரசர்க்கு இயல்பேயாம்; ஆதலால் நீ அதற்கு வருந்தற்க என்று கூறினார். அதுகேட்டதருமன், என்னைப் போல் அறிவிழந்து சூதாடி, கைப்பொருள் இழந்து கானகம் வந்தார் வேறுயாரேனும் உளரோ? என்று வினவினான். அதற்கு விடையாக வியாசர் நளமன்னன் கதையைக் கூறத் தொடங்கினார். இறுதியில் வியாசர் இதுவேநளன் கதை என்று முடித்துத் தருமனை வாழ்த்துகிறார். முன்னுரை, முடிவுரை முதலும் இறுதியுமாக அமைய நடுவே காப்பியக் கதை சிறப்பாகப் புனையப்பட்டுள்ளது. இவ்வமைப்பு நைடதத்தில் இல்லை. கதை நேராகத் தொடங்கி நேராக முடிகிறது.

2) தமயந்தியின் சுயம்வரத்தில் பணிப்பெண் ஒருத்தியே வந்திருந்த மன்னரை அவளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள் என்று நளவெண்பா கூறுகிறது. நைடதமோ கலைமகளே பிரமனின் கட்டளையை ஏற்று நிலவுலகிற்கு வந்து, தமயந்திக்கு அறிமுகப் படுத்தி வைத்ததாகச் சொல்கிறது. இதுவும் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

3) தமயந்தியின் மணமாலை பெறாது வாடிய உள்ளத்தோடு தேவர்கள் திரும்பிச் சென்றதாக நளவெண்பா ஆசிரியர் கூறுகிறார். அதிவீரராமபாண்டியர் தமயந்தியை நளனிடமிருந்து மீட்பதற்காக, அங்கு வந்திருந்தோர் எல்லாம் நளனை எதிர்த்துப் போர் புரிந்ததாகக் காட்டுகிறார். வீரச்சுவையை விரித்துப் பேசவேண்டும் என்ற கருத்தில் போர்புரி படலம் என்ற பெயரில் ஒரு படலத்தையே அமைக்கிறார் அதிவீரராம பாண்டியர். அப்போர்ச் செய்தி நளவெண்பாவில் கூறப்படவில்லை.

4) நெடுங்காலம் பிரிந்துறைந்த காதலர் இருவரும் இறுதியில் ஊழின் வலியால் ஒன்று கூடுகின்றனர். அப்பொழுது நளன் தமயந்தியிடம், நீ மறுபடியும் சுயம்வரம் விரும்பியது எதற்கு? என்ற வினாவை தொடுக்கின்றான். அவள் உம்மைக் காணும் பொருட்டே இதற்குச் சம்மதித்தேன்; என்மேல் சிறிதளவும் சந்தேகம் கொள்ளாதே என்று வேண்டுகிறாள். அப்போது அவளது தூய மனத்தை உலகத்தார்க்கெல்லாம் நிருபணம் செய்வது போல் அசரீரி ஒன்று ஒலிக்கிறது.

> வடபுலத்தினில் நோக்குநர் மாசறவிளங்கும்
> கடவுள் மீனினும் தொழுதகுகற்பினுக் கரசாம்
> கொடிமருங்குலைஐயுறாதருள்எனக் கூர்வேல்
> நிடதர் கோமகன் மகிழ்வுற நிகழ்ந்ததை அன்றே[1]

என்று கூறுகிறது நைடதம். இது போன்ற புனைவு நளவெண்பாவில் இல்லை.

5) நளவெண்பாவில் நளன்-தமயந்தி இருவரையும் இணைக்க அன்னப்பறவை தூது செல்கிறது. அன்னமே நளன்பால் சென்று தமயந்தியின் பெருமையையும், தமயந்தி பால் சென்று நளனின் தகுதியையும் எடுத்துரைக்கிறது. ஒருவரைஒருவர் அறிந்து கொள்ளவும், அதனால் அவர்கள் காதல் வயப்படவும் அன்னப்பறவையே முழுமுதற் காரணமாய் இருந்தது. நைடத ஆசிரியர் சற்றே மாறுபடக் கூறுகிறார். நளன், தமயந்தியைப் பற்றி முன்னரே கேள்விப்பட்டிருந்தான். அல்லும் பகலும் அவளையே எண்ணியிருந்தான். அவ்வாறே தமயந்தியும் நளமன்னனின் எழிருவத்தைப் பலமுறை கனவில் கண்டு மயங்கி அவனையே அடைவது என்ற உறுதியோடு வாழ்ந்து வந்தாள். தமயந்தி நளனை முன்னரே அறிந்து வைத்தவள் இல்லை. எனினும் ஊழின் வயத்தால் அவள் அவனைக் கனவிலே கண்டாள். அதிவீரராமர் இதனை விதியின் செயல் என்றே வியக்கிறார்.

6) நளவெண்பாவில், அன்னத்தின் வாயிலாக நளனைப் பற்றி அறிந்த தமயந்தி அவன் மாட்டு அந்தக் கணத்திலேயே காதல் கொண்டு ஆற்றாளாகி, வாவி உறையும் மட அனமே! தேர்வேந்தற்கு என் நிலைமை சென்றுரைத்தி என்று தூது விடுகிறாள். அன்னமும் அதுகேட்டு மகிழ்ந்து, மன்னன் புயம் நின் வன முலைக்குச் கச்சாகும் என்ன முயங்குவிப்பேன் என்று உறுதி கூறுகிறது.

அதிவீரராமரின் கதைத் தலைவி புகழேந்தியாரின் கதைத் தலைவி போல் கேட்டவுடனேயே தூது விடுத்தாள் இல்லை. அன்னம் அவள் விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதாக உறுதி கூறி, பலமுறை வற்புறுத்திக் கேட்ட பிறகே அவள் தன் காதலைத் தெரிவிக்கின்றாள். அதுவும் நேரடியாக அல்ல. குறிப்பாகவே உணர்த்துகிறாள்.

> விழையுமனத் ததுமனத்தை விட்டகல்வதெனின் அன்றோ
> தழையவரை திருநாவால் சாற்றலாம் தகைமைத்தாம்
> எழுபுவிவாழ் கன்னியரில் இருவிசும்பில் தருவின்நறும்
> கொடுநனைநல் குதியென்று கூறுநரும் உளர்சொல்லோ?[2]

என்கிறாள் தமயந்தி. அதன் பின்னரே அவள் தன் காதலை வெளிப்படையாகக் கூறுகிறாள். தாமரைக்கு ஞாயிறும், அல்லிக்குச் சந்திரனும் அன்றி வேறு நாயகர் இல்லாததுபோல, எனக்கு நளனையின்றி வேறு தலைவர் இலர், யான்

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

அவர்க்கே மாலை சூட்டுவேன். என் தந்தை வேறொருவர்க்கு என்னைக் கொடுக்க நினைத்தால் நெருப்பில் வீழ்ந்து உயிர் துறப்பேன் என் அவள் உறுதியோடு பேசுகிறாள்.

7) நளன் குண்டினபுரத்தின் நகர்க் காவலைக் கடந்து செல்வது எவ்வாறு என்று வருந்திய வேளையில் இந்திரன், நின்னை யாரும் கண்டு கொள்வாரல்லர்; எளிதாகச் செல்லலாம் என்று கூறுவதாக நளவெண்பா ஆசிரியர் குறித்துச் செல்கிறார். நைடதத்திலோ இந்திரன் நளனுக்கு உருக்கரந்து செல்லும் மந்திர வித்தையைக் கற்றுக் கொடுக்க, அவன் அவ்வித்தை கைவரப் பெற்றுச் செல்வதாகச் சுட்டப்படுகிறது.

## நளவெண்பா, நைடதம் ஒன்றுபடும் இடங்கள்

கதைப் புனைவில் சிற்சில மாறுபாடுகள் இருப்பினும் காவியத்தின் நோக்கம் மற்றும் கரு ஒன்றே. எனவே இரு புலவர்களும் அடிப்படையான சில நீதிகளை வற்புறுத்தும் இடங்களில் ஒற்றுமையுடையவராகத் திகழ்கின்றனர்.

1) நளனுக்கு அமைச்சர் முதலியோர் சூதினால் வரும் கேட்டினை எடுத்துக் கூறி அவனைத் தடுக்கின்றனர். சூதின் தீமையை எடுத்துக் கூறும் மூன்று பாடல்களும் கருத்தாலும், நடையாலும் நம்மைக் கவர்கின்றன.

அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையேகொண்டருளைத் தேய்க்கும் – மறத்தையே
பூண்டு விரோதஞ் செய்யும்
பொய்ச் சூதைமிக்கோர்கள்
தீண்டுவரோஎன்றார் தெரிந்து [3]

உருவழிக்கும் உண்மை உயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானம் சிதைக்கும் – மருவும்
ஒருவரோடன்பழிக்கும் ஒன்றல்ல சூது
பொருவரோதக்கோர் புரிந்து [4]

ஆயம் பிடித்தாரும் அல்லற் பொதுமகளிர்
நேயம் பிடித்தாரும் நெஞ்சிடையே–மாயம்
பிடித்தாரின் வேறல்லர் என்னுரைத்ததன்றே
வடித்தாரின் நூலோர் வழக்கு [5]

நைடதத்திலும் இவ்வாறே அமைச்சர் பெருமக்கள் சூதின் கேட்டினை நளனுக்கு எடுத்துரைக்கின்றனர். இங்கேயும் மூன்று பாடல்களே காணப்படுகின்றன.

கள்உணவிரும்புதல் கழகம் சேர்தல்மால்
உளஉறப் பிறர்மனைநயத்தல் ஒன்னலர்க்
கெவிளருளாட்பினுள் இரியல் செய்திடல்
வள்ளியோய் அறநெறிவழுக்கும் என்பவே [6]

ஐயநீஆடுதற் கமைந்தசூதுமற்
றெய்துநல் குரவினுக் கியைந்த தூதுவெம்
பொய்யினுக் கருந்துணைபுன்மைக் கீன்றதாய்
மெய்யினுக் குறுபகைஎன்பர் மேலையோர் [7]

எள்ளுகசூதினை இகலிவென்றதூஉம்
கன்னமேற் கொடுவலைகரந்துவேட்டுவர்
உள்உறஅமைத்திடும் உணவைஒர்கிலாப்
புள்ளினம் அருந்தினபோலும் என்பவே [8]

2) தமயந்தியின் இரண்டாம் சுயவரம் வரத்தின்போது இருது பன்னன் தேரேறி வருகிறான். நளனே தேரோட்டி வருகிறான். வாகுகன் என்னும் பெயரில் அவனுக்குப் பணியாளனாய் இருந்தான் நளன். இந்த இடத்தில் நளன் ஓட்டிச் செல்கின்ற தேரானது தான் முன் செய்த தீவினைப் பயனால் மானமிழக்க வேண்டித் தமயந்தியால் விடாத காம மயக்கத்தைக் கொண்டவனான இருதுபன்னன் மனத்தைப் பார்க்கிலும் விரைந்து சென்றது என்று வருணிக்கிறார் புகழேந்தி. தேரின் விரைந்த ஓட்டத்தைக் குறிக்க அவர் கூறும் கற்பனையைக் காண்போம்.

மேலாடை வீழ்ந்ததெடுவென்றான் அவ்வளவில்
நாலாறுகாதம் நடந்ததே–தோலாமை
மேல்கொண்டான் ஏறிவரவெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்டமா [9]

இக்கற்பனையையும், பாட்டையும் அடியொற்றி நைடத ஆசிரியர் தம் பாட்டைச் சிறப்புற யாத்துள்ளார்.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

**மூத்தவெண்குடைவேந்தர்கோன் முழவுறழ்**
**தடந்தோள்**
**உத்தரீயம்அந் நெறிஇடைவீழ்தலும் உணர்ந்து**
**தத்துவாம்பரிநிறுவிஅத் துகில்தருகென்னப்**
**பத்துயோசனைகடந்ததுதோ்ளனப் பகர்ந்தான்** [10]

நளவெண்பாவில் நாலாறு காதம் என்னும் தொடர் நாலும் ஆறும் என எண்ணுப் பெயரில் வந்துள்ளது. நைடதத்திலும் பத்து என்னும் எண்ணிக்கையே குறிக்கப்படுகிறது. புகழேந்தி காதம் என்று கூறுவதை அதிவீரராமர் யோசனை என்று மாற்றியுள்ளார்.

**முடிவுரை**

வெண்பாவில் காப்பியம் எழுத வேண்டும் என்ற தீராத ஆர்வத்தினால் நளவெண்பாவை படைத்தளித்துள்ளார் புகழேந்தி. வெண்பாவின் இயல்பு சொற் சுருக்கம் என்றாலும் காப்பியத்தின் முக்கிய திருப்பங்களான தாடல், தமயந்தியின் இரண்டாம் திருமண சுயவரம் ஆகிய இரண்டு இடங்களில் மூல நூலான நைடத்தில் இருந்து பிறழாமல் இருப்பது இதன் காப்பியச் சிறப்பினை பறைசாற்றுகிறது. மேலும் வடமொழியின் கண்ட காவிய முறையின் படி இக்காவியத்தைப் படைத்தளித்து இருப்பது, வாளொடு முன் பிறந்த மூத்தகுடி தமிழ்க்குடி என்ற காரணத்தால் போர்ப்புரிப் படலம் என்ற ஒன்றைப் படைத்தளித்துதிருப்பது, இந்திரன் வழிகாட்ட நளன் குண்டின புரத்தை கடந்து செல்வது, அன்னப்பறவையின் தூதால் நளன்-தமயந்தி இணைவது என்பது போன்ற பல சிறப்பு கூறுகள் அமைவரப் பெற்று வெண்பா இலக்கணமும், காப்பிய இலக்கணமும் சிதையாமல் இந்நூல் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

**அடிக்குறிப்புகள்**

1. நைடதம் தேவியைக் கண்ணுற்ற படலம். 24 ப.18
2. நைடதம், அன்னத்தைத் தூது விட்ட படலம், 85 ப.46
3. நள கலி தொடர். காண்டம் 218 ப.108
4. மேலது 219, ப.109.
5. மேலது 229, ப.113.
6. நைடதம், தாடு படலம், 20 ப.17
7. மேலது.21 ப.17
8. மேலது.22 ப.18
9. நள.கலிநீங்கு காண்டம், 378 ப.180.
10. நைடதம், கலிநீங்குபடலம் 1120, ப.453

## தமிழாய்வு விருதுகள்

“தமிழாய்வுச் சங்கமத்தின் மூலம் ஆண்டுதோறும் தமிழ் இலக்கியத்தின் சாதனை படைத்தவர்களுக்கு கீழ்க்கண்ட விருதுகள் வழங்கப்படும்.

### திருவள்ளுவர் விருது-

சிறந்த தலித் இலக்கிய ஆய்வு நூல் / கட்டுரைக்கு வழங்கப்படும்.

◆◆◆

### ஔவையார் விருது

சிறந்த பெண்ணிய ஆய்வாளருக்கு வழங்கப்படும்

◆◆◆

### பாரதியார் விருது

சிறந்த நாட்டுப்புற ஆய்வாளருக்கு வழங்கப்படும்.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி - III / பதிப்பு - 5
ஜனவரி - ஜூன் 2015

# இலக்கியத்தில் மருத்துவம்

**இரா. தனசுபா**
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ்.பி.கே. கல்லூரி, அருப்புக்கோட்டை.

**முகப்புரை**

"ஒரு வேளை உண்பான் யோகி
இரு வேளை உண்பான் போகி
முப்போதும் உண்பான் ரோகி
எப்போதும் உண்பான் துரோகி"

என்று எந்நேரமும் உணவை உண்டு வாழ்பவனை இலக்கியங்கள் துரோகி என இழிவுப்படுத்துகின்றன. அதாவது 'உணவே மருந்து' என்பதனை தமிழ் இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன.

## காலந்தோறும் இலக்கியம்

வாய்மொழி இலக்கியமாக, ஓலைச்சுவடியாக கல்வெட்டுகளாக செப்பேடுகளாக வளர்ந்த தமிழ்மொழி மிகவும் பழமையான மொழியாகும். காலந்தோறும் பல்வேறு வடிவங்களில் வளர்ச்சியடைந்து, புதுமைகளை ஏற்றுக்கொண்டு தன்னை வளப்படுத்திக் கொள்ளும் மொழியாகவும் தமிழ்மொழி அமைந்துள்ளது.

பழங்காலச் சமூகத்தின் பண்பாட்டைப் பறைசாற்ற சங்க இலக்கியம், மக்களுக்கு அறிவுரை கூற நீதி இலக்கியம், மக்களை நல்வழிப்படுத்த பக்தி இலக்கியம். அறம், பொருள், இன்பம், வீடுபேற்றினை அறிவுறுத்த காப்பிய இலக்கியம் என்பதோடு மட்டுமல்லாமல் இன்றைய அறிவியலையும், மருத்துவத்தையும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்கள் இலக்கியங்களில் கூறியுள்ளனர். ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் ஒன்றாகவும், அறக்கொடைகள் முப்பத்து இரண்டனுள் ஒன்றாகவும் மருத்துவம் கருதப்படுகிறது.

## சித்த மருத்துவம்

தமிழில் காணப்படும் மருத்துவ நூல்கள் அனைத்தும் பதினெண் சித்தர்கள் எனக் கூறப்பட்ட சித்தர்களின் பெயர்களாலேயே வழங்கப்படுகின்றன. இவை சித்தர் இலக்கியம் எனவும் கருதப்படுகின்றன. இதனுள் மருத்துவம், வாதம், யோகம், ஞானம் ஆகியவை பற்றியும் மருத்துவரின் கடமை, நோயாளி கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றியும் கூறப்பட்டுள்ளன. பல ராமையா என்ற எழுத்தாளர் 'The Greatness of Siddha Medicine' என்ற நூலில் பழங்காலச் சித்த மருத்துவத்தின் சிறப்புகளை விளக்கியுள்ளார்.

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உள்ளும் புறமும் ஒத்த ஒளிப்பிழம்பாய் வாழ்ந்தவர்கள் சித்தர்கள். இவ்வுலகில் தாம்

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

வாழும் நாளை நீட்டித்து, உயிர் தளிர்க்கச் செய்வதற்கு வழி வகைகளை அறிந்தவர்கள் சித்தர்கள். மக்களின் பிணியைத் தீர்க்கும் பணியில் அவர்கள் காட்டிய ஆர்வமே முற்காலத்தில் சித்த மருத்துவம் தோன்றியது. தமிழ் மருத்துவ நூலைத் தோற்றுவித்தவர் தலையாய சித்தரான இவர் இயற்றிய 'எண்ணாயிரம்' என்ற மருத்துவ நூல் கிடைக்கவில்லை. வடலூர் வள்ளலார் அந்நூலின் அருமை பெருமைகளை வியந்து போற்றுகிறார். எந்த நூலிலும் எண்ணாயிரத்திற்கு ஈடில்லை என்கிறார். இடைக்காடர், அகத்தியர், கோரக்கர், மாமூலர் போன்ற சித்தர்களும் மருத்துவ நூல்களை எழுதியுள்ளார்.

**சங்க இலக்கியத்தில் மருத்துவம்**

தமிழ் மருத்துவம் தொன்மை வாய்ந்தது என்பதற்குச் சான்றாக அமைந்துள்ளவை சிந்துச்சமவெளி முத்திரைகள், தொல்காப்பியம், சங்க இலக்கியம், ஐம்பெருங்காப்பியம், திருக்குறள் போன்றவையாகும். அவற்றில் மருத்துவக்குறிப்புகளும் நோய் பற்றிய செய்திகளும், மூலிகைகளும் கிடைக்கின்றன. குறிஞ்சிப்பாட்டில் தொகுத்துக் கூறப்பட்டுள்ள மூலிகைப்பட்டியலே தமிழ் மருத்துவப் புலமைக்குச் சான்றாக அமைகின்றது. தாவரமாகிய எள்ளுக்குத் தோன்றும் 'மகுளி' நோய் யானைக்குத் தோன்றும். 'வயா' நோய், மரணத்தை வெல்லும் மருந்துகள், அறுவை மருத்துவம், குழந்தை மருத்துவம், நோயாளிக்குப் படுக்கைநோய் அண்டாதிருக்க சுகாதாரப் பாதுகாப்பு, மருந்துப் பொருள்களின் பாதுகாப்பு, மருத்துவ உறுப்புகள் போன்றவை கூறப்பட்டுள்ளன.

அறுவைச் சிகிச்சை பற்றிய செய்திகள் 'பதிற்றுப்பத்து' என்ற நூலில் காணப்படுகிறது. இதில் சேரனின் வெற்றிச் சிறப்பையும், கொடைச் சிறப்பையும் கூற வந்த புலவர் பனை மாலையையும், வீரக்கழலையும் கொண்ட உன் வீரர்கள் மீன்கொத்திப்பறவை மீனைப் பிடிக்க குளத்தில் மூழ்கி எழுந்தது போன்ற வெள்ளிய ஊசியினது நீண்ட கூர்மையால் தைத்ததால் ஏற்பட்ட வடுவினை மார்பில் கொண்டவர்களாக உள்ளனர் என்று கூறுவதிலிருந்து கூர்மையான ஊசிக் கொண்டு போரில் காயம்பட்டுக் கிழிந்த உடல் பாகங்களை அவர்கள் தைத்தனர் என்பதை அறிந்துக் கொள்ள முடிகிறது.

சங்ககாலத்தில் தோன்றிய மருத்துவத் தனிநூல்கள் எதுவும் கிடைக்கவில்லை. என்றாலும், சங்ககாலப் புலவரால் இயற்றப்பட்ட 'ஆற்றுப்படை' என்னும் மருத்துவ நூலின் ஒரு பகுதி கிடைத்துள்ளது. இது சங்ககாலத்தில் மருத்துவ இலக்கியங்கள் தோன்றின என்பதற்கு சான்றாகிறது. சங்க காலத்தில் 'கலைக்கோட்டுத் தண்டார்' என்னும் முனிவர் வாழ்ந்துள்ளார். அவர் ஒரு லட்சம் பாடல்கள் அடங்கிய மருத்துவநூலை இயற்றியுள்ளார். அந்தச்சுவடி ஜெர்மன் நாட்டிற்குச் சென்றிருக்கிறது. அதன்பின் ஜெர்மன் நாட்டு மருத்துவத்துறையில் முன்னிலை பெற்றுள்ளது என்று ஜெர்மன் நாட்டுத் தமிழறிஞர் கருத்துத் தெரிவித்துள்ளார். ஆனால், அம்முனிவர் எழுதிய நூலின் ஒரு பகுதி கூட நமக்குக் கிடைக்கவில்லை. கலைக்கோட்டு முனிவர் நூலைப் பார்த்துப் பல நூல்கள் இயற்றினேன் என்கிறார் போகர். அதைப் போல நாடு கடந்து சென்ற மருத்துவ தமிழ்ச்சுவடிகள் 87 நாடுகளின் நூலகங்களில் இருக்கின்றன.

**அற இலக்கியத்தில் மருத்துவம்**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் நீதி இலக்கியங்கள் பலவற்றில் மருத்துவம் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. திரிகடுகம், ஏலாதி போன்ற மருத்துவப் பொருகள்களின் பெயரால் வழங்கப்பட்ட இலக்கியங்களும் தமிழில் உள்ளது. நோயற்ற வாழ்வை மக்கள் பெற வேண்டும் என்ற நோக்கிலேயே வள்ளுவரும் பொருட்பாலில் 'மருந்து' என்ற அதிகாரத்தைப் படைத்துள்ளார். உலக உயிர்கள் நோயில்லாமல் வாழ்வதற்கான எளிய மருத்துவத்தை,

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்**

என்ற குறளில் கூறியுள்ளார். அதாவது முன்பு உண்ட உணவு செரிப்பதற்கான கால இடைவெளி தந்து அதன்பின் தேவையான அளவுமட்டும் உண்டு வந்தால் நம் உடம்பிற்கு மருந்து என்ற ஒன்றே தேவைப்படாது என்கிறார். மேலும், நோயுற்ற உடம்பை சிகிச்சை செய்வதற்கான வழிமுறையை

**நோய்நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் சொல்**

என்ற குறளில் விளக்கியுள்ளார். இவ்வாறு 'மருந்து' என்னும் அதிகாரம் முழுவதும் மருத்துவச் செய்திகள் காணப்படுகின்றன.

**காப்பிய இலக்கியத்தில் மருத்துவம்**

சிலப்பதிகாரத்தில் அரைத்து செய்யும் மருத்துகள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. சந்தான கரணி முறிந்த உறுப்புகளை ஒட்டுவது, சல்லியகரணி வேல் தைத்த புண்ணை ஆற்றுவது, சமனிய கரணி புண்ணின் தழும்பை மாற்றுவது, மிருத சஞ்சீவினி இறந்த உடலை உயிர்ப்பிக்கச் செய்வது என்பது போன்ற மருத்துவக்குறிப்புகள் சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்றன. ஆனால் இம்மருந்துகளைப் பற்றிய குறிப்புகள் எந்த மருத்துவ நூலிலும் காணப்படவில்லை. இவ்வாறு நம் மூதாதையர் பலர் அறிவோடும் ஆற்றலோடும் கண்டறிந்த பல மருத்துவ நூல்கள் அழிந்த போனமைக்குக் காரணம் தமிழர்களுடைய அலட்சியப் போக்கே ஆகும்.

பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் பெயர்த்தல் வேண்டும் என்றார் பாரதியார். நம் நாட்டு இலக்கியங்கள் பலவற்றையும் பாதுகாக்க நாம் முன்வராத போது பிற மொழியிலுள்ள நல்ல இலக்கியங்களை மொழி பெயர்ப்பது என்ற பாரதியின் கனவு வெறும் கானல் நீராகவே மாறிவிட்டது.

தமிழர் பண்பாடு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு வகை ஒழுக்கங்களைக் கொண்டது. இவ்வொழுக்கங்களுக்கு முதலாக இருப்பது இன்பமாகும். இன்பமுடனிருக்க வேண்டும் என்பதை கருத்திற்கொண்டு உருவானது தமிழ் மருத்துவம். தமிழ் மருத்துவத்தின் களமாக இருப்பவை தமிழ் இலக்கியமும், சித்தர் இலக்கியமுமாகும். இன்றைய உலகில் மிகச்சிறந்தது விளங்கும் அலோபதி மருத்துவத்தின் தோற்றுவாயாக தமிழ் மருத்துவம் அமைந்துள்ளது என்பதை தமிழ் மருத்துவ இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன. தமிழர்கள் தங்கள் பொருளாதார தேவைக்காக எம்மொழி கற்றாலும் தமிழில் உள்ள மருத்துவம், அறிவியல் சார்ந்த நூல்களைக் கண்டறிந்து, பல ஆய்வுகள் மேற்கொண்டு தமிழின் பெருமையை உலகறியச் செய்வது தமிழர் கடமையாகும். பழங்காலச் சித்தர் பாடல்களில் இன்னும் இன்றைய அறிஞர்களுக்குக் கூட புலப்படாத வானியல், மெய்யியல், ஜோதிடவியல் போன்ற செய்திகளும் இடம் பெற்றுள்ளன. தமிழை நன்கு கற்று பிற்காலத்தில் இதுபோன்ற பல ஆய்வுகள் மேற்கொண்டு தமிழ் மொழியைக் காப்பது நம் தலையாய கடமையாகும்.

*தமிழாய்வுச் சங்கமம்*

*அடுத்த இதழுக்கு கட்டுரை அனுப்ப வேண்டிய*

*கடைசி நாள் :*

30 அக்டோபர் 2015

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# கயமனார்

**ச.தனலெட்சுமி**
உதவிப்பேராசிரியர்,
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முகப்புரை**

சங்க இலக்கியப் புலவர்களில் ஒருவரான கயமனாரைப் பற்றியும், அவர் பெயர் பெற்ற காரணம் குறித்தும் அவர் பாடல்களின் வழியாக வெளிப்படும் தாயின் மன உணர்வுகள், உடன்போக்குச் சென்ற தலைவியை நினைத்து செவிலி அடையும் துன்பங்கள், பழக்கவழக்கங்கள், வரலாற்றுக் குறிப்புகள் போன்றவற்றை விளக்கும் வகையில் அமைகின்றது இவ்வாய்வுக் கட்டுரை.

## கயமனார் - பெயர்க்காரணம்

சங்க இலக்கியத்தில் பாடல் பொருள் முதலியவற்றால் பெயர் பெற்ற புலவர்களின் தொகை 16 என்பர்.[1] கயமனார் இவ்வகையில் குறிப்பிடத்தக்க ஒரு புலவர் ஆவார். ‘கயம்’ என்பது குளத்தினைக் குறிக்கும் ஒரு சொல். இது புலவரின் இயற்பெயராய் இருக்காது என்றும் குறுந்தொகைப் பாடலில் (9) வரும் ஒரு காட்சியே புலவருக்கு இப்பெயரை அளித்திருக்க வேண்டும் என்றும் உய்த்துணர இடம் உள்ளது. பசிய இலையினின்றும் மேலெழுந்த நெய்தற் பூ கழியில் வெள்ளம்; மிகும் போதேல்லாம் கயத்தின் - கண்ணே மூழ்கும் மகளிருடைய கண்ணையொக்குமென்று இவர் (கயமனார்) ஒரு பாடலிலே பாடியுள்ளார். இதனால் இவர் கயமனார் என்ற சிறப்புப் பெயர் பெற்றார் என்று ஊகிக்கப்படுகின்றது[2] என்று உ.வே.சாமிநாதையர் தம் குறுந்தொகை நூலாராய்ச்சியில் குறித்திருப்பது இக்கருத்தினை வலியுறுத்துவதாக உள்ளது.

கயமனார் என்னும் பெயர் கய என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த சொல். பெரியவர் என்பது இதன் பொருள்.[3] என்பது ஔவை சு.துரைசாமிப் பிள்ளையின் கருத்து ஆகும்.

## பெயர் கொடுத்தப் பாடல்

கயமனார் பாடியுள்ள குறுந்தொகை 9ஆம் பாடலில் இடம் பெற்ற கயமூழ்கு மகளிர் என்ற தொடர் தான் கயமனார் என்ற பெயரைப் பெற்றுத் தந்தது. ஊப்பங்கழியில் நெய்தல் மலர்கள் பூத்துள்ளன. அம்மலர்களின் காம்பு இலைகளுக்கு மேல் உயர்ந்து தோன்றுகிறது. அலை பெருகி வந்து வெள்ளம் மிகும் போதேல்லாம் நெய்தல் மலர்கள் மறைந்து தோன்றுகின்றன. குளத்திலே பலகால் மூழ்கி மூழ்கி எழும் மகளிரின் கண்களைப் போல் காட்சியளிக்கின்றனவாம். குழியில் மறைந்து தோன்றும் நெய்தல் மலர்கள்,

> பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
> இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
> கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும் (குறுந்.9)

இக்காட்சியை சொல்லோவியத்தில் காண்போர் மனக்கண்ணில் கயம் சிறப்பானதோர் இடத்தைப் பெறுகின்றது. இச் சிறப்பினால்

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

பாடலைப் பாடிய புலவர் 'குளம் பாடிய புலவர்' என அழைக்கப்படும் வகையில் 'கயமனார்' ஆயினார்.

**கயமனாரின் பாடல்கள்**

சங்க இலக்கியத்தில் மொத்தம் இருபத்து மூன்று பாடல்களின் ஆசிரியர் கயமனார்.

குறுந்தொகை -9,356,378,396

நற்றிணை -12,198,279,293,305,324

அகநானூறு-7,17,145, 189,195,219,222,259, 275, 321,383,397

புறநானூறு -254

ஆக மொத்தம் இருபத்து மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

**பாடல்களின் சிறப்பு**

கயமனார் பாலைத்திணையில் உடன்போக்கையும் அதனை அடுத்துச் செவிலி புலம்பல், நற்றாய் புலம்பல் மனை மருட்சி கண்டோர் இரக்கம் முதலான புலம்பல்களையும் பலவாறாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். அவர் பாடியுள்ள பாடல்கள் அனைத்தும் உணர்வும் உருக்கமும் சுமந்து கற்பவர் மனத்தைக் கரைக்கும் தன்னையனவாய் விளங்குகின்றன. அகத்திலன்றிப் புறத்திலும் அவர் புலம்பல் துறையாகிய முதுபாலையைப் பாடியுள்ளார்(புறம்.254). ஆகவே இருதிணையிலும் புலம்பல் பாட வல்லவராய் விளங்குகிறார். அகநானூற்றிலும் புறநானூற்றிலும் கயமனார் பாடல்களில் புலம்பல் மிகுதியாகத் தோன்றுகிறது.[4] என்பர் உ.வே.சாமிநாதையர்.

கயமனார்பாடியுள்ள22 அகப்பாடல்களுள் 21 களவின் பாலன. அவற்றுள் 20 பாடல்கள் உடன்போக்கு பற்றியன. அவற்றுள் 17 பாடல்கள் செவிலி அல்லது நற்றாய் கூற்றாவன. அகத்திணை தனிநிலை அமைப்பு உடையது. ஆதலின் மகளது உடன்போக்கு என்னும் துறையில் பதினேழு தாயார்களின் மனப்பான்மைகளைக் கயமனார் பாடிய புறப்பாடல் ஒன்றும் உடன்போக்கோடு தொடர்பு உடையதாகும். இவ்வாறு அகத்திலும் புறத்திலும் உடன் போதலைப் பற்றிப் பல பாடல்கள் யாத்த இப்புலவரை 'உடன் போக்குப் பாடிய கயமனார்' என்று பாராட்டுகின்றார் வ.சுப.மாணிக்கம்[5]

**கூற்று அடிப்படையில் பாடல்கள்**

கயமனார் பாடியுள்ள பாடல்களில் 22 அகப்பாடல்களுள்

செவிலி அல்லது நற்றாய் கூற்று - 17

தோழி கூற்று - 4

இடைச்சுரத்துக் கண்டோர் அல்லது தலைமகன் கூற்று - 1

என்று கூற்று அடிப்படையில் பிரிக்கலாம். கயமனார் பாடிய அகப்பாடல்களில் தலைவி கூற்று இடம்பெறவில்லை.

'மகட் போக்கிய தாய் சொல்லியது' என்னும் துறை பற்றியே கயமனாரின் பெரும்பாலான பாடல்கள் அமைந்துள்ளன. ஆவை பின் வரும் மூன்று வகைகளில் அமைந்திருக்கக் காணலாம்.

1. மகட்போக்கிய செவிலித்தாய் சொல்லியது - குறுந்.256
   அகம் -17, 145, 189, 321, 397
2. மகட்போக்கிய நற்றாய் சொல்லியது - அகம்.195
3. மகட் போக்கிய தாய் சொல்லியது- குறுந்.396
   நற்.279
   அகம்.219, 275, 383

மகட்போக்கிய செவிலி தெய்வத்திற்குப் பராயது (குறுந்.378) பின் சென்ற செவிலி இடைச்சுரத்துக் கண்டோர்க்குச் சொல்லியது (நற்.198) மகட்போக்கிய செவிலித்தாய் சுரத்தடைப் பின் சென்று நவ்வி பிணாக் கண்டு சொல்லியது (அகம் 7) தாய் மனை மருண்டு சொல்லியது (நற். 293) என்பன கயமனார் நயம்படக் கையாண்டுள்ள கூற்றுகள் ஆகும்.

தோழிக் கூற்றாக உள்ள நான்கு பாடல்களுள் மூன்று (நற்.12) (அகம்.221,259) உடன்போக்கோடு தொடர்பு உடையன. ஒன்று (குறுந்.9) தலைமகற்கு தோழி வாயில் நேர்ந்தது என்னும் துறை பற்றியது.

**மகட் போக்கிய தாயர்**

'மகட் போக்கிய தாய் சொல்லியது' என்னும் ஒரு துறையில் கயமனார் பதினேழு தாயர்களின் மனப்பான்மைகளைத் திறம்படக் காட்டியுள்ளார். மகளது உடன்போக்குத் தாயின் உள்ளத்தை எப்படி எல்லாம் தாக்குகின்றது என்பதை அவர் நுட்பமாகச் சித்தரித்துள்ளார்.

மகட் போக்கிய தாய் பாலை வழியில் தன் ஆயிழை அடிகள் எப்படி எல்லால் வருந்துமோ என எண்ணிக் கலங்குகிறாள் (நற் 279, அகம்.17, 219) தன் மகளின் மென்மைத் தன்மையும், பாலையின் வெம்மையும் நினைந்து வருந்திக் கூறுகின்றாள். (குறுந்.356, 396)

படர்மலி எவ்வமொடு மாதிரம்துழைஇ மனை மருண்டு இருந்த நிலையில் தன் மகள் தலைவனோடு சென்று 'பிறள்' ஆகி விட்டதாக வெறுத்துப் பேசுகிறாள் (அகம்.189) 'என் மகள் போன வழி இன்பத்தைத் தருவதாக அமைக' என்று தெய்வத்தை வாழ்த்துகிறாள் (குறுந்.378) மகள் அன்போடு பேணி வளர்த்த வயலைக் கொடியைப் பார்த்து வைகலும் ஆர நீர் ஊட்டிப் புரப்போர் யார் மற்றுப் பெருகுவை? என்று இரங்கிக் கேட்கின்றாள் (அகம்.383) ஆகுவது அறியும் முதுவாய் வேலனை அழைத்து அவன் கழங்கின் திட்பத்தால் தன் மகளைக் கூட்டிச் சென்ற தலைமகனது குறிப்பை அறிய முயல்கிறாள் (அகம்.195) 'எம் போல் பெரு விதுப்புறுக மாதோ' என்று தலைமகனை ஈன்ற தாயைப் பழித்துப் பேசுகின்றாள்(நற்.293).

உடன்போக்கு மேற்கொண்டு தலைவனோடு செல்லும் தலைவியை இடைச்சுரத்துக் காண்போரும் அந்தோ தானே அளியள் தாயே என்று மகளைப் பிரிந்த தாயின் அவலத்திற்காக இரங்கிக் கூறுகின்றனர். கலங்கா மனத்தோடு உடன்போக்கு மேற்கொள்ள வேண்டும் என்று தலைவிக்கு அறிவுறுத்தும் தோழியும் முதன்முதலில் தாயின் துன்பத்தையே எடுத்துக் கூறுகிறாள். 'நின்னினும் மடவள் நனிநின் நயந்த அன்னை அல்லல் தாங்கி' (அகம்.259) கலங்கா மனத்தோடு உடன்ழி புலீக்கு மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துகிறாள். இவற்றால் மகளது உடன்போக்கால் தாய் கொள்ளும் அவலம் மலையினும் மாணப் பெரிது என உணரலாம்.

**உடன்போக்கு**

உடன்போக்கு பாலை நிலத்திலும் பிற நிலங்களிலும் நிகழலாம். கோடை காலத்திலும் இளவேனில் முதலான பிற காலங்களிலும் நிகழலாம். பிற நிலங்களிலும் பிற பருவங்களிலும் நிகழ்வதாக வைத்துப் பாடலாம் எனினும் கோடைக் காலத்துப் பாலை வழி உடன்போக்காகவே கயமனார் பெரிதும் பாடியுள்ளார். அப்போது தானே மகட்போக்கிய தாயின் அவலத்தை உருக்கமாகவும் ஆழமாகவும் பாட முடியும்? பாலையின் இயற்கைச் சூழல் உடன்போக்குக் ஏற்றதாய் உள்ளது. உடன்போக்கு மேற்கொள்ளும் ஒரு தலைவன் மக்கள் வாழும் பகுதிகளை எல்லாம் விட்டு யாரும் இல்லாத காணாத அரிய பாலை வழியில் தலைவியை அழைத்துச் செல்லுதல் இயல்பே ஆகும்[6] என்னும் மகாதேவனின் கருத்தும் சிந்திக்கத்தக்கதாகும்.

பொற்கலத்தில் உள்ள பொரி கலந்த பாலையும் மிக்கன என்றுக் கூறி உண்ண மறுத்த என் செல்வமகள் நிழலும் நீரும் இல்லாத அரிய பாலை வழியில் நீரற்ற சுனையில் வற்றி வெம்மையுற்ற கலங்கல் நீரைத் தவ்வென்று குடிக்கும் ஆற்றலை எவ்வாறு பெற்றாள்? ஏனக் குறுந்தொகையில் வரும் செவிலித்தாய் ஒருத்தி முன்னை நிலையோடு ஒப்பிட்டு பெருந்துயர் அடைகிறாள்.

நிழல் ஆன்று அவிந்த நீர்இல் ஆரிடைக்
கழலோன் காப்பக் கடுகுபு போகி
அறுசுனை மருங்கின் மறுகுபு வெந்த

வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய
யாங்குவல் லுநள்கொல் தானே ஏந்திய
செம்பொற் புனைகலத்து அம்பொரிக் கலந்த
பாலும் பலஎன உண்ணாள்
கோல்அமை குறுந்தொடித் தளிர்அன் னோளே
(குறுந்.356)

பால் உண்ண அழைத்தாலும் மறுத்து பந்து எடுத்துச் செல்லவும் மறந்து தோழியருடன் மகிழ்ந்து பொழுதுபோக்கிய அருமை மகள் இன்று மூங்கில்கள் உலர்ந்து காணப்படும் பாலை வழியில் நீரும் நிழலும் அற்ற அரிய வழியில் புதியவன் ஒருவனோடு செல்வதை எளிது என உணர்ந்தாளோ? எனத் தலைவி முன் வாழ்ந்த வாழ்வின் வளத்தையும் இப்போது உடன்போக்கு மேற்கொண்டு அவள் உறும் அவத்தின் ஆழத்தையும் எண்ணிக் கலங்குகின்றது மற்றொரு செவிலித்தாயின் நெஞ்சம்.

பாலும் உண்ணாள் பந்துஉடன் மேவாள்
விளையாடு ஆயமொடு அயர்வாள் இனியே
எளிது என உணர்ந்தனள் கொல்லோ முறிசினை
ஓமை குத்திய உயர்கோட்டு ஒருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவாஅன்
மழைமுழங்கு கடுங்குரல் ஓர்க்கும்
கழைதிரங்கு ஆரிடை அவனொடு செலவே
(குறுந்.396)

இருவேறு நிலைகளை எல்லையளவு புனையும்போது தான் உணர்ச்சிகள் ஓங்கி எழும். ஆதலின் தாயின் ஆற்றாமையைக் காட்ட வேண்டி மகளின் செல்வ வாழ்வையும் செல்லும் வழியின் கொடுமையையும் இணைத்துக் கயமனார் பல பாடல்களில் புனைவர் என்னும் வ.சுப. மாணிக்கத்தின் கருத்து குறிப்பிடத்தக்கது.

**உவமைத்திறன்**

ஒன்றைக் காணும் போது அது போன்று மற்றொன்று நினைவுக்கு வருதல் இயற்கை. புலவரின் கண் பொருளைக் கண்டு கண்டு அவற்றின் வடிவையும் நிறத்தையும் போற்றி பயின்ற பயிற்சி நிறைந்தது. ஆகையால் அன்னோர் ஒரு பொருளைக் கண்டதும் அதனோடு ஒப்புமையுடைய மற்றொரு பொருளையும் அகக் கண்ணில் கொணர்ந்து ஒப்பிட்டு மகிழ்வர். இத்தகைய அனுபவமே அவர்கள் இயற்றும் பாடல்களில் உவமைகளாக அணிபெற நிற்கும் என்பர். [8]

இலக்கியங்களில் உவமை பொருள் புலப்பாட்டிற்காகவும் அணி நலத்திற்காகவும் கையாளப்படுகின்றது. இரு பொருள்களுக்கு இடையே காணப்படும் ஒப்புமைப் பண்பை அது புலப்படுத்துகினறது. [9]

சங்கப் புலவர்கள் நுண்மாண் நுழைபுலத்தோடு இயற்கையை நுணுகி நோக்கி உவமைகளைக் கையாளும் பெற்றி வாய்த்தவர்கள் தூய அழகுணர்ச்சியின் அடிப்படையில் அரிய எளிய அழகிய உவமைகளை அமைக்கும் திறம் வாய்த்தவர்கள். இப் பெற்றியும் திறனும் கருதியே உவமையின் நயம் சங்க நூற்களிற் போலப் பிற்கால நூற்களிற் காணல் இயலாது[10] என்கிறார் உ.வே.சாமிநாதையர்.

கயமனாரின் பாடல்களில் ஏறக்குறைய 30 உவமைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் சிலவற்றை காண்போம். நொச்சியின் பூங்கொத்து கரு நிறமானது. அதன் இலை மயிலின் அடி போன்றது.

மயில் அடி அன்ன மாக்குரல் நொச்சி (நற்.305)

செந்நாயின் கூறிய வெளிய பற்கள் பொன்கம்பி இழுத்தாற்போன்று தோன்றுகின்றன.

பொன்வார்ந் தன்ன வைவால் எயிற்றுச்
செந்நாய். (அகம்.219)

பசி மிகுந்த பெண்யானை உதைத்து பட்டை உரித்த ஓமை மரத்தின் சிவந்த அடிப்பகுதி போர் செய்த யானையின் புண்பட்ட காலைப் போல் தோன்றுகின்றது.

பொருத யானைப் புண்தாள் ஏய்ப்பப்
பசிப்பிடி உதைத்த ஓமைச் செவ்வரை.
(நற்.279)

இவ்வாறு சில இயற்கைப் பொருள்களோடு வேறு சில அயற்கைப் பொருள்களை ஒப்பிடும்

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

உவமைகளில் புலவரின் கூர்ந்த நோக்குப் புலனாகின்றது.

**பழக்கவழக்கங்கள்**

கயமனார் பாடல்களில் பழந்தமிழரின் பழக்கவழக்கங்களும் சடங்குகளும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. உலக வழக்கு முற்றும் தெளிவாக அறிந்தவர்[11] என்று நற்றிணை உரையாசிரியரான பின்னத்தூரார் கயமனாரைக் பாராட்டுகின்றார்.

பண்டைத் தமிழகத்தில் நினைத்த இடம் எல்லாம் சுற்றித் திரியும் உரிமை கன்னிப் பெண்களுக்கு இல்லை. அவர்கள் தாய் தந்தையரின் கடுமையான காவலுக்கு ஆளாயினர். (அகம்.7-17).இளம் பெண்கள் காலில் சிலம்பு அணியும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தது. (நற்.12, அகம்.17, 219, 321, 383) சிலம்புகழி நோன்பு பற்றிய செய்தி நற்றிணை 279ஆம் பாடலில் இடம்பெற்றுள்ளது. செல்வம் மிகுந்த மகளிர் பொன் கிண்ணத்தில் பொரி கலந்த பாலை உண்டனர். (குறுந். 356, 369. அகம்.219) அவர்கள் தம் தோழியரோடு பந்தடித்து பொழுது போக்கினர். (குறுந்.396. நற்.12, 305, 324. அகம்.17, 275). ஆடவர்கள் தாடி வைத்திருந்தமைப் பற்றிய குறிப்புகள் இருபாடல்களில் காணப்படுகின்றன. (நற்.198. அகம்221) தலைமகன் தலைமகள் ஆகிய இருவரது தாயாரும் ஒருவரை ஒருவர் கடிந்து கூறும் வழக்கம் இன்று போல் பண்டும் இருந்தது (நற்.293.)

**வரலாற்றுக் குறிப்பு**

கயமனாரின் அகநானூற்றுப் பாடல் ஒன்றில் வரலாற்றுக் குறிப்பு இடம் பெற்றுள்ளது.

> பெருஞ்சீர்
> **அன்னை குறுக்கைப் பறத்தலைத் திதியன்**
> **தொன்னிலை முழுமுதல் துமியப் பண்ணிய**
> **நன்னர் மெல்இணர்ப் புன்னை. (அகம்.145)**

அன்னி என்பான் குறுக்கைப் பறத்தலையில் திதியன் என்பானை வெற்றி கொண்டு அவனது காவல் மரமாகிய புன்னையை வெட்டி வீழ்த்திய செய்தி இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தொகுப்புரை**

- கயம் என்றால் குளம் என்று பொருள். குளம் பாடிய புலவர் என அழைக்கப்படும் வகையில் கயமனார் ஆயினார்.
- கயமனார் இருபத்து மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.
- பதினேழு தாயர்களின் மனப்பான்மையை மகட் போக்கிய தாய் சொல்லியது என்னும் துறையின் வாயிலாக நயம்படக் கூறியுள்ளார்.
- உடன்போக்குச் சென்ற தலைவியை நினைத்து செவிலி அடையும் பெருந்துயரை விளக்கியுள்ளார்.
- அக்கால பழக்கவழக்கங்களைப் பட்டியலிட்டுள்ளார்.
- வரலாற்றுக் குறிப்பையும் எடுத்துரைத்துள்ளார்.

**குறிப்புகள்**

1. ந.சஞ்சீவி, சங்க இலக்கி ஆராய்ச்சி அட்டவணைகள், ப.31.
2. உ.வே.சாமிநாதைய்யர், குறுந்தொகை, பாடினோர் வரலாறு, ப.114.
3. ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, நற்றிணை மூலமும் விளக்கவுரையும், முதல் தொகுதி, ப.58.
4. உ.வே.சாமிநாதைய்யர், குறுந்தொகை, பாடினோர் வரலாறு, ப.114.
5. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், ப.387
6. C.K. Mahadevan, Cultural Heritage of the Ancient Tamils (Unpublished M.Lit. Thesis) p.165.
7. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், ப.385
8. மு.வரதராசன், நெடுந்தொகைச்செல்வம், ப.136
9. J.A. Cuddon, A Dictionary of Literary Terms, p.615.
10. உ.வே.சாமிநாதைய்யர், குறுந்தொகை, பாடினோர் வரலாறு, ப.90.
11. அ.நாராயணசாமி ஐயர், நற்றிணை நானூறு, பாடினோர் வரலாறு ப.32

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# குறுந்தொகையில் யாப்பியல்

**ப.துர்காதேவி**
உதவிப்பேராசிரியர்,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.

**முகப்புரை**

தொல்காப்பியர் யாப்பிலக்கணத்தைச் செய்யுளியலில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா என்று மட்டுமல்லாது வண்ணம், வனப்பு போன்ற அழகியலையும் இயம்பியுள்ளார். இதனைத் தமிழ்மொழித் தோற்றமானது இலக்கணமா? இலக்கியமா? அல்லது இலக்கணத்திற்காக இலக்கியம் படைக்கப் பெற்றதா? இலக்கியத்திற்காக இலக்கணம் படைக்கப் பெற்றதா? என்பது இருபதாம் நூற்றாண்டில் கூட கேட்கப்பட்டு வரும் வினாக்களில் ஒன்றாகும் என சண்முகதாஸ் குறிப்பிட்டுள்ளார்.

**யாப்பகராதி விளக்கம்**

யாப்பு என்றால் செய்யுளை இயற்றுதல், செய்யுளைக் கட்டுதல் என்று பொருள்படும். 'யா' என்றால் யாத்தல் என்ற ஒலிநயக் கோட்பாடாகும். உரைநடையிலிருந்து செய்யுளை வேறுபடுத்துவது இதுவேயாகும் என்று சேம்பர்ஸ் கலைக்களஞ்சியம் பொருள் எடுத்துரைக்கின்றது.

**யாப்பியல் நூல்களின் இயல் பகுப்புமுறை**

ஒவ்வொரு படைப்பும் ஒருவிதமான தன்மையைப் பகுப்புமுறையாக வைத்து அமையக் கூடியதாகும். அவ்வாறு இலக்கணப் பாதையில் அப்பகுப்பு முறையின் விதமானது எவ்வகையில் இடம் பெற்றுள்ளது என்பதை,

1) தொல்காப்பியம் (9 இயல்கள்)

2) சிதம்பரப் பாட்டியல் (5 இயல்கள்)

- உறுப்பியல்
- செய்யுளியல்
- ஒழிபியல்
- பொருத்தவியல்
- மரபியல்

3) முத்துவீரியம் (3 இயல்கள்)

- உறுப்பியல்
- செய்யுளியல்
- ஒழிபியல்
- பொதுவணியியல்
- பொருளணியியல்
- சொல்லணியியல்
- எச்சவியல்
- ஒழிபியல் (செய்யுளியல்)

4) இலக்கண விளக்கம் (5 இயல்கள்)

- அகத்திணையியல்
- புறத்திணையியல்
- அணியியல்

- செய்யுளியல்
- பாட்டியல்

5) வெண்பாப் பாட்டியல்

- மொழியியல் 28 வெண்பா
- செய்யுளியல் 48 வெண்பா
- பொதுவியல் 38 வெண்பா

(செய்யுளியலில் ஆசு கவி, மதுர கவி, சித்திர கவி, வித்தார கவி)

6) தண்டியலங்காரம் - செய்யுள் வகை

- முத்தகம், குளகம், தொகை, தொடர்நிலை

7) களவியல் காரிகை

- அகப்புறம்
- களவொழுக்க வகை

8) பன்னிரு பாட்டியல், சிதம்பரப் பாட்டியல்

- உறுப்பியல்
- செய்யுளியல் (நான்கு வகைப் பா வகைகள்)
- ஒழிபியல்
- பொருத்தவியல்
- மரபியல்

9) மாறன் அலங்காரம்

- பொதுவியல் 21 நூற்பா
- பொருளணியியல் 166 நூற்பா
- எச்சவியல் 49 நூற்பா
- சொல்லணியியல் (மடக்கு சித்திரகவி, வல்லின, மெல்லின, இடையினப் பாட்டு)

10) மாறன் அகப்பொருள்

- அகத்திணையியல்
- புறத்திணையியல்
- களவியல்
- கற்பியல்
- ஒழிபியல் (திணை, கைகோள், கேட்போர், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, பொருள், துறை, பாப்பாவினம்)

11) சிதம்பரச் செய்யுட்கோவை

- ஆசிரியப்பா விகற்பா - 5 வகை
- ஆசிரியப்பாவினம் - 11 வகை

இப்பட்டியல் விளக்குகின்றது.

**யாப்பியல் உறுப்புக்கள்**

எழுத்துக்களானவை அசையாகவும், அசைகள் இணைந்து சீர்களாகவும் எழுச்சி பெறுகின்றன.

**ஈரசைச்சீரும் இயற்சீர் இயலசையும்**

அசை என்பது குறில், நெடில், குறிலிணை, குறில் நெடில் போன்றவை ஒற்றுடன் வருவதாகும். இதனைத் தொல்காப்பியர்,

குறிலே நெடிலே குறிலிணை குறில்நெடில்
ஒற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரும் நிரையும் என்றிசின் பெயரே

என்ற நூற்பா வழி ச.அகத்தியலிங்கம் உரைத்துள்ளார். அசை முறையால் சொற்களை ஓரசைச்சொல், ஈரசைச்சொல் என்றும், நேரசைச் சொல், நிரையசைச் சொல் என்றும் குறிலீற்று நிரையசைச் சொல் என்றும் ஒரு குறியீடு அசைக்குக் காட்டப்படுகிறது என்று பொற்கோ இயம்புகின்றார். இதனைக் குறுந்தொகையில்,

பைதல் ஒருதலைச் சேக்கும் நாடன்
தினி தடங்கினரே மாக்கள் முனிவின்று
அணிற் பல்அன்ன கொங்குமுதிர் முண்டகத்து

சிலப்பதிகாரத்தில் இசை நரம்பிற்கும், 'சீர்' என்று பெயர் கொண்டுள்ளனர். 'மாயவன் சீருளார் பிஞ்சையும் தாரமும்' என்று தமிழண்ணல் இப்பாடலடி முரண் முதலேழு வகை ஓசையும் நிரல்படப் பிரிந்திசைப்பது என்று பொருளாகும்.

**மூவசைச் சீரும், வெண்பா உரிச்சீரும்**

வெண்பா உரிச்சீர் என்பது காய்ச்சீர்களைக் கொண்டு அமையக் கூடியதாகும். இதனைத் தொல்காப்பியர்,

**இயற்சீர் இறுதிமுன் நேர்அவன் நிற்பின்**
**உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப**

என்னும் நூற்பாவில் குறித்தமைக்குச் சான்றாக,

**சிறியளவும் உறவீண்டு விரைஞர்**
**கவலைத் தென்பவர் சென்ற ஆரே**

என்ற குறுந்தொகை வரிகள் அமைந்துள்ளன.

**அடிகள்**

அடியின் சிறப்பைப் பாடல் எனத் தொல்காப்பியர் இயம்பியுள்ளார். இதனை ச.பாலசுந்தரம், பாக்களுக்கு அடி (பாதம்) போன்றாதலின் அடி என்று வழங்கப் பெற்றது என்றும் கொள்ளலாம் என்று தமிழண்ணல் எடுத்துரைக்கின்றார்.

குறுந்தொகையில் நேரடி, அளவடி எனப்படும் நாற்சீரடி (10, 11, 12, 13, 14) எழுத்துக்களைக் கொண்டதாகும். இவ்வகை அடியைத் தொல்காப்பியர்,

**பத்தெழுத் தென்ப நேரடிக் களவே**
**ஒத்த நாலெழுத்து ஒற்றலங் கடையே**

என்றநூற்பாவழி தொல்காப்பியர் இயம்பியுள்ளார். இவ்வகைக் குறுந்தொகைப் பாக்களில் சில இடங்களில் பயின்று வந்துள்ளது. சான்றாக,

**அருவிப் பரப்பின் ஐவனம் வித்தப்**

இப்பாடல் வரியைக் குறுந்தொகையில் காண முடிகின்றது.

நெடிலடி என்பது அளவடியை விட நீண்டது. 15,16,17 எழுத்துக்களால் அமைந்தவை ஆகும். இதனைத் தொல்காப்பியர்,

**மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே**
**ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப**

இந்நூற்பா வழி இயம்பியுள்ளார். சான்றாக,

**பருவிரலைக் குளவடி யொடு பசுமரல் கட்கும்**

இப்பாடல் வரி சுட்டுகின்றது.

**தொடை**

தொடை என்பது, நான்கு வகையாக அமையும் எனத் தொல்காப்பியர் பகுத்து உரைத்துள்ளார். இதற்குச் சான்றாக,

**மோனை எதுகை முரனே இயைபுஎன**
**நால்நெறி மரபின் தொடைவகை என்ப**
**கடுப்பு மருண்முதல் பைந்தாள் செந்திணை**
**சிறுகுடிக் குறுமகள் சிறு மெல்லாகம்**

குறுந்தொகையில் முரண் தொடைகள் இடம் பெற்றுள்ளன.

**பா வகைகள்**

மண்டிலம் என்னும் நாலடி ஆசிரியப்பா, குட்டம் என்னும் முச்சீரடி ஆசிரியப்பா ஆகியவை கலந்து வருவது இணைக்குறள் ஆசிரியம் எனப்படும். அவ்வகை அமையாது நாலடி மட்டும் வருவது, ஏதேனும் ஓர் அடியை மட்டும் கொண்டு அமைவது நிலைமண்டில ஆசிரியப்பா எனப்படும். இதனைத் தொல்காப்பியர்,

**மண்டிலம் குட்டம் என்றிவை இரண்டும்**
**செந்தூக்கு இயல என்மனார் புலவர்**

என்னும் நூற்பா வழி தொல்காப்பியர் இயம்புகின்றார். ஆசிரியப்பாவின் சிற்றெல்லை மூன்றடியாகவும், பேரலை ஆயிரம் அடியாகவும் அதன் வரைவிலக்கணத்தைத் தொல்காப்பியர் வரைந்து சென்றுள்ளார்.

நாலடி ஆசிரியப்பா-39 பாடல்கள், ஐந்தடி ஆசிரியப்பா- 89 பாடல்கள்,

ஆறடி ஆசிரியப்பா-78 பாடல்கள், ஏழடி ஆசிரியப்பா-101 பாடல்கள்,

எட்டடி ஆசிரியப்பா-73 பாடல்கள், ஒன்பதடி ஆசிரியப்பா-2 பாடல்கள்

என்றவாறு அமைந்துள்ளது.

**வண்ணம்**

தொல்காப்பியர் கூறிய இருபது வகை வண்ணங்களில் குறுந்தொகைப் பாக்களில் எழுத்து (சித்திர, நலிபு), ஓசை (அகைப்பு), அடி (எண்ணு), தொடை (தாஅ, ஒரூஉ) ஆகிய மூன்று அடிப்படையில் ஆறு வகை வண்ணம் இடம் பெறுகின்றது.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

**சித்திரவண்ணம்**

ஓரூர் வாழினும் சேரி வாரார்

சேரி வரினும் ஆர முயங்கார்

**நலிபுஒரூஉ வண்ணம்**

யானே ஈண்டை யேனே என்நலனே
ஆனா நோயொடு கான லஃதே

**அகைப்பு வண்ணம்**

நள்ளென்றே யாமம் சொல் அவிந்து
இனி தடங்கினரே மாக்கள் முனிவின்று

**எண்ணுவண்ணம்**

காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர்துஞ்சி யாமமும் விடியலும் என்றி

**தாஅ வண்ணம்**

தோடார் எல்வளை நெகிழ நாளும்
நெய்தல் உன்கண் பைதல் உழவர்

இவ்வகையில் தொல்காப்பியர் கூறிய செய்யுளியல் வகைகளில் இலக்கணம் (எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா), இலக்கியம் (வண்ணம்) குறுந்தொகைப் பாக்களில் இடம் பெற்றுள்ளன.


## IARA AWARD

Scientist and academicians with outstanding contribution in their academic and social service fields are honoured by the trust by confirming them awards on the recommendation of the experts. Resume should be submitted to the president of the trust in the concerned application forms.

**Young Social Scientist Award**

Academician and researchers in the field of social sciences below the age of 40 are motivated in their field.

**Best Faculty Award**

To motivate the college teachers belong to the social sciences subject with the age of below 40 years are eligible to apply.

**Ambethkar Social Service Award**

Those who are contributing outstanding performance in the field of upliftment of weaker sections are eligible to apply.

**Periyar Social Reformer Award**

Those who are contributing outstanding performance in the field of inter caste marriage, abolition of caste and religions are eligible to apply.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# ஆண்டாளை ஆண்ட கிருஷ்ணன்

**ப. கோமதி சுப்பிரமணியம்**
தமிழ்த்துறைத் தலைவர்
நந்தா கலை அறிவியல் கல்லூரி ஈரோடு.

## முகப்புரை

அனைத்து அவதாரங்களைப் பற்றியும் பாடியிருந்தாலும், திருமாலின் பத்து அவதாரங்களுள் கிருஷ்ணாவதாரத்தையே பெரிதும் பேசுகிறார் ஆண்டாள். பெரியாழ்வார் பரமனுக்குப் பூமாலை கட்டும் போதெல்லாம் தன் அருமைச் செல்வியை அருகே அழைத்து அவருக்குக் கண்ணபிரானின் பிள்ளை விளையாட்டுக்களையும், அவனுடைய குணநலன்களையும் நெஞ்சில் பதியும் வண்ணம் அழகாகச் சொல்லி வந்ததாகவும், அவளுக்கும் கிருஷ்ண பக்தி என்பது இயல்பாகவே விளங்கியதாகவும், நாளாக நாளாக கண்ணபிரானிடம் அவர் கொண்ட பேரன்பானது மேலோங்க அதுவே பக்தி மிகுந்த காதலாகப் பரிணமித்ததாகவும் அறிய முடிகிறது (மு.இராகவையங்கார், ஆழ்வார்கள் காலநிலை) என்பதன் மூலம் கண்ணன் மீது அவள் கொண்ட காதலைப் பற்றி அறியமுடிகின்றது.

எவ்வப் பொழுதெல்லாம் அறத்திற்கு அழிவு நெருங்குகின்றதோ, அவ்வப் பொழுதெல்லாம் இறைவன் அவதாரம் செய்வான் என்பது வைணவர்களின் நம்பிக்கை. இதை கிருட்டிணனே அருச்சுனனிடம் கூறுவதாக கீதை குறிப்பிடுகிறது. (மாருதிதாசன், திருமாலின் திரு அவதாரங்கள் ப.8) என்பர்.

பல்வேறு நாமங்கள் கொண்ட இறைவன் அவதாரம் எடுத்து வரும் போது குறிப்பிட்ட சில பெயர்களையும் பெற்று வருகின்றான். இதனையே ஆண்டாளும்,

நாமமாயிர மேத்த நின்ற நாராயணா (நாச்சியார் திருமொழி 2:1)

என்று கூறுகிறார். திருமாலின் இவ்வவதாரங்கள் முறையே மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமன், இராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி என்பனவாக அமைகின்றன. இவற்றுள் பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் மகவாகிய ஆண்டாள், கிருஷ்ணனின் குழந்தைப் பருவ லீலைகளில் அகமகிழ்ந்து, அதனால் பெரிதும் கவரப்பெற்றாள். அவளுடைய கவனம் அனைத்தும் கண்ணனையே நாடியது.

### திருப்பாவை

கண்ணனுடைய ஆயர்ப்பாடியாய் திருவில்லிப்புத்தூரைப் பாவித்து, கோகுலத்துப் பெண்களாகப் தன்னுடைய தோழிகளையும், தலைவியாகத் தன்னையும் கற்பனையில் உணர்ந்து ஆண்டாள் பாடிய பாவைப் பாட்டுதான் திருப்பாவை ஆகும். திருப்பாவையின் ஒவ்வொரு பாட்டடியிலும்,

ஆழி மழைக் கண்ணா (பா.4)
உந்து மத களிற்றன் (பா.18)
ஊழி முதல்வன் (பா.4)
ஓங்கி உலகளந்த உத்தமன் (பா.3)
ஓடாத தோள் வலியன் (பா.18)
கப்பம் தவிர்க்கும் கலி (பா.20)
கன்று குணிலா எறிந்தாய் (பா.24)

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

என இவ்வாறு குறிப்பிடப்படும் சிறிய தொடர்களிலேயே சரித்திரச் சான்றுகள், புராணச் செய்திகள் அமைந்த காட்சிகளுடன் ஒரு பெரும் கதையையே உள்ளடக்கி விடுகின்றார் ஆண்டாள். எனவே, திருப்பாவை முழுவதுமே அவதாரச் செயல் பற்றிப் பாடப் பெற்ற பாடல்களாகவே காணப்படுகின்றன.

**கிருஷ்ணாவதாரம்**

கண்ணனின் குறும்புச் செயல்களை அனுபவித்து நினைந்து மகிழ்ந்தவர் ஆண்டாள். அதனால் அவ்வவதாரத்தில் அவர் மிகுதியான ஈடுபாடு கொண்டார். அந்த ஈடுபாடு காரணமாக கிருஷ்ணாவதாரச் சிறப்பையும், பெருமையையும் மொத்தம் நூற்றிப்பதிமூன்று இடங்களில் பாடியுள்ளார். ஆண்டாள் கண்ணனின் வீரச் செயல்களைப் பற்றி வியந்து வருணித்துள்ளார்.

பேய்முலை நஞ்சுண்டு கள்ளச்சடகம்
கலக்கழிய காலோச்சி
வஞ்சகப் பேய்ச்சி பாலுண்ட மகிமையில்

என்று பூதனையை அழித்தமையையும்,

மருப்பினை யொளிதுப்புள்வாய் பிளந்த
மணிவண்ணன்
மருதம் முறிய நடை கற்றவன்

என்று மருத மரத்தைச் சாய்ந்த நிகழ்ச்சியையும்,

கள்ளச் சகடம் கலக்கழிய காலோச்சி
பொறைச் சகடம் உதைத்தாய் கழல் போற்றி

என்று சகடாசுரனை அழித்தமையையும், காளிங்கனின் வலிமையை அடக்கி அதன்மீது நின்று ஆடிய நிகழ்ச்சியை

குதி கொண்டரவில் நடித்தாய்
காளியன் மேல் நடமாடிய கூத்தனார்

என்றும், பரிவாய் கீண்டியமை பற்றி,

மா வாய் பிளந்தான்
புள்ளின் வாய் கீண்டான்
புள்வாய் பிளந்த மணிவண்ணன்

என்றும் பாடி, கிருஷ்ணனுடைய பிள்ளைப் பருவம் செயல்களைச் சுட்டிக்காட்டி, அவனுடைய அறக்கருணையையும் அடியவர்கள் அறிய வைக்கின்றார். பெரியவனான நிலையில் நப்பின்னையைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு ஆனேறு அடர்த்தல், மல்லரை அழித்தல், கம்சனின் பட்டத்து யானையாகிய குவலயா பீடத்தைக் கொல்லுதல், கம்சனை அழித்தல் போன்ற செய்திகளும் பாடப்படுகின்றன.

குடக்கூத்தாடிய செய்தியை,
குடத்தை யெடுத்தேற விட்டுக் கூத்தாட
வல்ல எங்கோ
குடமாடு கூத்தன் கோவிந்தன்

என்று ஆண்டாள் பாடியுள்ள வரிகள் காட்டுகின்றன.

மல்லரோடு பொருதமையை,
மல்லரை மாட்டிய தேவாதி தேவன்

என்றும்,

கம்சனின் பட்டத்து யானையாகிய
குவலயா பீடத்தைக் கொன்றமையை,
மாமத யானை உதைத்தவன்

என்றும்,

கிருஷ்ணனுடைய தோற்றமே இருக்கக் கூடாது என்று வஞ்சனை புரிந்தவனும், அவன் பிறந்து வளர்ந்து வருகின்ற பருவத்தில் தொடர்ந்து அசுரரர்களை ஏவி அவனை அழிப்பதற்குரிய செயல்கள் புரிந்து கொண்டிருந்தவனுமான கம்சனை அழித்த செய்தியை,

ஒருத்தி மகனாய்ப் பிறந்த ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்த வளர
தரிக்கிலானாகித் தான் தீங்கு நினைந்த
கருத்தினைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றல்
நெருப்பென நின்ற நெடுமாலே
கஞ்சனை வஞ்சனயிற் செற்றவன்

என்றும் அடிகள் புலப்படுத்துகின்றன.

**நிறைவுரை**

திருமாலின் அவதாரங்களுள் கிருஷ்ணாவதாரமே பொலிவும், கற்பார்க்குச் சுவையும் உடையதாய்க் காதலும், வீரமும் கலந்ததாய் விளங்குகிறது என்பதை, மோட்சத்துக்கு உபாயமாகிய அமுதப் பெருமழை உலகப் பற்றில் உழல்பவர்களின் தாபத்தைப் போக்கும் கார்மேகமாகப் பொழிந்த அவதாரம் (அரங்க சீனிவாசன், வைணவ தத்துவ ஞான அடிப்படைகள்) என்பதிலிருந்து அறியலாம். சாமானிய பக்தருக்கே அவ்வாறு இருந்ததெனில், அவன் மேல் பித்துக் கொண்ட ஆண்டாளின் நிலைமையைச் சொல்லவும் வேண்டுமோ?.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# பொருநராற்றுப்படை - பயணத்தால் மேம்படும் உணர்வுகள்

**பொ.கௌரி தேவி**
இளநிலை ஆய்வாளர் தமிழ்,
எஸ்.எஃப்.ஆர் மகளிர் கல்லூரி, சிவகாசி.

**முகப்புரை**

மனிதனின் உணர்வுகளுள் இன்ப உணர்வு தலையானது. அத்தகைய இன்ப உணர்வினைத் தூண்டுவதில் இன்ப பயணமானது முக்கிய இடத்தினைப் பெறுகின்றது என்றே குறிப்பிடலாம். பயணம் குறிப்பிட்ட தூண்டு காரணிகளால் நிகழுகின்றது. அத்தகைய தூண்டுதல் மிகையாக மேம்பட்ட உணர்வுகளை வளர்க்கும் விதமாக அமைகின்றன. ஆற்றுப்படைக் கலைஞரான பொருநன் வள்ளல்களை நாடி மேற்கொள்கின்ற பயணத்தில் சமூகத்தை மேம்படுத்தும் சிந்தனைகள் நிறைந்துள்ளன என்றே குறிப்பிடலாம். பயணம் முன்னைய சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை பொருநராற்றுப்படை வழி ஆய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## பயணத்தால் மேம்படும் உணர்வுகள்

பயணத்தை மேற்கொள்கின்ற தூண்டு காரணிகளுக்கு ஏற்ப மன உணர்வானது மாறுபடுகின்றது என்று குறிப்பிடலாம். ஓய்வு, ஆன்மீகம், விளையாட்டு, மகிழ்ச்சி போன்ற தூண்டுகாரணிகளால் மேற்கொள்கின்ற பயணமானது மகிழ்வான உணர்ச்சியை அளிப்பதாக அமைகின்றது. இதேபோல் வேறுபட்ட காரணிகளுக்காக மேற்கொள்கின்ற பயணமானது ஆர்வத்தைத் தூண்டுவதாகவும், ஏதேனும் ஒன்றினைக் கற்றுக் கொள்கின்ற திறத்தினைப் புலப்படுத்துவதாகவும் அமைகின்ற பாங்கினை உணர முடிகின்றது. பரிமாற்றமும் பரிவர்த்தனைகளும் நன்முறையில் நிகழ்ந்தால் சமூகம் மேம்படும் என்பதனை பொருநராற்றுப்படை முன்வைக்கின்றன. பயணத்தில் சமூகம் மேம்படும் உணர்வுகள் வெளிப்படுகின்றன. பயணம் சங்கிலித் தொடர் போன்றது. ஒருவர் விட்ட இடம் இன்னொருவரால் நிரப்பப்படும். காரணம் ஒருவரின் பயணத்தைக் கண்டும், அதனால் தூண்டப்பட்டவரால் மீண்டும் பயணம் தொடங்கப்படும்.

## பயணத்தை தூண்டும் காரணிகள்

பயணமானது தூண்டுகாரணிகளுக்கு ஏற்ப வகைப்படுத்தப்படும். ஆளுமையை வளர்த்துக்கொள்ளவும், தொழில் திறமையை பெருக்கிக் கொள்ளவும், சமுதாயத்தில் மதிப்பினை உருவாக்கிக் கொள்வதற்கும், அனைத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வமும் பயணம் செல்லத் தூண்டுகின்றது எனலாம். தூண்டல் என்பது பொதுப்படையான குறிக்கோளை நோக்கிச் செயல்படச் செய்யும் தனிப்பட்ட அடிப்படை முற்சார்பு கருத்துக்களே தூண்டல்கள் என்று விளக்கம் பெறுகின்றது. மேலும் மனிதனின் உடல், மனம், தேவை, சூழல்

போன்றவை அவனுடைய ஒவ்வொரு செயலுக்கும் அடிப்படை காரணங்களாகின்றன. இந்தத் தூண்டு காரணிகளுக்கு ஏற்ப செயல்படுவதனால் மனநிறைவும், மகிழ்வும் அடைந்தால் அதுவே ஓர் ஆரோக்கியமான தூண்டலாகும். சுற்றுலாவின் தூண்டு காரணிகளாக

- மகிழ்ச்சி
- ஓய்வு
- ஆரோக்கியம்
- விளையாட்டு
- கல்வி, கலாச்சாரம்
- உறவு முறை
- ஆன்மீகம்
- தொழில்
- தனிமனித அந்தஸ்து

போன்றவை கருதப்படுகின்றன. ஆற்றுப்படை இலக்கியங்களில் இத்தகைய தூண்டு காரணிகளின் நிமித்தம் நிகழும் பயணம் மற்றும் அதனால் மேம்படும் உணர்வுகள் காணக் கிடைக்கின்றது.

**மகிழ்வுணர்வு**

பயணம் மனிதனுக்கு மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் தருகின்றது. பயணத்தின் போது புதிய சூழ்நிலையில் மகிழ்ச்சியடைகின்றான். கவலைகளை மறந்து இயற்கையழகில் மனதைப் பறிகொடுக்கின்றான். இவ்வாறு மனிதரின் மனதுக்கு மகிழ்ச்சி தரும் சுற்றுலா மனிதனின் உடல் நலத்தையும் பேணுகிறது. இது மகிழ்ச்சிப்பயணமாக அமைகின்றது. மனிதனின் மனஇறுக்கம், மனஉளைச்சல், மனச் சோர்வு ஆகியனவற்றிலிருந்து விடுபட, தன்னுடைய சூழ்நிலையை மாற்றிப் புத்துணர்வு பெற, வகைசெய்வதே சுற்றுலாவாகும் என்று இப்பயணம் குறிப்பிடப்படுகின்றது. இவ்வகைப் பயணமானது ஆற்றுப்படை இலக்கியங்களில் காணப்படுகின்றது. பொருநராற்றுப்படை குறிப்பிடும் மகிழ்ச்சிப் பயணத்தை,

- வறுமை ஒழிந்த மகிழ்வுணர்வு
- பரிசில் பெற்ற மகிழ்வு

என்ற முறைகளில் வகைப்படுத்தலாம். பரிசில் பெற்ற பொருநன் தன்னுடைய செல்வ நிலையை நினைத்து தன் சுற்றத்தாருடன் மகிழ்ச்சியாக இருப்பதும், வறுமையுற்ற பொருநன், பண்பில் சிறந்த மன்னனைக் காணப்போகும் மகிழ்ச்சியுடனும் பயணத்தை மேற்கொள்கின்றான்.

**வறுமை ஒழிந்த மகிழ்வு**

அன்றாட வாழ்வில் தான் அடையும் இன்னல்களை நீக்கிக் கொள்வதற்காக ஆற்றப்படைக் கலைஞன் பயணத்தை மேற்கொள்கின்றான். கலைஞனின் இத்தகையப் பயணம் வறுமையைப் போக்கும் பயணமாக கருதப்படுகின்றது. இவ்வகையில் நிகழும் பயணத்தையே, க.சண்முகம் பழங்காலத்தில் வளத்தைச் சேர்க்கவும், வறுமையை நீக்கவும் பயணங்கள் நிகழ்ந்தன என்று குறிப்பிடுகின்றார். பொருநன் மேற்கொண்ட பயணத்தை இக்கூற்றுக்குள் அடக்கலாம்.

> மாலை அன்னது ஓர் புன்மையும் ...
> தன்அறி அளவையின் தரத்தர, யானும்
> என்அறித அளவையின் வேண்டுவ முகந்துகொண்டு
> இன்மை தீர வந்தனென்...
>
> (பொருநன்.123,127-129)

என்ற பாடலடிகளால் அறியலாம். மன்னனை காணுவதற்கு முன்பு வறுமை, பார்த்த பின்பு வளம் என்று பயணத்தால் நிகழ்ந்த நிகழ்வுகள் அனைத்தும் மகிழ்ச்சியாக அமைந்தது. அதாவது கலைஞர்களின் வறுமையானது முற்றிலும் நீங்கியது. ஆதலால் கலைஞர்கள் மேற்கொள்கின்ற பயணமானது வறுமை ஒழிந்த மகிழ்வுப் பயணமாகவே கருதப்படுகின்றன.

**பரிசில் பெற்ற மகிழ்வு**

பயணத்தின் போது நாம் எதிர்பார்த்தது கிடைத்தால் அதிகப்படியான மகிழ்வினை அடைவது பொதுவான இயல்பாகும். இவ்வாறே கலைஞர்களும் தன்னுடைய வறுமை நீங்கி பொருள் வளம் பெற்ற நிலையினை நினைத்து மகிழ்ச்சி அடைகின்றனர். பரிசில் பொருளினைப் பெற்ற கலைஞன் மகிழ்வாக இல்லத்திற்குத் திரும்புகின்றான்.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

பழுமரம் உள்ளிய பறவையின், யானும், அவன்
இழுமென் சும்மை இடனுடை வரைப்பின்,
நசையுநர்த் தடையா நன்பெரு வாயில்,
இசையேன்புக்கு, என் இடம்பை தீர
எய்த்த மெய்யேன் எய்யேன் ஆகி...
(பொருநர்.64-68)

பழம் பழுத்துக் கிடக்கும் மரங்களைப் பறவைகள் நாடிச்செல்வது போல் பொருநன் வள்ளலை நாடிச் சென்றுள்ள முறையினைப் பொருநராற்றுப்படை பதிவுசெய்துள்ளது. வறுமையான தம் வாழ்வை வளமாக்கும் எண்ணத்துடன் கலைஞர்கள் பொருளுக்காகப் பயணம் செய்துள்ளனர் என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

**கலை உணர்வு**

கலைகளை வளர்க்கின்ற பயணமானது கலைப் பயணமாக கருதப்படுகின்றன. ஆற்றுப்படை இலக்கியங்களில் கலைஞர்கள் மேற்கொள்கின்ற பயணமானது கலை பயணமாகவே கருதப்படுகின்றன. ஐந்து ஆற்றுப்படை நூல்களிலும் கலைஞர்கள் கலைப்பயணத்தை மேற்கொள்கின்றனர். பாணன், பொருநன், கூத்தன், விறலியர், பாடினி போன்ற கலைஞர்களும் மன்னர்களும் கலைகளை போற்றி வளர்க்கின்றனர். மன்னர்களிடம் தங்கள் கலைகளை வெளிகாட்டுபவராக கலைஞர்கள் திகழ்கின்றனர். மன்னர்களும் அக்கலைகளை ஆதரிப்பவர்களாக செயல்படுகின்றனர்.

மண்அமை முழவின் பண்அமை சீறியாழ்
ஒண்நுதல் விறலியர் பாணி தூங்க
மகிழ்ப்பதம் பல்நாள் கழிப்பி...
(பொருநன்.109-111)

கரிகாலன் மத்தளத்தை இயக்கி, சிறந்த யாழையும் இயக்கி விறலியரை இசைப்பாடச் செய்து, ஆடச்செய்தான். இந்நிகழ்வானது மன்னன் கலைகளை ஆதரித்து போற்றுவதற்கு சான்றாக அமைகின்றது. இவ்வாறாக பொருநராற்றுப்படை கலை பயணத்தை மேற்கொள்கின்ற முறையினை அறிய முடிகின்றது.

**பண்பாட்டுணர்வு**

கலாச்சார பயணத்தை மேற்கொள்ளும் போது அனைத்து மக்களும் ஓரினம், ஓர்மக்கள் என்ற உணர்வை அடைகின்றனர் என்றே குறிப்பிடலாம். கலாச்சார பயணத்தை வேற்றுமை மறந்து மனிதநேயம் வளரக் கலாச்சாரப் பரிமாற்றங்கள் தேவை என்று குறிப்பிடுவர். ஐந்து ஆற்றுப்படை இலக்கியங்களும் கலாச்சார பயணத்தை குறிப்பிடுகின்றன. பொருநன் மக்களின் கலாச்சாரத்தைக் குறிப்பிட்டு ஆற்றுப்படுத்துகின்ற முறையினை,

குறிஞ்சி பரதவர் பாட, நெய்தல்
நறும் பூங்கண்ணி குறவர் டக்
கானவர் மருதம் பாட அகவர்
நீல்நிற முல்லைப் பல்திணை நுவலக்...
(பொருநன்.218-221)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

- நெய்தல் நிலத்தார்-குறிஞ்சிப்பண் பாடினர்.
- குறிஞ்சி நிலத்தார்-நெய்தல் மலர்களை சூடினர்.
- முல்லை நிலத்தார் -மருதப்பண் பாடினர்.

என்று பொருநன் எடுத்துரைக்கின்றான். பொருநனின் இத்தகையக் கூற்று ஐந்திணை மக்களின் பண்பாட்டு வழக்கத்தை அறிந்து கொள்ள ஏதுவாகின்றது.

**உறவு முறை மேலோங்குதல்**

உறவினர்களின் இல்லத்திற்கோ அல்லது நண்பர்களின் இல்லத்திற்கோ மேற்கொள்கின்ற பயணமே உறவுமுறைப் பயணமாக கருதப்படுகின்றன. இத்தகைய பயணங்கள் மனிதனின் உறவு நிலையை வலுப்படுத்துகின்றன. பல நபர்களைக் காணுகின்ற வாய்ப்பானது மனதிற்கு இன்பத்தை அளிக்க வல்லது. இதனால் புதிய உறவு கிடைக்கின்ற வாய்ப்பானது ஏற்படுகின்றது. இத்தகைய உறவைப் பற்றி பெ.செந்தில்நாதன் என்பவர், பயணங்கள் சிறந்த நண்பர்களை உருவாக்கித் தருகின்றன. உறவுகளை விரிவாக்குகின்றன. வலிமைபெறச்

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

செய்கின்றன என்று தன்நூலில் குறிப்பிடுகின்றார். இத்தகைய உறவுமுறைப் பயணமானது அனைத்து ஆற்றுப்படை இலக்கியங்களிலும் காணப்படுகின்றது. வள்ளலை நோக்கி பரிசில் பெறச் செல்லும் வழியில் பல்வேறு மக்களையும், கலைஞனையும் காண்கின்றான். இவர்களுடைய உறவுநிலை மேம்படுதல் பின்வரும் தலைப்பின் வழி ஆராயப்படுகின்றது.

- கலைஞர்களின் நட்பு
- நாநிலத்தரின் நட்பு
- புரவலனும் புலவரும்

என்ற முறையில் வகைப்படுத்தலாம். இதனால் வறுமையுற்ற கலைஞர்கள் தான் செல்கின்ற வழியில் உள்ள மக்களிடம் நல்உறவினை மேற்கொண்டுள்ளனர் என்பதனை உணர முடிகின்றது.

**கலைஞர்களின் நட்பு**

பயணத்தின் போது நட்பினை மேற்கொள்கின்ற பழக்கம் இன்றும் நம் வழக்கில் உள்ளது என்றே குறிப்பிடலாம். நட்பு நிலையை பாராட்டுபவர்களாக ஆற்றுப்படைக் கலைஞர்கள் திகழ்கின்றனர். பரிசில் பெற்று வளமோடு திரும்பிவரும் கலைஞன் எவ்விதச் செருக்குமின்றி தன்னைப் போன்று துன்பப்படும் கலைஞனுக்கு உதவுபவராகத் திகழ்ந்துள்ளனர். இடையூறு வரும் காலத்தில் கை கொடுத்து உதவவல்ல ஆற்றல் மிக்கவர்களாக ஆற்றுப்படைக் கலைஞர்கள் திகழ்கின்றனர். [6] என்றே கூறலாம். செல்லும் வழி மட்டுமின்றி தாங்கள் நாடிச்செல்லும் மன்னனின் சிறப்பினையும் பொருநன் எடுத்துரைக்கும் பாங்கினை,

தாள்நிழல் மருங்கின் அணுகுபு குறுகித்
தொழுதுமுன் நிற்குவிர் ஆயின், பழுதுஇன்று
ஈற்றுஆ விரும்பின், போற்றுபு நோக்கி, நும்
கையது கேளா அளவை, ஒய்யென
பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டு உடையநல்கிப்
பெறல் அருங்கலத்தில் பெட்டாங்கு உண்க எனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர,
வைகல் வைகல் கைகவி பருகி,
(பொருநன்.149-158)

என்ற பாடலடிகளால் அறியலாம். மன்னன் உங்களை பார்க்கின்ற பார்வையானது கன்றைப் பெற்ற பசு பார்க்கின்ற பார்வை போன்றது என்று வறுமையுற்ற பொருநனின் மனம் குளிரும் வண்ணம் எடுத்துரைக்கின்றான். பொருநனனின் இத்தகைய சொல்லாற்றல் கலைஞர்களின் நட்பு முறையினை விளக்குவதாக அமைகின்றது.

**நாநிலத்தாரின் நட்பு**

தொடக்கக் காலத்தில் தமிழகத்தில் வணிகம் என்ற ஒன்று காணப்படவில்லை என்றே குறிப்பிடலாம். பண்டை மக்கள் அனைவரும் பண்ட மாற்று என்ற முறையினை பின்பற்றுபவராகத் திகழ்கின்றனர். பண்டமாற்று பற்றி சாமி. சிதம்பரனார், பண்டத்தைக் கொடுத்து அதற்கு மாறாக மற்றொரு பண்டத்தை வாங்கிக் கொள்வது தான் பண்டைக்கால வாணிக முறை.[13] என்று குறிப்பிடுகின்றார். எனவே பண்ட மாற்று என்பது தன்னிடம் உள்ள பொருளைப் பிறரிடம் கொடுத்து அதற்குப் பதிலாக வேறொரு பொருளைப் பெறுவதாகும் என்பதனை உணர முடிகின்றது. பண்டமாற்று செய்யும் போது ஒவ்வொரு நில மக்களும் வேறொரு நிலத்திற்குப் பயணமாகின்றனர் என்பதையும் இதனால் அவர்கள் மேற்கொண்ட நட்பின் மேன்மையையும் நம்மால் அறிய முடிகின்றது. நான்கு வகையான நில மக்களும் வெவ்வேறு நிலத்தாருடன் நட்பு கொள்ளும் முறையினை,

தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்;
மீன் நெய்யொடு நறவு மறுகவும்
தீங் கரும்பொடு அவல் வகுத்தோர்
மான் குறையொடு மது மறுகவும் ...
(பொருநர். 214-217)

என்ற பாடலடிகள் குறிப்பிடுகின்றன. குறிஞ்சி நில மக்களுக்குக் கிடைத்த தேன், கிழங்கு போன்றவற்றை நெய்தல் நில மக்களிடம் கொடுத்து மீனையும், கள்ளையும் வாங்கிக்

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

கொள்கின்றனர். இதேபோல் மருத நில மக்கள் கரும்பு, அவல் போன்றவற்றைக் கொடுத்து முல்லைநில மக்களிடமிருந்து மான், இறைச்சி, மது போன்றவற்றைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறாகத் தனக்குத் தேவையான பொருட்களை நானில மக்களும் மாற்றிக் கொள்ளும் முறையினையும், நிலம் கடந்து பயணம் செல்லும் முறையினையும் அறிய முடிகின்றது.

**புரவலனும் புலவரும்**

ஆற்றுப்படை இலக்கியங்கள் மன்னர்களுக்கும், கலைஞர்களுக்கும் உள்ள உறவினை நன்கு எடுத்தியம்புகின்றது. மன்னர்கள் புலவர்களை உறவினர் போல இன்முகத்துடன் வரவேற்றனர். புரவலன் என்பான் மன்னன். மன்னன் புலவர்களைப் பிரிய மனமின்றிப் பிரிந்த நிலையும், பொருநராற்றுப்படையில் உரைக்கப்பட்டுள்ளமை மன்னருக்கும் புலவருக்கும் இடையேயான உறவுநிலையைத் தெளிவுபடுத்துகின்றது.[7] என்று ஆராய்ச்சியாளர்கள் பொருநர் உறவுமுறையினை குறிப்பிடுகின்றனர்.

அகறிரோ எம் ஆயம்விட்டு? என,
சிரறியவன் போல் செயிர்த்த நோக்கமொடு,
துடிஅடி அன்ன தூங்குநடைக் குழவியொடு,
பிடிபுணர் வேழம் பெட்டவை கொள்க!
(பொருநன்.123-126)

என்ற பாலடிகளால் அறியலாம். மன்னன் கரிகாலன் புலவர்களை பிரிவதற்கு மனம் ஒப்பாது அனுப்பி வைப்பான். மேலும் வரவேற்கும் போது ஏழடி முன்சென்று வரவேற்கின்ற குணநலன்களை பெற்றவனாகத் திகழ்கின்ற முறையினையும் உணர முடிகின்றது.

சங்க காலத்தில் கலைஞர்களும், மன்னர்களும் நட்புறவுடன் திகழ்ந்தனர். இவர்களது நட்புறவை, மன்னர்கள் புலவர்களை நட்புமுறையில் தனக்குச் சமமான இடத்தில் வைத்து நடத்தியுள்ளனர் என்று குறிப்பிடுகின்றனர். புலவர்களைக் காணும் மன்னன் மிகவும் மகிழ்ச்சியுற்று அவர்களை இன்முகத்தோடு வரவேற்கும் முறையினை,

கண்டோர் மருளும் வண்டு ழ் நிலையும்
கனவு என மருண்ட என்நெஞ்சு ஏமாப்ப
வல்அளுர் பொத்திய மனம்மகிழ் சிறப்ப,
கல்லா இளைஞர் சொல்லிக் காட்ட
கதுமெனக் கரைந்து, வம்எனக் கூஉய்...
(பொருநர்.97-101)

என்ற பாடலடிகளால் உணர முடிகின்றது. கரிகாலன் பொருநனைக் கண்டவுடன் தம் உறவினரைப் போல வருக வருக என்று இன்முகத்தோடு வரவேற்கும் பாங்கானது மன்னர் கலைஞரின் நல்உறவினைப் புலப்படுத்துகின்றது. வரவேற்பது மட்டுமின்றி தேவைக்கு அதிகமான பரிசில்களையும் மன்னன் வழங்கினான். இவ்வாறு கலைஞர் மன்னர் உறவானது நல்உறவாக மேம்படுகின்றது. ஆதலால், கலைஞர்களின் பயணங்கள் உறவை வலுப்படுத்தும் பயணமாகக் குறிப்பிடப்படுகின்றன.

**தொகுப்புரை**

- பயணத்தினால் மக்களிடையே நன்னெறிகள் மேலோங்கியுள்ளமை ஆராயப்பட்டன.
- பயணத்தை தூண்டுவதாக அமைந்த காரணிகளையும் அவற்றுள் பெரும்பான்மை பொருநராற்றுப்படையில் பொருந்தும் பாங்கினையும் உணர முடிகின்றது.
- பொருநரின் பயணம் வறுமை ஒழிந்த மகிழ்வுணர்வு, பரிசில் பெற்ற மகிழ்வு என்று இன்பம் மேலோங்கிய பயணமாக அமைந்துள்ளது.
- மக்களின் நாகரிகம் கலாச்சார பண்பாடுகளை விளக்கிக் கூறுமளவிற்கு ஆற்றுப்படை இலக்கியம் பண்பாட்டுணர்வை பதிவு செய்துள்ளது.
- உறவுநிலையை வலுப்படுத்தும் பயணமாக உள்ளது.
- பரிசில் பெற்ற கலைஞர்கள் மனித நேயத்துடன் வறுமையுற்ற கலைஞர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்வதனால் மனித நேயவுணர்வு பயணத்தால் வெளிப்பட்டுள்ளது.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# வெள்ளிவீதியார் பாடல்களில் உளவியல் (குறுந்தொகை)

**இரா.ஜீவாராணி**
உதவிப் பேராசிரியர்,
அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.

**முகப்புரை**

மொழி வளர்ச்சியில் பல துறைகள் தோன்றி உள்ளன. அவற்றுள் உளவியல் துறையும் ஒன்றாகும். இன்றைய அறிவியல் உலகில் உளவியல் துறை தனித்து இயங்கும் ஆற்றல் வாய்ந்த ஒரு பெரிய துறையாக வளர்ந்து வருகிறது. உளவியல் முதலில் தத்துவக் கொள்கையாக இருந்தது. பின்னர் உள்மனதில் ஏற்படும் நிகழ்வுகள், செயல்கள், நடத்தை ஆகியன பற்றி ஆராயும் கோணங்களில் வளர்ந்து வருகின்றது. முதலில் உளவியல் துறை மனிதனின் அகப்புறச் செயல்களை ஆராய்வதாக இருந்தது. இன்று விலங்குகளின் செயல்பாடுகளையும் ஆராயும் துறையாக வளர்ந்து வருகின்றது. கல்வித் துறையிலும், தொழில்துறையிலும் உளவியல் பங்கு குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

உளவியல் தனிமனித நோக்கம், எண்ணங்கள், செய்கைகள், நடவடிக்கைகள், வேட்கைகள், புலன் உணர்ச்சிகள் போன்றவற்றை அறிய உதவும் ஓர் அறிவியலாகும். குறுந்தொகையில் வெள்ளிவீதியார் என்னும் பெண்பாற்புலவரின் பாடல்களை அறிவியல் துறையான உளவியலைப் பொருத்திப் பார்க்கும் பொழுது வெள்ளிவீதியாரின் நண்மான் நுமைபுலத்தினப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது.

**வெள்ளிவீதியார் பாடல்கள்**

குறுந்தொகை நானூறு பாடல்களைக் கொண்டு திகழ்கின்றது. இந்நானூறு பாடல்களை இருநூற்று ஐந்து புலவர்கள் பாடியுள்ளனர். இவர்களுள் பதினொரு பேர் பெண்பாற் புலவர்கள். இப்பெண்பாற்புலவர்கள் பாடிய பாடல்கள் ஐம்பத்தொன்றாகும். இதில் குறிப்பிடத்தக்கவர் வெள்ளிவீதியார். இவரும் ஆதிமந்தியும் சமகாலத்தவர் ஆவர். இதில் வெள்ளிவீதியார் பதின்மூன்று பாடல்கள் பாடியுள்ளார். நற்றிணையில் மூன்று பாடல்களும் (70, 335, 348) குறுந்தொகையில் எட்டு பாடல்களும் (27, 44, 58, 130, 146, 149,169, 386), அகநானூற்றில் இரண்டு பாடல்களும் (45, 362) என மொத்தம் பதின்மூன்று பாடல்கள் பாடியுள்ளார்.

**உளவியல்-சொல் விளக்கம்**

உளவியல் என்னும் சொல்லினை ஆங்கிலத்தில் சைக்காலஜி (Psychology) என்று கூறுவர். இஃது சைக்கி (Psycho) லோகஸ் (Logus) என்ற இரண்டு கிரேக்கச் சொற்கள் சேர்ந்து உருவானதாகும். (சைக்கி-ஆன்மா, லோகஸ் - பொருள்) சைக்காலஜி என்ற சொல்லினை முதன் முதலில் பயன்படுத்தியவர் ருடோல்ஃப் ஜியோக்கல் என்பவர் ஆவார்.

உளம் என்ற சொல்லிற்குத் தமிழ்ச்சொல் அகராதி, ஆன்மா, உட்பக்கம், மனம் (soul, Inside, mind) என்று விளக்கம் தருகிறது. உளவு என்பதற்கு, உட்கிடை வேவு, உண்மைத்தன்மை என்று விளக்கம் தருகிறது. மேலும் உளவு சொல்லல் என்பதற்கு உள்ளவைகளை அறிந்து சொல்லல் என்றும் பொருள் கூறப்பெற்றுள்ளது.

உளவியலில் தனிமனிதனின் செய்கைகள், நடத்தைகள், மனம் பற்றிய செயல் முறைகள், உணர்வுகள், எண்ணங்கள் ஆகியவை பற்றி ஆராயப்படுகின்றன. அந்த வகையில் குறுந்தொகையில் வெள்ளிவீதியாரின் பாடல்களில் இடம்பெறும் மாந்தர்களின் மன உணர்வுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**உணர்வுகள்**

மனிதனை மனிதனாக இருக்கச் செய்வதே உணர்வுகள் தான். நிகழ்வுகளின் பாதிப்பால் அனுபவத்தைப் பெறுகின்றான் என்றால் அதுவும் உணர்வின் இன்னொரு பகுதியாகவே இருக்கின்றது. உணர்வுகளை வைத்தே அறிவைத் தொல்காப்பியம் வகைப்படுத்தியுள்ளது.

> ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
> ..........................................................
> ஆறறிவதுவே அவற்றொடு மனனே
> நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே

என்னும் நூற்பாவின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

மனிதன் உணர்வுகளுக்கு உட்பட்டே இருந்துள்ளான். யோகிகளும், முனிவர்களும் புலன் இன்பத்தில் இருந்து ஒதுங்குபவர்களாக இருந்தாலும் மெய்ஞானம் என்ற உணர்வுக்கு ஆட்பட்டு விடுகின்றனர். மனிதனுடைய உணர்வானது பல பிரிவுகளாக இடம்பெறுகின்றது என்பர்.

குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள வெள்ளிவீதியாரின் பாடல்களில் மனிதனது உணர்வுகளானது, இரக்க உணர்வு, மரண உணர்வு, காதல் உணர்வு, அச்ச உணர்வு, துன்ப உணர்வு, தாய்மை உணர்வு, தற்கொலை உணர்வு, பாலியல் உணர்வு ஆகிய ..... வகையான உணர்வுகளை உள்ளடக்கித் திகழ்கின்றது.

**பாலியல் உணர்வு**

மனிதனின் உளவாழ்வுக்கு (Mental life) பாலுணர்ச்சியே ஆதாரமாகும். பாலுணர்ச்சியை இன்பம் தருகின்ற உணர்ச்சியாக மட்டும் பாராமல் உள ஒழுங்கமைவின் ஆதார சக்தியாகவும் காண்கிறார் ஃப்ராய்ட்.

சங்க இலக்கியத்தில் பாலியல் உணர்வினைக் காமம் என்ற சொல்லினால் குறிப்பிடுவர். வள்ளுவர்,

> காமக் கடும்புனல் நீந்திக் கரை காணேன்
> யாமத்தும் யானே உளேன் (குறள் - 1167)

என்ற குறளின் வாயிலாகக் காமம் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

குறுந்தொகையில் வெள்ளிவீதியார் தலைவி கூற்றில் ஒரு பாடல் மட்டுமே பாடியுள்ளார். அப்பாடலில், தலைவி தன் காம உணர்வினை வெளிப்படுத்துகின்றான். நல்லதொரு பசுவின் பாலானது அதன் கன்றினால் உண்ணப்படாமலும், கறக்கும் கலத்தில் விழாமல் மண்ணில் வீழ்ந்து வீணாகியும் போவது போல என் அழகிய உடலும் பெண்மையும் எனக்கும் பயன்படாமல் என் தலைவனுக்கும் இன்பத்தைக் கொடுக்காமல் பசலை படிந்து வாடுகிறது என்று தலைவி தன் காம உணர்வினை வெளிப்படுத்துகிறாள். இதனை,

> கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
> நல்ஆன் தீம்பால் நிலத்து உக்காஅங்கு
> எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது
> பசலை உணீஇயர் வேண்டும்
> திதலை அல்குல் என்மாமைக் கவினே
> (குறுந்.27 : 1-5)

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

என்ற அடிகளின் வாயிலாகத் தலைவியின் காம உணர்வினை அறிந்து கொள்ள முடிகிறது. அறிந்து கொள்ள முடிகிறது. இது போன்று குறுந்தொகையில் 58, 149, 386 ஆகிய பாடல்களும் பாலியல் உணர்வினை வெளிப்படுத்துகின்றது.

### தாய்மை உணர்வு

தாய் என்பவள் சுயநலமின்மை, பிள்ளைப்பாசம், குடும்பப்பாசம் கொண்டவள் ஆவாள். அதனால் தான் இறைவன், நேரில் ஒவ்வொருவரையும் தனித்தனியே சந்திக்க முடியாத காரணத்தினால் தாயைப் படைத்தளித்தான்.

குறுந்தொகையில், உடன்போக்குச் சென்ற தலைவி நினைத்து அச்சம் கொண்ட செவிலித்தாய் இடைச்சுரத்து அவர்களைத் தேடிச் செல்கின்றாள். இவ்வாறு அவளைத் தேடிச் செல்வதற்குக் காரணம் அவள் தலைவியின் மீது வைத்துள்ள தாய்ப்பாசமேயாகும். ஆதலால் உடன்போக்கு மேற்கொண்ட தலைவியைக் காணாது தவிக்கின்றாள்.

காலே பரிதவப் பினவே, கண்ணே
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே
அகல் இரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற, இவ் உலகத்துப் பிறரே
(குறுந்.44 : 1-4)

என்ற அடிகளின் வாயிலாக, செவிலித்தாய் தலைவியின் மீது வைத்துள்ள தாய்ப் பாசம் வெளிப்படுகின்றதனை அறிந்து கொள்ள முடிகிறது.

### தற்கொலை உணர்வு

தற்கொலைக்கானப் பின்னணியினை உளவியல் நிலையில் ஆராய்தல் மிக அவசியமாகும். ஆசைகள் நிறைவேறாத மனிதன் எளிதாகத் தன்னை அழித்துக் கொள்ளும் தன்மையில் விழுந்து விடுகின்றான். மேலும் சூழ்நிலையினைச் சமாளிக்க இயலாமல் தவிக்கின்றான். அதனால் மனம் அதிலிருந்து தப்பிக்க எண்ணுகிறது. தப்பிக்கும் பொருட்டுத் தற்கொலை செய்து கொள்கின்றான்.

குறுந்தொகையிலும் தலைவன் பரத்தமையிடம் சென்று விட்டுத் திரும்ப தலைவியிடமே வருகின்றான். அப்பொழுது தலைவி, தலைவன் மீது சினம் கொண்டு, பாணர் பச்சை மீன்களைப் பிடித்து வைத்தப் புலால் வீசும் அகன்ற பாத்திரம் எவ்வாறு நாறுமோ அது போன்று உன்னோடு நான் கொண்ட காதலும் வெறுப்பைத் தருகின்றது. ஆதலால் என் உயிர் அழிவதாக என்று கூறுகின்றாள். இதனை,

பாணர் பசுமீன் சொரிந்த மண்டை போல
எமக்கும் பெரும் புலவு ஆகி
நும்மும் பெறேஎம் இறீஇயர்எம் உயிரே
(குறுந்.169 :4-6)

என்ற அடிகளின் வாயிலாக, என் உயிர் எனக்கும் வெறுப்புடையதாகி உன்னையும் பெறாமல் போகட்டும் என்று தலைவி கூறுவதனையும், தலைவனின் மீது தான் கொண்ட காதல் பெரும் ஏமாற்றத்தைத் தந்ததால் அவளுக்குத் தற்கொலை உணர்வு ஏற்பட்டுள்ளதனையும் அறிந்து கொள்ள முடிகிறது.

### அச்ச உணர்வு

மனித இனம் தன்னை மீறிய செய்கைகளைக் கண்டவுடனும் தன்னால் கட்டுப்படுத்த இயலாத ஆபத்தான சூழ்நிலைகளிலும் அச்சம் கொள்கிறது. இது ஒரு எதிர்மறையான எழுச்சியாகும்.

குறுந்தொகையிலும், தலைவன் தலைவியைத் தன் சுற்றத்தாருடன் மணம் பேச வருகின்றனர். அப்பொழுது தன்னைத் தலைவன் வீட்டில் ஏற்றுக் கொள்வார்களோ என்று அச்சம் கொள்கின்றாள். இதனை,

அம்ம வாழி தோழி! நம் ஊர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ?
தண்டுடைக் கையர் வெண்தலைச் சிதவலர்
நன்றுநன்று என்னும் மாக்களோடு
இன்று பெரிது என்னும் ஆங்கணது அவையே
(குறுந்.146)

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

என்ற அடிகளின் வாயிலாகத் தலைவியைப் பெண் பார்க்க வந்தவர்கள் வரைவு மறுத்து விடுவரோ என்று அச்சம் கொண்ட தலைவிக்குத் தோழி அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று கூறியதனை அறிந்து கொள்ள முடிகிறது.

**அவல உணர்வு**

வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது இயல்பே. அது போன்று குறுந்தொகையில் தலைவி ஒருத்திப் பிரிவுத் துயர் கொண்டு அவல உணர்வுடன் காணப்படுகின்றாள். அத்தகைய தலைவிக்குத் தோழி ஆறுதல் கூறுகின்றாள். எப்படியாவது தலைவி இருக்குமிடத்தினை அறிந்து தூது அனுப்பி உன்னிடம் கொண்டுவந்து சேர்த்துவிடுவேன். நீ கவலையுறாதே என்று ஆறுதல் கூறுகின்றாள். இதனை,

நிலந்தொட்டுப் புகாஅர், வானம் ஏறார்
விலங்கு இருமுந்நீர் காலின் செல்லார்
..............................................
கெடுநரும் உளரோ? நம் காதலோரே
(குறுந்.130)

என்ற அடிகளின் வாயிலாக நம் அன்புக்குரியவர் நிலத்தைத் தோண்டி புகுந்து விட மாட்டார். வானத்தில் உயரே பறந்து மறைந்து விடவும் மாட்டார். கடலில் செல்லும் கலத்தில் ஏறி நாடுவிட்டு நாடுசெல்லவும் மாட்டார். எனவே அவரைத் தேடிக் கண்டுபிடித்து விடலாம் என்கிறாள்.

மேற்கண்டவற்றின் வாயிலாக பிரிவுத் துயரில் வாடும் தலைவியின் அவல உணர்வினை அறிந்து கொள்ள முடிகிறது.

**முடிவுரை**

குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள வெள்ளிவீதியாரின் பாடல்களில் பாலியல் உணர்வு, தாய்மை உணர்வு, தற்கொலை உணர்வு, அவலஉணர்வு, தாய்மை உணர்வு, அச்ச உணர்வு, போன்ற உணர்வுகள் இடம்பெற்றுள்ளதனை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், மனிதன் உணர்வுகளுக்கு உட்பட்டே இருக்கின்றான் என்பதனையும் அறிந்து கொள்ள முடிகிறது.


## கருத்தரங்கம் நடத்த நிதியுதவி

"தமிழாய்வுச் சங்கமம்" நிதியுதவியுடன் கருத்தரங்கம் நடத்த விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள் கருத்தரங்கம் பற்றிய கருத்துச் சுருக்கம் மற்றும் கருத்தரங்க வரவு செலவுத்திட்டம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கலாம்.

## கருத்தரங்க நிதியுதவி பெறுவதற்கான விதிமுறைகள்

1. கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள் தமிழாய்வுச் சங்கமம் உறுப்பினராக இருக்க வேண்டும்.
2. கருத்தரங்கச் சுருக்கம் மற்றும் வரவு செலவுத்திட்டம் ஆகியவற்றை அனுப்ப வேண்டும்.
3. கருத்தரங்கம் நடைபெறுவதற்கு 3 மாதங்களுக்கு முன்பாக விண்ணப்பிக்க வேண்டும்.
4. கருத்தரங்கம் தேசிய மற்றும் பன்னாட்டு அளவில் இருக்க வேண்டும்.
5. நிதியுதவி வேண்டுபவர்கள் கல்லூரியின் முதல்வர் வழியாக விண்ணப்பிக்க வேண்டும்.
6. தமிழாய்வுச் சங்கமத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நிதியுதவி வழங்கப்படும்.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# சிற்றிலக்கிய வரலாறும் தமிழக வரலாறும்

**முனைவர் நா.கவிதா**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முகப்புரை**

இலக்கியங்கள் குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த படைப்பாளிகளால் படைக்கப்படுவதாகும். ஆதலால் இலக்கியங்கள் யாவும் அவை தோன்றிய காலத்தில் ஏற்படும் மாற்றங்களை முழுமையாக சுவீகரித்துக் கொள்ளும் என்று கூறுவர். இதனால் இலக்கிய உருவாக்கத்தில் வரலாற்றுப் பின்னணியின் முதன்மை இடத்தை உணர முடிகின்றது. வரலாற்றிற்குப் பல முகங்கள் உள்ளன. அரசியல் வரலாறு, சமுதாய வரலாறு, கலை வரலாறு, அறிவியல் வரலாறு, பண்பாட்டு வரலாறு எனப்படும் பல முகங்களுக்கும் அடிப்படையானது & அனைத்துத் துறைகளிலும் தாக்கம் ஏற்படுத்தக்கூடிய அரசியல் வரலாறு ஆதலால் இலக்கிய வரலாற்றை அறிவதற்கும் அரசியல் வரலாறு அவசியமாகின்றது. சிற்றிலக்கியங்கள் தோன்றிய கால வரலாறு & அவை தோன்றிய கால கட்டத்தில் (கி.பி. 14 ஆம் நூ. முதல் & கி.பி. 18 ஆம் நூ. முடிய) காணப்பட்ட தமிழக வரலாறு பற்றிய தரவுகளை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கிய காலம்

சிற்றிலக்கியக் காலத்தின் வரலாற்றுப் பின்னணியைக் காண்பதற்கு முன் அதனது கால எல்லையினைக் காண்பதே தலைமை வாய்ந்தது சிற்றிலக்கியத்தின் தோற்றம் சங்க காலத்தில் தொடங்கினும் சிறப்பான இடத்தைப் பெற்றது கி.பி. 12 ஆம் நூ. பின்னரே என்று கூறலாம். ஆக பேரரசுகள் சிதைவுற்ற (14 ஆம் நூ. முதல் 18 ஆம் நூ.) கால கட்டமே சிற்றிலக்கிய கால எல்லையாக வரையறை செய்யலாம்.[1] மேலும் சிற்றிலக்கியங்கள் உச்ச நிலையில் இருந்த காலம் குறித்து டாக்டர். தமிழண்ணல் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார். பல்லவர் காலத்தைப் பக்தி இலக்கியக் காலமென்றும், இடைக்காலச் சோழர் காலத்தைக் காப்பியக் காலமென்றும் அதன் மேலோங்கிய தன்மையாற் கூறுகிறோமே, அது போல நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று அழைக்கலாம்.[2] மேற்கூறப் பெற்ற கருத்துகளை இணைத்து நோக்கினால் கி.பி.13,14, 15,16,17,18 ஆம் நூற்றாண்டுகளை சிற்றிலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றிய காலம் என்று கொள்ள இடமுண்டு. ஆதலால் இந்த ஆறு நூற்றாண்டுக் காலப் பகுதியினைச் சிற்றிலக்கிய காலம் என்று வரையறை செய்ய இடமுள்ளது. இவற்றுள்ளும் 14 ஆம் நூற்றாண்டில் நிலவிய பாண்டியர் ஆட்சி இலக்கிய வரலாற்றில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.

## கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் தமிழகம்

ஒரு நாட்டின் வரலாற்றினை எழுதுவதற்கு இலக்கியங்களே பெரிதும் துணை புரிகின்றன. தமிழ் நாட்டின் வரலாறு இலக்கிய

ஆதாரங்களையும் துணையாகக் கொண்டுள்ளது. விஜயநகரப் பேரரசை அறிந்து கொள்வதற்கு இலக்கியங்களே முதன்மை ஆதாரமாக இருந்தன. விஜய நகரப் பேரரசின் ஆட்சி எத்தகையதாக அமைந்திருந்தது என்பதை நேரடியாகவும், சுதந்திரமாகவும் சொல்லியிருப்பதால் இலக்கியங்களின் பணியைக் குறைத்து மதிப்பிட முடியாது.[3] என்ற எஸ்.கிருஷ்ணசாமியின் கூற்று அக்கால வரலாற்றை அறிதற்கு இலக்கியங்களின் இன்றியமையாமையைப் புலப்படுத்துகின்றது.

கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஒரு மாபெரும் மாற்றம் ஏற்பட்டது. நானூறு ஆண்டுகள் தமிழகத்தை ஆண்டு வந்த சோழப் பேரரசு முற்றிலும் வலிமை குன்றியதால் குறுநில மன்னர்கள் பலர் தனியரசு செலுத்தத் தொடங்கினார்கள். தெற்கில் பாண்டியர்கள் தங்களது வலிமையைப் பெருக்கி பரந்த நாட்டைப் படைத்தனர். ஆக கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன், முதல் சடையவர்மன் சுந்தர பாண்டியன், முதல் மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆகிய மூன்று பேரரசர்களின் ஆளுகையின் கீழ் தமிழகம் முழுவதும் அமைந்திருந்தது[4] என்ற கருத்து இங்கு ஏற்புடைத்தது.

இந்நூற்றாண்டில் சைவசித்தாந்த நூல்களுள் தலைமையும் பெருமையும் பெற்றுள்ள சிவஞான போதம் தோன்றியது குறிப்பிடத்தக்கது. அத்துடன் அதன்வழி நூலாகிய சிவஞான ளிதியார் என்ற நூலும் இக்காலத்தே இயற்றப்பட்டது. அடுத்துப் புகழ் பெற்ற நூல் தஞ்சைவாணன் கோவை ஆகும். மேலும், உமாபதி சிவாச்சாரியாரின் நெஞ்சு விடு தூதும் குறிப்பிடத்தக்கது. இது போன்ற ஒரு சில தத்துவ நூல்களே இக்காலத்தில் தோன்றின. உள்நாட்டு அரசியல் குழப்பம், பாண்டியரின் வீழ்ச்சி, அயலார் ஆதிக்கம் போன்ற வலுவான காரணங்களால் இலக்கியத்துறை போதிய அளவு வளம் பெறவில்லை எனக் கருத வாய்ப்புள்ளது.

**கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் தமிழகம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டு ஒரு சிறந்த காலப் பகுதியாக இல்லை என்றே வரலாற்றாசிரியர்கள் பலர் எடுத்துரைக்கின்றனர். ஏனெனில் இந்நூற்றாண்டில் தான் தமிழ்நாடு அயல் மொழியாளர் படையெழுச்சிக்குட்பட்டு தனது செல்வத்தையும், தனிச் சிறப்பையும் இழக்கும்படி நேர்ந்தது. விஜய நகர வேந்தர்களின் பிரதிநிதிகள் தமிழ்நாட்டை ஆண்டு வந்தமையால் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழ் வேந்தர்களின் ஆட்சி இந்த நூற்றாண்டில் அழிந்து போயிற்று[5] என்பர்.

மேலும், விஜய நகரை ஆண்ட இரண்டாம் அரிகரன் காலத்தில் தமிழகத்திலிருந்த விஜய நகரப் பிராந்தியம் வேலூர், செஞ்சி, தஞ்சை, மதுரை என்று மண்டலங்களாகப் பிரித்து ஆளப்பட்டது. பின்னர் இரண்டாம் தேவராயர் ஆட்சிக் காலத்தில் அம்முறை விரைவில் மாறியது. ஒவ்வொரு குறுநிலப் பகுதியிலும் நாயக்கர்கள் என்ற ஒருவகை படைமானிய நிர்வாகிகள் அமர்த்தப்பட்டனர். கி.பி. 1403 முதல் 1488 வரை இலக்கண்ண நாயக்கரும், மாடண்ண நாயக்கரும் விஜய நகரத்தின் சார்பில் மதுரையில் ஆட்சிப் பொறுப்பிலிருந்தனர்.[6] என்று தமிழகத்தின் அரசியல் நிலை குறித்த கருத்துக்களை வரலாற்றறிஞர்கள் முன்வைத்துள்ளனர்.

சைவ சித்தாந்த நூல்கள் பதினான்கினுள் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் ஆகிய எட்டு நூல்களும் இந்நூற்றாண்டில் தோன்றின. அத்துடன், தில்லைக் கலம்பகம், மாதைக் கலம்பகம், திருவாமத்தூர்க் கலம்பகம், ஏகாம்பரநாதர் உலா, வில்லிபுத்தூரார் பாரதம், கடல் விலாசம், சித்திர மடல், கப்பற்கோவை, தேசிகப் பிரபந்தம் ஆகிய இலக்கியங்களும் இந்நூற்றாண்டில் இயற்றப் பெற்றவை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் தமிழகம்**

விசய நகரத்தில் அரச பதவிக்காக அரசியல் சூதாட்டங்கள் உச்சகட்ட நிலையை அடைந்தது இந்நூற்றாண்டே ஆகும். வீர நரசிம்மனுடைய மறைவிற்குப் பின்பு கி.பி. 1509 இல் கிருட்டிண தேவராயன் விஜய நகரப் பேரரசர் ஆனார். இவருடைய ஆட்சிக் காலத்தில் தமிழகம் முழுவதும் கலகங்களும், நாயக்க தானங்களில் சுயாட்சியும் மலிந்து காணப்பட்டன. இதனால் கிருட்டிண தேவராயர் தமிழகம் நோக்கி படையெடுக்க வேண்டியிருந்தது. முடிவில் தொண்டை மண்டலத்து நாயக்கர்களைப் பணிய வைத்து விஜய நகரத்தின் மேலாதிக்கத்தை ஏற்கச் செய்தனர்.

இப்படையெடுப்பின் விளைவாக விஜய நகரப் பேரரசின் தென் பிராந்தியமாகிய தமிழகம் (1) சந்திரகிரி ராச்சியம் (2) படைவீடு ராச்சியம் (3) திருவதிகை ராச்சியம் (4) சோழ ராச்சியம் (5) பாண்டிய ராச்சியம் என்ற ஐந்து பிரிவுகளாக ஆளப்பட்டது [7] என்று கூறுவர்.

கிருஷ்ண தேவராயர் அரசாட்சி பற்றி தமது அரசியல் பொறுப்பைத் திறம்பட கையேற்று நடத்தியதால் நாட்டில் அமைதியும் செழிப்பும் நிலவின. மக்கள் முன்னேற்றத்திற்காக அரும்பாடுபட்டார். ஆகவே, கிருட்டிண தேவராயர் தென்னாட்டு அரசர் குல வரலாற்றில் புகழ் மிக்கதோர் இடத்தைப் பெற்றுள்ளார்.[8] என்று வரையறுத்துச் சுட்டுவர். முடிவாக இவர்தம் ஆட்சியில் தென்தமிழகம் சிறப்புடன் இருந்தமையை அறிய இயலுகின்றது.

அரசாங்க மொழியாக கன்னடமும், தெலுங்கும் இருந்த சூழ்நிலையில், நற்றமிழ்ப் பாக்கள் பாடிய ஒருசில புலவர்களால் சில நூல்கள் இந்நூற்றாண்டில் தோன்றின. அவை திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநுபூதி, நம்பெருமான் மும்மணிக்கோவை, கந்தரந்தாதி, திருவானைக்காவுலா, ஓங்குகோயிற் புராணம், நைடதம் போன்றவையாகும். அத்துடன் வரதுங்கராம பாண்டியன் பாடிய திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியும் சிறப்பிற்குரியதாகும்.

**கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் தமிழகம்**

தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி தொடக்கம் பெற்ற நூற்றாண்டே கி.பி. பதினேழாம் நூற்றாண்டு ஆகும். விசய நகரப் பேரரசின் தமிழகத்து, பிரதிநிதிகளாய் நாயக்கர் நடத்திய ஆட்சி சுயாட்சியாக மலர்ந்த காலமே இக்காலம். இந்த நூற்றாண்டில் தான் டச்சுக்காரரும், ஆங்கிலேயரும் கீழைக் கடற்கரையில் வணிக நிறுவனங்களைத் தொடங்கினர்.

கிருட்டிணப்பனின் தலைமுறையில் முத்து வீரப்பன் (கி.பி. 1609 முதல் கி.பி. 1623 வரை) மதுரையை ஆண்ட நாயக்கர்களில் சிறப்பு பொருந்தியவர் ஆவர். இவர் தம் ஆட்சியில் தான் விசயநகருடன் கொண்டிருந்த உறவில் மாற்றம் ஏற்பட்டது. விசய நகருக்குரிய திறையானது முற்றிலும் நிறுத்தப்பட்டது. மேலும், இவர் 1616 இல் மதுரையிலிருந்த தலைநகரை திருச்சிக்கு மாற்றினார். இவருக்குப் பின்பு திருமலை நாயக்கர் கி.பி. 1623 முதல் 1659 வரை மதுரையை ஆண்டார். நாயக்கர் வரலாற்றில் கதிரவன் போல காட்சி தருபவர் இம்மன்னராவார். இவர் தம் ஆட்சியில் தென்தமிழகம் முழுவதிலும் கட்டடக்கலை சிறப்பாக வளர்ந்தது. சான்றாக திருமலை நாயக்கர் அரண்மனை, சுசீந்தரக் கோயில், மதுரை ஆலயத்தை மறுசீரமைப்பு செய்த விதம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மேலும் ஆண்டு ஒன்றுக்கு பெருவிழாக்கள் நான்கும், சிறு விழாக்கள் சிலவும் நடத்தச் செய்து மதுரையை விழா நகரமாக்கினார். இவற்றுள் திருவிளையாடல் திருவிழாக்களும், தெப்பத் திருவிழாவும் மிகச் சிறப்பிற்குரியதாகும்.[9] மக்களுக்கென பல்வேறு ஏரிகள், கண்மாய்கள், சாலைகள் போன்றவற்றை உருவாக்கினாலும் திருமலை நாயக்கரின் இறுதிக் காலம் இருள் சூழ்ந்ததாகத் திகழ்ந்தது. போர்ச்சுக்கீசியருடனான உறவும், பாமினி சுல்தானுடன் கொண்ட நட்பும் தவறிய போக்குகளாகத் திகழ்ந்தன. தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த மூக்கறுப்புப் போர் நிகழ்ந்தது திருமலை நாயக்கர் காலத்தில்தான். இவரது

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

தாய்மொழி தெலுங்கு என்றாலும் தமிழ்ப் புலவர்களையும் ஆதரித்தார். இதனால் கூளப்பநாயக்கன் காதல், விறலி விடு தூது ஆகியன இக்காலத்தே தோன்றின.

**கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் தமிழகம்**

நாயக்கர்கள் விசய நகரத்தின் வழிவந்தவர்களே ஆவர். அவர்கள் விசய நகரம் வகுத்திருந்த அரசியல் அடிச்சுவட்டில் படைமானிய முறையை அமைத்துக் கொண்டு தமிழகத்தை ஆண்டு வந்தவர்கள். கி.பி. 1706 இல் இராணி மங்கம்மாளின் பேரன் விசயரங்க சொக்கநாதன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இவனுடைய ஆட்சிக் காலத்தில், அதிகாரிகளின் அக்கிரமங்கள் தாண்டவமாடின, குழப்பங்கள் மலிந்தன, மக்கள் திண்டாடினர். தமிழக மக்கள் அறப்போர் நடத்தும் அளவிற்கு நிலைமை மோசமாகியது. இந்நிலையில் இராமநாதபுரத்திலும் கிழவன் சேதுபதியின் மரணத்தால் அரசுரிமைப் போட்டிகளும், உட்பூசல்களும், கலகங்களும் தோன்றி அமைதியைக் கெடுத்தன. மேலும் வேணாட்டில் கி.பி. 1729 இல் இராமவர்மன் மறைவு வாரிசுரிமைப் போருக்கு வழிவகுத்தது. மன்னனுடைய மருமகன் மார்த்தாண்டவர்மன், புதல்வர்கள் பப்புத்தம்பி, இராமன் தம்பி ஆகியோரிடையே அரசுரிமைப் போர் வலுப் பெற்றது. மன்னனது புதல்வர்களுக்கு உதவி செய்ய நாயக்கர்கள் பெரும் படையுடன் சென்றனர். இறுதியில் மார்த்தாண்டவர்மனுக்கு எதிராகப் போர் செய்து வெற்றியும் பெற்றதோடு பெரும் தொகையைப் பெற்றுக் கொண்டு திரும்பினர்[10] என்பது போன்ற தகவல்களால், நாயக்கர்களின் ஆட்சியில் வலிமை குன்றிய, பொருளாசை கொண்ட அரசினையே காண முடிந்தது.

கி.பி.1732இல் விசயரங்கனின் மறைவிற்குப் பின்பு மனைவி மீனாட்சி ஆட்சியை மேற்கொண்டார். இவர் தம் ஆட்சிக் காலம் அரசியல் கொந்தளிப்பான காலமாக விளங்கியது. தமிழக மக்களிடையே வெறுப்பும், அமைதி இன்மையும், குழப்பமும் அதிகரித்த நிலையோடு கர்னாடக நவாப்பின் அதிகார நெரிசல்களும் இருந்தன. திருமலை நாயக்கனின் தம்பி வழியில் தோன்றிய பங்காருவின் அரசுரிமைச் சூழ்ச்சியில் இருந்து தப்பிக்க இராணி மீனாட்சி சந்தாசாகிப்பு உதவியை நாடினாள். ஆனால் சந்தா சாகிப்பு மீனாட்சியைச் சிறைப்படுத்தியதோடு கி.பி. 1736 இல் திருச்சியைக் கைப்பற்றினான். மேலும் திண்டுக்கல்லையும், மதுரையையும் கைப்பற்றிக் கொண்டு மதுரை நாயக்கர் ஆட்சிக்கு ஒரு முடிவு கட்டினான். முடிவாக நவாபின் ஆட்சி தெற்கில் வேணாடு வரை பரந்து விரிந்தது[11] என்று மதுரை நாயக்கர் வரலாற்றினை எடுத்துரைப்பர்.

தமிழகத்தின் அரசியல் வரலாறு குழப்பமுற்றிருந்தாலும் இலக்கிய வரலாறு சிற்றிலக்கியங்களால் வளம் பெற்றிருந்தது. நாயக்கர்களின் ஆதரவுடன் சைவமடங்களின் தொண்டுகளாலும் பல்வேறு வடிவங்களையும் பொருண்மைகளையும் கொண்டு இலக்கியங்கள் படைக்கப்பட்டன. அருணாசலபுராணம், அருணைக்கலம்பகம், கந்தர் கலிவெண்பா, கயிலைக் கலம்பகம், மச்சபுராணம், புலவர் ஆற்றுப்படை போன்றநூல்கள்பலஇயற்றப்பட்டன. அத்துடன் அந்தாதி, மாலை, பிள்ளைத்தமிழ், உலா, பள்ளு, குறவஞ்சி, சதகம், நொண்டி நாடகம், கீர்த்தனைகள் போன்ற இலக்கிய நெறிகளிலும் பல நூல்கள் படைக்கப்பட்டன. சித்தேரியம்மாள் அம்மானை, திருக்காவலூர்க் கலம்பகம் போன்ற நூல்களும் தோன்றின.

**கொடுங்கோன்மை அரசியல் சூழல்**

கி.பி. 14 ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 17 ஆம் நூற்றாண்டு வரையிலான தமிழகத்தில் நிலவிய அமைதியற்ற சூழலை பின்வரும் கூற்று எடுத்துரைக்கிறது.

தமிழகம் தன்னாட்சி என்றால் என்ன என்பதை முற்றிலும் மறந்தது. கிராம ஆட்சி முறையும் அழிந்து போனது. இராணுவ ஆட்சி தோன்றியது, தமிழ்மொழி வளர்ச்சி தடைபட்டது. வடமொழியும் தெலுங்கும் முதலிடம் பெற்றன. அத்துடன் முகம்மதியர்களின் கொடுங்கோல் ஆட்சியில் சிக்கித் தவித்தது[12] என்ற வரிகள் தமிழகத்தின் நிலையினை எடுத்துரைக்கின்றன.

பேரரசுகளின் வீழ்ச்சி ஒரு புறம், நிலையான ஆட்சி இல்லாத சூழல் மற்றொரு புறம் இவை எல்லாவற்றினும் மேலாக ஆட்சியில் இருந்த அரசுகளும் வலிமை வாய்ந்தவையாக இல்லை. இத்தகைய நிலையினை தனக்கு சாதகமாக பல அண்டை மன்னர்கள் பயன்படுத்திக் கொண்டனர். மராட்டிய மன்னன் சிவாஜி உட்படப் பலரும் தமிழகத்தை ஆண்ட மன்னர்களிடம் இருந்து பெருந்தொகைகள் கப்பமாக வசூலித்த வரலாற்று நிகழ்வுகள் பல நிகழ்ந்தன. தென்னகத்தில் கொள்ளையடிக்க விரும்பியே, தமிழகத்தில் தனது படையைச் செலுத்திய சிவாஜிக்கு இப்படையெடுப்பால் 95 இலட்ச வராஹன்களும், பல சிறிய கோட்டைகளும் கைவசமாயின.

வரலாற்றாசிரியர்கள் சிற்றரசர்கள் ஆட்சியில் இருந்த கால கட்டத்தின் நிலைமையை, 14 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்தே அராஜகமும், சீர்குலைவும் மிகக் கடுமளவில் நாட்டைக் கவ்விப் பிடித்தன. இதற்குமுன் அமைதியோடும், வளிதோடும் நாட்டை ஆண்ட பாண்டிய, சோழ அரசுகள்... அரசியல் சக்திகள் என்னும் வகையில் காலாவதி ஆகிவிட்டன. அவைகளின் இடத்தில் அன்னியச் சக்திகள் வளம் பெறலாயின. வேளாண்மை பொருள், உற்பத்தி, வணிகம் இவை யாவும் தேக்கமுற்றன. இவற்றோடு சேர்ந்து பொருளாதார வளம், பண்பாட்டு மேம்பாடு, அரசியல் அமைதி ஆகிய அனைத்தும் சீர்குலைந்தன[13] என்று குறிப்பிடுகின்றனர்.

மேற்கூறிய கருத்துக்கள் யாவுமே சிற்றிலக்கியம் தோன்றிய அரசியல் சூழலை இயம்பிச் செல்கின்றன எனலாம்.

### தொகுப்புரை

சிற்றிலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றிய காலமாக, பேரரசுகள் சிதைவுற்ற 13ஆம் நூ. முதல் 18 ஆம் நூ. முடிய உள்ள ஆறு நூற்றாண்டுக்காலப் பகுதியினைக் கூறலாம். டாக்டர் தமிழண்ணல் தமிழ் இலக்கிய வரலாற்றில் நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று எடுத்துரைக்கும் கூற்று இங்கு முதன்மையானது. 13ஆம் நூ. முதல் 18ஆம் நூ. வரையிலும் சமஸ்கிருதம், மராட்டியம், தெலுங்கு, ஐரோப்பிய மொழிகள் போன்ற வேற்று மொழி பேசுவோர் அடக்கி ஆள்கின்ற காலச்சூழலிலே சிற்றிலக்கியங்கள் தோன்றின. மேலும் இக்காலத்தில் தமிழ் மொழியை ஆதரித்த ஒருசில சிற்றரசர்களின் மனப்பான்மைக்கு ஏற்ப அலங்காரக் கவிகளோடு புகழ்ச்சி இலக்கியங்களும் தோன்றின. வேளாண்மை, பொருள் உற்பத்தி, வணிகம், பொருளாதார வளம், பண்பாட்டு மேம்பாடு, அரசியல் அமைதி யாவும் சீர்குலைந்த அமைதியற்ற காலச் சூழலிலே சிற்றிலக்கியங்கள் தோன்றின.

### குறிப்புகள்


1. கா.கோ.வேங்கடராமன், தமிழ் இலக்கிய வரலாறு, ப.23
2. தமிழண்ணல், தமிழ் இலக்கிய வரலாறு, ப.332
3. S.Krishnasamy, Tamil Country under Vijayanagar, p.379
4. தி.வை.சதாசிவ பண்டாரத்தார், தமிழ் இலக்கிய வரலாறு (13,14,15 & ஆம் நூற்றாண்டுகள்), ப.2
5. மே.நூ., ப.155
6. வே.தி.செல்லம், தமிழக வரலாறும் பண்பாடும், ப.344
7. K.A.N, Sastry, History of South India, p.254
8. கே.கே.பிள்ளை, தென் இந்திய வரலாறு, (இரண்டாம் பகுதி) ப.52
9. அ.கி.பரந்தாமனார், மதுரை நாயக்கர் வரலாறு, ப.209
10. K.V. Krishna Iyer, A Short History of Kerala, p.293.
11. அ.கி.பரந்தாமனார், மு.கூ.நூ., 159
12. அ.சுவாமி நாதன், தமிழக வரலாறும் பண்பாடும், ப.33
13. K.Rajayyan, Rise and Fall of Tamil Paligars in Tamilnadu, p.22.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# குறுந்தொகைத் தலைவியின் அறிவு ஆளுமை

**ச. மீனாட்சி**
உதவிப்பேராசிரியர்,
துரைச்சாமி நாடார் மாரியம்மாள் கல்லூரி, கோவில்பட்டி.

## முகப்புரை

சங்க அகஇலக்கியங்கள் அகத்திணை மாந்தர்களின் சிந்தனைகளையும், மன உணர்வுகளையும் படம் பிடித்துக் காட்டும் சிறந்த இலக்கியம் ஆகும். அகத்திணை மாந்தருள் இன்றியமையா இடத்தினைப் பெறுபவள் தலைவி ஆவாள். மனித உள்ளத்தைப் பற்றி விளக்கும் அறிவியல் ஆய்வே உளவியல் ஆகும். உளவியல் துறையின் ஒரு பிரிவே ஆளுமை (Personality) ஆகும். தலைவி தன் சூழலுக்கு ஏற்ப தன் ஆளுமைத்திறனை பலவாறு கையாளுகின்றாள். குறுந்தொகைத் தலைவி தன் நுட்பமான அறிவுத்திறனால் பிற மாந்தர்களை நெறிப்படுத்துகின்ற முறையினை தலைவியின் 'அறிவு' ஆளுமை (Intellectual Personality) வழி விளக்குவதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

### ஆளுமை

ஒருவர் பெற்றிருக்கும் குணநலன்களைப் பற்றிய ஆய்வே ஆளுமையாகும். ஆளுமை என்ற சொல்லானது, ஆங்கிலத்தில் 'பெர்ஸனாலிட்டி' (personality) என்று அழைக்கப்படுகின்றது. இவை இலத்தீன் மொழியான 'பெர்ஸொனா' என்னும் சொல்லில் இருந்து பிறந்தது. நாடக மேடையில் நடிப்பவர்கள் தாங்கள் ஏற்றிடும் பாத்திரத்தின் இயல்புக்குத் தக்கப்படி ஒரு முகமூடியை அணிந்து கொண்டு நடித்தனர். இத்தகைய முகமூடியைக் குறிக்கும் சொல்லே இலத்தீன் மொழியான 'பெர்ஸொனா' ஆகும். தற்சமயம் முகமூடியைக் குறிக்கும் சொல்லாக வழங்கப்பட்ட ஆளுமையானது இன்று ஒருவரது பண்பினைக் குறிக்கும் சொல்லாக கையாளப் படுகின்றது. ஒவ்வொரு படிநிலையாக வளர்நிலை கொண்டுள்ள முறையே ஆளுமைப் பரிமாணங்கள் ஆகும். இவ்வாளுமைப் பரிமாணங்களுள் ஒன்றே அறிவு ஆளுமை (Intellectual Personality) ஆகும்.

### அறிவு ஆளுமை (Intellectual Personality)

புதியதாக ஏதேனும் ஒன்றினை அறிந்து கொள்வதே அறிதலாகும். இத்திறனின் வளர்ச்சி நிலையே அறிவுத்திறனாக கருதப்படுகின்றன. ஒருவரின் அறிவுப்புலமையை அவர்களது நடத்தைகள் மற்றும் சொல்லாற்றலின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். பகுத்துணர்ந்து ஒரு செயலினை நுட்பமாக செய்கின்ற முறையே அறிவு ஆளுமை (Intellectual Personality) ஆகும். எச்செயலையும் பகுத்துணர்ந்து செயல்படும் திறமே அறிவு ஆற்றலாகும்.

### தலைவியின் அறிவு ஆளுமை

குறுந்தொகைத் தலைவியின் மறைந்த ஆற்றலைப் புலப்படுத்தும் வண்ணம் அவளது 'அறிவு ஆளுமை' (Intellectual Personality) பின்வருமாறு ஆராயப்படுகின்றது.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

- இலக்கியங்களில் தலைவி தனது நுண்ணறிவுத்திறனால் (Intelligence) சமூகத்தைப் புரிந்து சூழலுக்கு ஏற்ப செயல்படுகின்ற பாங்கானது ஆராயப் படுகின்றது.
- சிந்தனைத்திறன், ஆராயும் ஆற்றல், கற்பனை சக்தி, போன்றவற்றின் வாயிலாக தலைவியின் அறிவுத்திறன் வளர்ச்சியானது நோக்கப் படுகின்றது.
- தலைவி தன்னையும் தன் மனதையும் தற்காத்துக் கொள்கின்ற திறன் படைத்தவளாகத் திகழ்கின்ற முறையினை 'தற்காப்பு இயங்குமுறைகள்' என்பதன் வாயிலாக புலப்படுத்தப்படுகின்றன.
- தலைவியின் நுட்பமான சொல்லாற்றல் திறனை அவளது களவு மற்றும் கற்பு வாழ்க்கையானது புலப்படுத்துகின்ற முறையும் ஆராயப் படுகின்றது.
- தன் இலக்கை அடைய தலைவி கையாளுகின்ற ஆளுமைத் திறனுள் ஒன்றாக 'அறிவு ஆளுமை' (Intellectual Personality) செயல்படுகின்ற பாங்கானது உணர்த்தப் படுகின்றது.

### தலைவியின் நுண்ணறிவுத்திறன்

வெஸ்லரின் கூற்றிற்கு ஏற்ப தனது சூழல்களை திறமையாகச் சமாளிக்கின்ற நுண்ணறிவுத்திறனை முழுவதும் பெற்றவளாக குறுந்தொகைத் தலைவி திகழ்கின்றாள்.

தன் நுட்பமான அறிவுத்திறனால் தன் களவினை தோழியிடம் உரைத்து அவளை தாயிடம் அறத்தொடு நிற்க வைக்கின்றாள். களவினை கற்பாக மாற்ற தலைவனிடம் தன்னை அன்னை இற்செறித்த செய்தியையும், வெறியாட்டு நிகழ போவதையும் சிறைப்புறக் கூற்றின் வாயிலாக எடுத்துரைக்கின்றாள். தலைவியின் இத்தகைய நுண்ணறிவு அவளது அறிவு ஆளுமையை (Intellectual Personality) புலப்படுத்துகின்றது.

பகற்குறியில் சிறைப்புறமாக நிற்கும் தலைவனைத் தலைவி தன் நுண்ணறிவுத் திறனால் செயற்படுத்துகின்ற பாங்கினை,

**பயப்பு என் மேனியதுவே, நயப்பு அவர்**
**நார்இல் நெஞ்சத்து ஆர்இடையதுவே**
**செறிவும் சேண்இகந்தன்றே அறிவே**
**ஆங்கண் செல்கம் எழுக என, ஈங்கே,**
**வல்லா கூறியிருக்கும்: அள்இலைத்**
**தடவுநிலைத் தாழைச் சேர்ப்பதற்கு,**
**இடம் மன் - தோழி! - எந்நீரிரோ? எனினே**
**(குறு.219)**

என்ற பாடலடிகளால் அறியலாம். தாழை மலருக்கு முள் காவலாக இருப்பினும் அஞ்சாது மலரினைப் பறித்துச் சூடு வாரைப் போல, காப்பு மிகுதியால் தான் இற்செறிக்கப்பட்டாலும் காலமறிந்து மணம் முடித்துக் கோடல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றாள். சிறைப்புறம் நிற்கும் தலைவனுக்கு நுட்பமாகத் தான் இற்செறிக்கப்பட்டுள்ள செய்தியை உரைப்பதோடு, தன் மன விருப்பத்தையும் நெய்தல் நிலத்தலைவி வெளிப்படுத்துகின்றாள்.

### அறிவுத்திறன் வளர்ச்சி (Cognitive Development)

அறியாத ஒன்றினை அறிவதே அறிவாகும். அறிவுத்திறன் என்பது சிந்தனை, புலன்காட்சி, திட்டமிடல், தெளிவு செய்தல் போன்ற உளச்செயல்களைக் குறிக்கின்றன. அறிவுத்திறன் வளர்ச்சியை தனி ஒருவர் தனது சுற்றுப்புறச் சூழ்நிலையைப் புரிந்து கொள்ளக்கூடிய மனவளர்ச்சி அல்லது திறன்வளர்ச்சியே அறிவுத்திறன் வளர்ச்சி என்ற முறையில் உளவியலறிஞர் குறிப்பிடுகின்றார். பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் போது நம் உள்ளம் பல சிறப்பான செயல்களில் ஈடுபடுவதே அறிவுத்திறன் வளர்ச்சியாகும். அறிவுத்திறன் வளர்ச்சியின் பல்வேறு கூறுபாடுகளை,

- சிந்தனைத் திறன் (Thinking Power)
- கற்பனை செய்தல் (Imagination)
- ஆராய்ந்தறிதல் (Reasoning)

என்ற முறைகளில் குறிப்பிடலாம். ஒரு செயலை சிந்திப்பது தொடங்கி படிப்படியாக அறிவானது வளர்ச்சியடைகின்றது.

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

**சிந்தனைத் திறன் (Thinking Power)**

'சிந்தனை நமக்குள் எழும் பேச்சு' என்று வாட்சன் (Watson) குறிப்பிடுகின்றார். அறிவுத்திறன் சார்ந்த செயல்களில் ஒன்றாக "சிந்தனைத் திறன்" செயல்படுகின்றது. ஏதேனும் ஒரு குறிக்கோள் அல்லது முடிவை அடைவதற்கான முயற்சியை சிந்தனைத்திறன் (Thinking Power) மேற்கொள்கின்றது. எந்த ஒரு செயலையும் ஆழ்ந்து சிந்தித்து பார்த்து அதனது நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்க்க சிந்தனைத் திறனானது "வெளியுலகச் செயல்களால் அல்லது தூண்டல்களால் நம் உள்ளத்தில் ஏற்படும் உள்ளார்ந்த, தொடர்ந்து நிகழ்கின்ற மனச்செயல்." என்று உளவியலறிஞர் குறிப்பிடுகின்றனர். இலக்கியங்களில் தலைவியின் சிந்தனைத் திறனானது தலைவனை மையமிட்டதாகவே (அதாவது தனது இலக்கினை) அமைகின்றது. தனது குறிக்கோளை நிறைவு செய்வதன் பொருட்டு நன்மை தீமைகளை ஆய்ந்து ஆழ்ந்து சிந்திக்கின்ற மனத்திறனை உடையவளாகத் தலைவி திகழ்கின்றாள்.

தலைவனின் பிரிவால் வருந்துகின்ற தலைவியை தோழி இடித்துரைத்து பின்பு தலைவி தனது சிந்தனை ஓட்டத்தை தோழிக்கு உணர்த்துவதாக குறு.12வது பாடல் அமைகின்றது.

> எறும்பி அளையின் குறும்பல் சுனைய
> உலைக்கல் அன்ன பாறை ஏறி,
> கொடுவில் எயினர், பகழி மாய்க்கும்
> கவலைத்து என்ப, அவர்தேர் சென்ற ஆறே
> அதுமற்று அவலம் கொள்ளாது,
> நொதுமல கழறும் இவ்வமுங்கல் ஊரே (குறு.12)

தலைவியைக் கண்டு வருந்துகின்ற தோழியின் செயல்களால் தூண்டப்பட்ட தலைவியின் சிந்தனைத்திறனானது பல கிளைகளாகப் பிரிகின்றது. 'தலைவன் கடக்கின்ற பாதையானது எறும்பின் புற்றுக்களைப் போன்று அணைகள் நிறைந்ததாகவும், வெம்மையான பாறைகளுமாக காணப்படுகின்றன. வில்லேந்திய வேடவர்கள் அப்பாறையின் மேல் ஏறி அம்பினை கூர்மையாக்குவர். இத்தகைய சிக்கலான பாலை வழியைக் கடந்து தலைவன் சென்றுள்ளான். தலைவனை எண்ணி வருந்தாது என்னை இவ்வூர் இகழ்கின்றது' என்று குறிப்பாக தோழியைச் சாடுகின்றாள். தலைவனைப் பிரிந்த தலைவியின் எண்ண அலைகளானது அவனைச் சூழ்ந்தே அமைகின்ற பாங்கினை உணர முடிகின்றது.

வரைவினை நீட்டிக்கும் தலைவனிடம் தன் மேனியின் பசலை முற்றிலும் நீங்குதல் வேண்டும் என்று அறிவுத் திறனுடன் புலப்படுத்துகின்ற பாங்கினை,

> ஊர்உன் கேணி உண்துறைத் தொக்க
> பாசி அற்றே பசலை – காதலர்
> தொடுவுழித் தொடுவுழி நீங்கி
> விடுவுழி விடுவுழிப் பரத்தலானே... (குறு.399)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

பாசி → ஊரார் வெறுக்கின்றனர். பசலை → அலர் தூற்றுகின்றனர்.

தன் மேனியில் பசலை படர்தல் அலருக்கு ஏதுவாக அமையும் என்பதை சிந்தித்து, பசலையானது முற்றிலும் நீங்குதல் வேண்டும். என்று தோழியிடம் உரைக்கின்றாள். தலைவியின் ஆழ்ந்த சிந்தனை அவளை குறிக்கோளை நோக்கி நகர்த்துகின்றது.

இவ்விரு பாடல்களிலும் தலைவியின் சிந்தனை குறிக்கோளை நோக்கியதாக அமையும் பாங்கினைப் புலப்படுத்துகின்றது,

கற்பு → பிரிவு → தலைவன் சென்ற பாதை

களவு → பசலை → அலர் → வரைவு கடாதல்

முறையினை அறிய முடிகின்றது. களவு மற்றும் கற்பு வாழ்க்கையில் தலைவியின் சிந்தனைத் திறனானது உளவியலாளரின் கூற்றுப்படி வெளியுலகச் செயல்களின் தூண்டல்களால் அமைகின்ற முறையினை அறிய முடிகின்றது.

**தலைவியின் கற்பனையாற்றல்**

இலக்கியங்களில் தலைவி கையாளுகின்ற கற்பனைத் திறனானது உணர்வு பூர்வமானது. தனது விருப்பங்களை கற்பனையாக காணுகின்ற மனதிறன் உடையவளாக அக இலக்கியத் தலைவி செயல்படுகின்றாள். தனது இலக்கினை அடையவும்,

தன் மனநிலையை பிறருக்கு புலப்படுத்தவும் தலைவி கற்பனையாற்றலை கையாளுகின்றாள். தன் கற்பனைத் திறத்தால் நெஞ்சு, குருகு, ஆறு, கடல், மலை, அருவி, விலங்குகள் என்று ஏதேனும் ஒரு பிம்பத்தினை படைத்துக் கொள்கின்றாள். இதன் வாயிலாக தன்மனத்திறனை தோழி மற்றும் தலைவனுக்கு உணர்த்தி தன் இலக்கினை அடைய முயல்கின்றாள் என்றே குறிப்பிடலாம். குருகு என்ற ஒன்றினை பிம்பமாகப் படைத்து தன்மனத்திறனை தோழியிடம் தலைவி புலப்படுத்துவதாக குறு.25 வது பாடல் அமைகின்றது.

யாரும் இல்லை: தானே கள்வன்
தான்அது பொய்ப்பின், யான் எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே
(குறுந்.25)

'தலைவன் தன்னை களவில் கடிய செய்தி ஆரல்மீனின் வருகையைத் தேடுகின்ற நாரை ஒன்று மட்டுமே தெரியும். அதுவும் தலைவனின் சூள் உரைகளை கேட்டிருக்காது. தான் உரைத்த சூளில் தலைவன் பொய்ப்பின் நான் என் செய்வேன்' என்று கலங்குவது போல் தோழியைத் தூண்டுகின்றாள். தலைவன் உரைத்த 'சூள் பிழையா வண்ணம்' கற்பு வாழ்க்கையை அடைய பேசாத நாரை ஒன்றினைத் தன் கற்பனைத்திறத்தால் குறிஞ்சி நிலத் தலைவி உருவாக்குகின்றாள்.

மேலும் தலைவன் செல்கின்ற பாதையில் நிகழக்கூடிய விலங்குகளின் அன்பினைக் கற்பனை செய்கின்றாள். இக்கற்பனைத் திறனால் தலைவன் விரைவில் மீண்டு வருவான் என்று மனஅமைதிக் கொள்கின்றாள். இங்ஙனம் தலைவி தன் கற்பனையாற்றலால் (Imagination Power) தன் இலக்கினை நோக்கி நகரக்கூடிய திறனைப் பெற்றுள்ளாள் என்பதனை உணர முடிகின்றது.

**ஆராய்ந்தறிதல் (Reasoning)**

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதன் கேண்மை
கடைமுறை
தான்சாந் துயரம் தரும். (திருக்.792)

என்ற வள்ளுவரின் வாக்கானது ஆய்வின் தன்மையை ஆழப்படுத்துகின்றது. எந்த ஒரு செயலினையும் நுட்பமாக அறிந்திருத்தல் வேண்டும். இத்தகைய நுண்ணிய அறிவானது நம்மிடையே ஆய்வின் தன்மையை மேம்படுத்தும். அக இலக்கியத் தலைவியின் அறிவுத் திறன்களுள் ஒன்றாக ஆராய்ந்தறிதல் கருதப்படுகின்றன. இம்மை மறுமை பற்றிய சிந்தனைகளை ஆராய்ந்த நெய்தல் நிலத் தலைவி தலைவனிடம் தனது உயரிய அன்பினை புலப்படுத்துகின்றாள்.

அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப
இம்மை மாறி மறுமை ஆயினும்,
நீ ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே. (குறு.49)

என்ற பாடலடிகள் தலைவியின் இம்மை மறுமை பற்றி அறிந்து கொண்டுள்ள அறிவுத் திறனை புலப்படுத்துகின்றது. பிறவிதோறும் கணவன் மனைவியின் அன்பானது தொடரும் என்பதில் நம்பிக்கை கொண்டவளாகத் தலைவி திகழ்கின்றாள். ஆதலால் பரத்தைப் பொருட்டு பிரிந்து சென்ற தலைவனை நோக்கி 'மறுமையாயினும் நீ என் கணவன் ஆகுக, நின் மணம் ஒத்தவளும் யானே' என்று குறிப்பிடுகின்றாள். தலைவியின் இக்கூற்றானது அவளது இம்மை மறுமை பற்றிய நம்பிக்கையோடு தலைவனைப் பிணிந்த அன்பினை வெளிப்படுத்தும் அறிவுத்திறன் என்றே கூறலாம்.

**தற்காப்பு இயங்குமுறைகள் (Defense Mechanism)**

நம்மைச் சூழ்ந்து நிகழ்கின்ற நிகழ்வுகள் அனைத்தும் நம் மனதிற்கு என்றும் நிறைவையே அளிக்கும் என்று குறிப்பிட இயலாது. இச்சூழலில் நம் மனம் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள முயல்கின்றது. இதனையே உளவியலாளர் தற்காப்பு இயங்குமுறைகள் (Defense Mechanism) என்று குறிப்பிடுகின்றனர். தலைவன் மீது கொண்ட அதீத காதல் அன்பினால் தலைவி சிந்தை தடுமாறும் அளவிற்கு துன்ப உணர்வுக்கு ஆட்படுகின்றாள். இத்துன்ப உணர்விலும் தன் காதல் மனதை அமைதிப்படுத்திக் கொள்கின்ற

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

அறிவுத்திறன் பெற்றவளாகத் தலைவி இலக்கியங்களில் சித்தரிக்கப்பட்டுள்ளாள். தன் மனதை மனச் சிக்கல்களிலிருந்து தற்காத்துக் கொள்ள தலைவி கையாளும் உத்திமுறையானது பின்வருமாறு பட்டியலிடப்படுகின்றது.

- பதிலீடு (அ) மடைமாற்றம் (Sublimation)
- அறிவார்ந்த செயல்பாடு (Rationalisation)
- புறத்தேற்றம் (Projection)

தன் மனதை சூழலுக்கு ஏற்றாற் போல தன்னைத் தானே தற்காத்துக் கொள்கின்ற அளவிற்கு கட்டளையிடுபவளாக தன் அறிவுத்திறனை அகஇலக்கியத் தலைவி கையாளுகின்றாள்.

**பதிலீடு (அ) மடைமாற்றம் (Sublimation)**

தற்காப்பு இயங்கு முறைகளுள் ஒன்றே பதிலீடு (அ) மடைமாற்றம் ஆகும். ஒன்றின் மீது நாம் கொண்டுள்ள உணர்வின் வேகத்தை சிறிது மாற்றி பிறிதொன்றில் செலுத்துவதே மடைமாற்றம் ஆகும். பதிலீடு (அ) மடைமாற்றம் பற்றி உளவியலாளர், "மனிதன் ஒருவன் தன்னிடத்திலே ஒரு குறைபாடு இருப்பதாக உணர்ந்து அதனைப் போக்கிக் கொள்ள முயல்கிறான். அது முடியாத போது அதற்கு பதிலாக வேறொரு புதிய ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள முயல்கிறான்.'' என்று குறிப்பிடுகின்றனர். பொதுவாக இலக்கியங்களில் தோழி என்ற பாத்திரமே அகமாந்தர்களின் மனநிலையை நல்நிலையில் மடைமாற்றம் செய்கின்ற பாத்திரமாகக் கருதப்படுகின்றன. இலக்கியங்களின் ஆழ்ந்த வாசிப்பு தலைவி தன்னைத் தானே ஊக்கப்படுத்திக் கொண்டு தன் மனநிலையை மடைமாற்றம் செய்து கொள்கின்ற திறனை உணர்த்துகின்றன.

தலைமகனின் தூதினை ஏற்கும் குறிஞ்சிநிலத் தலைவி தன் மனம் துன்பப் படாதவாறு மடைமாற்ற உத்திமுறையைக் கையாளுகின்ற திறத்தினை குறு.106 வது பாடல் பதிவு செய்கின்றது.

**புல்வீழ் இற்றிக் கல்இவர் வெள்வேர்**
**வரைஇழி அருவியின் தோன்றும் நாடன்**
**தீதுஇல் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்**
**வந்தன்று - வாழி, தோழி! - நாமும்**
**நெய்பெய் தீயின் எதிர்கொண்டு**
**தான் மணந்தனையம் - என விடுகம் தூதே**
**(குறுந்.106)**

'இற்றி மரம் புறத்தே இலை, கோடு என்று படர்ந்து செல்லினும் தனக்கு இடனாகிய மலையை விடாது. அதுபோல தலைவன் பரத்தமை ஒழுக்கத்தைக் கொண்டிருந்தாலும் தன் மனையை விடாது தூதினை அனுப்பியுள்ளான். ஆதலால் தலைவனின் தூதினை ஏற்று மகிழ்வோம்' என்று தலைவி தோழியிடம் குறிப்பிடுகின்றாள்.

தலைவியின் இத்தகைய கூற்று அவள் தன்னைத் தானே தற்காத்துக் கொள்கின்ற அறிவுத்திறனைப் புலப்படுத்துகின்றது. தலைவனின் பரத்தமைச் செயல்கள் தலைவிக்கு நெருஞ்சி முள்ளாக வலிதரக் கூடியதாகும். இத்துன்பத்திலிருந்து விடுபடும் வண்ணம் குறிஞ்சிநிலத் தலைவி தன் மனதினை 'தலைவனின் மனதினை ஏற்றல்' என்ற முறையின் வாயிலாக மடைமாற்றம் செய்கின்ற அறிவுத் திறனானது புலப்படுகின்றது.

**தொகுப்புரை**

- புதிய ஒன்றினை கற்றுக் கொள்ளும் திறனே அறிவாற்றல் ஆகும். குறுந்தொகைத் தலைவி தன் அறிவுத்திறனை பல்வேறு நிலைகளில் கையாளுகின்ற முறையானது ஆராயப் பட்டது.
- நுண்ணறிவுத் திறனால் தலைவி, ஊரார் தூற்றும் அலரை தனது திருமண வாழ்வின் தொடக்கமாக மாற்றும் சாதுரியம் வெளிக் கொணரப்பட்டது.
- தன்னையும் தன் மனதையும் தற்காத்துக் கொள்கின்ற அறிவுத்திறனானது தற்காப்பு இயங்கு முறைகள் வாயிலாக ஆராயப் பட்டன.
- களவு மற்றும் கற்பு வாழ்க்கையில் தலைவி தன் சொல்திறனால் தலைவனின் மனதை ஊடுருவுகின்ற பாங்கினையும் குறுந்தொகை உணர்த்துகின்றன.
- நிறைவாக தலைவி தனது சூழ்நிலையினை தன் நுண்ணறிவுத் திறனால் சமாளிப்பதை இவ்வாய்வுக் கட்டுரை உணர்த்துகின்றது.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# ஓரெழுத்தொரு மொழி பெயர்கள்

**இரா.மேகலா ராணி**
உதவிப்பேராசிரியர்
எஸ்.எஃப்.ஆர். மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முன்னுரை**

சமுதாயம் மனதுள் தோன்றும் எண்ணங்களை வெளிப்படுத்தும் ஓர் அற்புத கருவிமொழி. உயிர்க் காற்றின் ஓசை தன்னையுணர்த்தி எழுத்தாகி அவை ஒன்றுடன் ஒன்று இயைந்து நிற்கையில் சொல்லாகியது. அச்சொல் மொழியின் கட்டமைப்பினை வகுக்கிறது. எழுதப்படுதலினெழுத்தே என உரைக்கப்படும் எழுத்து தன்னை உணர்த்துவதுடன் பொருளையும் உணர்த்தும் நிலையில் சொல்லாகவும் தனியொரு மொழியாகவும் வளர்கின்றது. தமிழ்மொழியில் எழுத்துக்கள் பிற எழுத்தோடு இயைந்து நின்றுபொருள் தருவதோடு தனிமொழியாக நின்றும் பொருள் தரவல்லன. அவ்வாறான எழுத்துக்கள் ஓரெழுத்தொருமொழி எனப்படும். ஓரெழுத்தொரு மொழியில் பெயர்கள் அமைவதையும், அதன் தன்மையையும், சிறப்பையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஓரெழுத்தொருமொழி உயர்திணைப் பெயர்கள்**

*முன்னலை ஒருமைப்பெயர் சங்க அக நூல்களில் காணப்படுகின்றது.*

விழைந்ததன் தலையும் நீவெய் துற்றனை
குறுந். 165

அன்னாய் வாழி! வேண்டுஅன்னைநீமற்று
ஐங்.209

எனக்குஉரையாயாயினைநினக்குயான்
நற்.128

*எடுத்துரைக்கப்பட்ட சான்றுகள் உயர்திணையில் முன்னிலை ஒருமையில் அமைந்த பெயர்களை உரைக்கின்றன.*

**ஐ**

*உறவுமுறைப் பெயரினில் தந்தை எனும் பெயரினைக் குறிக்கும் ஒரெழுத்தொரு மொழியானது சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன.*

என்ஐவாழிய பலவே! பன்னிய நற்.136

**பெண்மை சுட்டிய சினைப் பெயர்**

*பெண்களின் சினையினைக் குறிக்கும் ஓரெழுத்தொருமொழிமொழிப் பெயர்கள் சங்க இலக்கியங்களில் நற்றினை, குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆகிய நூல்களில் காணப்படுகின்றன. கை, நா எனும் உருப்பினைக் குறிக்கும் பெயர்கள் இடம் பெறுகின்றன.*

நிரைவளைமுன்கைநேர் இழைமகளிர்
குறுந்.335

ஒண் தொடிமுன் கை யாம் அடிப்பிரிந்துதன்
ஐங்.14

அகன் தொடிசெறித்தமுன் கை ஒள்நுதல்
நற்.77

*சான்று காட்டப்பட்ட பெயர்கள் ஓரெழுத்தொரு மொழியில் அமைந்த பெண்மை சுட்டிய சினைப் பெயரினை குறிப்பிடுகின்றன.*

**ஆண்மை சுட்டிய சினைப் பெயர்**

தன் கைக் கொண்டுநல் நுதல் நீவியும்
நற்.28

அறம்பரிஅருஅறைநவின்றநாவின்
ஐங்.387

கைஇல் முன்க நீங்கிய வளையே
குறுந்.58

*எடுத்துரைக்கப் பட்ட சான்றுகள் ஓரெழுத்தொரு மொழியில் அமைந்த ஆண்மை சுட்டிய சினைப் பெயரை காட்டுகின்றன.*

**ஓரெழுத்தொருமொழி அஃறிணைப் பெயர்கள்**

*உயர்திணைப் பெயர்களைப் போன்றே தொல்காப்பியர் அஃறிணைப் பெயர்களையும் பால் அடிப்படையில் அமைத்துள்ளார்.*

**விலங்குபெயர்**

*விலங்கு, குதிரை, யானை, பசு, எருமை, செம்மறியாடு ஆகிய விலங்குகளின் பெயர்கள் பாடல்களில் காணப்படுகின்றன.*

**விலங்கு**

புள்ளும் மாவும் புலம்போடுவதிய
குறுந்.118

தடங்கோட்டுஆமான்,மடங்கல் மாநிரைக்
நற்.57

குறவர் முன்றில் மாதீண்டுதுறுகல்
ஐங்.277

**யானை**

கோட்டுமாவழங்கும் காட்டகநெறியே ஐங்.282

மடப்பிடிதழீயமாவே ஐங்.416

**குதிரை**

மாஎனமடலும் ஊர்ப, பூ என்க
குறுந்.17

நெடுமாபெண்ணைமடல் மானோயே
நற்.146

பணைநிலைமுணை இய வய மாப் புணர்ந்து
ஐங்.449

**மான்கள்**

மாமருண்டுஉகளும் மலர்கள் அணிப்புறவே
ஐங்-485

நின்னேபோலமாமருண்டுநோக்க
ஐங்.492

**பசு**

பல் ஆ நெடுநெறிக்குஅகன்றுவந்தெனப்
குறுந்.64

ஆபூண் தெண்மணி இயம்பும் நற்.264

**எருமை**

கருங்கோட்டு எருமை செங்கண் புனிற்று ஆ
ஐங்.92

**ஆடு**

மை ஊண் தெரிந்த நெல்வெண் புழுமக்கல்
நற்.83

**பூதப்பெயர்**

*ஐம்பூதங்களாக விளங்கும் நீர், நெருப்பு, காற்று, நிலம் ஆகாயம் இவற்றனை குறிப்பிடும் ஓரெழுத்தொரு மொழி சொற்கள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. நெருப்பு, மேகம் ஆகியவற்றைக் குறிக்கும் ஓரெழுத்தொரு மொழிகள் உள்ளன.*

**தீ**

தீ ஓரன்னஎன் உரன் அவித்தன்றே
குறுந்.95

தீ உறுமெழுகின் நெகிழ்வனர் விரைந்தே
ஐங்.32

தீ உமிழ் தெறலின் வெய்தாகின்றே
நற்.236

**மேகம்**

மை அணி மருங்கின் மலையகம் சேரவும்
குறுந்.319

மைபடுஅலீலடவரைபாடினள் கொடிச்சி
நற்.373

**கருவிப்பெயர்**

*ஓரெழுத்தொருமொழியில் அமையும் கருவிப்பெயர்கள் சங்க இலக்கியத்தில் காணப்டுகின்றன.*

ஏமான் பிணையின் வருந்தினெனாக

நற்.61

பூ ஒத்துஅலமரும் தகைய ஏ ஒத்து

குறுந்.72

**மாதப்பெயர்**

தைத்திங்கள் தண்ணியதரினும்

குறுந்.196

தைஊண் இருக்கையின் தோன்றும் நாடன்

நற்.22

**நிலப்பெயர்**

புல்லுடைக் காவல் தொழில்விட்டாங்கு

நற்.315

**பன்மைச் சினைப்பெயர்**

வெருகுசிரித் தன்னபசுவீமென் பிணிக்

குறுந்.220

பூக் கொய் மகளிரின் தோன்றும் நாட!

ஐங்.297

வாடாப் பூவின் பொய்கைநாப்பண் நற்.16

**ஒருமைசினைப்பெயர்**

செம்மறிஅரக்கின் வட்டுநாவடிக்கும்

நற்.341

வேங்கைவீஉகும் ஓங்குமலைக்கட்சி

நற்.13

சிறுபுறம் கடுக்கும் பெருங்கைவேழம்

நற்.228

எக்கர் ஞாழல் பூவின் அன்ன ஐங்.149

**சினையாகுபெயர்**

சினையானது அதனைக் குறிக்காமல் பிறவற்றிற்கு ஆகிவருவது சினையாகுபெயர் எனப்படும். கை என்னும் சினைப் பெயர் வள்ளல் தன்மை,யாழ் மீட்டும் தொழில், விருந்தினர் ஒழுக்கம், முதல், ஆகியவற்றினை குறிக்கும் பெயராக வந்துள்ளது.

கைவண் மத்திகழாஅர் அன்ன

ஐங்;.61

பூ இல் வறுந்தலைபோலப் புல்லென்று

குறுந்.52

கைவல் சீறியாழ் பாண! நுமரே

ஐங்.472

கைதூவு இன்மையின் எய்தாமாறே

நற்.280

பூவோடுபுரையும் கண்ணும் வேய் என

குறுந்.226

மாவரைபுதைத்தமணல் மலிமுன்றில்

குறுந்.135

**பெயரடை**

பெயருக்கு சிறப்பு சேர்க்கும் வகையில் அடையாக வருவனவற்றை அடை என்பர்.

**கரிய**

மடவவாழிமஞ்ஞைமா இனம்

குறுந்.25

மைபுணல் காளையொடுபைய இயல

ஐங்.389

மைஈர் ஓதிமதிபெரும் மடத்தகையே

நற்.29

**பெரிய**

துறுகல் அயலதுஅமாணைமாக்கொடி

குறுந்.36

மாமழை இடியூ உத் தளிசொரிந்தன்றே

ஐங்.423

மாமடல் காந்தல் அம் சாரல்

நற்.14

**தூய்மை**

கண் அகன் தூமணிபெறூஉம் நாடன்

குறுந்.379

மாநிலம் சேவடி ஆக தூநீர் நற்.1

துறைபோகுஅறுவைத் தூமடிஅன்ன

நற்.70

**முடிவுரை**

சங்க அகநூல்களில் ஓரெழுத்து ஒரு மொழி என்ற ஆய்வானது ஓரெழுத்து ஒரு மொழி சங்க இலக்கியங்களில் பெயராக அமைந்து பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுகிறது என்பதை உணர்த்துகிறது.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# எட்டுத்தொகை காட்டும் இல்லறத்தில் புதல்வர்

**சி.பா. முத்து மாரி,**
உதவிப்பேராசிரியர்
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முகப்புரை**

ஒவ்வொரு மனிதனும் வாழ்வில் பின்பற்ற வேண்டிய இல்லறப் பண்புகளை எடுத்துரைப்பதால் இலக்கியமும் வாழ்க்கையும் ஒன்றோடொன்று இணைந்து காணப் படுகின்றன. சங்க இலக்கியங்களில் அகப்பொருள் பற்றிக் கூறும் நூல்கள் அனைத்துமே இல்லறத்தை சிறப்பாக எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன. சங்க இலக்கியத்தில் இல்லறத்தின் ஒவ்வொரு நிலையிலும் புதல்வரின் இன்றியமையாத பங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இல்லறத்தில் புதல்வரின் நிலையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைக்கப்படுகின்றது.

**இல்லறம்**

இல் என்பதற்கு இல்லம், வீடு என்று கூறலாம். அறம் என்பதற்கு ஒழுக்கமுறை, நெறி என்று கூறலாம். எனவே இல்லறம் என்பதற்கு வீட்டில் அல்லது இல்லத்தில் வாழும் ஒழுக்கமுறை என்று கூறலாம். களவு வாழ்க்கை மேற்கொண்டு இருந்த தலைவனும் தலைவியும் திருமணம் செய்து கொண்டு கற்பு வாழ்க்கையில் ஈடுபட்டு பிறர் புகழும் படியான சிறந்த மக்களைப் பெற்று ஒத்த அன்புடனும் அறத்துடனும் வாழ்வது இல்லறம் ஆகும்.

> யாண்டுபல ஆக, நரைஇல ஆகுதல்
> யாங்குஆ கியர்? என வினவுதிர் ஆயின்,
> மாண்டஎன் மனைவியொடு, மக்களும் நிரம்பினர்;
> (புறம் – 191: 1–3)

என்ற பாடலடிகள் இல்லலறத்தின் சிறப்பை உணர்த்துவனவாக அமைந்துள்ளன. இல்லறம் எனும் சொல்லுக்கு இல்வாழ்க்கை, கிருகஸ்த தருமம் என்று பொருள் கூறப்படுகிறது. இல்லறத்தின் உயர்வை,

> ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
> நோற்பாரின் நோன்மை உடைத்து (குறள் – 48)

என்ற குறள் விளக்குவதாக அமைந்து உள்ளது. இல்லறம் என்பது சிறந்த மனைவியாலும் புதல்வராலும் சிறக்கும் என்ற கருத்தும் உண்டு.

**இல்லறப் பண்புகள்**

இல்லறம் நல்லறமாக அமைவதற்கு என்று பண்புகள் உள்ளன. விருந்தோம்பலும் பகுத்துண்டு வாழ்தலும், ஒற்றுமையும் மற்றும் ஊடலும் கூடலும் போன்றவை சிறப்பாக அமைதலே இல்லறம் என்பர். இம்மை மறுமை போன்று ஊடலும் கூடலும் ஒன்றுக்கொன்று இணைந்தவை எனலாம். இல்லறப் பண்புகளில் புதலவனின் தன்மை எத்தகையது என்பதை சங்க இலக்கியம் வாயிலாக அறிய முடிகின்றது "இல்லறமானது நல்லறமன்று" எனும் ஔவையின் வாக்கிற்கேற்ப இல்லறத்தை நல்லறமாக மாற்றுவது குடும்ப உறுப்பினர்களாலும், குடும்பத்தின் ஒழுக்க முறைகளாலும் அமையும்.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

**விருந்தோம்பலில் புதல்வர்**

பசி என்பது மனிதனை தளர்வடையச் செய்யும் பண்புடையது. வருத்தும் பசியோடு வருவோரை அன்போடு வரவழைத்து நாவினிக்கும் உணவு கொடுப்பது விருந்தோம்பல் எனப்படும். சங்ககால மக்கள் விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கினர். விருந்தினரும் "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே", என்பதற்கேற்ப வாழ்ந்தனர். விருந்தோம்பல் என்பது தமிழரின் உயர்ந்த பண்பாகும். தாயுடன் இணைந்து புதல்வனும் விருந்தோம்பியதனை,

...... ...... ..... ..... மனைவியும்,
வேட்டச் சிறாஅர் சேட்புலம் படராது,
படுமடைக் கொண்ட குறுந்தாள் உடும்பின்
விழுக்கு நிணம் பெய்த தயிர்க்கண் விதவை
யாணர் நல்லவை பாணரொடு, ஒராங்கு,
வருவிருந்து அயரும் விருப்பினள்;
(புறம் - 326 : 7 - 12)

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன.

**ஊடலும் கூடலும்**

அன்பில் ஒத்த தலைவனும் தலைவியும் இணைந்து வாழும் இல்லறத்தில் சிறு மாறுபாடும் ஏற்படுதல் உண்டு. அக வாழ்வில் மாறுபாடு இன்றி இருத்தல் இன்பத்தைத் தரும். அவ்விதம் ஏற்படும் சிறு மாறுபாடும் இன்பம் தரும். இதனையே ஊடல் என்பர். ஊடல், கூடல் என்ற இரு நிலையிலும் புதல்வரின் பங்கு குறிப்பிடத்தக்கது.

**பெற்றோருடன் இன்புற்றிருத்தல்**

இல் வாழ்வில்தலைவன், தலைவி, புதல்வன் என மூவரும் கூடி இன்புற்ற நிலையினை சங்க இலக்கியத்தில் ஆங்காங்கே காணமுடிகின்றது.

தோள்தாழ்பு இருளிய குவைஇருங் கூந்தல்
மடவோள் தழீஇய விறலோன் மார்பில்
புன்தலைப் புதல்வன் ஊர்புஇழிந் தாங்கு
(அகம் - 197 : 10 - 12)

என்ற பாடலடிகள் தலைவியுடன் இருந்த தலைவனின் மேல் புதல்வன் விளையாடுவதனைக் குறிக்கின்றன. இவ் அன்பு நிலையை விளக்கும் வகையில் அமைந்தது ஐங்குறுநூற்றின் 'செவிலி கூற்றுப் பத்து' ஆகும்.

**புதல்வன் விளையாட்டைக் கண்டு மகிழ்தல்**

புதல்வனின் விளையாட்டை பெற்றோர் கண்டு ரசிப்பது இனிமையானது. தலைவனும் தலைவியும் தேர் உருட்டி விளையாடும் புதல்வனைக் கண்டு மகிழ்ந்ததனை,

புணர்ந்த காதலியின் புதல்வன் தலையும்
அமர்ந்த உள்ளம் பெரிது ஆகின்றதே
அகன்பெரும் சிறப்பின் தந்தை பெயரன்
முறுவலின் இன்னகை பயிற்றுச்
சிறுதேர் உருட்டும் தளர்நடை கண்டே (ஐங் - 403)

இப்பாடலடிகள் சுட்டுகின்றன. இதுபோன்ற பாடல்களின் வாயிலாக அன்றைய பெற்றோரின் அன்பு நிலை வெளிப்படுகின்றது.

**ஊடலில் புதல்வர்**

துன்பமானது துவங்கும் இடத்திலேயே அதற்கான தீர்வும் இருக்கும். துன்பத்தை நீக்கும் மிகப்பெரும் கருவி மக்கட்செல்வம் எனலாம். சங்க இலக்கியத்தில் ஊடல் என்பது பிரிவினால் நிகழ்கின்றது. தந்தையின் பிரிவைத் தடுத்தல், தாயிற்கு ஆறுதல் அளித்தல், தாயை மகிழ வைத்தல் போன்ற பல நிலைகளிலும் புதல்வனின் பங்கு இடம்பெற்றுள்ளது.

**தந்தையின் பிரிவைத் தடுத்தல்**

குழந்தையின் மழலைக்கும் புன்னகைக்கும் இணையான இன்பம் வேறொன்றும் இல்லை. கணவனுக்கும் மனைவிக்கும் எவ்வளவு கடுமையான சச்சரவு நேர்ந்தாலும் குழந்தைகளிலிருந்தால் அச்சரவு தலைதூக்காது என்பர்.

பொருள்வயிற் பிரிவு, பரத்தைவயிற் பரிவு என்ற இருபிரிவினைத் தடுப்பவனாக புதல்வன் குறிப்பிடப்பட்டுள்ளன.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

**பொருள்வயிற் பிரிவு:**

தலைவனின் பொருள்வயிற் பிரிவைத் தடுக்க எண்ணிய தோழி, புதல்வனைக் கூறி அவன் எண்ணத்தை மாற்ற முயலுகிறாள்.

வேனில் திங்கள் வெஞ்சுரம் இறந்து,
செலவு அயர்ந்தனையால் நீயேளு நன்று
நின்நயந்து உறைவி கடுஞ் ல் சிறுவன்
முறுவல் காண்டலின், இனிதோ
இறுவரை நாட! நீ இறந்துசெய் பொருளே?
(ஐங். 309)

என்ற பாடலடிகள் தலைவன் தேடிச் செல்லும் பொருளை விட புதல்வனின் சிரிப்பு இனிமையானது என்று கூறி, தோழி தலைவனின் பிரிவைத் தடுப்பதாக அமைந்துள்ளது.

**பரத்தைவயிற் பிரிவு:**

தலைவனின் பரிவுகளில் ஒன்றாக சங்க இலக்கியங்களில் பரத்தைவயிற் பிரிவும் சுட்டப்பட்டு உள்ளது.

மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவணப்
புல்லி! பெரும, செல்இனி, அகத்து எனக்
கொடுப்போற்கு ஒல்லான் கலுழ்தலின், தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்ம் என மகனொடு
தானே புகுதந் தோனே, (அகம் - 66 : 14- 18)

என்ற பாடலடிகள் பரத்தையின் இல்லம் செல்லத் தயாரான தலைவன், புதல்வனின் அன்பால் செல்லாமல் திரும்பியதனை விளக்குவதாக அமைந்து உள்ளது.

**தந்தையைப் பிரிந்த புதல்வன்**

தலைவன் பிரிந்து சென்று விட்டதன் காரணமாக தலைவி துன்பப்படுவதைப் போன்று புதல்வனும் தன் தந்தையைத் தேடுகிறான். தந்தை இல்லாத போதும் மகன், தந்தையை அப்பா என்று அழைப்பதனைக் கண்ட தலைவி துயரமடைகின்றாள். இதனை,

ஐய, காமரு நோக்கினை அத்தத்தா என்னுநின்
தேமொழி கேட்டல் இனிதுமற் றின்னாதே
உய்வின்றி நுந்தை நலனுணச் சாஅய்ச் சாஅய்மார்
எவ்வநோய் யாங்காணுங் கால் (கலி - 80 : 14 - 17)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. புதல்வன் தன் தந்தையை அத்தா, அத்தா! என்று அழைத்துக் கொண்டே இருப்பதனை,

நோய்நாந் தணிக்கும் மருந்தெனப் பாராட்ட
ஓவா தடுத்தடுத்தத் தத்தாவென்.
(கலி-81 : 18-19)

இப்பாடலடிகள் விளக்குகின்றன. சங்க காலச் சமுதாயம் போர் மற்றும் காதலை மையமாகக் கொண்டது எனலாம். போரில் தன் தந்தையை இழந்த புதல்வனைப் பற்றியும் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. அவ்வகையில்,

வான்சோறு கொண்டு தீம்பால் வேண்டும்
முனித்தலைப் புதல்வர் தந்தை
தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே.
(புறம் - 250 : 7 - 9)

என்ற பாடலடிகள் தந்தையை இழந்த புதல்வன் பற்றி சுட்டுகின்றன. தந்தையின் இழப்பு என்பது குழந்தையின் மிகப்பெரும் துயரம் ஆகும். மேற்கண்ட பாடலடிகள் இக்கருத்தை விளக்குவனவாக அமையப் பெற்றுள்ளன.

**தாயின் துயர் நீக்குதல்:**

கணவனைப் பிரிந்த தலைவியின் மனதை ஆற்றுப்படுத்தும் கருவியாக புதல்வன் விளங்குவதனை சங்க இலக்கியப் பாடல்கள் விளக்குகின்றன.

கிளர்மணி ஆர்ப்பஆர்ப்பச் சாஅய்ச்சாஅய்ச்
செல்லும்
தளர்நடை காண்டல் இனிதுளு மற்று இன்னாதே
உளம் என்னா நுந்தைமாட்டு எவ்வம் உழப்பார்
வளைநெகிழ்பு யாம்காணுங் கால்.
(கலி- 80 : 10 - 13)

பரத்தையை நாடிச் சென்ற தலைவனை எண்ணி துயரடைந்த தலைவி தன் மகனைக் காண்பதன் வாயிலாக அத்துயரை மறத்தலை இப்பாடலடிகள் விளக்குகின்றது.

**புதல்வனைத் தன் தலைவனுடன் ஒப்பிடல்:**

குழந்தை தன் தந்தையைப் போன்றோ அல்லது தாயைப் போன்றோ செயல்களைச்

செய்யும் போது காண்போர் மகிழ்தல் உண்டு. சங்கத் தாயும் தன் புதல்வனின் செயல்களை தன் தலைவனுடன் ஒப்பிட்டுப் பார்க்கின்றாள். தந்தையைப் போல் மகனும் போரில் வீரத்துடன் செயல்பட வேண்டும் என்பதை,

செம்மால்! வனப்பெல்லாம் நுந்தையை ஒப்பினும், நுந்தை
நிலைப்பாலுள் ஒத்த குறிஎன் வாய்க் கேட்டுஒத்தி,
கன்றிய தெவ்வர்க் கடந்த களம்கொள்ளும்
வென்றி மாட்டு ஒத்தி, பெரும!

(கலி- 86 : 11 - 14)

என்ற பாடலடிகள் வாயிலாக விளங்குகின்றன. பிறருக்கு உதவி செய்யும் உன் தந்தையின் உயர் பண்பினை நீ பின்பற்று. ஆனால் தவறான பழக்கத்தை நீ செய்யாதே என்றும் தலைவி புதல்வனைத் தலைவனுடன் ஒப்பிட்டுக் கூறுகிறாள். இக்கருத்தினை,

வீதல் அறியா விழுப்பொருள் நச்சியார்க்கு
ஈதல்மாட்டு ஒத்தி பெரும! -மற்று ஒவ்வாதி,
மாதர்மென் நோக்கின் மகளிரை, நுந்தைபோல்,
நோய்கூர நோய்க்காய் விடல்

(கலி - 86 : 21 - 24)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. ஊடல் காலத்தில் ஏற்பட்ட தலைவன் தலைவி பரிவில் புதல்வனின் தன்மை குறிப்பிடத்தக்க வகையில் அமைந்ததனை மேற்கண்ட சான்றுகள் விளக்கும் வகையில் அமைந்துள்ளன.

**ஊடலில் வாயில் மறுத்தல்**

ஊடல் தீர்வதற்கான வழியாக அமைபவை வாயில்கள் எனலாம். ஊடலில் தலைவியின் கோபத்தைத் தணிக்கத் தலைவன் பலவகைகளில் முயல்வான். ஊடலில் தலைவி வாயில் நேர்தலுக்கும், வாயில் மறுத்தலும் புதல்வன் முக்கிய காரணமாகத் திகழ்கிறான்.

**புதல்வனை வைத்து வாயில் மறுத்தல்:**

புதல்வனைத் தான் ஈன்றதனால் அழகிழந்ததைக் கூறி தலைவி, தலைவனுக்கு வாயில் மறுக்கிறாள். இதனை,

பழனப் பல்மீன் அருந்த நார
கழனி மருதின் சென்னிச் சேக்கும்
மாநீர்ப் பொய்கை யாணர் ஊர!
தூயர்ஞூ நறியர் - நின் பெண்டிர்;
பேஎய் அணையம், யாம்ஞூ சேய் பயந்தனமே.

(ஐங் - 70)

என்ற பாடலின் வாயிலாக புலப்படுகின்றது. தலைவன் பரிந்து சென்ற பின் புதல்வனின் வாயிலாக துயர் நீத்த தலைவி பின்னர் புதல்வனை வைத்தே வாயில் மறுப்பது தலைவியின் ஆற்றாமையை எடுத்துரைப்பதாக உள்ளது. பரத்தையிடம் சென்று வந்த தலைவன் மேல் உள்ள கோபத்தை வெளியிடும் வகையில் தலைவி தன் புதல்வனின் செயல்களை குறை கூறுவது போல் கூறி வாயில் மறுத்தலை,

அணியோடு வந்துஈங்குளம் புதல்வனைக் கொள்ளாதி;
மணிபுரை செவ்வாய்நின் மார்பகலம் நனைப்பதால்;
தோய்ந்தாரை அறிகுவேன்; யான் எனக்கமமும்நின்
சாந்தினால் குறிகொண்டாள் சாய்குவள் அல்லளோ? (கலி-79:7-10)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. இங்ஙனம் பரத்தை கோபப்படுவாள் என்று கூறி, புதல்வனை வைத்து தலைவி வாயில் மறுத்தலும் உண்டு.

**தோழி பாணற்குவாயில் மறுத்தல்**

பரத்தையிடம் சென்று பிரிந்து வந்த தலைமகன் தலைவியின் கோபத்தைப் போக்க பாணனைத் தூது அனுப்புவது உண்டு. அது கண்ட தோழி புதல்வனைப் பற்றியும் தலைவியைப் பற்றியும் கூறி வாயில் மறுத்தலும் உண்டு. இதனை,

நெய்யும் குய்யும் ஆ, மையொடு
மாசுபட் டன்றே கலிங்கமும்; தோளும்,
திதலை மென்முலைத் தீம்பால் பிலிற்ற,
புதல்வற் புல்லிப் புனிறுநா றும்மே;

(நற் - 380 : 1- 4)

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. தோழியும் பாணனுக்கு வாயில் மறுத்தலுக்கு புதல்வனைக் காரணமாகக் கூறுவது ஊடலில் புதல்வனின் தன்மை நன்கு எடுத்துரைக்கும்.

**தலைவனின் பிரிவு துயரம்**

பொருள்வயிற் பிரிதல் மற்றும் பரத்தைவயிற் பரிதலால் சென்ற தலைவன், தலைவியால் வாயில் மறுக்கப்பட்டதால் புதல்வனை எண்ணி துயரப்படுதலும் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியப்படுகின்றன. தலைவனின் துயரினை,

நகுகம் வாராய் பாணஉளு பகுவாய்
அரிபெய் கிண்கிணி ஆர்ப்ப, தெருவில்
தேர்நடை பயிற்றும் தேமொழிப் புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு
காமர் நெஞ்சம் துரப்ப (நற் - 250 : 1 - 5)

என்ற பாடலடிகள் விளங்குகின்றன. இப்பாடல்களின் வழி தலைவனுக்குள்ள இல்லற மாண்பும், அன்பு நிலையும் வெளிப்படுகின்றன.

**புதல்வனை வைத்து ஊடல் தணித்தல்:**

தலைவி தலைவன் மீது கொண்ட ஊடலைத் தணிப்பதற்குக் குழந்தை ஒரு முக்கிய காரணமாக விளங்குகிறது. மகன் வாயிலாகத் தலைவி தன் ஊடலைத் தீர்த்துக் கொண்டாள் என்ற கூற்றும் மெய்யானது எனலாம். தலைவனுக்கு வாயில் நேர்ந்த தலைவி புதல்வனுக்காக ஊடல் தணிந்தேன் என்ற கூறுவதனை,

முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற
புதல்வன் புல்லிப் பொய்த்துயில் துஞ்சும் ஆங்க-
விருந்துஎதிர் கொள்ளவும், பெயர்ச்சுள் அஞ்சவும்,
அரும்பெற்ற புதல்வனை முயங்கக் காணவும்,
ஆங்குஅவிந்து ஒழியும் என் புலவி தாங்காது
(கலி - 75 : 24- 29)

என்ற பாடலடிகள் வாயிலாக அறியலாம். இங்கு தலைவன் மேல் ஊடல் தீர்ந்த தலைவி, அதனை மறைக்க புதல்வனைக் காரணம் கூறுவது வெளிப்படையாகின்றது. இதுபோன்று தலைவனும் தன் புதல்வனை வைத்து வாயில் நேர்ந்ததனை,

குறுங்கர் காட்டில் நறுஞ்பூஞ் சேக்கை,
பள்ளி யானையின் உயிர்த்தனன் நசைஇ,
புதல்வற் தழீஇயினன் வறவலன்;
புதல்வன் தாய்அவன் புறம்கவைஇ யினளே.
(குறுந் - 359)

என்ற பாடல் விளக்குகின்றது. இங்ஙனம் ஊடலைத் தணிக்கும் பொழுதும், ஊடலை எண்ணிவாடும்; பொழுதும் புதல்வனின் நிலை இன்றியமையாததாக உள்ளது.

**தொகுப்புரை:**

- புதல்வனும் தன் தாயுடன் இணைந்து விருந்தோம்பலில் ஈடுபட்டுள்ளான்.
- சங்கத் தமிழர் புதல்வனுடன் கூடி வாழ்வதில் இன்பம் கண்டனர்.
- தலைவனும் தலைவியும் இணைந்து இன்புற்ற காலத்தில் புதல்வனின் செயல்களைக் கண்டு மகிழ்ந்துள்ளனர்.
- ஊடலில் வாயில் மறுக்கவும் வாயில் வேண்டவும், வாயில் நேரவும் புதல்வனே காரணமாக கூறப்பட்டுள்ளான்.
- தலைவன் புதல்வனை வைத்தே வாயில் நேர்தலும் உண்டு.
- இல்லறம் முழுமையும் புதல்வனின் பங்கு சிறப்புடையதாக சங்க இலக்கியங்கள் வழி அறிய வருகின்றன.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# சங்க இலக்கியத்தில் மருத்துவம்

**வே.முத்துமாரி**
இளநிலை ஆய்வாளர் தமிழ்,
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முகப்புரை**

மருத்துவம் என்பது நோய்க்கான காரணத்தைக் கண்டறிவதற்கும் நோயைக் குணப்படுத்துவதற்கும் முறையான பயிற்சியைக் கொண்ட தொழில் துறையாகும். மருத்துவம் சங்க கால மக்களால் பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதை சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. சங்க கால மக்கள் மருத்துவத்தில் சிறந்து விளங்கியதால் மருத்துவச் செய்திகள் அதிகமாக இடம் பெற்றுள்ளன. சங்க கால மக்கள் செய்து வந்த மருத்துவ முறைகளை எடுத்தியம்பும் நோக்கில் இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

## மருத்துவம்

அணுவில் இருந்து நுண்திரள்களாய்க் கூடி, பல்கிப் பெருகி, திரண்டு உருண்டு பருப்பொருளாய்த் தோன்றிய உயிரினங்கள் காலப் போக்கில் தம் பண்பிற்கும் செயலுக்கும் ஏற்றப்படி உயிரானது ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள உயிர்கள் அனைத்தும் தோன்றி நின்று இன்று வரை வளர்ந்து வருகின்றன. இவ்வுயிர்கள் என்று தோன்றியதோ அன்று முதல் மருத்துவமும் தோன்றியது எனலாம். மனிதன் தோன்றிய உடன் மனித உயிரைக் காக்க மருத்துவம் தோன்றியது. மரணத்தை வெல்ல மனிதன் காட்டிய ஆர்வமே மருத்துவத்துறை என்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

## மருத்துவம் குறித்து அகராதிகளின் விளக்கம்

மனிதனின் அறிவில் மருத்துவ அறிவு மிகவும் முக்கியமானது ஆகும். ‘‘மருத்துவம் என்பது நோய்க்கான காரணத்தைக் கண்டறிவதற்கும், நோயைக் குணப்படுத்துவதற்கும் முறையான பயிற்சியைக் கொண்ட தொழில் துறையாகும்” என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி விளக்கம் அளிக்கின்றது.

‘‘மருத்துவம் என்பதற்குக் கழகத் தமிழகராதி ஒருவகை யாழ் வைத்தியம், மருந்து, பரிகாரம், பிரசவம் பார்க்கும் தொழில் ஆகிய பொருள்களைத் தருகின்றது”

## மருத்துவம் செய்ய வேண்டிய முறை

நோய் இன்னதென்று ஆராய்ந்து அறிந்து அதற்கான காரணத்தையும் தெரிந்து அதனைத் தீர்க்கும் வழிமுறைகளை அறிந்து முறையோடு, மருத்துவம் செய்ய வேண்டும் என்பதை

> நோய்நாடி நோய்முதல்நாடி அது தனிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல் (தி.கு- 948)

என்ற குறளின் வாயிலாகப் புலப்படுத்துகின்றார் திருவள்ளுவர்.

மருத்துவ நூலைக் கற்றவன் நோயுற்றவனுடைய வயது, நோயின் தன்மை, நோய் தோன்றிய காலத்தையும் அறிந்து

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

செயல்பட வேண்டும். அப்பொழுது தான் அவன் சிறந்த மருத்துவனாகக் கருதப்படுவான். என்பதை

> உற்றான் அளவும் பிணியளவும் காலமுங்
> கற்றான் கருதிச் செயல். (தி. கு. 949)

என்ற குறளின் வாயிலாக திருவள்ளுவர் நோயைப் பற்றி ஆய்ந்து அறிந்து மருத்துவம் செய்ய வேண்டும் என்று கூறும் தன்மையினை அறிந்து கொள்ள முடிகின்றது.

**மருத்துவத்தின் நான்கு பகுதிகள்**

> உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்று
> அப்பால்நாற் கூற்றே மருந்து (தி.கு.950)

என்ற குறளின் வாயிலாக நோயுற்றவன், மருத்துவன், மருந்து, நோயாளிக்கு மருந்தைத் தரும் மருத்துவனின் உதவியாளன் என மருத்துவ முறை நான்கு பகுதிகளைக் கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

**மருத்துவனின் நற்பண்புகள்**

சங்க இலக்கியத்தில் ஒரு நல்ல மருத்துவனின் நற்பண்புகள் குறித்து வரையறுக்கப் பட்டுள்ளது. மருத்துவச் சிகிச்சையை மேற்கொள்ளும் மருத்துவனிடம் இருக்க வேண்டிய நற்பண்புகளாக

- நோய் தடுக்கும் முறை அறிதல்
- தன்நோய் போல் பார்த்தல்
- நோயாளிக்கு மருந்தை தீர்மானித்தல்
- மருத்துவரின் மருந்து வீரியம்

ஆகியவை மருத்துவனின் நற்பண்புகளாக சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன

**நோய் தடுக்கும் முறை**

மருத்துவனின் நற்பண்புகளில் முதன்மை இடம் வகிப்பது நோயினை தடுக்கும் முறையினை அறிந்து செயல்படுதல் ஆகும். மருத்துவன் நோயினை சரியாகக் கண்டறிதல், நோயின் மூல காரணத்தைக் காணுதல், அந்நோயினைத் தீர்க்கும் சரியான சிகிச்சை முறையினைத் தீர்மானித்தல், மருத்துவ விதிமுறைக்கேற்ப சிகிச்சையை முறையாக மேற்கொள்ளுதல் ஆகியவையே சிகிச்சையின் போது மருத்துவன் கடைப்பிடிக்க வேண்டிய இன்றியமையாத கூறுகளாகும் என்பதனை

> நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல். (தி.கு.948)

என்னும் திருவள்ளுவரின் வாக்கின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**தன்நோய் போல் பார்த்தல்:**

நோயாளிக்குச் சிகிச்சையளிக்கும் மருத்துவன் தன்னையே அந்த நோயாளியாகப் பாவித்து சிகிச்சையளிக்க வேண்டும் என்பதை

> பிறர்நோயும் தந்நோய் போல் போற்ற அறணறிதல்
> சான்றவர்க் கெல்லாம் கடனாம்.(கு.தொ: 139-2-3)

என்ற பாடலடிகளின் வாயிலாக மருத்துவரின் நற்பண்புகளை கலித்தொகை பரிந்துரைப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**நோயாளிக்கு மருந்தை தீர்மானித்தல்**

நோயாளியின் உடம்பிலுள்ள நோய் எதிர்ப்புச் சக்தியின் அளவு, நோயின் கடுமையும், எதிர் பார்க்கும் நிவாரண காலம் ஆகிய காரணிகளைக் கண்டறிந்த அதன் பின்னரே மருத்துவன் தனது சிகிச்சையைத் தொடங்க வேண்டும் என்பதை

> உற்றவன் அளவும் பிணியளவும் காலமும்
> கற்றான் கருதிச் செயல் (குறள் -950)

என்ற அடிகளின் வாயிலாக மருத்துவன் நன்கு கற்றறிந்தவனாக இருத்தல் வேண்டும் என்பதனாலேயே கற்றான் என்ற சொல் மருத்துவனைக் குறிக்க பயன்பட்டுள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது. நோயாளிக்குத் தேவையான மருந்தையும் உணவையும் தீர்மானிப்பதில் மருத்துவன் மிகவும் கவனமாகவும் கண்டிப்புடனும் இருக்க வேண்டும் என்பதை

அரும்பணி உறுநர்க்கு வேட்டது கொடாது
மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்

(நற்: 136: 2-3)

என்ற பாடலடிகளின் வாயிலாக கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு, நோயாளியின் விருப்பத்திற்கு ஏற்ப மருந்தோ, உணவோ, வகுத்துரைக்காமல், நோயின் தன்மையை நன்கு ஆராய்ந்து, அந்நோயினைக் குணமாக்கக் கூடிய மருந்துகளைத் தீர்மானித்த பின்னரே நோயாளிக்கு மருந்துகளை வகுத்துரைக்க வேண்டும் இவ்வாறு நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கும் மருத்துவனை அறவோன் என்று கௌரவிக்கும் முறையினை அறிந்துகொள்ள முடிகின்றது.

**மருத்துவரின் மருந்து வீரியம்**

மருத்துவன் நல்ல நோய் எதிர்ப்புச் சக்தியுடன் கூடிய உடம்பினைக் கொண்ட ஒரு நோயாளிக்கு மருத்துவன் தரும் மருந்தானது மருத்துவன் விரும்பியவாறு நோயைக் குணமாக்குவதில் திறம்படச் செயல்படும் என்பதை

திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
மருந்துபோல் மருந்தாகி மனணுவப்ப

(கு. தொ: 17:19-20)

என்ற பாடலடிகளின் வாயிலாக மருத்துவனின் மருந்து கொடுக்கும் திறன் குறித்து அறிந்து கொள்ள முடிகின்றது.

**காயங்களுக்கு அறுவை சிகிச்சை**

போரில் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை செய்யும் முறையினை

கதுவாய் போகிய துதிவா யெஃகமொடு
பஞ்சியும் களையாய் புண்ணர்.

(புறம்: 353: 15-16)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக காயம் பட்ட போர் வீரர்கள் காயத்தின் மீது போடப்பட்ட பஞ்சுக் கட்டினைக் களைத்து எடுக்காமல் இருந்தனர் என்று தெரிகிறது. போரில் ஏற்பட்ட காயத்தில் இரத்தம் வடிந்தது சுத்தம் செய்யப்பட்டு, மருந்து தடவிப் பின் பருத்தித் துணியினால் கட்டுப்போடப்பட்டுள்ளது. பஞ்சு என்னும் சொல் காயத்திற்குக் கட்டுப் போடப் பயன்படும் துணியினைக் குறிக்கும். காயத்திற்கும் சிகிச்சையளிக்கும் முறை பற்றியும், பஞ்சு வைத்து காயத்திற்குக் கட்டுக் கட்டிய செய்தியினையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**புண்ணினைத் தைத்தல்**

போர் செய்யும் போது வீரனின் உடம்பில் உண்டான காயம் எதிரிகளின் இரும்பு ஆயுதங்களால் ஏற்பட்டது. வீரனுக்கு மார்பின் புண் ஏற்பட்டது. அந்தப் புண்ணினை மீன் கொத்தி பறவை போன்ற அலகினை ஒத்த ஊசியைக் கொண்டு வீரனின் புண்ணினைத் தைத்தனர். அவ்வாறு தைக்கும் போது அந்த ஊசி இரத்தத்தில் மூழ்கி மறைந்து எழும் இயல்பைக் கொண்டு காணப்பட்டது என்பதை

இரும்பனம் புடையல், ஈகை வான்கழல்,
மீன்தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்
சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள; ஊசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின்
அம்புசேர் உடம்பினர்ச் சேர்ந்தோர்

(பதிற்.ப - 42 : 1-5)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக சங்க கால மக்கள் புண்ணிற்கு தையலிட்டு ஆற்றிய செய்தியினை அறிந்து கொள்ள முடிகின்றது. போரில் விழுப்புண்பட்ட வீரர்களுக்கு மருந்தாக விளங்கும் மரத்தின் பாலைத் தடவியதால் காயம் முற்றிலும் குணமடைந்து, அதன் வடு மட்டும் உடம்பில் எஞ்சி நின்றது என்பதை

இரும்புசுவை கொண்ட விழுப்புண் நோய்தீர்ந்து
மருந்து கொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன்

(புறம்: 180: 4-6)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக புண்ணிற்கு ஏற்ற மருத்துவம் செய்து அதனால் உண்டான தழும்பு பற்றிய செய்தியினை அறிந்து கொள்ள முடிகின்றது.

**கட்டிக்கான அறுவை சிகிச்சை**

மனித உடலில் தோன்றும் கழலைக் கட்டியினை அறுவை சிகிச்சையின் மூலம் குணமாக்குதல் பற்றிய செய்தியினை

உடலிடைத் தோன்றிற் றொன்றை அறுத்து அதன் உதிரம் ஊற்றி
சுடலுறச் சுட்டு வேறோர் மருந்தினால் துயரம் தீர்வர்

என்ற பாடலடிகளின் வாயிலாக உடலில் தோன்றிய கழலைக் கட்டியினை அறுத்து, அதனின்றும், இரத்தத்தை வடித்து எடுத்து பின் அந்த இடத்தைச் சுட்டு, அதன்மேல் வேறு ஒரு மருந்தினைப் பூசிப் புண்ணை ஆற்றித் துயரம் தீர்ப்பர் என்கின்றனர்.

அறுவை சிகிச்சையில் சுடுதல் முறை பற்றிக் கூறினர். அத்தகைய மருத்துவன் மீது நோயாளன் மீளாத காதல் கொண்டு காணப்படும் தன்மையினை

வாளா லறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன்
(கு.தொ.: பா.க:16:19-20)

என்ற பாடலடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**வேது பிடித்தல்**

மருத்துவத்தில் வேது பிடித்தல் என்பது சில குறிப்பிட்ட நோய்களுக்கு மருந்து பொருள்களைச் சூடாக்கி அவற்றினின்று எழும் ஆவி உடம்பில் படும் படி செய்யும் முறையே வேது பிடித்தல் என்பதை

பண்புதர வந்த என்தொடர் நோய்வேது
கொள்வது போலும் கடுபகல் ஞாயிறே
(கு.தொ: 145:25-26)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக புண்களுக்கு வேது கொடுக்கும் முறை அறிந்து முடிகின்றது.

**புண் ஆற்றுவித்தல்:**

போரில் ஏற்பட்ட புண்ணினை ஆற்றுவதற்கு இரவ மரத் தழையோடு வேப்பிலையும் மனையில் செருகி, இசைக்கருவிகள் ஒலிக்க, ஐயவி தூவி, ஆம்பல் குழலினை ஊதி, காஞ்சிப் பண் பாடி புண்ணினை ஆற்றினர் என்பதை

தீம்கனி இரவமொடு வேம்புமனைச் செரீஇ
வாங்கு மருப்பு யாழொடு பல்இயம் கறங்கக்,
கைபயப் பெயர்த்து மைஇழுது இழுகி
ஐயவி சிதறி, ஆம்பல் ஊதி
இசைமணி எறிந்து, காஞ்சி பாடி
நெடுநகர் வரைப்பில் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ- காதல் அம் தோழி!-
வேந்துறு விழுமம் தாங்கிய
பூம்பொறிக் கழற்கால் நெடுந்தகை புண்ணே
(புறம்: 28: 1-9)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக புண்ணினை ஆற்றுவித்து மருத்துவம் செய்த தன்மையினை அறிந்து கொள்ள முடிகின்றது.

**உடம்பும் உணவும்:**

மனிதனின் உடம்பு இயக்கம் பெறுவது உணவினால் மட்டுமே ஆகும். அத்தகைய உணவினை உண்ணும் போது முன்பு உண்ட உணவு செறித்து விட்டாதா என்பதனை அறிந்து அதன் பின்பு உணவு உண்ணுதல் வேண்டும் அவ்வாறு உண்டால் அவன் உடலுக்கு மருந்து என்னும் ஒன்று தேவையில்லை. இதனை

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்துயது
அற்றது போற்றி உணின். (குறள்-942)

என்ற அடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது.

நன்கு செரித்த பின் மீண்டும் உண்ணும் போது, தன் உடம்பிற்கு ஏற்ற உணவினை அறிந்து, பசியெடுத்த பின்னரே அதை உண்ணவேண்டும் என்பதை

அற்றது அறிந்து கடைபிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பளிது. (குறள்-944)

என்ற அடிகளின் வாயிலாக அறிய முடிகின்றது. உடலுக்கு ஏற்ற உணவாக இருந்தாலும் அதையும் அளவோடு உண்டால் மட்டுமே உணவு உடம்பிற்கு மருந்தாக அமையும் என்பதை

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு (குறள் - 945)

என்ற பாடலடிகளின் வாயிலாக உடம்பிற்கு சிறந்த மருந்து உணவு என்பதை திருவள்ளுவர் எடுத்துரைப்பதை அறிய முடிகின்றது.

**உளவியல் நோய்**

உளவியல் சார்ந்த நோய்களில் இகல் நோய் என்பது ஏற்ப்படுகின்றது. என்பதை

இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய். (குறள்-851)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக அறியமுடிகின்றது. இகல் நோய் என்பது எல்லா உயிர்களுடன் பொருந்தி வாழ இயலாமை என்னும் தீய குணத்தை வளர்க்கும் நோய் ஆகும். இவை உளவியல் நோயாகக் கருதப்படுகின்றது.

இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தகவில்லாத்
தாவில் விளக்கம் தரும். (குறள்-853)

என்ற பாடலடிகளின் வாயிலாக பிறரொடு கூடி வாழாத மாறுபாடு என்னும் நோயை நீக்கிவிட்டால் புகழ் கிடைக்கும் என்று அறிய முடிகின்றது. தலைவன் தலைவியைப் பிரியமாட்டேன் என்று கூறிவிட்டு பின்பு அன்பு வார்த்தை கூறி பிரிந்து விட்டார். அவர் தனது அன்பின் மென்மையால் செய்த உறவோ தீயைக் காட்டிலும் துயரத்தைத் தருகிறது. தலைவன் தந்த நோய் தாங்க முடியாமல் இருப்பதால் உயிர் நீங்காது நிறுத்தும் மருத்துவர் அவர் ஒருவரே. அவர் என் உயிரை நிறுத்தும் நாள் என்று நிகழப்போகிறது என்று தலைவி தன் உளநோயின் தன்மையை குறிப்பிடுவதாக

தீயினும் கடிது, அவர் சாயலிற் கனலும் நோய்
ஆங்கு அன்னர் காதலராக, அவர் நமக்கு
இன்னுயிர் போத்தரும, மருத்துவ, ராயின்
யாங்கா வதுகொல்? தோழி எனையதூஉம்
தாங்குதல் வலித்தன்று ஆயின்
நீங்கரிது உற்றன்று, அவர் உறீஇய நோயே
(க.தொ. நெ.க- 137: 22-28)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக தலைவியின் உளநோயைப் போக்கக் கூடிய மருத்துவராகத் தலைவன் சுட்டப்படுகின்றார் என்பதை அறிய முடிகின்றது.

உளநோயினால் மிகவும் பாதிக்கப்பட்ட தலைவி தோழியிடம், தோழி என் உடம்பு மிகவும் மெலிந்து வறியதாகிவிட்டது. அவர் இனி வந்தாலும் என் நோய்க்குரிய மருந்தாக மாட்டார். அதனால் அவர் அங்கேயே தங்கியிருக்கட்டும். அன்பின் மிகுதியில் உண்டான வருத்த நோயை நம்மைச் சார்ந்தோர் அறியா வண்ணம் இருக்கட்டும் என்பதை

வறிதால், இகுளை! என் யாக்கை: இனிஅவர்
வரினும், நோய்மருந்து அல்லர்: வராது
அவணர் ஆகுக காதலர்! இவண்நம்
காமம் படர்அட வருந்திய
நோய்மலி வருத்தம் காணன்மார் எமரே
(நற்- 64-9-13)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக தலைவியின் உள்ளம் மிகவும் பாதிக்கப்பட்டு தலைவனே மருந்தாக மாட்டார் என்று கூறும் தன்மையினை அறிந்து கொள்ள முடிகின்றது.

**உள்ளமும் இளமையும்**

உள்ளம் மட்டுமே மனிதனின் அனைத்து செயல்களுக்கும் வடிகால் ஆகும். உள்ளத்தின் நோய் உடலையும் பாதிக்கும். உள்ளம் நோய்வாய்ப் படாமல் இருக்கும் போது இளமை என்றும் நிலைக்கும் என்பதை

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாண்டு ஆகியர்என வினவுதிர் ஆயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையர் என இளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர், யான் வாழும் ஊரே
(புறம் - 191 : 1-7)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது. பிசிராந்தையார் தனக்கு நரை ஏற்படாமல் இளமையாக இருப்பதற்குக்

காரணம் சிறப்பு மிகுந்த பண்புடைய மனைவி, அறிவில் மிகுந்த என் மக்கள், நான் நினைத்ததை நினைக்கும் முன்பு செய்யும் ஏவலர்கள், அரசனும் தீயதை செய்யாமல் பாதுகாப்பவன், மேலும் தென்றல் வீசும் காற்று, நற்குணம், குறிக்கோள், கொள்கைகள் உடைய சான்றோர்கள் மிக்க ஊரில் பிறந்து இருப்பதனால் உள்ளம் கவலையில்லாமல் இருக்கின்றது. அதனால் நரையில்லா வாழ்வு, இளமைமிக்க வாழ்க்கையை மேற்கொள்வதாக கூறுவதை அறிய முடிகின்றது.

**உளநோய் உடல்நோய்**

உடல் நிலையிலும் உளநிலையிலும் மாற்றம் ஏற்படுவதற்குக் காரணம் உடை, உணவு, தட்பவெட்பநிலை, இடமாற்றம் போன்றவை ஐம்புலங்களின் வழி ஏற்படுத்தும் மாற்றமே உடல்நிலையிலும் உளநிலையிலும் மாற்றங்கள் ஏற்படக் காரணமாகிறது என்பதை

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென்றை ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. (குறள் - 27)

என்ற பாடல் அடிகளின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**முடிவுரை**

சங்க இலக்கியங்களில் மக்கள் மருத்துவம் செய்து வாழ்ந்த தன்மையினையும், அவர்கள் எத்தகைய மருத்துவ முறையைக் கையாண்டு மருத்துவம் செய்தனர் என்னும் செய்திகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. சங்க கால மக்கள் மூலம் உடலைப் பாதுகாத்து, மருத்துவம் செய்து வாழ்ந்து வந்த செய்திகள் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகின்றது. உள்ளிதிற்கு ஏற்ப்படும் நோயையும் அதற்கான மருத்துவ முறையினையும் சங்க இலக்கியங்களின் வாயிலாக அறிய முடிகின்றது. சங்க கால மக்கள் மருத்துவ அறிவியல் என்னும் ஒரு அறிய கலையினைக் கைக்கொண்டு, அதன் வாயிலாக இயற்கையோடு இணைந்த நலம் மிகுந்த வாழ்வினை வாழ்ந்தனர் என்னும் கருத்தினைத் தெரிவிப்பதாக இக்கட்டுரை அமைக்கப் பட்டுள்ளது.


## NEWS AND EVENTS

- You may send information which you want to share witall.
- If your institution is going to organize or had organized a Conference, Workshop or Symposia related to Social Sciences (Commerce, Economics, Management, also)
- If you have written a book and want it to be reviewed, Please send a copy to us. It will be reviewed in SELP JOURNAL OF SOCIAL SCIENCE / RESEARCH EXPLORER.
- This journal is a platform for the Social Scientist and explore the knowledge in thne field of Social Science, through research, innovative concept frame work, new idiology and the current trends.
- Frame News of the event and send us in E-mail : tamilselp@yahoo.in

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# திருமூலர் திருமந்திரத்தில் இறைவழிபாடு

**முனைவர் மா.பத்ம பிரியா**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முகப்புரை**

கடவுளைக் காண முயல்கின்றவர்கள் பக்தர்கள் என்றால் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்று தமிழ்க்கலை களஞ்சியம் பொருள் தருகின்றது. சித்தர்கள் உடல் மற்றும் மனதை வென்று உடலை சித்த திரோகமாக மாற்றி இறைஅனுபவத்தில் இருப்பவர்கள். தம்மையே ஜோதியாக மாற்றி பரம்பொருளுடன் இரண்டறக் கலந்தவர்கள்.

சித்தர்களை ''கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள்'' ''அட்டமா சக்தி பெற்றவர்கள்'' "இரசவாதம் பெற்றவர்கள்" ''பேரின்பம் பெற்றவர்கள்'' என்றும் சிறப்பிக்கின்றனர். சித்தர் என்பதற்கு நிறைமொழி மாந்தர் என்பது பொருளாகும்.

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப
(தொல்காப்பியம்,நூற்பா.1434)

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்
(திருக்குறள்.28)

''நிறைமொழி மாந்தர்'' என்பதனை தொல்காப்பியரும் வள்ளுவரும் முன்மொழிந்துள்ளனர்.

சித்தர்கள் யாவும் அறிந்தவர்கள் என்பதால் அவர்களை "அறிவன்" என்றும் தொல்காப்பியர் அழைத்துள்ளார்.

மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன்
(தொல்காப்பியம்,நூற்பா.1021)

திருமூலர் மூவகைக் காலம் அறிந்த அறிவனாகி சிவநிலை எய்திய சித்தர் ஆவார். திருமூலர் பதினெண் சித்தர்களில் ஒருவராகப் போற்றப்படுபவர். ''மூலன் உரை செய்த மூவாயிரத் தமிழ்'' என்ற திருமந்திரத்தின் பாயிரம் மூலம் அவர் பாடியது 3000பாடல்கள் என்பது வெளிப்படை. திருமந்திரம் ஒன்பது தந்திரம், 232 அதிகாரம் பெற்று சிவவழிபாட்டினையும் சிவதரிசனத்தையும் முன்வைக்கின்றது. பத்தாம் திருமுறையாக வைத்துப் போற்றப்படும் பேறுபெற்ற திருமந்திரம் இறை வழிபாட்டினை தன்னுள்ளிருந்து அதாவது மானுட சரீரத்தின் தூய்மையை முன்னிறுத்திக் காணுகின்றது. பின்வரும் பக்குவநிலையை மானுட சரீரம் பெற்றால் பரம்பொருள் வேறில்லை நாம் வேறில்லை என்ற பக்குவம் வெளிப்படுகின்றது. மனதும் உடலும் இறைவயப்படும் நிலைக்கு சிற்சிலப் பயிற்சிகள் திருமந்திரத்தில் குறிப்பிடப்படுகின்றது.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

**யோக சமாதி**

திருமூலர் தனது திருமந்திரத்தில் சித்தர் யார்? என்பதற்கான விளக்கத்தை தருகின்றார். யோக சமாதியில் மேம்பட்டவரே சித்தர் என்ற தெளிவும் புலப்படுகின்றது.

"யோக சமாதியின் உள்ளே அகலிடம்
யோக சமாதியின் உள்ளே உளஒளி
யோக சமாதியின் உள்ளே உளசக்தி
யோக சமாதி உகந்தவர் சித்தரே"

தெய்வசக்தியிடம் கலந்துறையும் நிலைக்களன் உடல். எனவே உணர்ச்சியற்ற யோகசமாதியில் அகலிடம் கண்டு, நம் உளஒளியை இனங்கண்டு, நம்உளசக்தியை அறிந்து, நம்மை யோகசமாதிக்கு உட்படுத்தும் வல்லவரே சித்தராவார். உடல் சடப்பொருள் அன்று அறிவுப்பொருள். அதனால் உயிர் பேரறிவுடைய இறைவனை அடையும் நிலையை எய்துதலே சித்தர் நிலையாகும் என்கிறார் திருமூலர்.

யோகசமாதியில் இறையோடு ஒன்றுவதற்கு உடல் தேவைப்படுவதால் உடம்பினை விரும்பியதாகவும் திருமூலர் பாடியுள்ளார்.

"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானென்று
உடம்பினை யான் இருந்து ஓம்புகின்றேனே."

இழுக்கென்று நினைத்த உடம்பு 'இறைவன் உள்ளுறையும் இடம்' என்று அறிந்த பின்நிலையில் உடம்பினை ஓம்புவதாகப் புகல்கின்றார். இவ்வாறு யோகசமாதி வழிபாட்டை பதிவுசெய்துள்ளார்.

**ஆன்ம பூஜையும் சிவ தரிசனமும்**

சிவனை பூசை செய்யும் முறைகளில் ஆன்மபூஜை சிவதரிசனத்துக்கு ஏற்ற பக்குவநிலையாகும். நாயன்மார்களில் குறிப்பிடத்தகுந்த பூசலார் மனக்கோயில் கட்டி இறைவனை அடைந்த பேருண்மை பெரியபுராணத்தில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. எனவே தான் பரம்பொருள் ஆன்மாவில் உறைந்திருப்பதாக சித்தர்கள் கண்டு தெளிந்துள்ளனர். எங்கும் நீக்கமற நிறைந்த பரம்பொருள் பேரண்டத்தில் சிற்றண்டமாகிய பிண்ட சரீரத்துக்குள் கலந்து நிற்கும் பேருண்மையை அறிந்தே தான் சித்தர்கள் 'சீவன் சிவலிங்கம்' என்கின்றனர்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளா மணிவிளக்கே.

(திருமந்திரம். 1823)

திருமூலர் உள்ளம், உடம்பு, வாய், சீவன், புலன்கள் ஐந்து என்று இறைவன் உறையும் நிலைகளன்களை எடுத்தியம்பியுள்ளார். மேலும், ஆன்ம பூஜையில் சிந்தையின் உள்ளுறையும் பேரொளியைத் தெளிதலும் காட்டப்பட்டுள்ளது.

" சிந்தையது என்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையின் உள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையின் உள்ளே சிவனிருந்தானே."

(திருமந்திரம். 2853)

சிந்தையும் சிவனும் கலந்த நிலையில் நிகழ்த்தும் இறைவழிபாடு சுட்டப்பட்டுள்ளது. இத்தகைய வழிபாட்டால் தான் சிவனடி சேரலாம் என்பது உலகத்தார் அறிய வேண்டிய பேருண்மையாகும்.

"சீவன் எனச்சிவன் என்னவே றில்லை
சீவ னார்சிவ னாரை அறிகிலர்
சீவ னார்சிவ னாரை அறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட்டு இருப்பரே."

(திருமந்திரம். 2017)

சீவன் சிவன் என்ற இருமையும் ஒருமையானால் சீவனே சிவன் ஆகும். சீவனே சிவன் என்னும் தத்துவார்த்தப் புலப்பாடே திருமூலரின் பக்தி வெளிப்பாடாகும். ஆன்ம பூஜையால் மானுட ஆக்கை சிவலிங்கமாகும்

என்ற மெய்மையும் கவனத்தில் கொள்ள வேண்டியது.

மானுடர் ஆக்கை வடிவு சிவலிங்கம்
மானுடர் ஆக்கை வடிவு சிதம்பரம்
மானுடர் ஆக்கை வடிவு சதாசிவம்
மானுடர் ஆக்கை வடிவு திருக்கூத்தே.
(திருமந்திரம். 1726)

சித்தர்களின் கோயில் இந்த உடம்பாகிய ஆன்ம ஆலயம். இதில் பல வழிபாடு செய்து, உடம்பாகிய சாதனத்தை ஒளிமயமாக்கி விடுகிறார்கள். இதனால் உடம்பு அவர்களுக்கு ஒரு வல்லமை வாய்ந்த கருவியாகும். இக்கருவி பக்குவம் எய்தினால் சிவலிங்கமாகும்.

**அட்டாங்க யோகம்**

யோகம் என்பதற்கு இணைதல், ஒன்றுதல் என்று பொருள். புறத்தே அலைபாயும் மனதை அகத்தே அடக்கி இறையொளியோடு ஒன்றும் நிலை யோகநெறியென்னும் யோக வழிபாடாகும். இதனை,

" இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயா மம் பிரத்தி யாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே"
(திருமந்திரம்.552)

என்பர். இவ்யோகத்தினை எட்டாகப் பகுப்பர். அவை:

**1. இயமம்**

உலக வாழ்வில் மனிதன் விலக்க வேண்டிய தீய செயல்களை விட்டொழிக்கும் வழிபாடு.

"கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத் திடையில்நின் றானே"
(திருமந்திரம்.554)

கொல்லாமை, பொய்யாமை, களவின்மை, எண்குணம் பெற்றல், அடக்கமுடைமை, நடுநிலை, பகுத்துண்ணல், மனத்தூய்மை, கள்ளுண்ணாமை, காமம் இல்லாமை என்று வாழ்ந்தால் இறைவனை அடையலாம். இக்குணங்களே பரம்பொருளை அடைதலுக்கான வழிபாடு.

**2. நியமம்**

நன்னெறியில் நின்று ஒழுகுதல் நியமம் ஆகும். செய்யத்தக்கவற்றை செய்தலே இவ்வழிபாடு.

"தூய்மை அருளூண் சுருக்கம் பொறைசெவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த னாமே"
(திருமந்திரம்.556)

உடலும் உள்ளமும் தூய்மையுடன் இருத்தல், அருளுணர்வு, மிதஉணவு, பொறுமை, நேர்மை, வாய்மை மற்றும் செய்யக்கூடாது என்று சமூகம் வகுத்தவற்றைச் செய்யாதிருத்தல் நியமம் ஆகும்.

**3. ஆசனம்**

ஆசனம் என்பது இருக்கை ஆகும். யோகவழிபாட்டிற்கு மனஅமைதி தேவை. உடல் அசையாத மனஅமைதி பெற உதவும் சாதனம் இருக்கை அல்லது ஆசனம் ஆகும்.

"பங்கய மாதி பரந்தபல் ஆதனம்
அங்குள வாம்இரு நாலும் அவற்றினுள்
சொங்கில்லை யாகச் சுவத்திக மெனமிகத்
தங்க இருப்பத் தலைவனு மாமே."
(திருமந்திரம்.558)

சித்தர்கள் ஆசனப்பயிற்சியின் மூலம் இறைவனை கண்டடைந்துள்ளனர். திருமூலர் பங்கயம் முதலான ஆசனங்களை இறை வழிபாட்டுக்கு உகந்த்தாக கூறியுள்ளார்.

**4. பிராணாயாமம்**

ஆசனப்பயிற்சியால் வலுப்பெறுவது பிராணன். இப்பிராணாயாமம் மூலம் இறைவனை தன் நெற்றிப் பகுதியில் இரு புருவங்களுக்கிடையில் நிறுத்திக் காணலாம். பிராணாயாமம் என்பது மூச்சுப்பயிற்சி ஆகும். இப்பயிற்சியால் மனக்கட்டுபாடு உண்டாகும்.

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே.

(திருமந்திரம். 571)

*காற்றைப் பிடிக்கும் கணக்கறிந்தால் இறைநிலை எய்தலாம்.*

**5. பிரத்தியாகாரம்**

*பிரத்தியாகாரம் என்பது மனதை ஐம்புலன்களின் செல்லவிடாது ஒருமுகப் படுத்தும் வழிபாடு.*

நாபிக்குக் கீழே பன்னிரெண் டங்குலந்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை அறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடியிருந் தானே.

(திருமந்திரம். 579)

*ஐம்புலன்களின் வழி நுகர்வது அனைத்தும் பொய்யாகும். எனவே மனம் சலனமற்று இருக்கும் ஏகாந்த நிலையே பிரத்தியாகாரம் ஆகும். நாபிக்கு கீழ் பன்னிரண்டு அங்குல அளவுள்ள மூலாதாரத்தில் மனதை நிறுத்திப் பழகினால் ஈசன் குடியிருப்பான் என்று திருமூலர் கூறியுள்ளார்.*

**6. தாரணை**

*பிரபஞ்சம் யாவும் புலனாகாதவாறு, இந்திரியங்கள் வழிப் போகும் புலனை நிறுத்தி ஒருகுறியில் அடக்கும் வழிபாட்டு நிலையாகும்.*

"கோணா மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணாத்தண் டூடே வெளவீயுறத் தானோக்கிக்
காணாக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணாள் அடைக்கும் வழியது வாமே."

(திருமந்திரம். 588)

*மனதை அலையவிடாமல் ஒருகுறியில் நிறுத்தி முதுகுத்தண்டு வழியாக மனதைச் செலுத்தி தன் உடல் உட்பட பிரபஞ்சம் யாவும் வெளியாகப் பாவித்து கண்விழித்துப் பார்க்காமல், காதிருந்தும் கேளாமல் இருக்கும் நிலைப்பாடு தாரணை வழிபாடாகும்.*

**7. தியானம்**

*தியானம் உள்ளொளியை நினைக்கும் நிலை.*

"நாட்டமும் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை
ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமும் இல்லை சிவனவ நாமே."

(திருமந்திரம். 604)

*ஐம்புலவுணர்வையும் புத்தியையும் நீக்கி நிற்கும் நிலை தியானம். இந்நிலை சிவனை அறியும் நிலையாகும்.*

**8. சமாதி**

*தியாத்தின் அடுத்த நிலை சமாதி. இந்நிலை பரம்பொருளோடு கலத்தல். சமாதி நிலையை தியானம் மூலமே பெற முடியும். 144 நொடிகள் கொண்டது ஒரு தியானம். 12 தியானம் கொண்டது ஒரு சமாதி என்று கூர்ம புராணம் குறிப்பிடுகின்றது.*

"சமாதிசெய் வார்க்குத் தகும்பல யோகஞ்
சமாதிகள் வேண்டாம் இறையுட னேகிற்
சமாதிதா னில்லை தானவ னாகிற்
சமாதியில் எட்டெட்டுச் சித்தியும் எய்துமே."

(திருமந்திரம். 631)

*சாமாதி நிலையில் தான் அனைத்துச் சித்தியும் கைவரப்பெறும் என்று திருமூலர் கூறியுள்ளார்.*

**பூசை முறைகள்**

*பரம்பொருளை வழிபடும் நான்கு வகையான பூசை முறைகளைத் திருமூலர் குறிப்பிட்டுள்ளார்.*

"உயிர்க்குயி ராய்நிற்றல் ஒண்ஞான பூசை
உயிர்க்கொளி நோக்கல் மகாயோக பூசை
உயிர்ப்பெறு மாவா கனம்புறப் பூசை
செயிற்கடை நேசஞ் சிவபூசை யாமே."

(திருமந்திரம். 1444)

1. *ஞானபூசை*
2. *யோக பூசை*
3. *வெளிப்பூசை*
4. *சிவபூசை*

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

- இறைவன் அனைத்து உயிர்களிடமும் உறைந்திருப்பதை அறிந்து வழிபடுதல் ஞானபூசையாகும்.
- உயிருக்குள் உள்ளொளியைக் கண்டுணர்தல் யோக பூசையாகும்.
- இறைவன் உருவத்தை வெளியில் நிறுத்தி வழிபாடு நிகழ்த்துதல் வெளிப்பூசையாகும்.
- இறை உருவத்திற்கு செய்யும் இந்த வெளிப்பூசையில் ஞானத்தின் வழியே இறைவனின் அன்பைப்பெற செய்யப்படும் பூசை சிவபூசையாகும்.

**அன்பு வழிபாடு - அன்பே சிவம்**

அறினால் காணமுடியாத இறைவனை அன்பினால் காணமுடியும் என்பது திருமூலர் கருத்தாகும். அன்பினுள் அகப்படும் பரம் பொருளின் கருணையானது எடுத்தோதப்பட்டுள்ளது.

> "அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
> அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
> அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
> அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே."
> (திருமந்திரம். 270)

எல்லாவுயிர்களிடமும் செலுத்தும் அன்பே சிவம் என்ற பக்குவநிலை உணர்த்தப்பட்டுள்ளது.

> பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
> மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
> துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
> பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே.
> (திருமந்திரம். 271)

திருமூலர் பரம்பொருளுடன் அன்பினால் பின்னிக்கிடந்த பேரின்பம் குறிப்பிடப் பட்டுள்ளது.

> "என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
> பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்
> அன்போடு உருகி அகங்குழை வார்க்கன்றி
> என்போல் மணியினை எய்தஒண் ணாதே."
> (திருமந்திரம். 271)

வழிபாட்டில் அன்பு மிகத்தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**தொகுப்புரை**

- திருமூலர் சிவனை வழிபடும் முறைகளை திருமந்திரத்தில் பாடியுள்ளார். இறையருளைத் தான் கண்டதும் பேரின்ப பேற்றினை எய்தியதும் குறித்துச் செய்முறைப் பயிற்சிகளுடன் விவரித்துள்ளார்.
- **அன்புள் உருகி அழுவன் அரற்றுவன்**
  **என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்**

என்று அன்போடு உருகி இரவு பகலாக சிவமந்திரத்தை போற்றிய பாங்கும் குறிப்பிடப்பட்டுள்ளது.

- **என்அன் புருக்கி இறைவனை ஏத்துமின்**
  **முன்அன் புருக்கி முதல்வனை நாடுமின்.**

அன்போடு இறைவனை நாடுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி அட்டாங்க யோகநெறியின் வழி இறையருளை நாடுதலும் விளக்கப்பட்டுள்ளது. பன்முக நிலைப்பாட்டில் சிவனே திருமூலர் சுட்டும் தெய்வம் என்பதனை பின்வரும் பாடல் பதிவுசெய்துள்ளது.

> "சிவனொடுஒக் கும்தெய்வம் தேடினும் இல்லை
> அவனொடுஒப் பார் இங்கு யாவரும் இல்லை
> புவனம் கடந்தன்று பொன்னொளி மின்னும்
> தவனச் சடைமுடித் தாமரை யானே."

சிவனே தான் கண்ட தெய்வம் என்று திருமூலர் திருமந்திரத்தில் கட்டியம் கூறுகின்றார்.

- உடல் எனும் கருவியைக் கட்டுக்குள் கொண்டுவருவது மூலம் இறையருளை திருமூலர் கண்டுணர்ந்துள்ளார். வழிபாட்டுப் பொருளாக மனிதஉடல் மாறும் பக்குவநிலை திருமந்திரத்தில் நன்கு வெளிப்படுகின்றது.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# குறுந்தொகையில் தலைவியின் சமுதாய இருப்புநிலை

**செ.அம்பிகாபதி**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-636 011

**முகப்புரை**

குறுந்தொகை நானூறு பாடல்களாகத் தொகுக்கப்பட்ட அகத்திணைப்பாடல்களிலே மிகச்சிறுபாடல்களின் தொகுதியாகும். இது அகவற்பாக்களைக்கொண்டு விளங்குகின்றது. உவமையற்ற நேரடிப்பாடல்களையும் கொண்டது. 27அரசியல் குறிப்புகளை உள்ளடக்கியது. 205புலவர்களின் பாடல்கள் இதில் அடக்கம். 'சங்கப்புலவர்களின் ஆளுமையைப்பார்க்க வேண்டுமெனில் குறுந்தொகைப் பாடல்கள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். பாடல்கள் நீண்டு செல்லாமலிருக்க புலவர்கள் மரபுகளின் விதிகளில் அதிககவனம் செலுத்துகிறார்கள்' என்று அம்மன்கிளி முருகதாஸ் அவர்கள் கூறுவார்கள். தொகுத்தவர்கள் அடிஅளவு குறைவானப் பாடல்களை மட்டும் தொகுத்து குறுந்தொகையில் வைத்திருக்கலாம். இதனைப்பற்றிய ஆய்வு பிறிதொரு பார்வையில் அவசியமாகிறது. இனி, சங்க இலக்கியங்கள் மக்களால் மக்களைப்பற்றி எழுதப்பட்டது. பாகுபாடற்ற குடிமக்களைப் பற்றியது. சங்ககால மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி போன்ற வாதங்கள் தமிழ்க்குடியினை உயர்த்திப்பிடிக்கப் பாடுபட்டு வருகின்றன. இதில் சங்கஇலக்கியம் அகம் புறமென்று இரண்டாகப்பிரித்துப் பாடப்பட்டதில் மாற்றுக்கருத்திருக்க வாய்ப்பில்லை. சங்கப்பாடல்களில் அகப்பாடல்களே அதிகம் என்பதிலும் இரு கருத்திருக்கமுடியாது. எனில், சங்கஅகப்பாடல்கள் பெண்களை மையப்படுத்தியன, பெண்களைப்பற்றிய பதிவுகளே அதிகமென்று சில அறிஞர்கள் முன்வைக்கும் கருத்தே இங்கு ஆராயப்படவேண்டியுள்ளது. அகப்பாடல்களில் பெரும்பான்மையில் இடம்பெறும் ஒரே ஆண்பாத்திரம் தலைவன் மட்டுமே. சிலஇடங்களில் பாங்கனும் பங்குபெறுவான். பாத்திரப்படைப்பின் பின்னணியில் நோக்கினால் தலைவி, தோழி, செவிலி, நற்றாய் என்று பெண்பாத்திரங்கள் சங்கஅகப்பாடல்களை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனவாக பாடப்பட்டுள்ளன. இவ்வாறாக முற்றுமுழுதாகப் பெண்களை மையப்படுத்திய சங்கஇலக்கிய அகநூலான குறுந்தொகை காட்டும் தலைவியின் சமுதாய இருப்புநிலையை ஆராயும் முகமாக இக்கட்டுரை அமைகின்றது.

**பெண்டிரின் தொழில்நிலை**

சங்ககாலத்தில் பகைவரும் விரும்பும் ஆண்மகவைப்பெற்ற தாயும் (அகம்-66) கணவனுடன் இறக்கும் மனைவியுமே சுவர்க்கப்பேற்றை அடையமுடியும் (கலி-143) என்ற நிலையில் பெண்டிர் ஆணைச்சார்ந்த நிலையிலும் தற்சார்பற்ற நிலையிலும் நிறுத்தப்பட்டுள்ளதாக பெ.மாதையன் கூறுவார். சங்கஇலக்கியப் பாடல்களை நுணுக்கமாகப் பார்க்கும்போது இவ்வுண்மை புலப்படும். சங்கஇலக்கியங்களில் பெண்களுக்கென்று தொழில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. தலைவியும் தோழியும் தினைப்புனம் காத்தலையே தொழிலாகச் செய்துள்ளனர். இதையும் தொழிலென்று கருதுவதற்கு இடமில்லை. பொழுதுபோக்கிற்காகச்

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

செய்துள்ளனர் என்பதே ஏற்புடையதாக இருக்கும். ஏனெனில் தலைவி தினைப்புனம் காத்துக்கொண்டிருக்கையில் விளையாடிக் கொண்டிருந்ததற்கான குறிப்பும் சங்கப் பாடல்களில் வெகுவாகக் காணக் கிடக்கின்றன. குறுந்தொகைத்தலைவி (பருவமெய்திய) தினைப்புனத்தைக் காத்துக்கொண்டும் தினையைத்தின்னவரும் பறவைகளைக்(கிளி) விரட்டிக்கொண்டும் இருந்துள்ளாள் என்பதை,

"பரீஇ வித்திய ஏனல்
குரீஇ ஒப்புவான் பெருமழைக் கண்ணே"
(குறுந்-72)

"புனக்கிளி கடியும் பூங்கட்பேதை"
(குறுந்-142)

"சுடுபுன மருங்கில் கலித்த ஏனல்
படுகிளி கடியும் கொடிச்சினைக் குளிரே"
(குறுந்-291)

போன்ற வரிகள் புலப்படுத்தும். தலைவனைச் சந்தித்த நொடியிலிருந்து தலைவனைப்பற்றி எண்ணுவதும், காதலால் உடல்மெலிவதும், பிரிவால் ஆற்றாமல் வருந்துவதும், தலைவன் செல்லும் வழியில் உள்ள இடர்களை நினைத்து வேதனையுறுவதும், வரைவிற்காகக் காத்திருப்பதும், ஊரார் அலருக்காக நாணுவது -மென்றே தலைவியின் காலம் ஓடுகின்றது. இவற்றைத் தொடர்ந்து செய்வதற்கே ஒருநாள் போதாதென்கிற போது தலைவிக்குத் தொழிலென்று ஏதும் தேவையில்லையென்றே தோன்றுகிறது. தலைவனை சந்திப்பதற்கு முன் தலைவி என்னசெய்து கொண்டிருந்திருப்பாள் என்பதற்கான குறிப்பும் அகப்பாடல்களில் இல்லை. இதுவும் ஆராய்ச்சியுடன் நோக்கத்தக்கது.

**காதல் செய்வதே கடமை**

தினைப்புனத்தைக் காப்பதைவிடவும் முக்கியமான பணியாகத் தலைவிக்கு அகப்பாடல்களில் ஒதுக்கப்பட்டது காதல் செய்வதேயாகும். தலைவன் ஓதல், பகை, தூது இவற்றின் காரணமாகப் பிரிந்துசெல்வான். நானிலத் தலைவனாக இருப்பின் அவன் பொருளீட்டலைத் தொழிலாகக் கொண்டிருப்பான். ஆனால் தலைவி தலைவனைப் பற்றிய சிந்தனையிலேயே எப்போதும் இருப்பாள். உலகிலுள்ள எல்லாவற்றையும் விட சிறந்தது என்னுடைய காதல் என்று ஒரு குறுந்தொகைத்தலைவி பிதற்றுகிறாள். அதாவது நிலத்தைவிடப் பெரியது, ஆகாயத்தைவிட உயர்ந்தது, கடலைவிட ஆழமானது என்கிறாள்.(குறுந்-3)

"இம்மை மாறி மறுமை யாயினும்
நீஆ கியர்என் கணவனை
யான்ஆ கியர்நின் நெஞ்சுநேர் பவளே."
(குறுந்-49)

இப்பிறப்பு மட்டுமின்றி மறுபிறப்பு வருமாயினும் தலைவனே என்னுடைய கணவனாக வரவேண்டுமென்று இப்பாடலில் தலைவி வேண்டுகிறாள். தலைவனுடன் கூடியிருந்தபோது துயில்கலையுமாறு கூவிய சேவலை காட்டுப்பூனைக்கு இரையாகுமாறு சாபம்விட்டதையும் (குறுந்-107), பிரிவே இல்லாத திருமணவாழ்வே வேண்டுமென்று வேண்டுமிடத்தும் (குறுந்-257), காமநோயினை கட்டுப்படுத்த முடியாமல் மெலிகின்றேனென்று கூறுமிடத்தும் (குறுந்-371) தலைவியின் அதீத காதலைக் (காமத்தை) காணமுடிகின்றது. இதனால் தலைவி காதல்செய்தமையும் காமத்தை விடாது பற்றியமையும் விளங்கும். ஆக, குறுந்தொகைத்தலைவி காதல் செய்வதற்காக அதுவும் அளவுகடந்த காதல் செய்வதற்காகவே படைக்கப்பட்டுள்ளாள். காதல்செய்வது மட்டுமே கடமையாகத் தலைவிக்குப் புகட்டப்பட்டுள்ளது.

தலைவிக்கு புகட்டப்பட்ட இக்காதல் தலைவனிடத்து வெறுக்கத்தக்கதாகச் சித்தரிக்கப்படுகின்றது. தலைவியைக் கண்டு அவன்மீது காதல்கொண்ட தலைவனைப் பாங்கன் உன் தகுதிக்கும், பெருமைக்கும் இழுக்கு என்று சொல்லும் சங்கப்பாடல்களும் உள. (நற்-201, குறுந்-78). பாங்கன் தலைவனிடம்

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

'காமமானது விரும்பத்தகாதவரிடத்தும் சென்று ஒட்டிக்கொள்ளும். அது முற்றிலும் வெறுக்கத்தக்கது. அது உன்னைப்பற்றிக் கொண்டது. நீ விழிப்பாய் இரு' என்று கூறுகிறான் (குறுந்-78). மேலும்,

**"இன்னா அரும்படர் செய்யுமாயின்**
**உடன்உறைவு அரிதே காமம்**
**குறுகல் ஓம்புமின் அறிவுடையீரே"**

**(குறுந்-206)**

இதில் தலைவனே, 'காமமானது சேர்ந்து வாழஇயலாமல் துன்பம் தருவது. ஆகவே என்னைப்போல் நீங்களும் துன்புறாது காமத்தை அணுகுவதைத்தவிருங்கள்' என்று கூறுகிறான். தலைவி காமத்தினால் வருந்தலாம். ஆனால் தலைவன் காமத்தினால் புலம்புவது வெறுத்து ஒதுக்கத்தக்கது. அது அவனின் ஆண்மைக்கு இழுக்கு.

ஒட்டுமொத்த துயரையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவமான பெண்ணாகத்தான் தலைவியை குறுந்தொகை படைத்திருக்கிறது. தலைவன் மடலேறுவேன் என்று சூளுரைத்த மறுகணமே அதைத்தடுக்க முற்படும் சங்கச்சமுதாயம் காதலுற்ற தலைவியை ஊரார் அலர்பேசுவதை எளிமையாக ஏற்றுக் கொள்கிறது. மடலேறுவதால் தலைவிக்கே பழிநேரும் என்ற பொய்யான கட்டுமானத்தை ஏற்றுக்கொண்டாலும், அலர் தூற்றும்போது தலைவிக்கு பழிநேராதா என்பதையும் சிந்தித்துப்பார்க்க வேண்டும். தலைவன்மீது கொண்ட காதலால் தலைவியே தன்னைப்பற்றிய பழிச்சொல்லை பின்வருமாறு ஏற்றுக்கொள்கிறாள்.

**""ஒலிவெள் அருவி ஓங்குமலை நாடன்**
**..................................................**
**நடுநாள் வருதலும் வரூஉம்**
**வடுநா ணலமே தோழி நாமே"** **(குறுந்-88)**

'உரலில் நெல்லையிட்டு குற்றும்போது வள்ளைப்பாட்டைப்பாடி தலைவனின் பெயரை சுட்டிக்காட்டுகின்றனர் அவ்வூர் பெண்கள். அதற்காக வருத்தமுற்று என்ன பயனும் இல்லை. அலரினை ஏற்றுக் கொண்டுதான் வாழவேண்டும்' என்கிறாள் தோழி. (குறுந்-89)

**இரங்கேன் தோழி ஈங்குஎன்கொல் என்று**
**பிறர்பிறர் அறியக்கூறல்**
**அமைந்தாங்கு அமைக ஆம்பல்அஃது எவனே?**

**(குறுந்-175)**

இப்பாடலில் தலைவி ஊர்ப்பெண்டிர் ஒருவருக்கொருவர் பழித்துப் பேசுதல் அவர்களின் எண்ணப்படி அமையட்டும். அவர்களின் அம்பல் என்னை எதுவும் செய்யாது. அதற்காக நான் அஞ்சவும் மாட்டேன் என்கிறாள். ஏளனமாகப் பேசுவதையும் ஏற்றுக்கொண்டு வாழவேண்டுமென்ற கட்டாயத்தை சங்கச்சமூகம் அவள்மீது திணிக்கிறது.

**பரத்தமையை நியாயப்படுத்துதல்**

''சங்ககாலத்தில் எந்தத் தலைவியும் பரத்தையிடம் சென்றுமீண்ட தலைவனை நிரந்தரமாக நிராகரித்ததற்கான பதிவுகள் எங்குமே இல்லை. முதலில் ஊடல்கொள்வாள். பின்னர் தலைவனின்றி வாழ்க்கை -யில்லையென்று ஏற்றுக் கொள்வாள். குறுந்தொகைத் தலைவி ஒருபடி மேலே சென்று பரத்தையிடம் சென்ற தலைவனின் ஒழுக்கத்தை மறைப்பதே கற்புக்கடமையாகப் பார்க்கிறாள்.

**"கயமூழ்கு மகளிர் கண்ணின் மானும்**
**தண்ணம் துறைவன் கொடுமை**
**நம்முன் நாணிக் கரப்பா டும்மே"** **(குறுந்-9)**

தோழி கூற்றில் அமைந்த இப்பாடல் ''தலைவனின் பரத்தமை செல்லும் கொடிய பழக்கத்தினை அறிந்தாலும் அதை வெளிப்படையாகச் சொல்லமாட்டாள் தலைவி. இத்தகைய பொறுமையால் கற்புக்கடம் பூண்ட தலைவி தாய்போல மதிக்கத்தக்க பெருமையுடையவள்'' என்ற பொருளில் பாடப்பட்டுள்ளது. மருத நிலக்குடியில் பிறந்த அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டியது பரத்தமை ஒழுக்கம்

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

என்கிறது மற்றொருபாடல்(குறுந்-45). தன் கணவனைக் கொண்டுசெல்லும் உரிமையையும் பரத்தை கொண்டுள்ளாள் எனத்தலைவி இரங்குதல் (293). பரத்தையின்பால் பிரியும் கொடுமையைப் புரிந்தாலும் அவனின்றி (தலைவன்) வாழ்தல் இயலாது என்பதால் வேறுவழியின்றி தலைவனை ஏற்றுக்கொள்ளுதல் (309) போன்ற குறுந்தொகை செய்திகள் பரத்தமையை நியாயப்படுத்துகின்றன.

"புதல்வற் தழீஇயினன் விறலவன்
புதல்வன் தாய்அவன் புறம்கவைஇ யினளே"

(குறுந்-359)

என்று பரத்தையிடமிருந்து மீண்டுவந்த தலைவனை ஏற்றுக்கொண்ட தலைவியையுமே குறுந்தொகைக் காட்டுகின்றது.

**தலைவியின் இயல்பு**

குறுந்தொகையில் தலைவியின் இயல்பைக் கூறவேண்டுமாயின் மிகுந்த அழகுடைய ஒருபதுமையைப் போன்றவள். அழகு என்பதைத்தவிர வேறு எந்தத்தகுதியும் தலைவியிடம் இல்லை. இந்த அழகிற்காக மட்டுமே தலைவனும் தலைவியை நாடிச் செல்கின்றான், காதலிக்கிறான். இதற்குச் சான்றான பாடல்கள் குறுந்தொகை முழுவதும் விரவிக்கிடக்கின்றன.

"கோடல் எதிர்முகைப் பசுவீ முல்லை
நாறுஇதழ்க் குவளையொடு இடையிடுபு விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோள் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே."

(குறுந்-62)

இப்பாடலில் தலைவியின் மேனி நறுமணம் உடையது. தளிரைக்காட்டிலும் மென்மையானது. தழுவுதற்கு இனிமையானது என்று தலைவன் கூறுகிறான். இதேபோன்று தலைவியின் அழகினை மட்டுமே புகழும் பாடல்களாக குறுந் 70, 77, 72, 95, 100, 101, 116, 119, 132, 272, 280, 337 ஆகியன உள்ளன. பெரும்பாலும் தலைவியின் அழகைமட்டுமே உயர்த்திப்பாடும் பாடல்கள் தலைவனின் கூற்றாகவே அமைகின்றன. ஆக தலைவனின் பார்வையில் தலைவி அழகாக மட்டுமே தெரிகின்றாள். இதைப்புலவனின் பார்வை என்றும் கூறலாம்.

சங்ககாலப் பெண்கள் அழகானவளாகவும், அச்சம், மடம், நாணம் போன்ற பெண்மையைப் பெருமைப்படுத்தும் குணங்கள் கொண்ட-வளாகவும் இருந்தால் மட்டுமே போதுமானதாகும். தொழில் சார்ந்தோ, அறிவு சார்ந்தோ, உலகியல் ஞானம் சார்ந்தோ இருக்கவேண்டிய அவசியமில்லை. வெளிப்படையாகக் கூறினால் வேல்போன்ற விழியும், திரண்டதோளும், பரந்தமார்பும், அகன்ற அல்குலும் இருத்தல் மட்டுமே தலைவிக்கான இலக்கணம். தலைவனின் பார்வையும் சரி, புலவனின் பார்வையும் சரி இதைத்தாண்டி பயணிக்கவேயில்லை.

குறுந்தொகைத்தலைவி அதிகமாகப் பேசக்கூடாது. சில சொற்களை மட்டுமே பேசவேண்டும். அச்செற்களும் இனிமை-யானவையாக இருக்க வேண்டும். கடுஞ்சொற்கள் கூடாது.

"வாந்து இலங்கு வைஎயிற்றுச் சின்மொழி அரிவையை"

(குறுந்-14)

"சிலமெல் லியவே கிளவி"
"அணைமெல் லியள்யான் முயங்குங் காலே"

(குறுந்-70)

என தலைவன் கூற்றில் அமைந்தப்பாடல்கள் தலைவியின் பேச்சிற்கு வரையறை வைக்கின்றன. எல்லையும் இவைதான். குறைவான சொற்களைப் பேசும் இத்தலைவியினைத் திருமணம் செய்துகொண்டால் ஊரார் தலைவனை நல்ல பெண்ணின் கணவன் என்று கூறுவார்களாம். இப்பெயரைப் பெறு-வதற்காகவே தலைவன் தலைவியைக் காதலிக்கிறான்.

**பெண்ணறிவு பேதமைத்து**

குறுந்தொகைத்தலைவி பேரறிவாளியாகக் காட்டப்படவில்லையென்றாலும் முட்டாளாகக் காட்டப்படுகிறாள். காதல் கண்ணை மறைக்கும் என்பதனால் உண்மையும் கூடபொய்யாகத் தெரிகிறது.

**உரவோர் உரவோ ராக**
**மடவம் ஆக மடந்தை நாமே. (குறுந்-20)**

இப்பாடலில் தன்னைத்தானே தலைவி அறிவற்றவள் என்று கூறிக்கொள்கிறாள். உண்மையான கார்ப்பருவம் வந்துவிட்டது. ஆனால் அதற்கான தோற்றங்களைப் பார்த்து இதுபொய்யானது, தலைவன் வருவதே உண்மையான கார்ப்பருவம் என்று பொய்மையாக நம்புகிறாள். இதேபோன்று தலைவன்மீது கொண்ட காதல் மிகுதியால் 94,318 போன்ற பாடல்களில் மடமை -யானவளாகத் தலைவி சித்தரிக்கப்படுகின்றாள். தலைவியின் மனம் முழுவதும் தலைவன் மட்டுமே நிரம்பியுள்ளான். அவனைத்தவிர பிற எந்த எண்ணமும் அவள்மனதில் தோன்றுவதே இல்லை. இதன் வெளிப்பாடே,

**"சுட்டுபு நக்கியாங்கு காதலர்**
**நல்கார் நயவா ராயினும்**
**பல்காற் காண்டலும் உள்ளிதுக்கு இனிதே."**
**(குறுந் - 60)**

என்ற பாடலாகும். தலைவன் தன்னை விரும்பவில்லையென்றாலும் அவரைப் பலமுறை கண்ணால் கண்டால் அதுவே இன்பம் தருவதாகும் என்கிறாள் தலைவி. இவ்வாறாகத் தலைவி தலைவன்மீது கொண்ட காதலால் அறிவிழந்தவளாகப் படைக்கப்பட்டுள்ளாள்.

**இரங்கலே விதிக்கப்பட்டது**

குறுந்தொகை நானூறு பாடல்களில் தலைவிக்கென்று விதிக்கப்பட்ட நியதியை ஆராய்ந்தால் துன்பமும், ஆற்றாமையும், ஆற்றியிருத்தலும், இரங்கலும், வரைவு வேண்டலும் என்று வருத்தமே மிஞ்சும். தலைவி தலைவனின் பிரிவை ஆற்றியிருத்தல் வேண்டும். அதுவே அவளின் தலையாய கடமை (குறுந்-12,64). தலைவன் ஏமாற்றினால் என்னசெய்வதென்று அறியாமல் கையற்ற நிலையிலிருப்பது (குறுந்-82,110.163,318). ஏமாற்றிப்போனத் தலைவனை எப்படி மணப்பது (குறுந்-31). குறித்த காலத்தில் வராமல் தலைவன் ஏமாற்றியது (குறுந்-26,48, 243, 285, 307, 314). தலைவனைப் பிரிந்தமையால் உயிர்வாழ முடியாது என எண்ணி வருந்தியது (குறுந்-55,103,108,133,299,319). இவையன்றி பிற காரணங்களால் இரங்கும் நிலையில் இருத்தல் (குறுந். 97,105,155,187, 269,325, 330, 380). இவ்வாறாக தலைவி வருத்தத்துடன் இருத்தல் என்பது ஒரு பெரிய பட்டியலாகிறது.

குறுந்தொகையில் ஒன்று பெரும்பாலும் புலம்பிக்கொண்டே தலைவியின் வாழ்க்கை ஓடுகின்றது. இல்லையெனில் அதீத காதலால் வருந்துவதாகவே அமைகின்றது. இதனாலேயே பிரபஞ்சன், தலைவியின் உடல் காதல் மிகுதியால் இளைக்கவில்லை. கைவளை கழல்தல், இடையில் ஆடை கழல்தல், பசலை படர்தல் போன்ற சங்கடங்கள், இயற்கைப் புணர்ச்சியில் புணர்ந்து சென்ற தலைவன் மீண்டும் வந்து தன்னைத்திருமணம் செய்து கொள்வானோ இல்லை ஏமாற்றிவிடுவானோ என்ற அச்சத்திலேயே தலைவி உடல் மெலிவுற்றாள் என்கிறார். குறுந்தொகையின்வழி இதுவும் உண்மையென்றே தோன்றுகிறது.

ஆக குறுந்தொகை முழுவதும் தலைவி தற்சார்பு நிலை அற்றவளாகவும், மடமை -யானவளாகவும், ஆணைச்சார்ந்த வாழ்க்கை வாழ்பவளாகவுமே படைக்கப்பட்டுள்ளாள். மேலும் எப்போதும் வருத்தமுடைய முகத்துடனேயே காணப்படுகின்றாள். பொதுவாக குறுந்தொகைத் தலைவி பாவப்பட வேண்டிய ஒரு பாத்திரமாகவே இருக்கிறாள்.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# சங்க இலக்கியங்கள் காட்டும் பண்டமாற்றுப் பொருளாதாரம்

**முனைவர் கி. பார்த்திபராஜா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
தூயநெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்.

### முகப்புரை

'ஒரு சமூகத்தின் உற்பத்தி உறவுகளைப் புரிந்து கொள்ளுதல் என்பது அந்த சமூகத்தைப் பற்றிய முழுமையான புரிதலையும் சார்ந்திருக்கிறது. ஆதலின் உற்பத்தி முறைகளுக்கான செயல்பாடுகள் என்பவை அச்சமூகத்தின் அரசியல், சமய, உறவுமுறைச் (Kinshi) செயல்பாடுகளிலிருந்து முற்றிலும் தனித்தொதுங்கிய செயல்பாடுகள் எனக் கருத முடியாது.' (பக்தவச்சலபாரதி: மானிடவியல் கோட்பாடுகள் : 2005: 304)

கி.மு. 250 முதல் கி.பி.250 ஆண்டு -களுக்கிடையிலான ஐந்து நூற்றாண்டுக் காலப்பகுதியில் பாட்டும் தொகையும் ஆகிய சங்க இலக்கியங்கள் தோன்றின என்பர். இவ்விலக்கியத் தொகுதிகள் தமிழ்ச் சமூகத்தின் இனக்குழு வாழ்வின் கடைசிக் கண்ணியைச் ளிதரிக்கின்றன. நிலத்தலைவர்கள், மன்னர்கள் ஆகியோர் வேந்தர்களாக உருவாகிய 'அரசு உருவாக்க' க் காலம் என்பதைக் காட்டுகின்றன. இக்காலகட்டத்தில் பொருளியல் உறவுகள் என்பவை எவ்வாறு தோற்றம் பெற்றன என்பதையும் வணிகப் பொருளாதாரத்தின் தோற்றுவாய் எவ்வாறு அமைந்தது என்பதையும் அறிவது மிக முக்கியமான அறிவுச் செயற்பாடு ஆகும்.

### தற்சார்பு உற்பத்தி

சங்ககால இலக்கியத் தொகுதிகள் சுட்டும் பழந்தமிழரின் உற்பத்தி முறைமை, 'தற்சார்பு உற்பத்தி' ஆகும். அதாவது, பழந்தமிழரின் உணவு உள்ளிட்ட நுகர்வுத் தேவைகள் மிகவும் எளியதும் அவர்களுக்கருகாமையிலேயே கிடைப்பதும் ஆகும். 'மனிதர்களின் உணவிற்கான ஆதாரத்தை ஈட்டிய முறையியல் அடிப்படையில் 'உணவு சேகரித்தல்', 'உணவு உற்பத்தி' ஆகிய இரண்டு முக்கியக் கட்டங்கள் ஏற்பட்டன' என்பர் மானிடவியலாளர்கள்.

(பக்தவச்சலபாரதி: 2005: 302).

உணவு சேகரித்தல் என்பதை 1.வேட்டையாடுதல், 2. காய், கனி, பட்டை, கொட்டை, கிழங்கு, தேன் போன்ற இன்னும் பிற காட்டுப் பொருட்களைச் சேகரித்தல் 3. மீன் பிடித்தல் என்ற அடிப்படையிலும், உணவு உற்பத்தி என்பதை 1.ஆயர் வாழ்வு 2.காட்டெரிப்பு வேளாண்மை 3.தோட்டப்பயிர் வேளாண்மை 4. நீர்ப்பாசன வேளாண்மை என்ற அடிப்படையிலும் வகைப்படுத்துவர். (மேலது : 302-303)

மேற்குறித்த அடிப்படைகள் அனைத்துமே சங்ககாலச் சமுதாய வாழ்வில் வெளிப்படுகின்றன. எளிய உற்பத்தி முறையும் தேவைக்கேற்ற உற்பத்தியாகவே இருந்தது. எனவே உபரி என்பது அப்போது அறியப்படாத

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

ஒன்றாகவே இருந்தது. சங்கத் தமிழர் தங்களின் வாழிடங்களின் தன்மைகளையொட்டியே உற்பத்தித் தொழில்களையும் அமைத்துக் கொண்டனர். வேட்டையாடுதல், ஆடுமாடுகள் மேய்த்தல், தானிய உற்பத்தி, மீன் பிடித்தல் ஆகிய தொழில்கள் நிலம் சார்ந்தவை ஆகின்றன. தமிழர்கள் கணத்தொகுதியாக, நெருக்கமான இனக்குழுவாக வாழும்வரையில் அவர்களுக்கு வணிகத்தின் தேவை இல்லாமலே இருந்தது. உற்பத்தி உறவுகளே உற்பத்திக் கருவிகளையும் உருவாக்கிக் கொண்டன. உற்பத்தித் தொழில் சார்ந்த வளர்ச்சி மற்றும் பெருக்கம் நுட்பமான வேலைப் பிரிவினைகளை உருவாக்கின. இதை கணத்தொகுதி வாழ்க்கையிலிருந்து வளர்ச்சி அடைந்த நிலை எனலாம்.

விவசாயம் என்ற உணவு உற்பத்தி முறை வளர்ச்சியடைந்த பிறகு இனக்குழுக்களின் தற்சார்பு உற்பத்தி மாற்றம் பெறுகிறது. வாழ்வியல் தேவைகளுக்கான எல்லாப் பொருட்களையும் தம்மினக்குழுவே உற்பத்தி செய்யும் முறைமையிலிருந்து மாறி, வரையறுக்கப்பட்ட உற்பத்தி முறைக்கு மாறும் நிலை ஏற்படுகிறது. எனவே தனக்குத் தேவைப்படும் உற்பத்திப் பொருட்களுக்காகப் பிறரைச் சார்ந்து வாழும்நிலை உருவாகிறது.

**பண்டமாற்று உருவாக்கம்:**

உற்பத்திப் பொருட்களின் பெருக்கமும் பிற பொருட்தேவையும் பண்டமாற்று முறைக்கு அடிப்படையாகின்றன. ‘மக்கள் வாழ்க்கைக்குத் தேவையாகத் தம்பால் உள்ள பொருட்களைக் கொடுத்து, இல்லாத பொருளைப் பெறுதல் ‘பண்டமாற்று’ என வழங்கப்படும்’ (க.வெள்ளைவாரணன் : சங்க கால தமிழ் மக்கள்: 1950:129) என்பர்.

பண்டமாற்று என்பதிலிருந்து பண்டத்திற்குப் பணம் என்பது உருவாகி வளர்ந்தது. ஆனால் சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை பண்டமாற்று முறைமையைச் சார்ந்திருந்தமையை எடுத்துக்காட்டுவர். பெரிய பட்டினங்களிலும் நகரங்களிலும் காசு கொடுத்தும் பொருட்களை வாங்கும் முறை இருந்தபோதிலும் ஊர்களிலும் கிராமங்களிலும் பொதுவாகப் பண்டமாற்று முறையே வழக்கத்தில் இருந்தது என்பார் மயிலை சீனிவேங்கடசாமி (பழங்காலத் தமிழர் வாணிகம்:1995: 13).

**நிலம்சார் உற்பத்திமுறைமையும் பண்டமாற்றும்:**

மலையும் மலைசார்ந்த இடமுமான குறிஞ்சி நில மக்களின் உற்பத்திப் பொருட்கள் மலையை விட்டிறங்கிச் சமவெளிப் பகுதிக்கு விற்பனைக்கு வந்தன. தேன், தினை, வரகு போன்றவை சமவெளி வெண்ணெல்லுக்குப் பண்ட -மாற்றாகின. காடும் காடு சார்ந்த இடமுமான நெய்தல் நில உற்பத்திப் பொருட்களான உப்பு, மீன், சிப்பிகள் பண்டமாற்றுப் பொருட்களாக மாற்றப்பட்டுள்ளன. நெல்லுற்பத்தி முதலான உணவுப்பொருள் உற்பத்தியின் மையமான மருதம் பண்டமாற்றுக்கான அடிப்படைக் களமாக இருந்திருக்கிறது எனலாம் மருதநிலத்தில் பண்டமாற்று மிகுதியும் நடைபெற்றிருப்பது பற்றிய பதிவுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. குறிஞ்சி - முல்லை - நெய்தல் - ஆகிய நிலங்களுக் -கிடையே பண்டமாற்று கணிசமான அளவில் நடைபெற்றிருப்பதைப் பற்றிய பதிவுகளும் சங்க இலக்கியங்களில் உள்ளன.

**முல்லை நிலப் பண்டமாற்று:**

முல்லை நிலத்தைச் சேர்ந்த ஆயர்கள் பாலினைக் கொடுத்து, அதற்கு ஈடாகத் தானியத்தை மாற்றிக் கொண்டனர் என்று குறுந்தொகையில் ஒரு பதிவு உள்ளது. ‘பாலோடு வந்து கூழோடு பெயரும் யாடுடை இடையன்’ (குறுந் :2213-4) என்று முதுகூத்தன் என்ற புலவர் குறிப்பிடுகிறார் கூழ் என்பது அரிசி, கேழ்வரகு, வரகு, தினை முதலான தானியங்கள் ஆகும். பால் பயன் எனப்படும் தயிர், மோர் ஆகியவற்றை

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

ஆய்மகளிர் பண்டமாற்றுச் செய்த செய்தியினைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் தான் பாடிய பெரும்பாணாற்றுப்படையில் எடுத்துரைக்கிறார். ஆய்மகளிர் தயிர், மோர் ஆகியவற்றை நாள்தோறும் கொண்டுசென்று விற்றுத் தானியம் பெற்றனர். அவ்வாறு பெற்ற தானியத்தைக் கொண்டே உணவு சமைத்து உண்டனர்.

நள்ளிருள் விடியல் புள்ளெழுப் போகிப்
புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வான் முகையன்ன கூம்புமுகிழ்
உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி புஞ்சமட்டு இரீஇ
நாள்மோர் மாறும் நன்மாமேனிச்
சிறுகுழை துயல்வரும் காதிற் பணைத்தோள்
குறுநெறிக்கொண்ட கூந்தல் ஆய்மகள்
அளவிலை உணவில் கிளையுடன் அருந்தி
(பெரும்பாண்155-163)

என்கிறார் அவர். அதாவது தயிரைக் கடைந்து எடுக்கும் நுரை எனப்படும் வெண்ணெயை உடனடியாக விற்காமல் தயிர் மற்றும் மோரினை விற்றுத் தானியம் பெறுகிறாள் ஆய்மகள். ஆனால் வெண்ணெயை உருக்கிச் செய்யப்படும் நெய்யைப் பண்டமாற்றுச் செய்யாமல் அதற்கு அட்டியாகப் பசும்பொன் பெறாமல் பசுவையும் எருமையையும் பெற்றனர் (பெரும்பாண்: 164-166) என்கிறார்.

மேற்குறித்த பண்டமாற்று என்பது தனித்த வாணிகச் செயல்பாடாக அமையாமல் எளிய மாற்றாக அமைவது கருதத்தக்கது.

காட்டிடை வேட்டையாடும் வேடுவர்கள் தங்களின் நில உற்பத்திப் பொருட்களான தேனையும் கிழங்கையும் கொண்டுவந்து மதுக்கடைகளில் பண்டமாற்றுச் செய்வதைப் பொருநராற்றுப்படை குறிப்பிடுகிறது. தேன் மற்றும் கிழங்குக்குப் பண்டமாற்றாக வறுத்த மீன் இறைச்சியையும் மதுவையும் பெற்ற செய்தி அதில் குறிப்பிடப்படுகிறது.

தேனெய்யொடு கிழங்கு மாறியோர்
மீனெய்யொடு நறவுடி மறுகவும்
(பொருந :214-215)

என்பன அவ்வரிகள்.

**மதுவுக்கான பண்டமாற்றுகள் :**

வேடர்கள் காட்டில் வேட்டையாடிக் கொண்டு வந்த யானையின் தந்தங்களை மதுக்கடையில் கொண்டுபோய்க் கொடுத்து நெல்லரிசியினால் உண்டாக்கப்பட்ட நறவு-மது - அருந்தினர் என்று குறிப்பிடுகிறது அகநானூறு.

வரிமாண் நோன்ஞாண் வன்சிலக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயரும்
(அகம் :618: 11)

எனக் குறிப்பிடுவது காணலாம்.

எயினர்கள் மது அருந்தும் இடத்தில் கொடுப்பதற்குப் பொருளெதுவும் இல்லாத நிலையில் வேட்டையாடிக் கொண்டுவரும் யானைத் தந்தங்களைத் தருகிறோம் என்று சொல்லி கள் கேட்கும் நிகழ்வை அகம்:245 படம்பிடித்துக் காட்டுகிறது.

**மீன் - தானியங்கள் பண்டமாற்று:**

பாணர்கள் இசைக்கலைஞர்கள் ஆவர். இசைத்தொழிலில் ஈடுபடுவதோடு இவர்கள் உள்நாட்டு நீர்நிலைகளில் வலைவீசியும் தூண்டில் இட்டும் மீன் பிடித்தார்கள் என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பாணர்கள் பிடித்த மீன்களைப் பாண்மகளிர் பண்டமாற்றுச் செய்துள்ளனர்.

முள் எயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அரிகால் பெரும்பயிறு நிறைக்கும் (ஐங்குறு :47)

வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும்
(ஐங்குறு : 49)

அஞ்சில் ஓதி அசைநடைப் பாண்மகள்
சின்மீன் சொரிந்து பன்னெற் பெரூஉம்
(ஐங்குறு:49)

என்பன பாண்மகள் கெளுத்திமீனும் வரால் மீனும் கொடுத்துப் பயிறும் தானியங்களும் பெற்ற செய்தியை எடுத்தியம்புகின்றன.

**நெய்தல் நிலப்பண்டமாற்று :**

கடற்கரை உப்பளங்களில் விளைந்த உப்பினை நெய்தல் நிலத்து முதுமகள் மாற்றி நெல் கொண்டு வந்த செய்தி குறுந்தொகையில் குறிப்பிடப்படுகின்றது.

ஆயும் உப்பை வெண்ணெய் தரீஇய
உப்பு விளை கழனிச் சென்றனள்
(குறுந் :269)

கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரிவிலை மாறு கூறலின் (அகம் :140)

நெல்லும் உப்பும் நேரே ஊரீர்
கோள்ளீரோவெனச் சேரிதோறும் நுவலும்
(அகம்:390)

பட்டினப்பாலையில் உமணர் தமக்குக் கிடைத்த நெல்லைச் சிறு படகுகளில் ஏற்றிக் கொண்டு போன செய்தியும், பாரியின் பறம்புமலைப் பெண்கள் உப்பு வண்டியினை எண்ணிக் கொண்டிருந்தனர் என்ற செய்தியும் கருதத்தக்கது. எனவே, உப்புமிக முக்கியமான பண்டமாற்றுப் பொருளாக இருந்தமை புலப்படுகிறது.

மீன்களும் பண்டமாற்றப்பட்டிருக்கின்றன என்ற செய்தியை 'இனிது பெறு பெருமீன் எளிதினிற் மாறி' (நற்றிணை : 239) 'பசுமீன் நொடுத்த வெண்ணெல் மாஅத் தயிர்மிதி மிதவையார்த்துவம்' (அகம் : 340) 'உப்பு நொடை நெல்லின் மூரல் வெண்சோறு' (அகம் : 60) போன்ற அடிகள் உணர்த்துகின்றன.

பரதவர்கள் கொற்கைக் கடலில் கிடைத்த சிப்பிகளைக் கொண்டுவந்து கொடுத்து கள் பெற்றசெய்தி அகம்: 296இல் குறிப்பிடப்படுகிறது. கொல்லிமலைச் சிறுகுடி மக்கள் யானைத் தந்தங்களைக் கொடுத்துத் தானியங்களைபெற்ற செய்தி குறுந்தொகையில் (100) குறிப்பிடப்படுகிறது.

**மருதநிலத்துப் பண்டமாற்று**

மதுக்கடைக்கு வரும் மருதநில உற்பத்தியாளர்களாகிய உழவர்கள் கரும்பையும் அவலையும் கொண்டுவந்து பண்டமாற்றுச் செய்யும் செய்தி பொருநராற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, கரும்பு அவல் கொண்டு வந்து கொடுத்து, வறுத்த மான் இறைச்சியையும் பெற்ற செய்தியை

தீங்கரும்பொடு அவல் வகுத்தோர்
மான்குறையோடு மது மறுக்கவும்
(பொருந:215-215)

என்று குறிப்பிடுகிறது.

உழவர் மகளிர் தெருக்களில் பூ விற்ற செய்தியை

துகிலிகை யன்ன துய்த்தலைப் பாதிரி
வாலிதழ் அலரி வண்டுபட ஏந்திப்
புதுமலர் தெருவுதொறும் நுவலும்
நொதுமலாட்டி (நற்றிணை :18)

என்று பாலை பாடிய பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார். எனவே பிற நிலத்து உற்பத்திப் பொருட்கள் மருதநிலத்தில் கொண்டு வந்து நெல்லுக்கு மாற்றாக விற்கப்பட்டிருக்கின்றன என்பதோடு மருதநிலத்திலிருந்தும் பிற நிலத்திற்கு விற்பனைப் பொருட்கள் கொண்டு சென்று பண்டமாற்றப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகின்றது.

**அங்காடி முறை :**

பண்டமாற்று என்பது சிறு தேவைக்கான வணிகம் ஆகும். தேவையான பொருட்களை ஒருவரிடமிருந்தோ அல்லது ஓரிடத்திலிருந்தோ பெற முடியாமை சிறுவணிகத்தின் போதாமை ஆகும். எனவே, அங்காடி வணிகமுறை தோற்றம் பெற்றிருக்க வேண்டும். நாளங்காடி,

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

அல்லங்காடி முறைமை ஆகியன இக்காலக்கட்டத்தையொட்டியே தோற்றம் பெற்றன.

உணவு, பூக்கள், மாலைகள், சுண்ணம், நவமணிகள், பொன், சந்தனம், கருப்பூரம் ஆகியன நாளங்காடியில் விற்கப்பட்ட செய்திகளை மதுரைக்காஞ்சி (395) குறிப்பிடுகிறது.

**பண்டமாற்று வணிகத்தின் அடிப்படை**

தற்சார்பு உற்பத்தி முறைமையிலிருந்து வளர்ச்சி பெற்று பெருவிகித உற்பத்தியை நோக்கி நகர்ந்த சங்கச் சமூகம், பண்டமாற்றினை அடிப்படை வணிகமாகக் கொண்டிருந்தது. அதுவே, பிற்காலத்தில் ஏற்றுமதி இறக்குமதி வணிகம் அளவிற்கு வளர்ச்சி பெற்றது. சங்ககாலப் பொருளாதாரத்தின் அடிப்படை, பண்டமாற்றாக அமைந்தது என்பதையும் சிறிதளவில் காசுகள் புழக்கத்தில் இருந்தமையையும் அறிய முடிகிறது. தமிழ்ச் சமூகத்தின் வணிக வளர்ச்சி வரலாற்றை அறியச் சங்க இலக்கியங்கள் துணைசெய்கின்றன. பண்டமாற்று அளவீடுகள் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பெருமளவில் காணப்படாவிடினும் நால்வகை நிலங்களின் உற்பத்திப் பொருட்களும் சமூகத்தேவை கருதிப் பண்டமாற்று வணிகத்திற்கு உட்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதை அறிய முடிகிறது.

**கருவி நூல்கள்**

பக்தவச்சலபாரதி, 'மானிடவியல் கோட்பாடுகள்' வல்லினம், புதுச்சேரி : 2005.

வெள்ளைவாரணன்.க, 'சங்காலத் தமிழ் மக்கள்', நேஷனல் பப்ளிசிங் கம்பெனி சென்னை: 1950.

வேங்கடசாமி.மயிலை.சீனி, 'பழங்காலத் தமிழர் வாணிகம்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை: 1995

ஜெய்கணேஷ் பா. மகாலட்சுமி.மா, மகேஸ்வரி.சு (தொகு), 'குறிஞ்சி சங்க இலக்கியம்: வரலாறு மானிடவியல் தொல்லியல்', பரிசல் வெளியீடு, சென்னை: 2007.

**GRANT IN AID**

We Invite research porposal from academicians to conduct research studies in the area of Social Science

Interest person may submit proposal to us.

For other details refer our website:

www.selptrust.org

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# நாவுக்கரசர் தேவாரத்தில் எட்டு

**முனைவர் பா.பொன்னி**
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முகப்புரை**

இந்து சமயத்தில் எட்டு என்ற எண் குறிறிப்பிடத் தக்க இடம் வகிக்கிறது. அஷ்ட லட்சுமிகள் அஷ்ட திக்கு பாலகர்கள் அஷ்ட திக்குகள் அஷ்ட மா சித்திகள் அஷ்ட வீணைகள் அஷ்டரத்தின லிங்கம் அஷ்ட சக்திகள் அஷ்ட வித்யேசுவரர்கள் அஷ்ட மாதர்கள் அஷ்ட ருத்திராந்கள் அஷ்ட பைரவர்கள் அஷ்ட மங்கலம் என்று எட்டு எண்ணிக்கையில் அமைந்துள்ளன.இவை மட்டுமல்லாமல் சிவபெருமான் எண்குணத்தான் என்று போற்றப்படுகிறார். எண்தோள் உடையவராகவும் எட்டு ஆயுதங்கள் உடையவராகவும் எட்டு விதமான கோவில்களில் அருள் புரிபவராகவும் அமைந்துள்ளார். அட்ட மூர்த்தங்களாக எழுந்தருளியுள்ளார். அட்ட வீரட்ட செயல்களை மேற் கொண்டுள்ளார். அடியவர்கள் எட்டு வகையான மலர்களைக் கொண்டு சிவபெருமானை வழிபடுகின்றனர். இவை நாவுக்கரசர் தேவாரத்தில் பதிவாகியுள்ள தன்மையை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**எட்டு**

நாவுக்கரசர் தன்னுடைய தேவாரப் பதிகத்தில் எட்டு எண்களில் அமைந்தவற்றைப் பட்டியல் இடுகிறார்.

புகையெட்டும் போக்கெட்டும் புலன்க ளெட்டும்
பூதங்க ளவையெட்டும் பொழில்க ளெட்டும்
கலையெட்டுங் காப்பெட்டுங் காட்சி யெட்டுங்
கழற்சே வடியடைந்தார் களைக ணெட்டும்
நகையெட்டும் நாளெட்டும் நன்மை யெட்டும்
நலஞ்சிறந்தார் மனத்தகத்து மலாந்க ளெட்டும்
திகையெட்டுந் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே
(6ஆம் திருமுறை –34ஆம் பதிகம்– பா–9)

இப்பாடலில்

புகையெட்டு புகை - புகுதல் - பிறப்பினை உணர்ந்த்திற்று.தேவர் மனிதர் மிருகம் பறவை ஊர்வன நீர்வாழ்வன தாவரம் ஆகிய ஏழுடன் நரகரையும் சேர்த்து எட்டு

போக்கு எட்டு - குற்றம் எட்டு அறியாமை திரிபு அகங்காரம் மமகாரம் விருப்பு வெறுப்பு நல்வினை தீ வினை ஆகிய எட்டு

புலன்கள் எட்டு - பூதங்கள் ஐந்து ஞானேந்திரியங்கள் ஐந்து தன்மாத்திரைகள் ஐந்து கன்மேந்திரியங்கள் ஐந்து மனம் புத்தி அகங்காரம் சித்தம் ஆகிய எட்டு

பூதலங்கள் எட்டு - புவர்லோகம் சுவர்லோகம் சனலோகம் தபோலோகம் மகாலோகம் சத்யலோகம் என மேலுலகம் ஏழுடன் இப்பூவுலகம் சேர்த்து எட்டு. அதலம் விதலம் சுதலம் தராதலம் மகாதலம் இராசதலம் பாதாளம் இந்த கீழுலகம் ஏழுடன் இப்பூவுலகம் சேர்த்து எட்டு

பொழில்கள் எட்டு - நாவலந் தீவு சாவகந் தீவு குசைத் தீவு கிரௌஞ்சத் தீவு சான்மலித் தீவு கோமேதகத்தீவு புஷ்கரத்தீவு ஆகிய ஏழுடன் தேவர்கள் வாழும் சொர்க்கம் சேர்த்து எட்டு.

கலை எட்டு - கடல் எட்டு - உவர் நீர்க்கடல் பாற்கடல் தயிர்க்கடல் நெய்க்கடல் கருப்பஞ்சாற்றுக்கடல் தேன் கடல் நன்னீர்க்கடல் சக்கரவாளகிரியைச் சூழ்ந்துள்ள பெரும் புறக்கடல். ஆகிய எட்டு

காப்பு எட்டு - கடல்சூழ்ந்த ஏழு மலைகள் அதனுடன் சக்கரவாளகிரி சேர்த்து எட்டு

நகை எட்டு - நகை ஒளி ராகு கேது நீங்கிய ஏழு கிரகங்களும் அதஃனடன் விண்மீன் சேர்த்து எட்டு

நாள் எட்டு - காலப்பகுதி .நாழி நாள்வாரம் பட்சம் மாதம் ருது அயனம் ஆண்டு எனும் எட்டு

நன்மை எட்டு - சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சம் அறம் பொருள் இன்பம் வீடு எனும் எட்டு

அகமலர் எட்டு - கொல்லாமை அருள் ஐம்பொறியடக்கல் பொறை தவம் வாய்மை அன்பு அறிவு ஆகிய எட்டு

திசை எட்டு - நேர்த்திசைகளான கிழக்கு மேற்கு வடக்கு தெற்கு. கோணத்திசைகளான வடகிழக்கு தென் கிழக்கு வடமேற்கு தென்கிழக்கு ஆகிய எட்டு ஆகிய எட்டு உனும் எண்களில் அமைந்தவற்றைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

**எண்குணத்தான்**

சிவபெருமான் எட்டு குணங்களை உடையவன் என்பதனை

எட்டுகொ லாம்அவர் ஈறில் பெருங்குணம்

(4ஆம் திருமுறை -18ஆம் பதிகம் -8)

என்று நாவுக்கரசர் குறிப்பிடுகிறார். சாந்தோக்யம் என்ற உபநிடதம் இறைவனுக்குரிய எண் குணங்களாக பாவமின்மை ஜரையின்மை மரணமின்மை சோகமின்மை பசியின்மை தாகமின்மை சத்யாகாரம் சத்யசங்கற்பம் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. இவை மூல பரம்பொருள் சத்தியத்தின் வடிவமாகவும் எப்போதும் சத்தியமானவற்றையே செய்து கொண்டிருப்பதாகவும் உள்ளதை உணர்த்துகின்றன. இந்தச் செயலகளால் அதற்குப் பசி தூக்கம் தாகம் மரணம் சோகம் முதலியன உண்டாவதில்லை.

இறைவனின் எண்குணங்களாக சர்வ -ஞானேந்திர ஆகமம் முற்றறிவு (சர்வஞ்ஞத்துவம்) உடைமை வரம்பில் இன்பம் (திருப்தி) உடைமை இயற்கை உணர்வு (அநாதிபோதம் நிராமயான்மா) கொண்டிருத்தல் தன்வயத்தன் (சுவதந்திரதை) ஆதல் குறைவில் ஆற்றல் (அலுப்தசக்தி) உடைமை தூய உடம்பு (விசுத்த தேகம்) கொண்டிருத்தல் இயல்பாகவே பாசங்கள் இல்லாமை (அநாதி முக்தித் தன்மை) ஆகிய எட்டைக் குறிக்கிறது. இவற்றின் மூலமாக இறைவனின் எண்வகைக் குணங்களை அறிந்து கொள்ள முடிகிறது.

**அட்ட புஷ்பங்கள்**

சிவபெருமான் எட்டு வகையான மலர்களைச் சூடுபவன் என்பதனை,

எட்டுகொ லாம்அவர் சூடும் இனமலர்

(4ஆம் திருமுறை -18ஆம் பதிகம் -8)

என்று நாவுக்கரசர் குறிப்பிடுகிறார். சிவபெருமானை எட்டு மலர்களைச் சூடி வழிபாடு செய்யும் மரபு நெடுங்காலமாக உள்ளது. இதனை அஷ்ட புஷ்பம் சாத்துதல் என்று அழைக்கின்றனர். சிவபூஜா நூல்கள் எண்மலர்களைப் பலவிதமாகப் பட்டியலிட்டுக் காட்டுகின்றன.

எல்லா காலத்திற்கும் உரியவை புன்னை வெள்ளெருக்கு சண்பகம் நந்தியாவர்த்தம் நீலோற்பலம் பாதிரி அலரி செந்தாமரை ஆகியனவாகும்.

காலைக்குரியவை அலரி நாயுருவி மல்லிகை எருக்கு வில்வம் நந்தியாவர்த்தம் தாமரை

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

**பவளமல்லி**

உச்சிக்குரியவை பொன் ஊமத்தை புலிநகக் கொன்றை பாதிரி வன்னி கத்தரி மந்தாரை சரக்கொன்றைதும்பை

மாலைக்குரியவை மல்லிகை காட்டு மல்லிகை மரமல்லிகை மகிழ் கொன்றை சண்பகம் சிறுசண்பகம் மருக்கொழுந்து

ஆகிய மலர்கள் சிவ வழிபாட்டிற்கு பயன்படுத்தப் படுகின்றன. மேலும் யோகிகளும் ஞானிகளும் இறைவனுக்குச் சார்த்தி மகிழும் எண்மலர்கள் தனிச் சிறப்புடையனவாகும். இதன்படி மனம் என்னும் செடியில் வட்டு மலர்கள் பூக்கின்றன. அவை அஹிம்சை இந்திரிய அடக்கம் சாந்தி தயை ஞானம் தவம் சத்தியம் பாவனை ஆகியவையாகும்.

இவற்றைத் தமிழில் கொல்லாமை ஐம்பொறிகளை அடக்குதல் அமைதித்தன்மை அருள் உடைமை அறிவுடைமை தவம் வாய்மை நன்னடத்தை என்று கூறுவர். இத்தகைய குணங்களை மலர்களாகக் கொண்டு இறைவனை வழிபட வேண்டும் எனச் சுட்டுவர்.

**எண்தோளன்**

சிவபெருமான் எட்டுத் தோள்களை உடையவன் என்று சுட்டுவர்

எட்டுகொ லாம்அவர் தோளினை யாவன
எட்டுகொ லாம்திசை யாக்கின தாமே

(4 ஆம் திருமுறை - 18ஆம் பதிகம் -8)

என்று நாவுக்கரசர் குறிறிப்பிடுகிறார். சிவபெருமான் எட்டு கரங்களையும் அதற்கேற்ப எட்டு தோள்களையும் உடையவன். வலிமையான இந்தத் தோள்களின் பெருமையால் அவர் அஷ்டபாகு என்று அழைக்கப்படுகிறார்.

**அட்ட மூர்த்தங்கள்**

உலகத்திற்கு மூலப் பொருட்களாக இருப்பவை எட்டாகும். அவை நீர் நிலம் தீ காற்று ஆகாயம் சூரியன் சந்திரன் ஆன்மா என்பனவாகும். இவை சிவபெருமானின் திவ்ய மூர்த்திகளாகத் திகழ்கின்றன. இவற்றினுள் நீக்கமற நிறைந்து இவற்றைச் செயல்படுத்தும் சிவபெருமானின் திருக்கோலங்கள் சர்வன் பவன் உருத்திரன் உக்கிரன் பீமன் பசுபதி மகாதேவன் ஈசானன் என்ற எட்டாகும். இவர்களை அட்டமூர்த்திகள் என்பர்.

திருஞானசம்பந்தர் சிவபெருமான் எண்உருக் கொண்டு திகழ்வதனைக் குறிப்பிடுகிறார்.

பற்றுமாகி வானுளோர்க்குப் பல்கதிரோன் மதியார்
எற்று நீர் தீக் காலுமேலை விண்ணியமா னனோடு
மற்று மாதோர் பல்லுயிராய் மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானான் மேயது முதுகுன்றே

(பாடல் எண் 571)

என்ற பாடலால் இதனை அறிய முடிகிறது. திருநாவுக்கரசர் தன்னுடைய திருத்தாண்டகத்தில் எட்டு மூர்த்தங்களையும் மிக விரிவாகக் குறிப்பிடுகிறார்.

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமே யாகி
நெருநலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே

(நின்ற திருத்தாண்டகம் - 919)

என்ற பாடலில் சிவபெருமான் பூமியாகவும் நெருப்பாகவும் நீராகவும் இயமானன் காற்று எனவும் சந்திரன் சூரியனாகவும் ஆகாசமாகவும் விளங்கும் அட்ட மூர்த்தியானவர் என்று குறிப்பிடுகிறார். அவ்வாறானால் சிவபெருமானுடைய இந்த எட்டு வடிவங்களும் அவனைப் போன்றே அழிவற்ற பொருள்களா? என்ற வினா எழுகிறது. இதற்கு விடை தரும் விதமாக வேறொரு பதிகத்தில் இவை அவனது இயல்பான வடிவம் இல்லை என்றும் உலக மக்களின் நலனை முன்னிட்டு அருள் உள்ளத்தின்

காரணமாக இவ்வாறு வடிவம் தாங்கி வருகிறான் என்று குறிப்பிடுகிறார்.

விரிகதிர் ஞாயிறு அல்லர் மதியல்லர் வேத
விதியல்லர் விண்ணும் நிலனும்
திரிதரு வாயு அல்லர் செறுதீயும் அல்லர்
தெளிநீரும் அல்லர் தெரியில்
அரிதரு கண்ணியாளை ஒருபாக மாக
அருள்கா ரணத்தில் வருவார்
எரியரவுஆர மார்பர் இமையாரும் அல்லர்
இமைப்பாரும் அல்லர் இவரே.

(4ஆம் திருமுறை பாடல் எண். 73)

என்ற பாடல் இதனை விளக்குகின்றது.

**அட்ட வீரட்டத் தலங்கள்**

சிவபெருமானின் அட்ட வீரட்டங்களாக பிரமன் சிரத்தை அறுத்தது.காலனை உதைத்தது. முப்புரத்தை எரித்தது யானையை உரித்தது. தக்கன் வேள்வியை அழித்தது. அந்தகாசுரனை அழித்தது. மன்மதனை எரித்தது. சலந்தாசுரனை அழித்தது. ஆகியவற்றைக் குறிப்பிடுவர். இவை நிகழ்ந்த திருத்தலங்களை

காவிரியின் கரைக்கண்டி வீரட் டானங்
கடவூர்வீ ரட்டானங் காமருசீ ரதிகை
மேவியவீ ரட்டானம் வழுவைவீ ரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக் கிடமாம்
கோவல்நகர் வீரட்டங் குறுக்கைவீ ரட்டங்
கோத்திட்டைக் குடிவீரட் டானமிவை கூறி
நாவில்நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமன்தமருஞ் சிவன்தமரென் றகல்வர் நன்கே

(6ஆம் திருமுறை-அடைவுத்தாண்டகம்-2)

என்ற பாடலால் இதனை அறிய முடிகிறது. இவற்றின் வாயிலாக எட்டு என்ற எண் நாவுக்கரசர் தேவாரத்தில் பெற்றுள்ள முதன்மையை அறிய முடிகிறது.


## Call for paper for Edited Volume
## DALIT ENTREPRENEURSHIP IN INDIA

A reputed publisher consented to publish the selected papers relating to the Dalit Entrepreneurship as an edited volume with ISBN .there is no need to pay printing or publishing charges in this regards.

Status of Dalit Entrepreneurs in India
Dalit empowerment through Entrepreneurship
Entrepreneurial competence among Dalit Entrepreneurs
Government support to Dalit Entrepreneurship
Institutional assistance to Dalit Entrepreneurship
Problems and challenges of Dalit Entrepreneurship

Original papers are invited on the above theme from the academicians, research scholars and other interested persons. Full paper should be in MS word, times roman front size 12 with 1.5 line spacing. The papers should not exceed 4500 words with abstract of 500 words including 5-8 key words. The front page of the paper should provide details of author's name, designation, affiliation, e-mail id and phone number.

**Papers may be sent by e mail to tamilselp@yahoo.in**
**Last date for submission for paper: 31st December 2015.**

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி - III / பதிப்பு - 5
ஜனவரி - ஜூன் 2015

# பொருநரின் வாழ்க்கைமுறை

**ஜெ.புவனேஸ்வரி**
உதவிப்பேராசிரியை,
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

### முகப்புரை

கலைஞர்களாகத் திகழ்ந்த பாணர், கூத்தர், பொருநர், விறலியர் ஆகியோர் சங்க இலக்கிய மாந்தர்களின் அக வாழ்விலும் புற வாழ்விலும் பெரும்பங்கு வகித்துள்ளனர். புறவாழ்வில் கலைஞரது பங்கினைத் தொல்காப்பியர், கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்[1]

என்றவாறு வெளிப்படுத்துவார். இது ஆற்றுப்படை இலக்கியங்களுக்கு இலக்கணமாக இருப்பினும் கலைஞர் புரவலரை நாடிச் சென்று பரிசில் பெறுதல், தத்தம் இனத்தவரைப் பரிசில் பெற்ற புரவலர்பால் ஆற்றுப்படுத்துதல் என்னும் நடைமுறை உண்மைகளை நன்குணர்த்தும். கலைஞருள் ஒரு பிரிவினரான பொருநரது வாழ்க்கை முறையை இக்கட்டுரையின்கண் ஆய்வோம்.

### பொருநருள் பிரிவுகள்

பொருநர் என்போர் திறம்படப் பாடி நடிப்பவர். இவர்கள் தடாரி, கிணை ஆகிய தோற்கருவிகளை இசைத்துப் பாடுவர். பொருநருள் ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர், பரணி பாடுநர் என மூவகைப்படுவர்.[2] ஒருவரைப் போல் வேடமிட்டுப் பாடுநரைப் பொருநர் என்பர்.

### பொருநர் வறுமை

பொருநர் வறுமை வாழ்க்கையினர். இதனை,

ஆடுபசி யுழந்தநின் இரும்பே ரொக்கலொடு நீடுபசி[3]

என்னும் பாடலடி உணர்த்தும். இதில் நீடுபசி என்பது பொருநரிடையே தொன்றுதொட்டு வரும் பசியைக் குறிக்கும்.

பொருநர் பாசியின் வேர் போன்று அழுக்கோடு குறைந்து போன தையலையுடைய ஆடை உடுத்தியிருப்பர். இதனை,

பாசி வேரின் மாசொடு குறைந்த துன்னற் சிதாஅர்[4]

என்னும் பாடலடிகள் விளக்கி நிற்கும். பொருநன் பழமையான நீர்ப்பாசிபோல் சிதர்ந்த ஆடையினை அணிந்தவனாகக் காணப்பட்டான். இதனை,

ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி
வேர்புரை சிதாஅர் [5]

என ஔவையாரும் குறிப்பிடுவார்.

### நிலையா வாழ்க்கை

பொருநர் பேரூர்களில் விழவுக்களந்தோறும் சென்று பாடுவர். ஓர் ஊரில் விழா முடிந்ததும் அங்கேயே தங்கியிராது விழா நடக்கும் அடுத்த

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

ஊரை எண்ணிச் செல்லும் இயல்பினராக இருந்துள்ளனர். இதனை,

> **சாறுகழி வழிநாட் சோறுநசை யுறாது**
> **வேறுபுல முன்னிய விரகறி பொருந [6]**

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**பொருநர் செலவு**

பொருநர் காட்டு வழியில் வரும்பொழுது காடுறை கடவுளை வணங்குவர். இவ்வழக்கத்தை,

> **இலையின் மராத்த எவ்வந் தாங்கி**
> **வலைவலந் தன்ன மென்னிழன் மருங்கிற்**
> **காடுறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை [7]**

என்பார் முடத்தாமக் கண்ணியார்.

**வைகறைப் பொருநர்**

பொருநர் விடியற் காலையில் சென்று அரசரைக் கண்டு அவன் புகழ் பாடுவர். ‘‘கிணைப் பொருநன் வேந்தன் முன்றிலில் விடியற் காலத்தே சென்று தன்னுடைய கிணைப் பறையைக் கொட்டி இவ்வேந்தர்களின் வஞ்சி முதலாகவுள்ள மறத்துறைகளைப் பாடுவது இயல்பு. அங்ஙனம் பாடுவோர் தொடக்கத்தில் வேந்தர்க்குத் துயிலெடைப் பாட்டைப் பாடி, அவர் துயிலுணருங்கால் அவர் செவிப்பட அவர்தம் மறமாண் புகழ்களை எடுத்தோதி மகிழ்ச்சி அடையச் செய்வர்’’[8] என்னும் வி. சசிவல்லியின் கருத்தும் இதனை வலியுறுத்தும்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் நெடிய முற்றத்தில், பொருநர் பெரிய தடாரிப் பறையை ஒலித்துத் துயிலெடை பாடிப் பரிசில் வேண்டி நிற்பர். இவ்வாறு வேண்டி நிற்கும் காலம் விடியற்காலையாகும். இவ்விடியற்பொழுதை ‘‘வெள்ளியாகிய மீனும் வானத்தில் எழுவதாயிற்று. பறவைகளும் மரத்தின் உயர்ந்த கிளையில் கட்டிய கூட்டிலிருந்து தம்முடைய ஓசையை எழுப்பலுற்றன. பொய்கைகளில் குவிந்திருந்த தாமரைகள் கண் விரிப்பது போல் விரியலுற்றன. மெல்லெனத் திங்களாகிய சுடரும் தன் ஒளியாகிய நிலவு குறையத் தொடங்கிற்று. முழங்குதற்குரிய முரசங்களும் வலம்புரிச் சங்குகளும் முழங்குதலைச் செய்ய இரவுப் புறமாகிய கடையாமம் கழிந்த காலைப் பொழுது தோன்றியது’’[9] என வருணிப்பர். இவ்விடியலில்,

> **வைகறை யரவங் கேளியர் பலகோட்**
> **செய்தார் மார்ப வெழுமதி துயிலெனத்**
> **தெண்கண் மாக்கிணை தெளிர்ப்ப வொற்றி [10]**

அரசர் அரண்மனை முற்றத்தில் நிற்பர்.

பொருநர் சோழன் கரிகாற் பெருவளிதானை வெள்ளி எழுந்த இருளையுடைய விடியற் காலத்தில் நாடிச் செல்வர். கண்ணகன்ற உடுக்கையில் தோற்றுவித்த இரட்டைத் தாளிதிற்கேற்ப மன்னனை வாழ்த்திப் பாடுவர். இதனை,

> **பைத்த பாம்பின் துத்தி யேய்ப்பக்**
> **கைக்கச டிருந்தவென் கண்ணகன் தடாரி**
> **இருசீர்ப் பாணிக் கேற்ப விரிகதிர்**
> **வெள்ளி முளைத்த நள்ளிருள் விடியல்**
> **ஒன்றியான் பெட்டா அளவையின் [11]**

என்றவாறு முடத்தாமக் கண்ணியார் வெளிப்படுத்தியுள்ளார்.

பொருநர் அதியமான் பொகுட்டெழினியின் முற்றத்தில் இளநிலவு திகழும் பனி சொரியும் விடியற் காலத்தே ஒரு கண் மாக்கிணையை அறைந்து ‘‘நீ நெடிது வாழ்வாயாக’’ எனப் பாடுவர். [12]

பொருநர் சோழிய ஏனாதி திருக்குட்டுவனின் முன்றிலில் இருட்பொழுதும் நிலவுப்பொழுதும் கழிந்த பகற்பொழுதினைச் செய்தற்குத் தோன்றிய விடியற்காலத்தே ஒரு கண்ணையுடைய பெரிய தடாரிப் பறையை மெல்ல ஒலிக்குமாறு இசைத்து வஞ்சித்துறைப் பாட்டொன்றைப் பாடுவர்.

பொருநர் சேவற்கோழி கூவித் துயிலெடுப்பப் படுக்கையினின்று எழுவர். தண்ணிய பனி துளிக்கும் விடியலில் தடாரிப் பறையைக் கொட்டி அவியன் முற்றத்தில் நின்று பலவாகிய உழவெருதுகளை வாழ்த்திப் பாடுவர். [13]

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

**பொருநர் பரிசில் வேண்டல்**

பொருநர் நண்பகலில் காட்டிடத்தே நடந்து வருந்தி மாலைப் பொழுதில் அரசன் மனை முன்றிலில் தடாரியுடன் பரிசில் வேண்டி நிற்பர். இரவுப் பொழுதிலும் சென்று அரசனைப் பாடிப் பரிசில் பெறுவர். பொருநரும் அவரது சுற்றத்தாரும் ஊருக்கு முன்னிடமான பொதியிலில் வந்து தங்கியிருப்பர். பொருநர் இரவில் அதியமான் நெடுமான் அஞ்சியின் முன்றிலில் தடாரிப் பறையை அறைந்து பாடி நெல் பெறுவர். இதனை,

> சென்ற ஞான்றைச் சென்றுபட ரிரவின்
> வந்ததற் கொண்டு நெடுங்கடை நின்ற
> புன்றலைப் பொருந னளியன் றானென 14

என்று ஔவையார் குறிப்பிட்டுள்ளார்.

பொருநர் சுற்றம், சோழன் கரிகாற் பெருவளத்தான் அரண்மனையில் பல நாட்கள் உண்டும் கண்டும் கேட்டும் தங்கும். அவ்வாறு தங்கும் பொழுது விறலியர் முழவிசையோடு சீறி யாழும் இசைக்கத் தாளத்திற்கேற்ப, பாடி ஆடுவர்.

பொருநர் அரசரிடம் பல்வேறு பரிசில்களைப் பெறுவர். பொருநன் பொற்றாமரை மலரையும் பாடினி பொன்னரி மாலையையும் தேரையும் கலன்களையும் கரிகாற் பெருவளத்தானிடமிருந்து பரிசிலாகப் பெறுவர்.[15]

**பொருநர் சிறப்பு**

> பொருநரைக் கரிகாற் பெருவளத்தான்,
> பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
> காலி னேழடிப் பின்சென்று கோலின்
> தாறுகளைந் தேறென் றேற்றி[16]

வழியனுப்புதல் குறிப்பிடத்தக்கதாகும். அரசனே வந்து வழியனுப்புதல் பொருநர் சிறப்பை நன்கு விளக்கும்.

காலின் ஏழடி சென்று என்றது, உயர்குடிப் பிறந்தோர், நண்பர், பெரியோர் முதலியோரை வரவேற்கும் போதும் வழிவிடும் போதும் நிரலே ஏழடி எதிர் சென்று வரவேற்றலும் ஏழடி பின் சென்று வழிவிடுதலும் ஆகிய மரபினைக் குறித்து நின்றது. இங்ஙனம் செய்தல் தம்மோ -டொத்தாராகவாதல் உயர்ந்தோராகவாதல் கருதிய வழியன்றி நிகழ்தல் மரபன்று[17] என்னும் பொ. வே. சோமசுந்தரனார் கருத்து பொருநர் சிறப்பை எடுத்துரைக்கும்.

**பொருநர் - பிற தொழில்கள்**

பொருநர் பெரிய மூங்கிலால் ஆகிய தூண்டிலில் மீன் பிடிப்பர். அம்மீன்களைக் கிணைமகளிர் கொண்டு சென்று விற்று வருவர். அதில் கிடைக்கும் பொருளைக் கொண்டு புளியங்கூழ் சமைப்பர். அவ்வுணவைக் காலமல்லாத காலத்தில் உண்பர். இவ்வாழ்க்கையை,

> நெடுங்கழைத் தூண்டில் விடுமீ னொடுத்துக்
> கிணைமக ளட்ட பாவற் புளியங்கூழ்
> பொழுதுமறுத் துண்ணு முண்டியேன் [18]

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. அதனால் பொருநர் உண்டற்குரிய கால வரவு நோக்கியிருந்து உண்ணாது, உணவு வரவு நோக்கியிருந்து உண்ணும் வாழ்க்கையினர் என்பது விளங்கும்.

பொருநர் பனை மரத்து நாரினையும் பனங்குருத்தையுங் கொண்டு பல பொருட்களைச் செய்து விற்று வாழ்வர். அதனை,

> நாரும் போழுஞ் செய்தூண் பெறாஅது
> புசிதினத் திரங்கிய விரும்பே ரொக்கல் [19]

என்பார் ஊன்பொதி பசுங்குடையார்.

முழவு போன்ற அடியினையுடைய பனையின் அரம் போலும் கருக்குப் பொருந்திய பெரிய மடலினின்று எடுத்த நாரினையும், பனங்குருத்தையும் கிணையோடு சேர்த்துக் கட்டி உழுதுண்டு வாழ்வோர் இல்லங்கட்குச் சென்று முறையே அவர் நல்கும் உணவை இரந்துண்டு வாழ்வர். இதனை,

> முழாஅரைப் போந்தை யரவாய் மாமடல்
> நாளும் போழுங் கிணையொடு சுருக்கி
> ஏரின் வாழ்நர் குடிமுறை புகாஅ
> ஊழிரந் துண்ணும் உயவல் வாழ்க்கை[20]

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

என்று உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் கூறியுள்ளார்.

**தொகுப்புரை**

பொருநர் வாழ்வு வறுமை நிறைந்தது. இப்பொருநர் ஒவ்வோர் ஊருக்கும் சென்று கலை நிகழ்ச்சி நடத்துவர். பேரூர்களில் விழவுக்களந் -தோறும் சென்று பாடுவர். காட்டு வழியில் செல்லும் போது கடவுளை வணங்குவர்.

கிணைப் பொருநர் அரசர் மனை முன்றிலில் விடியற்காலையில் தடாரிப்பறையை இசைத்துப் பாடுவர். மாலை, இரவுப் பொழுதுகளிலும் புரவலரை நாடிச் செல்வர். அரசரிடம் பொற்றாமரை, பொன்னரிமாலை போன்ற பல பரிசில்களைப் பெறுவர்.

பொருநர் கலைத் தொழிலோடு மீன்பிடித்தல், பனைப்பொருள் செய்தல், மக்களிடம் விற்றல் போன்றவற்றையும் நடைமுறையாகக் கொள்வர்.

**சான்றெண் விளக்கம்**


1. தொல். பொருள். புறத். நூ. 30 : 3-6
2. வி. சசிவல்லி, பண்டைத் தமிழர் தொழில்கள், ப. 278
3. பொருந. 61-62
4. மேலது. 153-154
5. புறம். 392 : 13 - 14
6. பொருந. 2-3
7. மேலது. 50-53
8. வி. சசிவல்லி, பண்டைத் தமிழர் தொழில்கள், ப. 279
9. புறம். 397 : 1 - 6
10. மேலது. 397 : 8 - 10
11. பொருந. 69 - 73
12. புறம். 392 : 1 -5 ரூ 11- 12
13. மேலது. 383 : 1 - 5
14. மேலது. 390 : 10-12
15. பொருந. 159 - 167
16. மேலது. 165 - 167
17. பொ. வே. சோமசுந்தரனார், பொருநராற்றுப்படை (உரை), ப. 52
18. புறம். 399 : 15-17
19. மேலது. 370. 2-3
20. மேலது. 375 : 4-7



**SELP Trust invites research articles from academicians, research scholars and scientist belongs to life science, applied science, computational science, Engineering and Technology for the proposed International Bi Annual Research Journal on SCIENCE EXPLORE.**

**Send your article through email at tamilselp@yahoo.in as per the guidelines available in the website**

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# புறநூல்களில் வானியல் நம்பிக்கைகள்

**செல்வி**
உதவிப்பேராசிரியர்
நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தேனி.

**முகப்புரை**

வானியல் பற்றிய எண்ணமும் அறிவும் தொன்மையானது. தொன்மையான இலக்கியமாகக் கருதப்படும் சங்க இலக்கியத்தில் வானியல் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. வானியல் என்பது கோளியல், கோள்களின் இயக்கங்கள், கோள்களின் மாற்றங்கள் போன்றவையாகும். மனித வாழ்க்கை விதியின்பாற்பட்டது. விதி கோள்களின், கிரகங்களின் சஞ்சாரத்திற்கு ஏற்ப நம்மைப் பாதிக்கிறது என்பதை நாம் இன்றும் நம்புகின்றோம். மக்களிடம் இராசி பலன் பார்க்கும் பழக்கம், சனிப்பெயர்ச்சி, குருபெயர்ச்சி, இராகுகேது பெயர்ச்சி, நாள் கோள் நட்சத்திரம், கிழமை, ஓரை பார்த்தல், திதி, கிரகணம் பார்த்தல் ஆகியன இன்றும் வழக்கில் உள்ளன. முதுசொல் கேட்டல், விரிச்சி கேட்டல் போன்றவை சங்க இலக்கியத்தில் காணலாம். குறிப்பாக புறநூல்களில் கோள்களின் இயக்கம் நன்மையும் செய்யும், தீமையும் செய்யும் என்பதையே வானியல் நம்பிக்கைகள் அன்று முதல் இன்று வரை மக்கள் நம்புவதையே இவ்வாய்வின் ஆய்வுப் பொருளாக அமைய உள்ளது.

**நம்பிக்கைகள் பற்றிய அறிஞர்கள் கருத்து**

நம்பிக்கைகளில் முதன்மையாக அமைவது சகுனங்களே ஆகும். சகுனங்களை வைத்தே மக்கள் பலவகையான நம்பிக்கைகளைக் கொண்டுள்ளனர். வெளிநாட்டு அறிஞர்களான பக்கெட்டு (Puckett), ஆலன் தண்டசு (Allan Dundas) அலெக்சாண்டர் கிராப்பே (Alexander Krappe), போன்றவர்கள் நம்பிக்கைகளைப் பற்றிப் பல வழிகளில் ஆராய்ச்சி செய்துள்ளனர்.

**அலெக்சாண்டர் கிராப்பே - வின் கருத்து**

அலெக்சாண்டர் கிராப்பே தம்முடைய நாட்டுப்புறவியலின் அறிவியல் (The Science of Folklore) என்னும் நூலில் நம்பிக்கையைப் பல வகையாகப் பிரித்துக் காட்டுகிறார். அவை, மதச்சார்பான நம்பிக்கைகள், விலங்கு, பறவைகள் பற்றிய நம்பிக்கைகள், குழந்தைகளைப் பற்றிய நம்பிக்கைகள், மனித உடல் உறுப்புக்களைப் பற்றிய நம்பிக்கைகள், மாதங்கள், வாரங்கள், நாள்கள் பற்றிய நம்பிக்கைகள் கனவு பற்றிய நம்பிக்கைகள் என வரையறுத்துக் கூறியுள்ளார்.

**பக்கெட்டு என்னும் அறிஞரது கருத்து**

நம்பிக்கைகள் மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை, சகுன சகுன நம்பிக்கைகள், தந்திர நம்பிக்கைகள், சகுன பரிகார நம்பிக்கைகள் என்ற மூன்று கூறுகளையும் இருவரும் பகுத்துக் கூறுகின்றனர்.[1]

**வடமீன் (அருந்ததி) குறித்த நம்பிக்கைகள்**

வானத்தில் வடக்குத் திசையின்கண் விளங்கும் ஏழு முனிவருள் வசிட்டரின் பத்தினி அருந்ததி (சாலினி) எனக் கூறப்படுகிறது. இது பெண்களின் கற்போடு தொடர்பு படுத்தப்பட்டு, வழிபடும் தன்மையது. மேலும், மக்கள்

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

புதியதாகத் திருமணம் முடிந்த மணமக்களை அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, என்னும் வாக்கும் இதை ஒட்டிய நம்பிக்கையாகவே,

வடமீன் புரையும் கற்பின் மடமொழி
அரிவை தோள் அளவு அல்லதை

(புறம். 122:8-9)

இன்றும் நடைமுறை வழக்கில் மனிதனது வாழ்க்கை முறையோடு ஒட்டிய நம்பிக்கையாகவே மாறி அமைந்துள்ளது.

சாலி ஒரு மீன் தகையாளை [2]

(சிலம்பு.1:51)

எனவும்,

விசும்பு வழங்கு மகளிருள்ளும் சிறந்த
செம்மீன் அனையள் நின் தொல் நகர்ச் செல்வி

(பதிற்.31:27-28)

வானுலகில் உள்ள பெண்களுள் கற்பில் சிறந்தவள் என்ற பெருமை அருந்ததி மீனிற்கே உரியது என்பதை பதிற்றுப்பத்தின் வழி நம்பப்படுகின்றது. மேலும் அருந்ததி விண்மீன் கற்புடையப் பெண்டிரொடு ஒப்பிட்டுப் பாராட்டும் தன்மையையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

**வால்மீன்கள் ஏற்படுத்தும் நம்பிக்கைகள் :**

கோள்களுக்கிடையே ஏற்படும் ஈர்ப்பு விசை காரணமாக விண்வெளிப் பாதையில் இருந்து விலகிய கோள்கள் அதிக வேகமாக விரைந்து வரக்கூடும். இதனையே வால்மீன் (நட்சத்திரம்) என்கிறோம். இவை வால்வெள்ளி, தூமகேது, தூமம் போன்ற வால்மீன்கள் பூமியில் தோன்றினாலும், அல்லது புகைந்து தோன்றினாலும் உலகிற்கு வறுமை ஏற்படும்,

மைம்மீன் புகையினும் தூமம் தோன்றினும்

(புறம்.117:1)

எனவும்,

கரியவன் புகையினும் புகைக்கொடி
தோன்றினும்[3]

(சிலம்பு.10:102)

என்ற அடிகளின் மூலம் வால்மீன்கள் தோன்றினால் அது தீய நிமித்தமாகவே மக்களிடம் நம்பும் வழக்கம் இருந்ததை இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

**எரிமீன் குறித்த மக்களின் நம்பிக்கைகள்**

ஞாயிறு வேறுபடத் தோன்றுதலும், எரிகொள்ளி விழுதலும் தீய சகுனங்களாகவே நம்பப்பட்டன.

அகன் ஞாலப் பெரிது வெம்பினும்
மிக வானுள் எரி தோன்றினும்
குள மீனோடும் தாள் புகையினும்

(புறம்.395:33-35)

அகன்ற இவ்வுலகம் மழை இல்லாமல் வெம்மை அடைந்து வாடினாலும், வானகத்தே எரிமீன் மிகுதியாகத் தோன்றினாலும், குளமீனோடு தாள்மீனும் சேர்ந்து புகைவதும், விண்மீன்கள் எரிந்து விழுவதும் உலகக் கேட்டிற்கு உரிய அறிகுறியாகவும் அக்காலத் தமிழர்களும், இக்காலத்திய மக்களும் நம்பும் வகையில் அமைந்துள்ளதை உணர முடிகிறது.

**செவ்வாய் கோள் பற்றிய நம்பிக்கைகள்**

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவனை உறையூர் மருத்துவன் தாமோதரன் பாடும் போது இரவுக் கடலில் திமில் (படகு) மேல் சுடரும் விளக்கொளி போலச் செம்மீன் கண்இமைக்கும் எனவும், இக்கோள் சிவந்த நிறமுடையது என்பதையும், பௌர்ணமியன்று கிழக்கில் தோன்றும் என்பதையும்,

முந்நீர் நாப்பண் திமில்சுடர் போலச்
செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்
உச்சி நின்று உவவுமதி கண்டு

(புறம்.60:1-3)

என்ற பாடல் வெளிப்படுத்துகின்றது. செவ்வாய் மீனின் சிவப்பு நிறம் குறித்தே பண்டைய மக்கள் இதனைப் போரின் கடவுளாக நம்பி, வணங்கியதை அறிய முடிகிறது.

**உடுமண்டலம் குறித்த நம்பிக்கைகள்**

கோடிக்கணக்கான விண்மீன்களும் அவற்றுக்கு இடையிலான பொருள்களும் உருவாக்கும் அண்டத்தையே உடுமண்டலம் என்கிறோம். உடுமண்டலங்கள் யாவுமே பருமன் அளவிலும், சேர்மானத்திலும், கட்டமைப்பிலும், செயல்பாட்டிலும் பல வகைப்படும். ஆனால் அவை பலவும் அதிகபட்சம் 10,000 உடுமண்டலங்கள் வரை அடங்கிய தொகுதிகளாகவும், கொத்துக்களாகவும் இயங்குகின்றன. ஒவ்வொன்றிலும் இலட்சக்கணக்கான விண்மீன்கள் அடங்கி இருக்கின்றன. பால்வீதி (Milky way) அண்டத்தில் உள்ளது போன்றே அவற்றிலும் விண்மீன், முகில்கள் (நெபுலாக்கள்) இடம் பெறுகின்றன.

> நாள், கோள், திங்கள், ஞாயிறு, கனை அழல்
> ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனைய
> (பதிற்.14:3-4)

என்ற பதிற்றுப்பத்து வரிகளின் மூலம் நம் முன்னோர்தம் பிரபஞ்சக் கட்டமைப்பு பற்றிய அறிவு தெளிவாகிறது. பிரபஞ்சக் கட்டமைப்பு மூலம் உடுமண்டலம் என்ற மண்டல அமைப்பு இருப்பதாக நம்பப்படுவது உண்மையே என்பதை, மேலும் பல இலக்கியங்கள் உறுதிபடுத்துகிறது.

இங்கு கோள், விண்மீன், சந்திரன், சூரியன், உடுமண்டலம் ஆகியன விவரிக்கப் படுகின்றன. அதிலும் கனை அழல் என்ற கலைச்சொல் ஆங்கிலத்தில் காலக்சி (Galaxy) என்பதை விஞ்சிய பொருளாக அமைந்துள்ளதை அறியலாம்.

**வானியல் நம்பிக்கைகள்**

வான நூலார் வானிலுள்ள விண்மீன்கள், கோள்களின் நிலையறிந்து கணக்கிட்டு மழை வருதலையும், நாட்டுக்கு நலந்தீங்குகள் விளைதலையும் கூறுவர். மேலும் இவ்வியல்புகளை நுனித்து ஆராயாமல், வெள்ளி தெற்கே சென்றால் மழை பொழியாது என்றும், மைம்மீன் புகைந்தால் கேடுவரும் என்றும் மக்கள் கருதுவதையே நம்பிக்கை என்று கருதப்படுகிறது.

வெள்ளியாகிய மீன் தான் நிற்றற்குரிய வடதிசையில் நில்லாமல் தென்திசைக்கண் செல்லின், மழை பொழியாது என்பது வான்நிலை பற்றிய நம்பிக்கை. அந்நம்பிக்கைக்கு மாறாக, வெளி வடதிசையிலிருந்து தென்திசைச் செல்லினும் மழை பொழியக் காவிரி நீர் பெருகும் என்பதை,

> வசைஇல்புகழ் வயங்குவெண்மீன்
> திசைதிரிந்து தெற்கு ஏகினும்
> தற்பாடிய தளியுணவின்
> புள்தேம்பப் புயல்மாறி
> வான்பொய்ப்பினும் தான்பொய்யா
> மலைத்தலைய கடல் காவிரி [4] (பட்டி.பா.1-6)

பிறரால் குற்றம் கூற முடியாத புகழை உடைய ஒளியுடைய வெளி விண்மீனாகிய சுக்கிரன் நிரந்தரமாக வடதிசையில் இருக்கும். அம்மீன் தன் திசை மாறித் தெற்குத் திசைக்கு வந்தால் மழை பொழியாது. வற்கடம் வரும் என்பது பழந்தமிழரின் நம்பிக்கையாகும்.

கடியலூர் உருத்திரங் கண்ணனார் இங்ஙனம் கோள்கள் மாறிச் சென்றாலும், காவிரியின் நீர் மாறா நீர்மையைப் போற்றிப் பாடுவர். வெள்ளைக் குடிநாகனார்,

> அலங்குகதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்
> இலங்குகதிர் வெளி தென்புலம் படரினும்
> அம் தண் காவிரி வந்து கவர்பு ஊட்ட
> (புறம்.35:68)

அலங்கு கதிர்க் கனலி (ஞாயிறு) நான்கு திசைகளிலும் தோன்றினும், இலங்குகதிர் வெளி தென்புலம் படரினும், காவிரி வற்றாது நீர் பெருகி வயல்களை வளமுறச் செய்யும் என மக்கள் நம்பினர். செங்கோலாட்சியில் நாட்டில் மழை பொழியும், வருவாய் பெருகும், தொழில் வளம் செழிக்கும் என்பது மக்களின் நம்பிக்கை ஆகும். இவற்றில் குறை ஏற்படின் வளம் செழிக்கும் என்பது மக்களின் நம்பிக்கை ஆகும். இவற்றில் குறை ஏற்படின், மன்னனின் கொடுங்கோல் ஆட்சியின் காரணம் எனக் கருதி மன்னனைப் பழிப்பர்.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
(புறம்.35:27-28)

இந்நம்பிக்கையை வெளிப்படுத்துமாறு வெள்ளைக்குடி நாகனார் பாடிய பகுதி உளங்கொள்ளத்தக்கது.

கோள்களில் விண்ணகத்துள் பேரொளியுடன் விளங்குமாறு அமைவது போலவே இலக்கியத்துள்ளும் வெளி ஒன்றே ஒளிர்கின்றது. வெளியின் இயக்கத்தையும் தோற்றத்தையும் ஒட்டியே ஆண்டின் மழைவளம் உணரப்படும் என்றும் நம்பினர்.

வயங்கு கதிர் விரிந்து வானகம் சுடர்வர
வறிது வடக்கு இறைஞ்சிய சீர் வால் வெளி
(பதிற்.24:23-24)

அந்த நம்பிக்கையினை ஒட்டியே வெளிக்கோள் மழைக் கோளாகவும் கருதப்பட்டது.

**முடிவுரை :**

நம்பிக்கை என்பது மக்களுடைய உணர்ச்சிகளின் வெளிப்பாடாகும். மனிதனது வாழ்நாள் நினைவுகள் யாவும் அவனது நம்பிக்கையைச் சார்ந்தே அமைகின்றது. இவற்றுள் கோள்கள் பற்றிய நம்பிக்கையே மக்களிடம் சோதிடமாக மாறி இன்றும் நிலைத்து நிற்கின்றது.

**அடிக்குறிப்பு :**

1. வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி 11) பக்.220 221
2. சிலம்பு., ந.மு.வேங்கடசாமி நாட்டார் (உரை), ப.52
3. மேலது, ப.274
4. பட்டினப் பாலை ப.437

SELP PUBLICATION

SELP Trust established the publication division in the name of SELP Publication devoted to education and research with the ISBN and published 20 educational books and propose to publish 50 books in a calendar year 2015. So, if you have a proposal or manuscript (Including edited volume) in your area of specialization, please contact or write to us. we are happy to publish your books with ISBN.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# ‘இன்றைய கண்ணகி’ சிறுகதைத் தொகுப்பில் ‘பெண்மை’

**முனைவர் இரா.செண்பகவள்ளி**
உதவிப் பேராசிரியர்,
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

**முகப்புரை**

பெண் என்பவள் பெருமைக்குரியவள், பொறுமையின் இருப்பிடம், பாசத்தின் உறைவிடம், பண்பின் புகலிடம், அன்பின் ஊற்று, அடக்கத்தின் அமைவிடம் என்றெல்லாம் கவிஞர்களாலும், பெரியோர்களாலும் போற்றப்படுகிறாள். பெண்கள் இப்போது குடும்பத்திலும், சமுதாயத்திலும் சம உரிமை பெற்றும் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டியுள்ளனர். கருத்து வேறுபாடு, மனவேறுபாடு, ஏழ்மை, சூழ்நிலை, ஏற்றத்தாழ்வு, தலைமுறை, இடைவெளி போன்ற பல காரணங்களால் பெண்மைக் குணங்கள் பல விதமாகப் பரிணமிக்கின்றன. ‘அச்சமும் நாணும் மடனும் முந்துறல் நிச்சமும் பெண்பாலுக்குரிய’ என்ற தொல்காப்பியப் பெண்மை சூழல்களின் உந்துதலோடு கைகோர்த்து தன்னைத் தற்காத்தும், சமாதானப்படுத்தியும் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. ஜி.நாராயணன் தன்னுடைய ‘இன்றைய கண்ணகிகள்’ என்ற சிறுகதைத் தொகுதியில் பெண்களின் பல்வேறு குணங்களைப் பதிவு செய்துள்ளார்.

**அதர்மத்தை அழிக்கும் துணிபு**

அதர்மத்தை அழிக்க ‘கத்திமுனை தேவையில்லை. பேனாமுனை போதும்’ என்ற எழுத்தாளர்களின் கொள்கையைக் கொண்டு துணிவுடன் செயல்படும் பெண்ணாக அன்னபூரணி ‘இன்றைய கண்ணகி’ யாக அறிமுகம் ஆகிறாள். தன்னுடைய மேலதிகாரியாக வரும் அருணாசலத்திற்கு, அவனுடைய சபலபுத்திக்குப் பாடம் புகட்டுவதாக அவளுடைய செயல் அமைகிறது. பெண்ணின் முற்போக்கான எண்ணமும், செயல்பாடுகளும் பெண்மையைக் காக்கும் கவசமாக வேண்டும். அலுவலகத்தில், பேருந்துகளில் பெண்கள் ஆண்களால் படும் துன்பங்களுக்கு அன்னபூரணியின் செயல்பாடும் எண்ணமும் எல்லாப் பெண்களுக்கும் வர வேண்டும் என்பதை இக்கதை உணர்த்துகிறது.

“கொஞ்சம் நகர்ந்த போது இந்தப் பக்கமும் ஒருவன் நின்றிருந்தான் எதிரே… பின்னால் … சுற்றிலும் வியூகம் அமைத்தது போல் ஆண்கள் நிற்க… கவனம் எங்கேயோ இருந்தாலும்… சடன் பிரேக்குகளில், சாலை வளைவுகளில் கிடைக்கும் உரசலுக்கு அந்த உடல்கள் தவம் இருக்க, சட்… ரத்தம் கொதித்தது”.

(இ.க.ப.8)

என்ற வரிகளில் பெண்கள் சபலபுத்தியுடைய ஆண்களால் துன்பப்படுவதையும், அதற்கான தீர்வையும் கதை இறுதியில் தருகிறார். அலுவலக அதிகாரியான அருணாசலம் தன்னை முறையில்லாமல் நடத்தும் போது,

“இவள் வலது கை எழுந்தது! உயர்ந்தது! இறங்கியது. இறங்கி உட்கார்ந்த இடம் அவர்

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

மணிக்கட்டாக இருந்தது. விரல்களில் பிடித்திருந்த பென்சில்முனை லேசாக அவர் தோலில் அழுத்தி அழுத்தி... அழுத்தமாக இன்னும் அழுத்த... அழுத்த...

(இ.க.ப.8)

அன்னபூரணியின் இச்செயல்பாடு 'தானே தனக்கு வேலியாக இருக்கவேண்டும்' என்பதை உணர்த்துவதாக இருப்பதை அறியலாம். மேலும், 'தீர்வு' என்ற சிறுகதையிலும் விஜயா என்ற பெண் தன்னை தினந்தோறும் கண்காணிக்கும் ஆண்மகனை எதிர்த்து பதிலடி கொடுக்கிறாள். சமுதாயத்தில் பணபலம், ஆள்பலம் கொண்ட கனகசபைபிள்ளையின் மகன் என்று தெரிந்தும் காவல் அதிகாரிகள் விஜயாவின் தந்தையின் புகாரை ஏற்கவில்லை. இதனை அறிந்த விஜயா தானே அதற்குத் தீர்வாக சில செயல்களைச் செய்கிறாள்.

''கையாலாகாத தந்தை கேலி பேசுகிற சுற்றம்...! சாக்கு போக்கு சொல்கிற போலீஸ்...! உன் உதவிக்கு யாருமே வராமல் தட்டிக் கழிக்க. பெண்ணே...! இந்தப் போர்க்களத்தில் இனி நீ உன்னையே தான் நம்பியிருக்க வேண்டும். வாளை எடுத்து தற்காத்துக் கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்துவிட்டாயா...?

உன் மெல்லிய உடலில் கரங்களில் மனதில் எங்கிருந்து இத்தனை பலமும் தைரியமும் வந்தது? எப்படி உன்னால் முடிந்தது...? முடியும்..."

(இ.க.ப.123)

என்ற வரிகள் மூலம் ஆசிரியர் இன்றைய பெண்களுக்குத் தேவையான அறிவுரையை இக்கதை மூலம் எடுத்துரைக்கிறார்.

**வீட்டில் குடும்பத் தலைவியாக**

வெளியில் சென்று பொருளீட்டுவது ஆண்களுக்குரிய புருஷ லட்சணங்களில் ஒன்று. ''வினையே ஆடவர்க்கு உயிர்'' என்ற பாடல் வரியும் அதனை மெய்ப்பிக்கிறது. வளர்ந்து வரும் பொருளாதார உலகில் ஆண்களின் வருமானம் மட்டுமே குடும்பத்திற்குப் போதவில்லை. சிக்கன வாழ்வை மேற்கொள்ளும் குடும்பங்களில் பெண்களின் பாடு வருந்தத்தக்கது. 'திறந்த வெளிகள்' என்ற சிறுகதையில் வரும் குடும்பத் தலைவன் ரொம்பச் சிக்கனம். ஆதிக்க சக்தியாகச் செயல்பட்டு மனைவியின் விருப்பங்களை மதிப்பதில்லை. பிறந்த வீட்டில் ஓரளவு வசதியுடன் வாழ்ந்த பெண் கணவனின் கருமித்தனத்தில் துன்பப்படுகிறாள். யதார்த்த வாழ்வை நிம்மதியாக வாழ முடியவில்லை. வீட்டுக்குள்ளேயே முடங்கியிருக்கும் பெண்ணுக்கு வெளியில் சென்றுவர சுதந்திரம் இல்லாத நிலை கதை முழுவதும் சித்தரிக்கப்படுகிறது.

**"இம்மென்றால் சிறைவாசம் ஏனென்றால் வனவாசம்"**

பாரதியார் கவிதைகள்.ப.206)

என்ற பாரதியின் கவிதை அடியின் கருத்தைப் போல கணவனால் பெண் துன்பப்படுவதை அறிய முடிகிறது.

''கொஞ்சம் முன்யோசனையுடன் இருந்திருந்தால் இவ்வளவு அவலம் நடந்திருக்காது... பெண் புத்தி பின் புத்தி...! ஒரு முழம் கதம்பத்துக்குத் திண்டாட வேண்டாம்..."

(இ.க.ப.54)

என்ற வரிகளில் கணவனால் பொருளாதார ரீதியில் துன்பப்படும் பெண்ணின் குடும்ப அவலம் சுட்டப்பட்டுள்ளது.

''அடுத்த அத்யாயம்'' என்ற சிறுகதையில் பூமா திருமணத்தை எதிர் கொள்ளும் பெண்ணாக அறிமுகப்படுத்தப் படுகிறாள். திருமண வாழ்வில் வரப் போகும் துன்பங்களை சாமர்த்தியமாகச் சமாளிக்கலாம் என்ற அவளின் எண்ணம் தோற்றுப் போனதை விளக்குகிறது இச்சிறுகதை. பெண் எவ்வளவு பொறுமையாக இருந்தாலும் மாமியார், மாமனார் போன்ற உறவுகள் சும்மா விடுவதில்லை. புகுந்த வீட்டில் ஒரு கைதியாக,

சுதந்திரமற்றவளாக இருக்கும் நிலை உருவாகின்றது. தன் அம்மாவின் மூலம் தன் அறியாமையை உணர்ந்து, மாமியாரின் மேல் கோபம் கொள்கிறாள். கணவரோடு போராடும் நிலையும் அவளுக்கு உருவாகின்றது. பூமாவைப் போல் பொறுமையுள்ள பெண்களும் வீட்டுக்குள் ஏதோ ஒன்றுக்குப் போராட வேண்டிய நிலை இருப்பதை ஆசிரியர் இச்சிறுகதை மூலம் உணர்த்துகின்றார்.

"அந்த வெள்ளிக்கிழமையன்று" என்ற சிறுகதையில் புவனாவின் கணவர் கைலாசம் ஒரு நிறுவன அதிகாரி. மனைவியை எப்பொழுதும் வேலை வாங்கிக் கொண்டு இருப்பார். எதற்கெடுத்தாலும் கோபப்படும் கணவரின் முன் அழப்போவதில்லை என்ற சபதம் எடுத்தவளாய் கதை விறுவிறுப்புடன் செல்கிறது.

"ஆயிடுத்துன்னா ...?

கறி வதங்கணும்...? ரண்டே ரெண்டு நிமிஷம்

இப்பவே மணி எட்டரை..! ஒம்பதே காலுக்கு

நான் ஃபாக்டரியில் இருக்கணும்.

நான் தான் கேட்கிறேன்

...! ஓர் அரைமணி நேரம் சீக்கிரம் எழுந்துண்டா,

இந்த உடம்பு என்ன தேஞ்சா போகும்...? அப்படி

என்னடா உடம்பு..! ஒரு வெள்ளிக்கிழமை கூட ஏழு

வரைக்கிலும்..." (இ.க.ப.94)

என்ற கணவனின் கோபமான வார்த்தைகளை புவனா பொறுமையுடன் எதிர்கொண்டு, சமாளிக்கும் பெண்ணாக படைக்கப் பட்டுள்ளாள்.

"நெருஞ்சி முள்" என்ற சிறுகதையில் தர்மு மாமியை விட்டு அச்சுவெல்லம் அம்பி என்பவர் பிரிந்துவிடுகிறார். 30 ஆண்டுகளாக தர்முமாமியின் வீட்டாரும் கணவருடன் சேர்த்து வைக்கவில்லை. கணவனோடு சேர்ந்து வாழாமலே இறந்துவிடுகிறாள். மனைவியின் இறப்பை பொருட்படுத்தாத அச்சுவெல்லம் அம்பி மனைவிக்கு கொள்ளி வைக்க மறுக்கிறார். இறந்தபின் கூட கணவனால் புறக்கணிக்கப்படும் பெண்மை பரிதாபத்திற்குரியதாக சுட்டப்பட்டுள்ளது.

"ஏண்டா! உனக்குக் கேவலமாயில்லே; தாலி கட்டிய பொண்டாட்டி செத்து கிடக்கா; அவளை அப்படியே நாற விட்டுட்டு நீ கிளம்புறேயே இது உனக்கு நன்னா இருக்கா?"

"கேவலம் என்ன கேவலம்? நீ இத்தனை நாள் அனுப்பாம வைச்சிருந்தியே அதை விடவா இப்ப கேவலம் வந்துடுத்து."

என்ற உரையாடல் வழி பிறந்த வீட்டிலும் புகுந்த வீட்டிலும் பெண் கருத்துச் சுதந்திரம் இன்றி தனிமைப் படுத்தப்பட்டுள்ளதை அறியலாம்.

**அலுவலகப் பெண்மை:**

அலுவலகத்தில் வேலை பார்க்கும் பெண்ணால் வீட்டை கவனிக்க முடிவதில்லை. 'குழந்தை வளர்ப்பு' என்பது பெண்ணைப் பெருமைப்படுத்தினாலும் பொருளாதார வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க வேண்டி, பெண்ணால் அதையும் முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை. 'நடைமுறைகள்' என்ற சிறுகதையில் பானு அலுவலக வேலை, வீட்டு வேலை ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறாள். அவள் பெற்ற குழந்தையிடம் பேசுவதற்கு நேரம் கிடைப்பதில்லை. அம்மா அப்பா இருவரின் அரவணைப்பிற்கு ஏங்கி அக்குழந்தை இறந்துவிடுகிறது.

'கடமை' என்ற சிறுகதை விதவை மறுமணத்தை எடுத்துரைக்கிறது. மகன் சந்துரு இறந்தவுடன் மருமகளுக்கு மறுமணம் செய்து வைக்கின்றார் அவளின் மாமனார்.

**கோரிக்கை அற்றுக் கிடக்குதண்ணே இங்கு**
**வேரில் பழுத்த பலா மிகக்**
**கொடியதென றெண்ணிடப் பட்ட தண்ணே குளிர்**
**வடிகின்ற வட்ட நிலா.**

என்ற பாவேந்தரின் கோரிக்கையை நிறைவேற்றுகிறார் கதையில் வரும் மாமனார் பாத்திரம்.

"நீங்க அப்படிச் சொல்லக் கூடாது. அவளுக்கும் வேற போக்கிடம் இல்லை. அந்த நாளா இருந்தா அழ அழ அடிச்சு, ஒரு மூலையிலே உட்கார்த்தி வைச்சுடுவா... நந்திக்குத் தலையிலே ஆணி அடிச்சு. 'இந்த உசரம் தான் உனக்கு இனிமே நீ உசரக் கூடாது' ங்கற மாதிரி அவ்வளவு தான்... அப்புறம் எவ்வளவு சமர்த்தா இருந்தாலும், சமையற் கட்டிலேயும் கிணத்தடியிலேயும் கிடந்து உழல வேண்டியது தான்.. இப்ப காலப் போயிடுத்துன்னாலும்... அதை நீங்களே செஞ்சு வைச்சது அதிசயம் தான்... அப்படி ஒரு மனம் எல்லோருக்கும் வந்துடாது..."

என்ற வரிகள் விதவை மறுமண முற்போக்குச் சிந்தனையை எடுத்துரைக்கின்றன. தன் மகன் இறந்தவுடன், மருமகளை இன்னொருவனுக்குத் திருமணம் செய்து வைத்து புரட்சி செய்த மாமனார் பாத்திரத்தை ஆசிரியர் பாராட்டும் விதமாக மேற்கண்ட கதையைப் படைத்துள்ளார்.

இவ்வாறு ஜி.நாராயணன் தன் சிறுகதைகளில் பெண்மையைப் பல நிலைகளில் சித்தரித்துள்ளார். படித்த பெண்ணின் முற்போக்கும், குடும்பத் தலைவியாக வாழும் பெண்ணின் பொறுமை குணமும், அதிகாரமுள்ள கணவனுக்கு அடங்கி வாழும் பெண்ணின் தன்மையும், அலுவலகப் பெண்ணின் வேலைச்சுமை பிள்ளை வளர்ப்பைப் பாதித்து, இயலாமையில் ஏங்கும் தாயின் உள்ளமும் கதைகளுக்குக் கருவாகி நிற்கின்றன. இவ்வாறு ஆண்களுக்கு நிகரான பெண்களின் பலதரப்பட்ட குணங்கள் அவர்களின் சமுதாய இருப்பை பறைசாற்றுவனவாக இருப்பதில் வியப்பில்லை.


## CALL FOR PAPERS

We have the great pleasure to inform you that we are bringing out an Edited Book on titled **"Emerging Trends in Financial System".** The Book will be published by a Delhi based reputed publisher with ISBN Number. We would like invite you to share your ideas, thoughts, and initiatives taken on the above topic. Hence, we are requesting the learned researchers like you to send research paper(s) on any topic(s) in these areas.

Please intimate this invitation to other colleague's / staff / friends and Research Scholars who have made significant contribution in these areas and notify the same in the academic notification for wide publicity. We request you to kindly send your article to be included in this book. You may send you article to tamilselp@yahoo.in

Look forward for your contribution on or before 30th December 2015.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# வைரமுத்துவின் கவிதைகளில் நாட்டுப்புறக் கதைப்பாங்கு

**முனைவர் மா. இராமச்சந்திரன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு-52.

**முகப்புரை**

இருபதாம் நூற்றாண்டில் இலக்கிய வகைகளுள் மிகச் சிறந்த இலக்கிய வகையாகக் கவிதை தன்னை நிரூபித்துக் காட்டியுள்ளது. எளிமையாகக் கருத்துக்களைப் பதிவு செய்வதற்கு இக்காலக் கவிதைகள் இடமளிக்கின்றன. எளிமையும், இனிமையும் கொண்ட இக்காலக் கவிதைகள் வாசகர்களிடம் மனப் பதிவைச் செய்வதற்கு வலிமையுடையனவாக விளங்குகின்றன. பண்டிதர்களுக்கு மட்டுமே உரித்தானதாய் இருந்த கவிதையைப் பாரமரர்களுக்கும் கொண்டு சென்று சமூக அடையாளத்தைச் சுட்டிக்காட்டியதோடு மட்டுமல்லாமல் சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்தவும் பாரதி கைக்கொண்ட ஆயுதம் கவிதை என்று சொன்னால் அது மிகையாது. புதுக்கவிதைக்கான வித்தை விதைத்தவன் பாரதி. பாரதிக்கு பின் எண்ணற்ற கவிஞர்கள் புவியில் தோன்றியுள்ளனர். ஒவ்வொருவரும் தங்களின் கருத்தாழ வெற்றிக்கு எத்தனையோ உத்திகளைப் பயன்படுத்தியுள்ளனர். அவ்வகையில் சமகால கவிஞராய் விளங்கும் வைரமுத்துவின் கவிதைகளில் பொதிந்து கிடக்கும் நாட்டுப்புறக் கதைப்பாங்கை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

ஒவ்வொரு படைப்பாளியும் தனக்கான ஒரு தனித்த அடையாளத்தைக் கொண்டிருப்பான். தான் சொல்ல வரும் கருத்தை எளிமையாகவும் அதே சமயம் ஆழமானதாகவும் பதிவு செய்வதற்கு அவரவர் பயன்படுத்தும் உத்திகள் உகந்தவையே. தொன்மம், குறியீடு, படிமம், முரண், அங்கதம் என்று ஏராளமான உத்திகள் இன்று கவிஞர்களால் அவரவர் கவிதைகளில் பயன்படுத்தப் படுகின்றன. அவற்றுள் நாட்டுப்புறக் கவிதை வடிவம் என்ற வட்டார வழக்குச்சொல் உத்தியும் சிறப்பான இடம் வகிக்கிறது. மண்ணையும், மக்களையும் ஒருங்கிணைந்த மானுடத்தைப் பாடுவதற்கு இவ்வழக்குச் சொல் உத்தி தன்னிகரற்றதாய் விளங்குகிறது.

**கதையும் - கவிதையும்**

கவிதை என்ற சொல்லை ஆய்ந்து நோக்கினால் அதற்குள் கதை என்ற சொல்லும், விதை என்ற சொல்லும் ஒளிந்து கிடப்பதை அறியமுடிகிறது. அதாவது கதையோ, கவிதையோ எதுவாயினும் படைப்பாளியின் எண்ண விதையானது இன்றியமையாதது. கதை, கவிதை இரண்டும் தனிப்பட்ட இலக்கிய வடிவங்களாக வகைமைப்படுத்தப்பட்டாலும் சில சமயங்களில் கவிதைக்குள்ளும் கதை சொல்லும் உத்தியையும் காணமுடிகின்றது.

**ஊமைப்புலம்பல்**

நாட்டுப்புறக் கவிதையில் கதை சொல்லும் பாங்கில் கவிஞர் வைரமுத்துவின் உயர்ந்த ஆளுமையை எவரும்

மறுப்பதற்கில்லை. அவ்வகையில் தனது 'ஊமைப்புலம்பல்' என்ற கவிதையில் மணவயது வந்தும் மணமாகாத பெண்ணின் மன நிலையை மண் வாசனை தவழும் வார்த்தைகளோடு பதிவு செய்திருக்கிறார். கவிஞர்.

அல்லிப்பூ தாமரைப்பூ
ஆயிரம்பூப் பூத்தாலும்
கல்யாணப் பூவெனக்குக்
காலமெல்லாம் பூக்கலையே

என்ற ஏக்கக் குரலாகவும் வேதனைக் குரலாகவும் கவிதையைத் தொடங்குகிறார்.

உரிய காலத்தில் பெண்ணிற்கு திருமணம் நடைபெறாவிட்டால் அவள் சமூகமெனும் சந்தையில் விற்காத சரக்காக பல வண்ண வார்த்தைகளால் வார்க்கப்பட்டு விடுவாள். பெற்றவர்களின் சலிப்பிற்கும் மற்றவர்களின் வெறுப்பிற்கும் அடையாளப் பொருளாய் அவள்தம் அவதாரம் தோன்றும் என்பதை,

பெத்தவங்க சலிச்சாங்க
மத்தவங்க சிரிச்சாங்க
விக்காத சரக்குன்னு
வீதியெல்லாஞ் சிரிச்சாங்க

என்ற வரிகளில் வெளிப்படுத்துகிறார்.

இத்தகைய நிலையில் வாழ்வில் மகிழ்ச்சிக்கும், சிரிப்பிற்கும் இடமில்லாமல் இருக்கும் அவளது நிலையை

பருத்திச் சொள போலப்
பாவிமக நாஞ்சிரிச்சு
வருஷம் எட்டாச்சு
வந்ததெல்லாம் நோயாச்சு

என்று பாடுகிறார்.

வாழ்க்கையில் என்றேனும் ஒருநாள் மண வாழ்வில் கால்பதிப்பேன் இல்லையெனில் மரணமே வாழ்வில் நிலையானது என்பதை நிரூபிப்பேன் என்று விரக்திக் குரலாகவும், தன் வாழ்க்கையின் கனவுகள் நனவுகளாக மாறாத ஏக்கக் குரலாகவும் ஒலிப்பதை,

இருக்கட்டும் இருக்கட்டும்
எனக்கும் ஒரு நாளிருக்கு
எதுவும் நடக்கலேன்னா
எருக்கிலையில் பாலிருக்கு
உறக்கமில்லை என்றாலும்
ஒரு கோடி கனவிருக்கு
இறக்கவில்லை என்றாலும்
எனக்கெங்கே உசிரிருக்கு

என்பதாக வெளிப்படுகிறார்.

**ஏண்டியம்மா குத்தவச்ச?**

மூத்த குடியாள் மகள் பூப்பெய்தியபோது இளைய குடியாள் அழுது புலம்புவதாக எழுதப்பட்ட இந்தக்கவிதை நாட்டுப்புற வழக்கிலும் கவிதைக்குள் கதை சொல்லும் நிலைப்பாட்டிலும் சிறப்பானது.

ஆடு மேய்க்கச் சென்ற சிறுமி பூப்பெய்தியபடி திரும்புகிறாள். பெற்றெடுத்த தந்தையோ வயது முதிர்ந்தவனாய் வெறுமனே உயிரைச் சுமக்கும் கூடாகக் காட்சியளிக்கிறான். அன்னையோ உடல் இளைத்துத் தளர்ந்து கருவாடாகக் காய்ந்து கிடக்கிறாள். சித்தியின் சாமர்த்தியத்திலும், சிறுமியின் பங்களிப்பிலும் குடித்தனம் சீராய் நகர்ந்து கொண்டிருக்கிறது. வறுமை ஒரு பக்கம் அவர்களை வாட்டுகிறது. இந்நிலையில் பூப்பெய்தி திரும்பிய மகளை ஆற்றாத தாயொருத்தி (இளையவள்) வசைபாடுவதாக இக்கவிதையை கவிஞர் புனைந்துள்ளார்.

அய்யோ அய்யய்யோ
அடிவயிறு எரியுதடி
பிஞ்சு பழுத்ததென்ன
பேரிழவு வந்ததென்ன
நஞ்சு கலந்ததென்ன
நாசமாப் போனதென்ன

என்ற வரிகளிலும்

பாவாட சட்டையே
பரமசிவன் கொடுத்த வரம்
சக்களத்தி மகளே நான்

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

தாவணிக்கு என்ன பன்ன? என்ற வரிகளிலும் சிற்றன்னையின் மனக்குமுறலையும், வேதனையையும், வெறுமையையும் வெளிப்படுத்துகிறார்.

**இளமையும் வறுமையும்**

வாழ்வில் இளமையும் வறுமையும் ஒன்று சேரக் கூடாத காரணிகள் என்பர். வறுமையில் வாழும் குடும்பத்தில் சிறுமி பூப்பெய்தியதும் சிற்றன்னையானவள் அவளது இளமையையும் வறுமையையும் ஒருங்கிணைந்துச் சொல்லிப் புலம்புவதாக,

வண்டிமையில் கண்ணெழுதி
வாழநாரில் தலமுடிஞ்சு
ஆண்ட வந்த சிறுமிக்கு
ஆதரவு தந்து வந்தேன்
சந்தையில் ரிப்பனுக்கும்
சாயங்காலப் பவுடருக்கும்
செலவிழுக்க வந்தவளே
தெய்வம் ஒன்று கேக்கலையோ

என்று பாடியிருப்பது வேதனையின் உச்சத்தை மிச்சமின்றி சொல்லிவிடுகிறது. மேலும் பெண்ணாய்ப் பிறந்தவள் பெரியவளாய்ச் சமைவது என்பது பூமியில் மொட்டு மலர்வதைப் போன்று இயல்பானதே, இயற்கையானதே. இருப்பினும் சிற்றன்னையின் புலம்பலுக்குக் காரணமாக,

பதினாறோ பதினேழோ
பாதகத்தி குத்தவச்ச
பதராம இருந்திருப்பேன்
பந்தக்கால் போட்டிருப்பேன்
பதினாலு வயசுக்கே
பத்து மாசம் இருக்கையில
குதிர்போலக் குத்தவச்சாக்
குத்தாம என்னபண்ண?

என்று பாடுகிறார்.

இதில் நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாகவே பூப்பெய்திய பெண்ணைக் குறை சொல்லும் வேளையில் எத்துனை வறுமையாயினும் பெண்பிள்ளை வளரும் வீட்டில் உரிய காலத்தில் சில ஆபரணச் சேமிப்பைச் செய்ய வேண்டியதே வாழ்க்கையின் எதார்த்தம் என்பதையும் கவிஞர் ஒருங்கே வெளிப்படுத்துகிறார். இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் தலைமுழுகி நாளையே ஆடுமேய்க்கச் சென்றுவிடு என்பதும், ஆடு மேய்க்கையில் எங்கும் நிற்காதே, நீ ஆளான விசயத்தை ஆட்டுக்குஞ் சொல்லாதே என்பது குடும்பம், குழந்தை இரண்டின் மீதான தாயின் அக்கறையை அழகாய்க் காட்டுகிறது.

**தோழிமார் கதை**

இரு தோழிகளுக்கு இடையிலான அன்பை இளம் பருவம் முதல் இளமைப் பருவம் வரை எடுத்துச் சொல்லும் கவிதை தோழிமார் கதை. தோழிகள் இருவரும் ஆற்றங்கரையோரம் மணல் வெளியில் விளையாடி பொழுதைப் போக்கிய காலம் தொடங்கி மற்றவரின் மனைவியாய், பிள்ளைகளின் தாயாய் தத்தம் பரிமாண மாற்றம் வரை உறவுகளுக்குள் இழையோடி நகர்கிறது.

**இளம்பருவம்**

தோழிகள் இருவருக்கும் இடையிலான இளம்பருவ நிகழ்வுகளைப் பாடும் கவிஞர்

புங்க மரத்தடியில்
பூவிழுந்த மணல்வெளியில்
பேன்பார்த்த சிறு வயது
பெண்ணே நினைவிருக்கா

என்று தொடங்குகிறார்.

விரத காலத்தில் பசிப்பதைப் போன்று மருதாணி பூசப்பட்டதும் முதுகு அறிப்பதும் நம் வாழ்வின் அனுபவ காலத்தால் அறியப்பட்ட உண்மையே மருதாணி பூசிய தோழியரின் இவ்வனுபவத்தை,

மருதாணி வச்சவெரல்
மடங்காம நானிருக்க
நாசமாப் போன
நடுமுதுகு தானரிக்க

சுருக்கா நீ ஓடிவந்து
சொறிஞ்சகதை நெனவிருக்கா?

என்று பதிவு செய்கிறார்.

எதிர்காலக் கவலையில்லாமல் வண்ணமயமாய் பொழுதைக் கழிக்கும் சிறுமிகளின் செயல்களை,

கருவாட்டுப் பானையில
சிறுவாட்டுக் காசெடுத்து
கோனார் கடைதேடிக்
குச்சு ஐசு ஒன்று வாங்கி
நான்திங்க நீகுடுக்க
நீ திங்க நான் குடுக்க

என்று பாடுவது நம் இளமைப் பருவத்தை நோக்கி பின்னோக்கி ஓடும் நினைவுச் சக்கரங்கள்.

**இளமைப் பருவம்**

இளம் பருவத்தில் ஒன்றாய் இருந்து, ஒன்றாய்த்திரிந்து இருந்த சிறுமிகள் அவர்தம் இளமையிலும் ஒன்றாய் இருக்கவே, ஒன்றாய் வாழவே இருந்த நிலையை,

ஒண்ணா வளந்தோம்
ஒரு தட்டடில் சோறு திண்ணோம்
பிரியாதிருக்க ஒரு
பெரியவழி யோசிச்சோம்
ஒரு புருசன் கட்டி
ஒரு வீட்டில் குடியிருந்து
சக்களத்தியா வாழச்
சம்மதிச்சோம் நெனவிருக்கா

என்ற வரிகளில் வெளிப்படுகிறார்.

தோழியின் இச்சிந்தனை யதார்த்த வாழ்விற்கு முரணானது. வாழ்வைப் பற்றிய தெளிவற்ற சிந்தனையின் வெளிப்பாடு. ஆனால் பரிசுத்த அன்பின் வெளிப்பட்டது. வாழ்வின் எதார்த்தத்தை அறிந்த தோழிகள் இருவேறு பக்கம் வாழச் சென்றுவிட்டனர். இளமையில் அவர்கள் நிழலாடிய மரம் வீழ்ந்துவிட்டது இருப்பினும் இன்னும் தோழமை உணர்வு நெஞ்சில் கணக்கிறது என்பதாகக் கவிதை கதை சொல்லி முற்றுப் பெறுகிறது.

**பார்வை நூல்:**

‘வைரமுத்து - கவிதைகள்’


## ஆசிரியர் குழுவில் இடம்பெற அழைப்பு

தமிழாய்வுச் சங்கமம் ஆய்விதழின் ஆசிரியர் குழுவில் இடம்பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விருப்பமுள்ளவர்கள் தங்களின் சுய குறிப்பு மற்றும் தமிழாய்வுச் சங்கமம் இதழுக்கு செய்யவிருக்கும் பங்களிப்பு பற்றி எங்களுக்கு எழுதி அனுப்பலாம்.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# பட்டினப்பாலையில் செய்திப்பரிமாற்றம்

**கு.வளர்மதி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ்.எஃப்.ஆர்.மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.

## முகப்புரை

நம் மனதில் உள்ள எண்ணங்களைப் பிறருக்குப் புலப்படுத்த செய்திப்பரிமாற்றம் இன்றியமையாததாகின்றது. செய்தி என்பதற்கு ‘எண்ணம், விருப்பம், அபிப்பிராயம், நினைவு, சிந்தனை’ என்று அகராதிகள் விளக்கம் தருகின்றன. ஒருவர் தம் கருத்தினைப் பிறர் மனம் ஏற்கும்படி பரிமாறும் முறையே ‘செய்திப்பரிமாற்றம்’ எனப்படும். தனிமனிதன் கூட்டுவாழ்க்கையாக, சமுதாயமாக வாழத் தொடங்கிய போது, மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆதிமனிதன் மொழி தோன்றும் முன்பு உடலசைவுகள், ஒலிகள், சீழ்க்கை ஒலி, கூவியழைத்தல், புகையெழுப்பல், பறையறைதல், மணியடித்தல், தீயம்புகளை வானத்தில் எறிதல் போன்றவற்றின் வாயிலாகத் தன்னைச் சுற்றியுள்ள வட்டார மக்களுக்குத் தேவையான செய்திகளைத் தெரிவித்தான். செய்தி மூலத்திலிருந்து செல்லும் ஒரு செய்தி, பெறுநரிடம் சென்றடைந்து அவரிடம் ஏதேனும் ஒரு மாற்றத்தை உண்டாக்கினால், செய்தியானது பரிமாறப்பட்டுள்ளது என்பது பொருளாகும். இந்த அடிப்படையில், பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான பட்டினப் பாலையில் செய்திப்பரிமாற்றம் அமைந்துள்ள முறையானது இக்கட்டுரையில் ஆராயப் படுகின்றது.

### விலை கூறி விற்றல்

பட்டினப்பாலையில் ‘விலை கூறி விற்றல்’ என்ற முறையில் செய்திப் பரிமாற்றத்தைக் காண முடிகிறது. தன்னிடம் உள்ள ஒரு பொருளுக்கு விலையினை நிர்ணயித்து, அதனை வாங்குவோரிடம் எடுத்துரைத்து விற்பனை செய்தலே, ‘விலை கூறி விற்றல்’ ஆகும்.

வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி
பணைநிலைப் புரவியின் அணைமுதல் பிணிக்கும்
(ப.பா. 29-31)

இவ்வரிகளில் வெள்ளை உப்பை, விலை கூறி விற்றுப் பண்டமாற்றாகப் பெற்ற நெல்லோடு வந்த மிகப் பெரிய படகுகளை, உப்பங்கழியின் கரையில் நிற்கும் குதிரைகளைப் போல் கட்டும் தறிகளில் கட்டியுள்ளனர் என்று விலை கூறி விற்றலும், பண்டமாற்ற முறையும் இடம் பெற்றுள்ளது. இங்கு ‘வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி’ என்ற வரியில், வெள்ளை உப்பை விற்போரிடமிருந்து வாங்குவோருக்குச் செய்தியானது பரிமாறப்பட்டுள்ளது புலனாகின்றது.

தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும் (ப.பா. 209-211)

இங்கு, காவிரிப்பூம்பட்டினத்து வணிகர்கள் பொருட்களை விலை கூறி விற்றலைக் காண முடிகிறது. விற்போரிடமிருந்து

வாங்குவோருக்குச் செய்தி பரிமாறப்பட்டுள்ளமையை அறிய முடிகிறது.

**இலச்சினைகள் (சின்னங்கள்)**

பட்டினப்பாலையில் பண்டசாலை முன்றில் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது. பண்டசாலையில் வந்து குவிந்த பல்வேறு பொருட்களையும் சுங்கச்சாவடியில் வைத்து புலி இலச்சினையைப் பொறித்து வெளியே அனுப்பினர் என்ற செய்தி காணப்படுகிறது.

> அளந்தறியாப் பலபண்டம்
> வரம்புஅறியாமை வந்துஈண்டி
> அருங்கடிப் பெருங்காப்பின்
> வலியுடை வல்அணங்கினோன்
> புலிபொறித்துப் புறம்போக்கி. (ப.பா.131 – 135)

என்ற வரிகளில் பண்டசாலைப் பொருள்களுக்குப் புலி இலச்சினை பொறிக்கப்பட்டது என்பதால், சோழர்கள், சோழநாடு போன்றவை நம் நினைவுக்கு வருகின்றன. சோழர்களின் குறியீடு, அவர்களின் சின்னம் 'புலி' என்ற செய்தியுடன், சோழர்களின் காவிரிப்பூம்பட்டினத்தின் வணிகவளம் பற்றிய செய்தியும் இங்கு பரிமாறப்பட்டுள்ளது. 'புலிஇலச்சினை' என்பது சோழர்களுக்குரிய குறியீடாக இருப்பதால், 'புலிஇலச்சினை' என்ற சின்னத்தின் வாயிலாக சோழர்களின் பெருமையாகிய செய்தி இங்கு பரிமாறப்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

**இசைக்கருவிகளின் ஒலி - விழா**

பட்டினப்பாலையில் முருகவேளை வழிபட்டு வெறியாடும் மகளிர், வங்கியம் இசைக்க, குழல் ஒலிக்க, யாழ் முரள, முழவுகள் அதிர, முரசுகள் முழங்க விழா எடுத்தனர் என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. விழாக்கள் இடையறாது நடந்து கொண்டிருக்கும் அகன்ற கடைத்தெருக்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் காணப்படுகின்றன.

> வெறியாடு மகளிரொடு செறியத் தாஅய்க்
> குழல்அகவ யாழ்முரல,
> முழவுஅதிர முரசுஇயம்ப,
> விழவுஅறா வியல்ஆவணத்து (ப.பா.155 – 158)

என்ற வரிகளின் வாயிலாக, இசைக்கருவிகளின் ஒலியானது விழா கொண்டாடப்படுகிறது என்ற செய்தியை எடுத்துரைப்பதை உணர முடிகிறது. இங்கு, இசைக்கருவிகள் ஒலித்தாலே, திருவிழா கொண்டாடப்படுதல் என்ற செய்தி பரிமாறப்பட்டுள்ளது.

> முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
> திரிபுரி நரம்பின் தீந்தொடை ஓர்க்கும்
> பெருவிழாக் கழிந்த பேஎம்முதிர் மன்றத்து
> (ப.பா.253 – 255)

இவ்வரிகளின் வாயிலாக, காவிரிப் பூம்பட்டினத்து மன்றங்களில் அறிவுவாய்ந்த கூத்தர், முழவுகள் முழங்க, யாழிசை நரம்புகள் ஒலிக்க, இனிய பாடல்களைப் பாடிப் பெருவிழா கொண்டாடினர் என்ற செய்தி எடுத்துரைக்கப் பட்டுள்ளது. இங்கு, இசைக்கருவிகள் முழங்கினாலே, 'திருவிழா கொண்டாட்டம்' தான் என்ற செய்தி புகார் நகர மக்களுக்குப் பரிமாறப்பட்டுள்ளமை தெளிவாகிறது.

**கொடிகள்**

காவிரிப்பூம்பட்டினத்தின் கடைத் தெருக்களில் 'கொடிகள்' பல அசைந்து செய்திகளைத் தெரிவித்ததைப் பட்டினப் பாலையில் பார்க்க முடிகிறது. கடைத் தெருக்களில் விற்பனை செய்யப்படும் பொருட்களைப் பற்றிய அறிவிப்பு கொடிகளும், பொருட்களின் விலை விவரங்கள் பற்றிய கொடிகளும், பல்வேறு வண்ணங்களிலும் வடிவங்களிலும் காவிரிப்பூம்பட்டினத்தில் காணப்பட்டன. துணியால் செய்யப்பட்ட கொடிகள் பண்டைக்காலத்தில் செய்திப் பரிமாற்ற முறைகளுள் ஒன்றாக இருந்தது.

> மையறு சிறப்பின் தெய்வம் சேர்த்திய
> மலர்அணி வாயில் பலர்தொழு கொடியும்,
> வருபுனல் தந்த வெண்மணல் கான்யாற்று
> உருகெழு கரும்பின் ஒண்பூப் போலக்
> கூழுடைக் கொழுமஞ்சிகை
> தாழுடைத் தண்பணியத்து
> வால்அரிசிப் பலிசிதறிப்

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

பாகு உகுத்த பசுமெழுக்கின்
காழ் ஊன்றிய துகிற்கொடியும்,
பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ்குறித்து எடுத்த உருகெழு கொடியும்
(ப.பா.159 - 171)

இவ்வரிகளில் குற்றமற்ற சிறப்பினையுடைய தெய்வம் இருக்கும் மலரால் அழகு செய்யப் பெற்ற திருக்கோயில் வாயில்களில், பலரும் தொழும் கொடிகளுடனும், வீரர்களுக்குக் கோயில் எழுப்பினர். சந்தனக் குழம்பைத் தரையில் மெழுகி, அதில் வேலின் காம்பினைக் கால்களாக நட்டு, கிடுகுகளால் வேய்ந்து, அதன்மேல் துகில் கொடியை அமைத்திருந்தனர். படையலாகப் பல கூடைகளில் சோறு வைத்திருந்தனர். கீழே விரித்த உடையில் பணியாரங்களைப் பரப்பியிருந்தனர். இவற்றிற்குத் தூய்மையான வெண்மையான அரிசியைப் பலியாகத் தூவினர். அத்துகில் கொடி, காட்டாற்றால் வந்த வெள்ளத்தில் கரையில் சேர்ந்த வெண்மணலில் வளர்ந்த கரும்பின் பூப்போல் இருந்தன. பலவாகிய கேள்வியாலும், பல நூற்களைக் கற்று முழுஅறிவைப் பெற்ற நல்ஆசிரியர்கள், வாது செய்யக் கருதி உயர்த்திய பிறர் அஞ்சுதற்குக் காரணமாகப் பட்டிமன்றக் கொடிகளும் காவிரிப்பூம்பட்டினத்தின் கடைத்தெருக்களில் இருந்தன என்ற செய்தி கூறப்பட்டுள்ளது.

இங்கு, கொடிகள் கோயில்களில் புனிதமாகக் கருதப்பட்டு, அமைக்கப்பட்டிருந்தன என்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது. கோயில்கொடிகள், புனிதத்தின் குறியீடு என்ற செய்தியைப் பரிமாறுகின்றன. பட்டிமன்றங்களில் கொடிகள் அமைக்கப்பட்டிருந்தன. அவை தருக்கம் நடைபெறும் இடங்கள் என்ற அறிவிப்பை பொதுமக்களுக்குத் தந்தன. பட்டிமன்றக் கொடிகள் 'தருக்கம் நடைபெறும் இடம்' என்ற செய்தியைப் பரிமாறியுள்ளதனைக் காண முடிகிறது.

வெளில் இளக்கும் களிறுபோல
தீம்புகார்த் திரைமுன்துறைத்
தூங்குநாவாய் துவன்றுஇருக்கை
மிசைக்கூம்பின் நசைக்கொடியும்,
மீன்தடிந்து விடக்குஅறுத்து,
ஊன்று பொரிக்கும் ஒலிமுன்றில்
மணற்குவை, மலர்சிதறிப்
பலர்புகுமனைப் பலிப்புதவின்
நறவுநொடைக் கொடியோடு
பிறபிறவும் நனிவிரைஇப்
பல்வேறு உருவின் பதாகை நீழல்.
(ப.பா.172 - 182)

இவ்வரிகளில் இனிமையான புகார் நகரின் கடல் முன்துறையில் அசைந்து கொண்டிருக்கும் மரக்கலங்கள் நின்றன. அவை தறியில் கட்டப்பெற்ற களிறுகள் போல இருந்தன. அம்மரக்கலங்களின் பாய்மரத்தின் மேல், பலரும் விரும்பிப் பார்க்கும் கொடிகள் அசைந்து கொண்டிருந்தன. கடற்கரையில் கள்ளுக் கடைகள் இருந்தன. அவற்றில் கள்விலை பற்றிய கொடிகள் இருந்தன. மீனை வெட்டி, இறைச்சியையும் அறுத்து, அவ்வூன்களைப் பொரித்தனர். மணலைக் குவித்து மலரைச் சிதறி, கள்ளுக்கடைத் தெய்வத்திற்குப் பலியாகக் கொடுத்தனர். பிற பண்டங்களை விற்கும் கடைகளிலும், பல்வேறு வண்ணங்களில், வடிவங்களில் கொடிகள் அசைந்து கொண்டிருந்தன என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. இங்கு, கள்விலை பற்றிய கொடிகள், பிற பண்டங்களின் விற்பனைக் கொடிகள் என்று கொடிகளானவை விலை, விற்பனை பற்றிய செய்திகளைப் பொது மக்களுக்குப் பரிமாறின என்பது தெளிவாகிறது.

**அகநிலைச் செய்திப்பரிமாற்றம் :**

அகநிலைச் செய்திப்பரிமாற்றத்தில் தனக்குத் தானே - தன்னுடைய நெஞ்சிடம் செய்தியைப் பரிமாறிக் கொள்வது 'அகநிலைச் செய்திப்பரிமாற்றம்' ஆகும். பட்டினப் பாலையில் தலைவன், தலைவியை விட்டுப் பிரியமாட்டேன் என்று தன்னுடைய நெஞ்சிடம் பிரிவாற்றாமைச் செய்தியைப் பரிமாறுகின்றான்.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வார்இரும் கூந்தல் வயங்குஇழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே (ப.பா.218 - 220)

இங்கு, பொருள் வளமிகு காவிரிப் பூம்பட்டினத்தையே பெறுவதாக இருந்தாலும் தலைவன், தலைவியை விட்டுப் பிரியமாட்டேன் என்ற செய்தியைத் தன்னுடைய நெஞ்சிடம் பரிமாறுவதனை உணர்ந்து கொள்ள முடிகிறது.

**மகளிரைச் சிறைப்பிடித்தல் :**

பண்டைத் தமிழகத்தில் வீரத்தின் வெளிப்பாடாக போர் அமைந்திருந்தது. போரில் பகைவரை எதிர்த்து வெற்றி பெறுவது வீரமாகக் கருதப்பட்டது. பகைவரை வென்றபோது அந்நாட்டு மகளிரைச் சிறைப்பிடித்து வருவது பண்டைய வழக்கம். அம்மகளிர் ‘கொண்டிமகளிர்’ எனப்பட்டனர். அம்மகளிர் திருக்கோயில் பணி செய்வர். ‘பகைவர் நாட்டு மகளிரைச் சிறைப்பிடித்து வருதல்’ என்பதன் வாயிலாக அம்மன்னன் போரில் வெற்றி பெற்று விட்டான் என்ற செய்தி நாட்டில் உள்ளோர் அனைவருக்கும் புலனாகி விடுகிறது.

கொண்டி மகளிர் உண்துறை மூழ்கி (ப.பா.244)

இவ்வரியில் கொண்டிமகளிர் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது. இங்கு, ‘கொண்டிமகளிர்’ என்பதன் மூலம் ‘வெற்றி’ என்ற செய்தி பரிமாறப்பட்டுள்ளதை உணர முடிகிறது.

**சிவந்த கண்கள் :**

பட்டினப்பாலையில் திருமாவளவனின் வெற்றிச் செயல்களை எடுத்துரைக்கும் போது, அவன் தன் பகைவர்களை சிவந்த கண்களால் சினந்து நோக்க, அவர்கள் அழிந்துபட்டனர் என்ற செய்தி காணப்படுகின்றது.

மாத்தானை மறமொய்ம்பின்
செங்கண்ணால் செயிர்த்து நோக்கிப்
புன்பொதுவர் வழிபொன்ற
இருங்கோவேள் மருங்குசாய (ப.பா.279 - 282)

என்ற வரிகளில், ‘செங்கண்ணால் செயிர்த்து நோக்கி’ என்ற வரியின் வாயிலாகத் திருமாவளவனின் கோபம் புலப்படுகிறது. ‘கண்சிவத்தல்’ என்பது ‘கோபத்தின் வெளிப்பாடு’ என்ற செய்தி இங்கு தெளிவாக்கப் பட்டுள்ளது. திருமாவளவனின் ‘சிவந்த கண்கள் - மிகுந்த கோபம்’ என்ற செய்தியை அவனுடைய பகைவர்களுக்கு நன்கு பரிமாறுகின்றன.

**தொகுப்புரை :**

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றான பட்டினப்பாலையில் ‘விலை கூறி விற்றல், இலச்சினைகள் (சின்னங்கள்), இசைக்கருவிகளின் ஒலி விழா, கொடிகள், அகநிலைச் செய்திப்பரிமாற்றம், மகளிரைச் சிறைப்பிடித்தல், சிவந்த கண்கள் போன்றவை செய்திப் பரிமாற்றத்திற்குச் சான்றுகளாக அமைந்துள்ளன. காவிரிபூம்பட்டினத்தின் கடைத்தெருக்களில் குவிந்துள்ள பொருட்களை விலை கூறி விற்பனை செய்யும் போது கொடுப்போருக்கும் கொள்வோருக்கு மிடையே செய்திப் பரிமாற்றம் சிறந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. காவிரிபூம்பட்டினத்தின் கடைத்தெருக்களில் குவிந்துள்ள பொருட்களில் புலி இலச்சினையைப் பொறித்தனர் என்பது, ‘சோழநாட்டுப் பொருட்கள்’ என்ற செய்தியைப் பறைசாற்றுகின்றது. புகார் நகர மக்களிடையே இசைக்கருவிகளின் ஒலியானது ‘திருவிழா’ என்ற செய்தியைப் புலப்படுத்துகின்றது. புகார் நகர கடைத்தெருக்களில் காணப்பட்ட பல்வேறு கொடிகளும் ‘விலை, விற்பனை’ போன்ற செய்திகளைப் புகார் நகர மக்களிடம் பரிமாறின. ‘மகளிரைச் சிறைப்பிடித்தல்’ என்பதால் ‘வெற்றி’ என்ற செய்தி பரிமாறப்பட்டுள்ளது. திருமாவளவனின் சிவந்த கண்கள், கோபத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ளன. இவ்வாறு, பட்டினப்பாலையில் செய்திப்பரிமாற்றமானது, செய்தியைத் தெரிவிப்பவருக்கும் செய்தியைப் பெறுவோருக்குமிடையே எந்தவித தடங்கலும் இன்றி சிறந்த முறையில் அமைந்துள்ளது.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# அம்மையார் பாடல்களில் சைவசித்தாந்தம்

**ரா. விஷ்ணு பிரியா**
உதவி பேராசிரியர், தமிழ்த்துறை
நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தேனி

**முகப்புரை**

சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும். திருமுறைகள் பாடிய ஆசிரியர்கள் இருபத்தேழு பேர் ஆவார். அவர்களுள் பெண்பாற்புலவர் ஒருவரேஆவார். இவர் திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம். திரு இரட்டை மணிமாலை, அற்புத திருவந்தாதி என்ற மூன்று பிரபந்தங்களைப் பாடியுள்ளார். இப்பிரபந்தங்கள் சைவத் திருமுறையில் பதினோரந் திருமுறையாக அமைந்துள்ளது. சைவசித்தாந்த கருத்துகளுக்கு அடிப்படைக் கருவூலங்கள் திருமுறைகளே ஆகும். மேலும் சைவசித்தாந்தம் காரைக்கால் அம்மையார் பாடல்களில் இடம் பெற்றுள்ளதை ஆய்வதாக இவ் ஆய்வு அமைகிறது.

**சைவசித்தாந்தம்**

சிவபெருமானை முழு முதற் கடவுளாகக் கொண்ட சமயம் சைவம் ஆகும். சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்குவதுடன் நுண்பொருளையும் உணர்த்துவது சைவ சித்தாந்தம் ஆகும். சைவசித்தாந்தம் எனும் பெயரைக் கூறும் முதல் தமிழ் நூல் திருமந்திரமே யாகும் என்பதை

> தொற்பதமேவிதுரிசற்றுமேலான
> துற்பரங் கண்டுளோர் சைவசித் தாந்தரே[1]

என்ற திருமூலரின் பாடலடிகளால் அறிய முடிகிறது. சித்தாந்தம் என்பது முடிந்த முடிவு எனப் பொருள் தரும்.

> “சைவநெறிக் கொள்கைகள் பண்டே முடிந்த முடிபாக அமைந்தமையின்
> சைவசித்தாந்தம் என்றபெயராலும் வழங்கினர். [2]

என்று சு.சண்முகசுந்தரம் விளக்கம் தருகிறார்.

**சைவசித்தாந்தத்தின் சிறப்புகள்**

இறைவனை எளிதில் எய்துவதற்குறிய உரிய நெறி சைவ சித்தாந்தம் ஆகும். சித்தாந்த கொள்கைகள் மிகவும் பழமையானவை ஆகும். வாழ்வில் நல்நெறி அறமாகிய முக்தி பேறு அடைவதற்குரிய நெறியாக சைவ சித்தாந்தம் விளங்குகிறது. இதனை

> பல்வேறுஉரைக்குநர் சொல்வழிப்படாது
> திவ்வியம் பழுத்தசைவசித்தாந்தத்து
> இறவாநிலைமைபெற்று இன்பமாலீந் திருக்கும்
> பிறவாநல்நெறிபெறப்புரி வதுவே[3]

என்ற பாடலடியில் குமரகுருபரர் குறிப்பிடுகிறார்.

**முப்பொருள்கள்**

முப்பொருள் உண்மை கூறும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இறைவன் உயிர் இயல்புகளை விளக்கிக் காட்டும். சித்தாந்தத்தில்

ISSN : 2320-3412(P), 2349-1639(O)

பதி, பசு, பாசம் என்பன முப்பொருள்கள் ஆகும். இதனைத் தமிழில் இறை (பதி), உயிர்(பசு), தளை(பாசம்) என்று வழங்குவர் இவற்றில் பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றுடன் இணைந்துள்ளன. முப்பொருள்களில் பதி,பசு இரண்டும் அறிவுப் பொருள்கள் ஆகும். ஆணவம்,கன்மம்,மாயை என்ற மூன்றும் சடப்பொருள்கள் ஆகும்.

**பதி**

முப்பொருள்களில் பதியாகிய இறைவனே மேலான சித்துப் பொருள். பதி என்ற சொல் இறைவனைக் குறிக்கும். சைவ சமயக் கடவுளைச் சிவம் என்னும் பெயரால் குறிப்பினும் தத்துவ முறையில் கூறும் பொழுது பதி என்றே குறிப்பிடுகின்றது. புதி என்பதற்கு காப்பவன் என்பது பொருள். தன் கீழ் உள்ளாரை நல்ல வகையில் ஆவன செய்து காப்பவன் தலைவனாதலின் 'பதி' என்பது தலைவன் என்ற கருத்தில் வழங்கப்படுகின்றது. இதனால் பதியாகிய இறைவன் ஒருவனேஆவான் என்பதை,

**ஒன்றேகுலம் ஒருவனே தேவன்** [4]

எனதிருமந்திரத்திலும் திருமூலர் கூறியுள்ளார்.

இறைவன் உலகத்தோடும்,உலகப் பொருள்களோடும் கலந்து எங்கும் நிறைந்துள்ளான். அம்மையாரும் பேரருளை உடையபதியாகிய எம்பிரான் தன் உள்ளத்தில் நிறைந்துள்ளான் என்றும், அவனை உள் நினைந்து காண்போர்க்குக் காட்சி எளிதாகும் என்றுபாடுகிறார். இதனை

**பிரானவன்தன் பேரருளேவேண்டிபிரானவனன**
**எங்குற்றான் என்பீர்கள் என்போல்வார்**
**சிந்தையினும்**
**இங்குற்றான் காண்பார்க்குளளிது**
**(அ.தி.பா.எ.45)**

என்ற பாடலடிகள் வாயிலாக எங்கும், எதிலும் நிறைந்தவன் பதியென்று அம்மையார் உணர்த்துவதைஅறியமுடிகிறது.

**பசு**

பசு என்பதற்குப் பாசத்தால் கட்டப்பட்டது என்பது பொருள். இதனை உயிர், ஆன்மா, ஆத்மா என்ற பெயர்களில் அழைப்பதுண்டு. உயிர்கள் பல்வேறு பிறப்புகளை உடையன. செய்யும் நல்வினை, தீவினைகளுக்கேற்ப பிறவி அமையும். அதனால் உயிர் அனாதியானது என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. உயிர்கள் இறைவனுக்கு அடிமையாவதும் பசு ஞானம் ஆகும். மனத்திற்கு இனியானாயும் நல்ல மங்கல குணங்களையுடையானும், கங்கையின் மணவாளனும் செம்மையான திருமேனி கொண்ட பெரியவனும் எம்பெருமான் ஆவார். நான் வேறு எவரையும் அணுகாமல் அவனுக்கே அடிமை கொண்டவன் என்பதை,

**தனக்கே அடியனாய்த் தவீனைடைந்து வாழும்**
**எனக்கே அருளாவாறு என்கொல் – மனக்கினிய**
**சீராளன் மங்கை மணவாளன் செம்மேனி**
**(அ.தி.பா.எ.44)**

எனும் பாடலடிகள் வாயிலாகஅம்மையார் இறைவனுக்கு அடிமை பூண்டிருத்தலை அறியமுடிகிறது.

உயிர்கள் தாவரம், நீர் வாழ்வன, ஊர்வன, விலங்கு, பறப்பன, மனிதர், தேவர் என்பன ஏழுவகை பிறப்புகள் ஆகும். இதனை

**அவர்க்கேஎழுபிறப்பும் ஆளாவோம் என்றும்**
**அவாக்கேநாம் அன்பாவதன்றிப் பவர்சடைமேற்**
**(அ.தி.பா.எ.3)**

என்ற பாடலடிகள் வாயிலாக உயிர்களின் ஏழு பிறவிகள் பற்றியும், அந்த ஏழு பிறவியிலும் சிவபெருமானையே தொழுவோமென்று அம்மையார் கூறுவதை அறிய முடிகிறது.

**பாசம்**

உயிர்களைப் பற்றி நிற்பது பாசம். முப்பொருள்களில் சடப்பொருளாகக் கருதப்படுவது பாசமே. ஆணவம், கன்மம், மாயை என்பவை பாசத்தின் மும்மலங்களாகும். உயிர்கள் அடைகின்ற எல்லாவகையான

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

துன்பத்திற்கும் அடிப்படைக் காரணம் ஆணவம். ஆணவத்தினால் முன்னைய வினையானது தூண்ட அது காரணமாய் வெதும்பி இவ்வுடம்பினுள் வந்து சேரும். இதனை

கிளர்ந்துவெந்துயர் வந்திடும்
போதுஅஞ்சிநெஞ்சம் என்பாய்த்
தளர்ந்திங்கு இருத்தல் தவிர்திகண்
டாய் தளாராதுவந்தி

(திரு.இர.மா.பா.எ. 1)

என்ற பாடல் மூலம் பிறவித் துன்பத்தை உயிர்கள் அனுபவிப்பதாக அம்மையார் உணர்த்துகின்றார்.

**ஆணவம்**

உயிர் என்று ஒன்று உண்டோ அன்றே அதற்கு ஆணவமும் உண்டு. திருவினால் தகுதி பெற்ற திருமாலும் நான்முகனும் செருக்கினால் சிவனின் திருவடியைக் காணாது திகைத்த போது அச்செருக்கினை அழித்து அருள்பாலித்த வரும், தம்மை விட வலிமையானவர் இல்லை என்ற ஆணவம் கொண்ட இராவணனின் ஆணவத்தை அடக்கியவர் எம்பிரான் சிவனேயாவார். இதனை

செருக்கினால் வெற்படுத்த எத்தனையோ திண்தோள்
அரக்கனையும் முன்னின்று அடர்த்ததிருத்தக்க

(திரு. இர.மா.பா.எ.80)

என்ற பாடலடிகள் வாயிலாக அக இருளாகிய ஆணவம் குறித்த செய்தினை அறியமுடிகிறது.

**கன்மம்**

கன்மத்தை வினை என்றும் செயல் என்றும் கூறுவர். உயிர்கள் பொருந்துகின்ற உடம்புகளுக்குக் காரணம் ஆகும். கன்மம் சஞ்சிதம், பிரார்த்தம், ஆகாமியம் என மூன்று விதமாகும். முற்பிறவியில் செய்த பாவம், புண்ணியம் சஞ்சித வினையாகும். என்பதை,

வினைநகர் ஏதுமின்றித்
தழற்கொண்டசோதிச் செம்மேனி எம்
மானைக்கம் மாமலர்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்குமோ துன்னி
நம்அடுந் தொல்வினையே

- (திரு.இர.மா.பா.எ.11)

என்னும் பாடலடிகள் வாயிலாக தொல் வினையாகிய சஞ்சிதம் பற்றி அம்மையார் கூறியுள்ளதை அறியமுடிகிறது.

**மாயை**

மாயை ஒரு காரணப் பொருள். மாயை என்ற பிறவி வினையிலிருந்து நீங்க சாதனமாக விளங்குவது வீடு பேறு. அறிவுத் திறத்தினால் உண்மையை அறிந்து சிவபெருமானை வழிபட்டால் மீண்டும் எலும்புடன் கூடிய உடலுடன் உயிர் பெற்று இவ்வுலகில் பிறக்க மாட்டார்கள். இதனை

என்பு ஆக்கையால் இகழாது ஏத்துவ ரேல் இவ்வுலகில்
என்பு ஆக்கையாய்ப் பிறவார் ஈண்டு

(அ.தி.பா.எ.37)

என்று அம்மையார் இப்பாடலடிகளின் வாயிலாக உணர்த்துகின்றார்.

**தொகுப்புரை**

சைவ நூல்களின் முடிந்த முடிபைக் கூறும் நூல் சைவ சித்தாந்தம் என்பர். அதன் முப்பொருள் பதி, பசு, பாசம் அம்மையார் பாடல்களில் பொருந்தி வந்துள்ளதை பற்றியும், சிவனடி சேர்வதற்குரிய நெறி சைவ சித்தாந்தத்தின் முப்பொருள் உண்மையே என்பதையும் இவ் ஆய்வு வழி அறியமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்:**

1. எம்.நாராயண வேலுப் பிள்ளை (உ.ஆ.), திருமந்திரம், பா.எ.1421.

2. சு.சண்முகசுந்தரம் (உ.ஆ.),சைவ சமயச் சிந்தனை,ப.7.

3. இரா.செல்வக்கணபதி (ப.ஆ.), சைவ சமயக் கலை களஞ்சியம், பா.எ.4.

4. எம்.நாரணவேலுப் பிள்ளை (உ.ஆ.), மு.நூ., பா. எ. 2104.

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜூன் 2015

# புறநானூற்றில் தொன்மங்கள்

**முனைவர் மு.குருவம்மாள்**
பேராசிரியர், தமிழ்த்துறை,
காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்.

முகப்புரை

காலங்காலமாக மக்கள் மத்தியில் வழங்கி வரும் தெய்வம் தொடர்பான புராணங்களும் இராமாயண – மகாபாரத இதிகாசங்களும் ஏட்டில் எழுதாக் கதைகளாக செவிவழிச் செய்திகளாக – சமூக – வரலாற்று நிகழ்வுகளில் ஊடும் பாவுமாகி நிற்கின்றன. செவி வாயாக நெஞ்சு களனாக வாய்மொழி வழக்காறுகளாக வழங்கி வருகின்ற புராண இதிகாசக் கதைகளில் இடம்பெறும் கடவுள் வடிவங்கள் எழுத்து இலக்கியமாகவும் கலை வடிவங்களாகவும் உருப் பெற்றமையினைச் சிந்திக்கும் போது கலை வடிவிலிருந்து தோன்றியது எழுத்து இலக்கியமா? எழுத்து இலக்கியத்திலிருந்து தோன்றியது கலை வடிவமா? என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க இயலாது. எட்டுத்தொகையின் எட்டாவதாகிய புறநானூற்றில் ஆய்வுக் கட்டுரைக்குரிய தரவுத் தேடல்களின் விளைவாகச் சிவபுராண, விஷ்ணுபுராண, கந்தபுராணச் செய்திகளும் இராமாயண மகாபாரதக் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளன.

**சிவபுராணச் செய்திகள்**

பாரதம் பாடிய பெருந்தேவனாரின் பதினான்கு வரிகளைக் கொண்ட கடவுள் வாழ்த்துப் பாடலுடன் துவங்குகிறது புறநானூறு. சிற்பக் கலையில் வல்லவராயின்... சிவபெருமானின் தோற்றப் பொலிவினைச் செதுக்கவும் ஓவியக் கலையில் வல்லவராயின்... மாதொருபங்கனை வண்ணந் தீட்டவும் உதவுகின்ற குறிப்புகளை வழங்கி நிற்கிறது இந்தக் கடவுள் வாழ்த்துப் பாடல்.

- சிவபெருமான் நஞ்சுண்ட கண்டன; ஆகியமைக்குக் காரணமான பாற்கடல் கடைந்த நிகழ்வும்
- சிவபெருமான் மாதொருபாகன் ஆகியமைக்குக் காரணமான பிருங்கி முனிவரின் சக்தி வணக்க மறுப்பும்
- சிவபெருமான் பிறை நுதல் வண்ணனாகியமைக்குக் காரணமான தட்சனின் சாபம் ஏற்ற சந்திர சேகர மோட்சமும்
- சிவபெருமான் ஆகாய கங்கையை சிரமேற்று நீரறவறியாக் கரகத்துடன் தாழ்சடை பொலிந்தமைக்குக் காரணமான சகரரின் கடுந்தவமும்

ஆகிய சிவபுராணச் செய்திகளைத் தன்னகத்துக் கொண்டது இந்தக் கடவுள் வாழ்த்துப்பாடல்.

> கண்ணி கார் நறுங்கொன்றை காமர்
> வண்ண மார்பில் தாருங் கொன்றை
> ஊர்தி வால் வெள்ஏறே சிறந்த
> சீர் கெழு கொடியும் அவ்வேறென்ப
> கறை மிடறு அணியலு மணிந்தன்றக்கறை
> மறை நவிலந்தணர் நுவலவும் படுமே

பெண்ணுரு ஒருதிறனாகின் றவ்வுருத்
தன்னுளடக்கிக் கரக்கினுங் கரக்கும்
பிறை நுதல் வண்ணமாகின்றப் பிறை
பதிணென் கணனு மேத்தவும் படுமே
எல்லா உயிர்க்கும் ஏமமாகிய
நீரறவறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோர்க்கே

(புறம் :1)

என்று கூறுகிறது.

சிவபெருமான் தலையின் மீது சூடுகின்ற கண்ணி கார்காலத்துக் கொன்றைமலர்; அழகிய நிறம் பொருந்திய மார்பின் மீது சூடுகின்ற மாலையும் கொன்றை மலர்களால் ஆனது; சிவபெருமானின் வாகனம் தூய வெள்ளை நிற ஆனேறு; கொடியும் விடபம்தான்; கழுத்துப் பகுதி நஞ்சினது கருப்பு; ஒருபக்கம் பெண் வடிவம்; நெற்றிக்கு அழகைச் சேர்ப்பது பிறை; தாழ்ந்த திருச்சடையுடன் தவத்தில் சிறந்தவனாகி உலகத்து உயிர்களுக்கெல்லாம் காவலாகிய நீரைத் தலையின் மீது தாங்கும் தவக்கோலம் சிவபெருமானின் கோலம். நீரின்றி அமையாது உலகு என்பர் சான்றோர். வருங்காலத்தில் மூன்றாவது உலகப் போர் ஒன்று நல்ல தண்ணீரின் நிமித்தம் வரும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். எல்லா உயிர்க்கும் காவலாகிய நீரைச் சிவபெருமான் கரகத்தில் தாங்கி தவக் கோலத்தில் இருக்கின்றார் என்ற புறநானூற்றின் கூற்று-தாயைக் கழித்தாலும் தண்ணீரைக் கழிக்காதே என்ற நாட்டார் கருத்தை உறுதி செய்கிறது. நல்ல தண்ணீருக்காகத் தவம் இருக்கும் நம் காலத்தில் தண்ணீரைத் தலைமேல் தாங்கித் தவமியற்றும் சிவபெருமானின் கோலம் சிந்திக்கத் தூண்டுகிறது. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது என்று கொண்டாடுகின்றன கிராமங்கள். நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களில் ஒன்றான தண்ணீராகிய பூதம் புறப்பட வேண்டும் என்று தானே கிணறு வெட்டுகிறோம்! தண்ணீரைத் தெய்வமாகப் பார்க்க வேண்டும் என்றுதான் தலையில் வைத்துக் கூத்தாடுகின்றான் சிவபெருமான்.

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் பாடிய புறப்பாடலில் சிவபெருமானின் அவிர்சடையும் கணிச்சிப்படையும் மணிமிடறும் இடம் பெற்றுள்ளன. இறை மறுப்புக் கொள்கையையுடைய தாருகவனத்து முனிவருடன் சமர்புரிந்த சிவனின் ஆயுதம் கணிச்சி, அவரது கோலம் நெருப்பு போன்ற அவிர்சடை, அவரது கழுத்து மணி போன்றது

ஏற்று வலனுயரிய வெரி மருளவிர் சடை
மாற்றருங் கணிச்சி மணி மிடற்றோன்

(புறம்:56)

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நன்றாய்ந்த நீணிமிர்சடை முதுமுதல்வன் (புறம்:166) என்ற தொடரில் முதுமுதல்வன் என்றும் நீண்ட நிமிர்ந்த சடையினை உடையவன் என்றும் சிவபெருமானைக் குறிப்பிடுகின்றார் ஆவூர் மூலங்கிழார்.

**சிவபெருமான் திரிபுரம் எரித்த செய்தி**

பூமியைத் தேராக்கி, நான்கு வேதங்களைக் குதிரையாக்கி, பிரம்மா சாரதியாகி, மேருமலையை வில்லாக்கி, ஆதிஷேசனை நாணாக்கி, திருமால் - வாயு - அக்கினி ஆகிய மூவராலான அம்பினைக் கொண்டு, ஆணவம், மாயை, கன்மம் என்ற அகநிலை மும்மலக் கோட்டைகளையும் இரும்பு, வெள்ளி, தங்கம் என்ற புறநிலை உலோகக் கோட்டைகளையும் தகர்த்த சிவனின் செயலை திரிபுரம் எரித்தல் என்று சிவபுராணம் கூறுகிறது. இந்த நிகழ்வினை

ஓங்குமலைப் பெருவிற் பாம்பு நாண் கொளீஇ
ஒரு கணை கொண்டு மூவெயிலுடற்றிப்
பெரு விறலமரர்க்கு வென்றி தந்த
கறை மிடற்றண்ணல் காமர் சென்னிப்
பிறை நுதல் விளங்குமொரு கண் போல

(புறம்:55)

என்று மதுரை மருதனிள நாகனார் குறிப்பிடுகின்றார்.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

**விஷ்ணுபுராணச்செய்திகள்**

மண்ணால் கழுவிய நீலமணி போன்ற திருமேனியையும் கருடக் கொடியையும் உடையவன் கண்ணன்.

மண்ணுறு திருமணி புரையு மேனி
விண்ணுயர் புட்கொடி விறல் வெய்யோன்
(புறம்:56)

என்று மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் குறிப்பிடுகின்றார். நீல நிறமும் ஆழியையும் உடையோன் கண்ணன்.

நீனிற வுருவினேமி யோனுமென்
றிரு பெருந் தெய்வமு முடனின்றாங்குஞ்
(புறம்:58)

என்று காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் கூறுகின்றார்.

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் பகலவனை ஒளித்து வைத்து உலகிற்கு விலகாத இருளை உருவாக்கித் துன்பம் விளைவித்த அசுரர்களை வீழ்த்தி ஆதவனை விடுவித்து உலகிற்கு ஒளியை வழங்கியவன் அஞ்சன உருவன்

அணங்குடை யவுணர் கணங் கொண்டொளித்
தெனச்
சேண் விளங்கு சிறப்பின் ஞாயிறு காணா
திருள் கண் கெடுத்த பருதி ஞாலத்
திடும்பை கொள் பருவரறீரக் கடுந் திறல்
அஞ்சன வுருவன் தந்து நிறுத்தாங்கு....
(புறம்:174)

என்று கண்ணன் புகழ்பாடுகிறார் மாறோக்கத்து நப்பசலையார்.

**பலராமனாகிய கண்ணனின் சகோதரர்**

பாளிற வுருவிற் பனைக் கொடியோன் (புறம்:58)
கடல் வளர் புரிவளை புரையு மேனி

என்று காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் குறிப்பிடுகின்றார்.

அடல் வெந் நாஞ்சிற் பனைக் கொடியோன்
(புறம்:56)

என்று பலராமனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கொண்டாடுகிறார்.

**கந்தபுராணச் செய்தி**

அவுணரை அழிக்கத் தோன்றியவன். மயிலை வாகனமாகக் கொண்டவன் சினங்கொண்ட சிவந்த நிறத்தை உடையவன் என்று மக்களிடையே வழங்கி வருகின்ற முருகப்பெருமான் குறித்த நம்பிக்கையைப் புலவர் பாண்டரங் கண்ணனார்

முருகற் சீற்றத் துருகெழு குருசில் (புறம்:16)

என்று குறிப்பிடுகின்றார்.

பிணிமுகவூர்தி யொண் செய்யோன் (புறம்:56)

என்று மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் குறிப்பிடுகின்றனர்.

**இராமாயணச் செய்தி**

வலிமை மிகுந்த இராமனின் மனைவி சீதையை மலர் விமானத்தில் அரக்கன் கவர்ந்து சென்ற போது முனிபத்தினிகள் சீதைக்கு அணிவித்திருந்த ஆபரணங்களைக் கானக வழியில் வீசி எறிந்தாள். அவற்றைக் காட்டில் இருந்த வானரங்கள் எடுத்து விரலுக்குரிய அணியினைக் காதிலும் காதுக்குரிய அணியினை விரலிலும் இடையில் அணிய வேண்டியவற்றைக் கழுத்திலும் கழுத்தில் அணிய வேண்டியவற்றை இடையிலும் சூட்டிக் கொண்டன என்று இராமகதை குறித்த, ஏட்டில் எழுதா கர்ண பரம்பரைக் கதைகள் மக்களிடையே வழங்கி வருகின்றன. இந்த இராமாயணச் செய்தியினை

இலம்பாடுழந்த வென் னிரும் பேரொக்கல்
விரற் செறி மரபின செவி தொடக்கு நரும்
செவித் தொடர் மரபின விரற் செறிக்குநரும்
அரைக்கமை மரபின மிடற்றியாக்கு நரும்
மிடற்றமை மரபின அரைக்கியாக்கு நரும்
கடுந் தெறலிராமனுடன் புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகம் பெருங்கிளை யிழைப்பொலிந்தாஅங்
(புறம்:378)

என்று ஊன் பொதி பசுங்குடையார் பதிவு செய்துள்ளார்.

**மகாபாரதச் செய்தி:**

பாண்டவர்கள் ஐவரோடு சினங்கொண்டு கௌரவர்கள் நூற்றுவரும் பெரும்போர் நடத்தினர், அந்த மகாபாரதப் போரில் நூற்றுவர் அழிவு நேர்ந்தது, பெரும்போர் நடந்த நேரத்தில் பெருஞ்சோறு வழங்கினர் என்பதனை

**... நீயோ பெரும**
**அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ**
**நிலந்தலைக் கொண்ட பொலம்பூந்தும்பை**
**ஈரைம்பதின்மரும் பொருதுகளத் தொழியப்**
**பெருஞ்சோற்று மிகபதம் வரையாது**
**கொடுத்தோய் (புறம்:2)**

என்று முரஞ்சியூர் முடி நாகராயர் பதிவு செய்கிறார்.

**நிறைவுரை**

சனகாதி முனிவர் நால்வருக்குக் கல்லால மரத்தின் கீழ் தட்சிணாமூர்த்தியாகி சின்முத்திரையுடன் மெய்ப்பொருளை உரைத்த சிவபெருமானை ஆலமர் செல்வன் என்று சிவபுராணம் கூறுகின்றது. ஊழிக் காலத்தில் ஆலிலையில் குழந்தை வடிவில் இருந்து உலகைக் காத்த மகாவிஷ்ணுவை ஆலமர் செல்வன் என்று விஷ்ணுபுராணம் கூறுகின்றது. 'ஆலமர் கடவுளன்ன நின் செல்வம்' (புறம்:198) என்று வடமவண்ணக்கன் பேரிசாத்தனார் குறிப்பிடும் தொடரில் இடம்பெற்ற ஆலமர் செல்வன் சிவனா? விஷ்ணுவா? என்பது கேள்வியாகிறது.

பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்துப் பாடலில் சிவபெருமானின் வருணனையாகிறது 'பிறை நுதல் வண்ணம்'. அப்பிறை 'பதிணென் கணனு மேத்தவும் படுமே' என்று போற்றிய காரணத்தால் நெற்றிக்குரிய உவமை இல்லை பிறை என்பது தெளிவாகிறது. தேவரும் அசுரரும் முனிவரும் கின்னரரும் கிம்புருடரும் கருடரும் இயக்கரும் இராக்கதரும் கந்தருவரும் சித்தரும் சாரணரும் வித்தியாதரரும் நாகரும் பூதமும் வேதாளமும் தாராகணமும் ஆகாசவாசிகளும் போகபூமியோரும் என்ற பதினெட்டுகணங்களும் போற்றுவது சிவனின் நுதலில் உள்ள பிறை என்பது உறுதியாகின்றது. மதுரை கணக்காயனார் மகனார் நக்கீரனார்

**கறை மிடற்றண்ணல் காமர் சென்னிப்**
**பிறை நுதல் விளங்குமொரு கண் போல**
**(புறம்:55)**

என்று கூறுவதன் வாயிலாக சிவனின் தலையில் உள்ளது பிறை என்றும் நுதலில் உள்ளது கண் என்றும் விளக்கம் பெறுகிறது. பிறை இடம் பெற்றது சிவனின் நுதலிலா? சிரசிலா? என்பது கேள்வியாகிறது. கடவுள் குறித்த கதைகளில் மக்களின் கற்பனைகள் காலந்தோறும் மாறுதலுக்குள்ளாகி கலந்தூடி வருவதை மறுக்க இயலாது.

## கருத்தரங்கம்

**தமிழாய்வுச் சங்கமம் ஆய்விதளோடு சேர்த்து தேசிய மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்த விரும்பும் கல்வி நிறுவனங்கள் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.**

இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.selptrust.org
தமிழாய்வுச் சங்கமம் – பன்னாட்டு ஆய்விதழ்
ISSN : 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor : 0.231
பகுதி – III / பதிப்பு – 5
ஜனவரி – ஜுன் 2015

# மகிழ்ச்சியின் இரகசியம்

**முனைவர். திருமதி.அ.ஹேமாமாலினி**
முதல்வர்,
டாக்டர். உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரி, காரைக்குடி-630 003

## முகப்புரை

இச்சமூகத்தில் நான் வாழ, எனது கடமையினை செய்ய, என்னுடைய அறிவை வளர்த்துக் கொள்ள,எனக்கு என்னவெல்லாம் தேவைப்படுகிறது என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். அவ்வாறு சிந்திக்கும் போது நமக்கு ஐந்து வகையான கடமைகள் உண்டு என்கிறார் வேதாத்திரி மகரிசி. 1. தான், 2. குடும்பம், 3. சுற்றம், 4.ஊரார், 5. உலகம் இவற்றில் முக்கியமானது மனதை வளமாகவும், நலமாகவும் வைத்து கொள்ளுதல்.

## மனநிலையே அடிப்படை

மனித வாழ்விற்கு மனநிலையே அனைத்திற்கும் அடிப்படை. மண்ணும் மனமும் ஒன்றே. மண் நஞ்சை, புஞ்சை என பிரிக்கப்படுகிறது. மனம், நேர்மறை, எதிர்மறை என பார்க்கப்படுகிறது. நேர்மறை, எதிர்மறையை பொறுத்துத் தான் வாழ்வில் அத்தனை விசயங்களும் நடக்கின்றன. ஒருவர் ஒரு ரோஜா செடியை பார்த்து, பூ அழகாக உள்ளதே! என பார்ப்பது நேர்மறை. மாறாக முட்களாக உள்ளதே என நினைப்பது எதிர்மறை.

நேர்மறை மனநிலை மகிழ்ச்சியின் உறைவிடம். மனித மனம் என்னவென்று தெளிவாக அறிந்து கொண்டால், நமக்கு தேவைப்படும் மகிழ்ச்சியின் அனைத்து ரகசியங்களும் தெரிந்து போகும். வாழ்க்கையில் நாம் மகிழ்ச்சியாக இருப்பதற்கு மிக முக்கியமானது மனநிலையே.

## இலக்கு நோக்கி பயணம்

பனிப்பாறைகளை பார்த்தோமானால் அவற்றில் 10 சதவீதம் தான் தண்ணீருக்கு வெளியே தெரியும். 90 சதவீதம் தண்ணீருக்குள்ளே இருக்கும். அது போலத் தான், நம் வாழ்க்கை எனும் பனிப்பாறையில், நம் அறிவுத்திறனும் பிறருக்கு புலப்படக்கூடியவை. பிறருக்கு புலப்படாத 90 சதவீதம், நாம் வாழ்க்கையை எப்படி மேற்கொள்கிறோம் என்ற மனநிலையே பொறுத்தே அமைகிறது. எனவே மனநிலையை நேர்மறையாக வைத்துக்கொண்டு, இலக்கை நோக்கி பயணம் செய்தல் வேண்டும்.

ராஜா ஒருவர் தன் படைகளோடு வேட்டையாட சென்றார். அப்போது ராஜாவின் கையில் வெட்டுக் காயம் ஏற்பட்டது. மந்திரியை தவிர, படைகள் அனைவரும் பரிதாபப்பட்டார்கள். அந்த மந்திரி நேர்நிலை மனநிலையோடு, எல்லாம் நல்லதுக்குத் தான் என்றார். ராஜாவிற்கு கோபம் வந்து, அவரை சிறைக்கு உட்படுத்தினார். சிறிது நேரம் கடந்து, ராஜாவும், படையும், காட்டுமிராண்டிகளிடம் அகப்பட்டு கொண்டனர். அவர்களின் தலைவர், தங்கள் குல வழக்கப்படி, காயம் இல்லாதவனை பலியிட ஆணையிட்டார். படைகள் அனைவரும் பலியிடப்பட்டனர். வெட்டுக்காயம் பட்டதால், ராஜா தண்டனையிலிருந்து தப்பிக்க முடிந்தது. அப்போது தான், ராஜா, தன் மந்திரி நேர்மறை மனநிலையோடு சொன்னதை உணர்ந்து திருந்தினார்.

 ISSN : 2320-3412(P), 2349-1639(O)

எதிர்மறை மனநிலைக்கு ஒரு குணம் உண்டு. அதாவது உடனடியாக ஒருவர் மனதில் வெகு எளிதாக எவ்வித பிரயத்தனமின்றி, எதிர்மறை மனநிலை உருவாகும். ஆனால் நேர்மறை மனநிலை எளிதாக உருவாக கீழ்க்கண்ட உத்திகளை பயன்படுத்தினால், நேர்மறை பயிற்சி உண்டாகி நாளடைவில் அது வழக்கமாகி விடும்.

**எளிதான உத்திகள்**

- பொது இடத்தில் நல்ல முறையில் நடந்து கொள்ளுதல்
- பிறருக்கு நல்ல முறையில் மரியாதை செய்தல்
- எப்போதும் உற்சாக மனப்பான்மையுடன் இருத்தல்
- பிறருடன் நல்ல நட்புறவுடன் செயல்படுதல்
- எதிலும் வெளிப்படையான மனநிலையில் நடந்து கொள்ளுதல்
- சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுதல்
- எதையும் நகைச்சுவை உணர்வோடு பார்த்தல்
- பிரச்சனைகளை நல்ல முறையில் சமாளிக்கும் திறமையை வளர்த்து கொள்ளுதல்
- பொது இடங்களில் நாகரிகம் கருதி நாவை கட்டுப்படுத்துதல்
- தன்னை பிறர் எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புவது போல், நாம் பிறரிடம் நடந்து கொள்ளுதல்
- பிறரை பாராட்டுங்கள். யாரை சந்தித்தாலும் இவரை நான் எப்படி பாராட்ட முடியும் என்று யோசியுங்கள். அதை செயல்படுத்துங்கள்.
- சிறு குழந்தையாக மாறுங்கள். எதிர்மறை மனநிலை உங்களை விட்டு ஓடிப்போகும்.

**நேர்மறை மனநிலை**

நேர்மறை மனநிலை என்பது 3 வழிகளில் செயல்படும். முதலாவதாக, உங்கள் பொதுவான மனநிலையை மாற்றும். இரண்டாவது, உங்களை சுற்றியிருக்கும் நபர்களில் நேர்நிலையின் தாக்கத்தை உருவாக்கும். கடைசியாக நீங்கள் வசிக்கும் சுற்றுப்புற சூழ்நிலையை மேம்படுத்தும்.

வாழ்க்கையில் எந்த இடையூறு வந்தாலும் நேர்நிலை மனோபாவத்தோடு எதிர்நோக்கினால், இன்னல்கள் பனிகளாய் உருகிவிடும். எதிர்மறை மனநிலையோடு ஒருவர் வெளிப்படும் போது, கீழ்க்கண்ட கேள்விகளை கேட்டுப் பாருங்கள்.

இந்த நபர் எனக்கு முக்கியமானவரா, இதற்கு முன் இவர் இது போன்று மனநிலையை என்னிடம் வெளிப்படுத்தியுள்ளாரா? இந்த மனநிலை என்னை எந்தளவு பாதிப்படைய செய்கிறது, இந்த நபரின் எதிர்மறை மனநிலை மாறுகின்ற வரையில், பொறுத்துக் கொள்ள அவகாசம் தர நாம் தயாராக இருக்கிறோமா? இந்த நபரின் எதிர்மறை மனநிலையை மாற்றுவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்த நாம் தயாராக இருக்கிறோமா?

இந்த கேள்விகளுக்கு ஒன்றிற்கு இல்லை என்னும் பதில் வந்தால், தயை கூர்ந்து எந்த ஒரு எதிர்ப்பையும் காட்டாமல் அமைதியாக சென்று விடுவதே உங்களுக்கு நல்லது. மாறாக ஏதேனும் ஒரு கேள்விக்கு, ஆமாம் என்றால் பொறுமையுடனும், அமைதியுடனும், நிதானத்துடனும் நேர்மறை எண்ணங்களோடு அந்த நபரை அணுகுங்கள். நிச்சயமாக உங்கள் பிரச்சனை இடர் களைந்து வெற்றி காண்பீர்கள்.

நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகவே மாறிவிடுவாய் என்ற கீதையின் சொல்லுக்கிணங்க, அன்னப்பறவையை போல் தண்ணீர் கலந்த பாலில், பாலை மட்டும் பிரித்தெடுக்கும் ஆற்றலை போல நாமும் அன்றாட வாழ்வில், எதிர்மறை மனநிலையை விடுத்து, நேர்மறை எண்ணங்களோடு வாழ கற்றுக் கொள்ள வேண்டும். நமக்கு தேவையான எல்லா வலிமையும், எல்லா சக்தியும் நமக்குள்ளேயே குடி கொள்ளும்.

பணம், படைப்பாக்கம், சாதனைகளை விட,
நேர்மறை மனநிலை
நம் உயரங்களை தீர்மானித்து விடும்.
ஒரு வாய்ப்பினை இழந்து விட்டதற்காக,
கண்களில் கண்ணீரை நிரப்பிக் கொள்ளாமல்
கண்களுக்கு முன் இருக்கும்
இன்னொரு வாய்ப்பினை அறிந்து கொண்டு,
வாழ்க்கையில் வெற்றி காண்போம்.

# தமிழாய்வுச் சங்கமம்

பன்னாட்டு தமிழ் இலக்கிய ஆய்விதழ் – ISSN : 2320-3412(P), 2349-1639(O)

# TAMILAIVU SANGAMAM

(An International Research Journal on Tamil Literature)

**நிர்வாக ஆசிரியர்**

**ஆ. முத்துத்தமிழரசி**

**முதன்மை ஆசிரியர்கள்**

முனைவர் **தமிழ்மாறன்**
பெரியார் பல்கலைக்கழகம், சேலம்.

முனைவர் **பா. பொன்னி**
எஸ்.எப்.ஆர். மகளிர் கல்லூரி, சிவகாசி

**ஆசிரியர் ஆலோசனைக்குழு**

முனைவர் **சீதாலட்சுமி**
நன்–யாங் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம்
சிங்கப்பூர்

முனைவர் **மு. பாலகுமார்**
இந்திய மொழிகள் நடுவண் நிறுவனம்
மைசூர்

முனைவர் **கோ. பாலசுப்பிரமணியன்**
திராவிட பல்கலைக்கழகம்
குப்பம், ஆந்திரப்பிரதேசம்

முனைவர் **ப. ஜெயகிருஷ்ணன்**
கேரளா பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம், கேரளா

முனைவர் **செந்தில்குமார்**
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்
வேலூர்

முனைவர் **மு. குருவம்மாள்**
காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகம்
திண்டுக்கல்

முனைவர் **சி.சுந்தரேசன்**
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

முனைவர் **போ.சத்தியமூர்த்தி**
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை

முனைவர் **கா. வாசுதேவன்**
பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி (த)
திருச்சிராப்பள்ளி

முனைவர் **சு. அரங்கநாதன்**
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

தொடர்பு முகவரி

**நிர்வாக ஆசிரியர்**

5A, சத்யசாய் தெரு, கே.கே.நகர், திருச்சிராப்பள்ளி – 620 021. தமிழ்நாடு

tamilselp@yahoo.in Mobile : 94423 54207

www.selptrust.org

# தமிழாய்வுச் சங்கமம்

(தமிழ் இலக்கியத்திற்கான பன்னாட்டு கல்விசார் ஆய்வியல் அமைப்பு)

# TAMILAIVU SANGAMAM

(International Academic Researchers Association of Tamil Literature)

மின்னஞ்சல் : tamilselp@yahoo.in

## உறுப்பினர் விண்ணப்ப படிவம்

1. பெயர் :
2. பிறந்த தேதி :
3. கல்வி தகுதி :
4. துறை மற்றும் சிறப்புப் பாடம் :
5. பதவி :
6. கல்வி நிறுவனம் :
7. கல்லூரி முகவரி :
8. வசிப்பிட முகவரி :
9. கைபேசி :
10. மின்னஞ்சல் :
11. கட்டணம் செலுத்திய விபரம் :

    அ) தொகை :

    ஆ) வங்கி :

    இ) நாள் :

## உறுதிமொழி

நான் தமிழாய்வுச் சங்கமத்தில் உறுப்பினராக மனப்பூர்வமாக சம்மதிக்கிறேன். மேலும் தமிழாய்வுச் சங்கமத்தின் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டுள்ளேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

தேதி :

இடம் : கையொப்பம்

# தமிழாய்வுச் சங்கமம்

பன்னாட்டு தமிழ் இலக்கிய ஆய்விதழ் – ISSN : 2320-3412(P), 2349-1639(O)

பகுதி – III ஜனவரி – ஜுன் 2015 பதிப்பு – 5


## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | **நற்றிணையில் புலப்பாட்டு உத்திகள்**<br>பெ.ஆனந்தி | 1 |
| 2. | **சங்க இலக்கியத் தோழியின் ஆளுமை**<br>அ. ஏஞ்சல் ராணி | 7 |
| 3. | **தனித்தமிழாக்கத்தில் தேவநேயப் பாவாணர் பங்களிப்பு**<br>முனைவர் த.அண்ணாதுரை | 12 |
| 4. | **சங்க இலக்கியத்தில் ஆடவர் விளையாட்டுக்கள்**<br>வெ.சித்ரா என்ற பத்ரகாளி | 15 |
| 5. | **நளவெண்பாவும், நைடதமும்**<br>முனைவர் ம.தேவகி | 20 |
| 6. | **இலக்கியத்தில் மருத்துவம்**<br>இரா. தனசுபா | 24 |
| 7. | **கயமனார்**<br>ச.தனலெட்சுமி | 27 |
| 8. | **குறுந்தொகையில் யாப்பியல்**<br>ப.துர்காதேவி | 32 |
| 9. | **ஆண்டாளை ஆண்ட கிருஷ்ணன்**<br>ப. கோமதி சுப்பிரமணியம் | 36 |
| 10. | **பொருநராற்றுப்படை - பயணத்தால் மேம்படும் உணர்வுகள்**<br>பொ.கௌரி தேவி | 38 |
| 11. | **வெள்ளிவீதியார் பாடல்களில் உளவியல் (குறுந்தொகை)**<br>இரா.ஜீவாராணி | 43 |
| 12. | **சிற்றிலக்கிய வரலாறும் தமிழக வரலாறும்**<br>முனைவர் நா.கவிதா | 47 |
| 13. | **குறுந்தொகைத் தலைவியின் அறிவு ஆளுமை**<br>ச.மீனாட்சி | 52 |
| 14. | **ஓரெழுத்தொரு மொழி பெயர்கள்**<br>இரா.மேகலா ராணி | 57 |

**15. எட்டுத்தொகை காட்டும் இல்லறத்தில் புதல்வர்**
சி.பா. முத்து மாரி 60

**16. சங்க இலக்கியத்தில் மருத்துவம்**
வே.முத்துமாரி 65

**17. திருமூலர் திருமந்திரத்தில் இறைவழிபாடு**
முனைவர் மா.பத்ம பிரியா 71

**18. குறுந்தொகையில் தலைவியின் சமுதாய இருப்புநிலை**
செ.அம்பிகாபதி 76

**19. சங்க இலக்கியங்கள் காட்டும் பண்டமாற்றுப் பொருளாதாரம்**
முனைவர் கி.பர்த்திபராஜா 81

**20. நாவுக்கரசர் தேவாரத்தில் எட்டு**
முனைவர் பா.பொன்னி 86

**21. பொருநரின் வாழ்க்கைமுறை**
ஜெ.புவனேஸ்வரி 90

**22. புறநூல்களில் வானியல் நம்பிக்கைகள்**
செல்வி 94

**23. 'இன்றைய கண்ணகி' சிறுகதைத் தொகுப்பில் 'பெண்மை'**
முனைவர் இரா.செண்பகவள்ளி 98

**24. வைரமுத்துவின் கவிதைகளில் நாட்டுப்புறக் கதைப்பாங்கு**
முனைவர் மா. இராமச்சந்திரன் 102

**25. பட்டினப்பாலையில் செய்திப்பரிமாற்றம்**
கு.வளர்மதி 106

**26. அம்மையார் பாடல்களில் சைவசித்தாந்தம்**
ரா. விஷ்ணு பிரியா 110

**27. புறநானூற்றில் தொன்மங்கள்**
முனைவர் மு.குருவம்மாள் 113

**28. மகிழ்ச்சியின் இரகசியம்**
முனைவர். திருமதி.அ.ஹேமாமாலினி 117